# பத்தாம் வகுப்பு

# தமிழ்

## தேர்வுத் துணைவன்

*( பெற்றோர் ஆசிரியர் கழக வினாத்தாள்கள் மற்றும் பல்வேறு திருப்புதல் வினாத்தாள்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது )*


*ஆக்கம் :*

*சோ.சக்திவேல்,*

*பட்டதாரி ஆசிரியர்(தமிழ்),*

*அ.மே.நி.பள்ளி,*

*தளவாய் - 621730,*

*அரியலூர் மாவட்டம்.*

*கைபேசி எண் : 9942165494, 7904505529.*

## பத்தாம் வகுப்பு - தமிழ் - பொதுத் தேர்வு வினாத்தாள் அமைப்பு முறை

| வினாத்தாள் வடிவமைப்பு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உட்பிரிவு | வினா எண் | பாடப்பகுதி / தலைப்பு | கேட்கப்படும் கேள்விகள் | எழுத வேண்டிய கேள்விகள் | மதிப்பெண்கள் | கையேட்டில் பக்க எண் |
| பகுதி – I : ஒரு மதிப்பெண் வினாக்கள் (சரியான விடையைத் தேர்ந்தெழுதுதல்) | | | | | | |
| | 1 - 11 | உரைநடை, செய்யுள், இலக்கணம், மொழிப்பயிற்சி | 11 | 11 | 11 | 03 - 09 |
| பகுதி – I : ஒரு மதிப்பெண் வினாக்கள் (பாடலைப் படித்து சரியான விடையைத் தேர்ந்தெழுதுதல்) | | | | | | |
| | 12 - 15 | செய்யுள் பகுதி | 4 | 4 | 4 | 10 - 14 |
| பகுதி – II : இரண்டு மதிப்பெண் வினாக்கள் | | | | | | |
| பிரிவு : 1 | 16 - 21 | உரைநடை & செய்யுள் | 6 | 4 | 8 | 15 - 23 |
| குறிப்பு : வினா எண் 21 கட்டாய வினா : மனப்பாடத் திருக்குறள் | | | | | | |
| பிரிவு : 2 | 22 - 28 | இலக்கணம்&மொழிப்பயிற்சி | 7 | 5 | 10 | 24 - 37 |
| பகுதி – III : மூன்று மதிப்பெண் வினாக்கள் | | | | | | |
| பிரிவு : 1 | 29 - 31 | உரைநடை | 3 | 2 | 6 | 38 - 47 |
| பிரிவு : 2 | 32 - 34 | செய்யுள் | 3 | 2 | 6 | 48 - 53 |
| குறிப்பு : வினா எண் 34 கட்டாய வினா : மனப்பாடச் செய்யுள் | | | | | | |
| பிரிவு : 3 | 35 - 37 | இலக்கணம் | 3 | 2 | 6 | 54 - 62 |
| பகுதி – IV : ஐந்து மதிப்பெண் வினாக்கள் | | | | | | |
| | 38 | செய்யுள் நெடுவினா | 2 | 1 | 5 | 63 - 68 |
| | 39 | கடிதம் | 2 | 1 | 5 | 69 - 77 |
| | 40 | படம் உணர்த்தும் கருத்து, கவிதை, பத்தி | 1 | 1 | 5 | 78 - 80 |
| | 41 | படிவம் | 1 | 1 | 5 | 81 - 84 |
| | 42 | மொழிப்பயிற்சி | 2 | 1 | 5 | 85 - 90 |
| பகுதி – V : எட்டு மதிப்பெண் வினாக்கள் | | | | | | |
| | 43 | உரைநடை நெடுவினா | 2 | 1 | 8 | 91 - 98 |
| | 44 | துணைப்பாடம் | 2 | 1 | 8 | 99 - 104 |
| | 45 | பொதுக் கட்டுரை | 2 | 1 | 8 | 105 - 113 |
| கூடுதல் மதிப்பெண்கள் | | | | | 100 | |

### மெல்லக் கற்போர் படிக்க வேண்டிய பகுதிகள்

*படிவம் நிரப்புதல் - வினா எண் : 41 பக்க எண் : 81 - 84*
*படம் உணர்த்தும் கருத்து, கவிதை - வினா எண் : 40 பக்க எண் : 78 - 80*
*கடிதம் - வினா எண் : 39 பக்க எண் : 69 - 77*
*மொழிப் பயிற்சி - வினா எண் : 42 பக்க எண் : 85 - 90*
*இலக்கணம் & மொழிப்பயிற்சி - வினா எண் : 22-28 பக்க எண் : 24 - 37*
*மனப்பாட திருக்குறள் - வினா எண் : 21 பக்க எண் : 23*
*பாடலைப் படித்து விடையளித்தல் - வினா எண் : 12-15 பக்க எண் : 10 - 14*
*உரைப்பத்தியைப் படித்து விடை - வினா எண் : 31 பக்க எண் : 44 - 47*

தமிழ் - பத்தாம் வகுப்பு

வினா எண் 1 முதல் 11 வரை

இயல் 1

1. தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாக தமிழுணர்வை ஊட்டியவர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்.**
2. 'இன்னறும் பாப்பத்தே' எனப் பெருஞ்சித்திரனார் பாடுவது **பத்துப்பாட்டு.**
3. 'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் **எம் + தமிழ் + நா.**
4. திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது **ஒரு பொருள் பல சொல்** வரிசை, தமிழ் அல்லாத பிற மொழிகளில் இல்லை.
5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை **மணி வகை.**
6. இளம் பாக்குக்கு வழங்கும் சொல் **நுழாய்.**
7. பூ விரியத் தொடங்கும் நிலையைக் குறிக்கும் சொல் **போது.**
8. சாகும்போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும் - என்று பாடியவர் **க.சச்சிதானந்தன்.**
9. காய்ந்த இலையும், காய்ந்த தோகையும் குறிப்பது **சருகும் சண்டும்.**
10. எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தலின் மிஞ்சுவதைக் குறிக்கும் சரியான தமிழ்ச் சொல் **பிண்ணாக்கு.**
11. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கொண்டவர் **இரா.இளங்குமரனார்.**
12. கொழுந்தாடை என்பது **கரும்பின் நுனிப்பகுதி.**
13. சம்பா நெல்லின் உள் வகைகள் **60.**
14. திருவள்ளுவர் தவச்சாலை அமைத்தவர் **இளங்குமரனார்.**
15. நறுவீ என்பதில் வீ என்பதன் பொருள் **மலர்கள்.**
16. ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள் பட வருவது **சிலேடை**
17. கடல் தன் நீரலையைத் தடுத்தி நிறுத்தி **சங்கினைக்** காக்கிறது.
18. மெத்த வணிகலன் என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது **வணிகக் கப்பல்களும், ஐம்பெருங்காப்பியங்களும்.**
19. சந்தக் கவிமணி எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் **சண்முகசுந்தரம்.**
20. சார்பெழுத்துக்கள் **10** வகைப்படும்.
21. செய்யுளில் ஓசை குறையாதவிடத்தும் இனிமையான ஓசைக்காக வரும் அளபெடை **இன்னிசை அளபெடை.**
22. கெடுப்பதூஉம் - இச்சொல்லில் இடம் பெற்றுள்ள அளபெடை **இன்னிசை அளபெடை.**
23. வெஃகுவார்க்கில்லை, உரனசைஇ - இச்சொற்களில் உள்ள அளபெடைகள் **ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை.**
24. அசைஇ - இலக்கணக்குறிப்பு - **சொல்லிசை அளபெடை.**
25. பின்வருவனவற்றுள் தொடர் மொழி **ஆடு மேய்ந்தது.**
26. கேடு என்ற சொல் - **முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்.**
27. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது **வினையாலணையும் பெயர்.**
28. கேள்வியினான் - இலக்கணக்குறிப்பு **வினையாலணையும் பெயர்.**
29. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது - இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும் முறையே **பாடல், கேட்டவர்.**

இயல் 2.

30. 'வளி மிகின் வலி இல்லை' என்று ஐயூர் முடவனார் எதைப் பற்றிக் கூறியுள்ளார்? **காற்று.**
31. தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் **திருப்பாவை, திருவெம்பாவை** பாடல்களைத் தாய்மொழியில் எழுதி வைத்துப் பாடுகின்றனர்.
32. நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பில் செந்தமிழின் பின்னுதித்த தென்றலே - இப்பாடல் அடி இடம் பெற்றுள்ள நூல் **தென்றல் விடு தூது.**
33. கடுங்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று கூறும் நூல் எது? கூறியவர் யார்?
**புறநானூறு, மதுரை இளநாகனார்.**

34. நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பில் செந்தமிழின் பின்னுதித்த தென்றலே - என்று பெண்ணொருத்தி, தூது செல்ல காற்றினை அழைத்ததாகப் பாடியவர் **பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்.**
35. வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில் ஆயுள் பெருக்கம் உண்டாம் - இப்பாடல் அடிகளுக்கு உரியவர் **ஔவையார்**
36. செய்தி 1 : ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
    செய்தி 2 : காற்றாலை மின்உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
    செய்தி 3: காற்றின் ஆற்றலைப் பயன்படுத்தி கடல் கடந்து வணிகம் செய்து வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.
    **செய்தி 1, 3 ஆகியன சரி.**
37. உலகக் காற்று நாள் **ஜூன் 15.**
38. உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்றவர் **தொல்காப்பியர்.**
39. யுனிசெப் என்பது **சிறுவர் நிதியம்.**
40. உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
    உனக்கு புகழ்ச்சிகள் கூறுகிறோம் பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?
    **மோனை, எதுகை**
41. பத்துப்பாட்டில் குறைந்த அடிகள் உடைய நூல் **முல்லைப்பாட்டு**
42. பாடுஇமிழ் பனிக்கடல் பருகி என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி **கடல்நீர் ஆவியாகி மேகமாதல்.**
43. விரிச்சி என்பதன் பொருள் **நற்சொல்.**
44. மதுரை சென்றார் - இத்தொடரில் அமைந்துள்ள வேற்றுமைத் தொகை எவ்வகை?
    **நான்காம் வேற்றுமைத் தொகை.**
45. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது **வேற்றுமை உருபு.**
46. அன்பால் கட்டினார், அறிஞருக்குப் பொன்னாடை ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது **வேற்றுமை உருபு.**
47. காலங்கரந்த பெயரெச்சம் **வினைத்தொகை**
48. வட்டத்தொட்டி என்பது **பண்புத் தொகை.**
49. நன்மொழி - இலக்கணக்குறிப்பு **பண்புத்தொகை.**
50. செந்தாமரை - இலக்கணக்குறிப்பு **பண்புத்தொகை.**
51. மூதூர் - இலக்கணக்குறிப்பு **பண்புத்தொகை.**
52. பெரிய மீசை சிரித்தார் - இதில் பெரிய மீசை என்னும் சொல்லுக்கான தொகையின் வகை **அன்மொழித் தொகை.**
53. சிவப்புச் சட்டை பேசினார் - இதில் சிவப்புச் சட்டை என்னும் சொல்லுக்கான தொகையின் வகை **அன்மொழித் தொகை.**
54. தொங்கான் என்பது **கப்பலைக்** குறிக்கும்.

<u>இயல் 3.</u>

55. வாழையிலை விருந்து விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வரும் நாடு **அமெரிக்கா.**
56. இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும் இனிதுஎனத் தமியர் உண்டலும் இலரே - என்று பாடியவர் **இளம்பெருவழுதி.**
57. தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை என்று வருந்தியவள் **கண்ணகி.**
58. கல்வியும், செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கூறியவர் **கம்பர்**
59. நெய்தல் நிலத்தவர் பாணர்களுக்கு விருந்தளித்தமை பற்றிக் கூறும் நூல் **சிறுபாணாற்றுப்படை.**
60. முறையான தொடர் எது? **தமிழர் பண்பாட்டில் வாலை இலைக்குத் தனித்த இடமுண்டு.**
61. காலின் ஏழடிப் பின் சென்று - என்னும் பொருநராற்றுப்படை உணர்த்தும் செய்தி **விருந்தினரை ஏழு அடி வரை நடந்து சென்று வழியனுப்பினர்.**
62. மருந்தே ஆயினும் விருந்தோடு உண் என்னும் அடிகள் இடம் பெற்றுள்ள நூல் **கொன்றைவேந்தன்.**
63. அன்று விதைத்துவிட்டு வந்த நெல்லை அரித்து வந்து, பின் சமைத்துச் சிவனடியார்க்கு விருந்து படைத்தவர் யார்? இக்காட்சி இடம் பெறும் நூல் எது? **இளையான்குடி மாறநாயனார், பெரியபுராணம்.**
64. விருந்தினரைப் பேணுவதற்கு பொருள் தேவைப்பட்டதால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை **இன்மையிலும் விருந்து.**

*65. அதிவீரராம பாண்டியன் எழுதிய மற்றொரு நூல்* **வெற்றி வேற்கை**

*66. நறுந்தொகை என்னும் நூலை இயற்றியவர்* **சீவலமாறன்.**

*67. காசிக்காண்டம் என்பது* **காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்.**

*68. மலைபடுகடாம் எத்தனை பாடல் அடிகளைக் கொண்ட நூல்? 583.*

*69. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி என்னும் அடியில் பாக்கம் என்பது* **சிற்றூர்.**

*70. அல்கி என்பதன் பொருள்* **தங்கி.**

*71. கேட்ட பாடல் - தொடர் வகை* **பெயரெச்சத் தொடர்.**

*72. வடித்த கஞ்சி -* **பெயரெச்சத் தொடர்.**

*73. செறிந்த என்பதன் இலக்கணக்குறிப்பு* **பெயரெச்சம்.**

*74. பாடி மகிழ்ந்தனர் என்பது* **வினையெச்சத் தொடராகும்.**

*75. தடக்கை என்பதன் இலக்கணக்குறிப்பு* **உரிச்சொற்றொடர்.**

*76. வேண்டிய என்னும் கூட்டுநிலைப் பெயரெச்சம் எவ்வாறு உருவாகின்றது?* **பெயரெச்சங்கள், செய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்துடன் சேரும் போது.**

*77. பகைவர் இன்றியும் தானே கெடும் மன்னன். காரணம்* **: இடித்துக் கூறும் பெரியாரைத் துணையாகக் கொள்ளாதவர்.**

*இயல் 4.*

*78. பெப்பர் என்ற இயந்திர மனிதனை உருவாக்கிய நாடு* **ஜப்பான்.**

*79. ஐ.பி.எம் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினியின் பெயர்* **பெப்பர்.**

*80. 2016 இல் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்த ஐ.பி.எம் நிறுவனத்தின் கணினியின் பெயர்* **பெப்பர்.**

*81. சூவன்செள என்னும் துறைமுக நகர்* **சீன** *நாட்டில் உள்ளது.*

*82. சீனாவில் சிவன் கோவில் கட்டிய சீனப்பேரரசர்* **குப்லாய்கான்.**

*83. தலைப்புக்கும், குறிப்புக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.*
*தலைப்பு : செயற்கை நுண்ணறிவு*
*குறிப்புகள் : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.*
*திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்கான சுருக்கமான வழியைக் காண்பிப்பது.*
**தலைப்பிற்கு பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றள்ளன.**

*84. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள்* **இலா.**

*85. இந்தியாவின் பெரிய வங்கி* **பாரத ஸ்டேட் வங்கி.**

*86. உனதருளே பார்ப்பன் அடியனே யார் யாரிடம் கூறியது?* **இறைவனிடம்** *குலசேகர ஆழ்வார்.*

*87. பரிபாடல் அடியில் விசும்பும் இசையும் என்னும் தொடர் குறிப்பது* **வானத்தையும் பேரொலியையும்**

*88. தன்மை வினைகள்* **வந்தேன், வந்தோம்.**

*89. குலசேகர ஆழ்வார், வித்துவக் கோட்டம்மா என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார், பால் சோற்றைக் கண்டதும் வருகிறார். இத்தொடர்களில் இடம் பெற்றுள்ள வழுவமைதிகள் முறையே* **பால் வழுவமைதி, திணை வழுவமைதி**

*90. குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார் என்பது* **கால வழுவமைதி.**

*91. இந்த மாறன் ஒருபோதும் பொய் சொல்ல மாட்டான் என்பது* **இடவழுவமைதி**

*92. குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார் - இத்தொடர்* **உறுதித் தன்மை கருதி காலவழுவமைதியாக** *ஏற்றுக் கொள்ளப்படுகிறது.*

*93. இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும், எழுதுவதும்* **வழாநிலை.**

*இயல் 5.*

*94. ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்று சொன்னவர்* **மணவை முஸ்தபா**

*95. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்புக்கு* **பயன்கலை** *என்று பெயர்.*

*96. மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி* **சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.**

*97.* **பிரான்சு** *தேசிய நூற்கூடத்தில் ஏறக்குறைய ஆயிரம் தமிழ் ஏடுகளும், ஆயிரம் பழைய தமிழ் ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன.*

98. மொகு சாஸ்ட்டு என்னும் ஜப்பானிய சொல்லின் பொருள் **விடை தர அவகாசம் வேண்டும்.**

99. சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் - பாரதியாரின் இக்கூற்று உணர்த்தும் கருத்து **பல்துறை நூல்கள் தமிழில் உருவாக்கப்பட வேண்டும்.**

100. வால்காவில் இருந்து கங்கை வரை நூலை எழுதியவர் **ராகுல் சாங்கிருத்யாயன்**

101. அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது? **கல்வி**

102. அருந்துணை என்பதைப் பிரித்தால் **அருமை + துணை** என்று பிரியும்.

103. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் **மன்னன்.** இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் **இறைவன்.**

104. கழிந்த பெரும் கேள்வியினான் எனக்கேட்டு
முழுது உணர்ந்த கபிலன் தன்பால் பொழிந்த
பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்
காட்டுப் புலவின் தென் சொல்
- இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல் மிகு கேண்மையினான் யார்?
**குசேல பாண்டியன், இடைக்காடனார்**

105. புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை அன்றோ என்று யார் யாரிடம் கூறினார்? **குசேல பாண்டியன் இறைவனிடம்.**

106. இங்கு நகரப் பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்பது எவ்வகை வினா? இதோ இங்கு நிற்கும் என்று விடையளிப்பது எவ்வகை விடை? **அறியா வினா, சுட்டு விடை.**

107. இங்கு மருத்துவமனை எங்குள்ளது என்று கேட்பது **அறியா வினா.** அதோ அங்கு உள்ளது என்று கூறுவது **சுட்டு விடை.**

108. வினவும் வினாவிற்கு விடையாக நேர்ந்ததைக் கூறுவது **உற்றது உரைத்தல் விடை.**

109. நன்னூல் கிடைக்குமா? எனக் கடைக்காரரிடம் கேட்பது **கொளல் வினா.**

110. நேரடி விடைகளாக இருக்கும் வெளிப்படை விடைகள் எத்தனை? **மூன்று.**

111. வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் குறிப்பது **உறுவது கூறல் விடை.**

112. ஆலத்து மேல குவளை குளத்துள வாலின் நெடிய குரங்கு - இவ்வரிகளில் அமையும் பொருள்கோள் **கொண்டுகூட்டுப் பொருள்கோள்.**

113. பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைவது **ஆற்று நீர்ப் பொருள்கோள்.**

## இயல் 6.

114. தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகின்ற கலை **சேவையாட்டம்.**

115. தேவராட்டத்தில் இசைக்கப்படும் இசைக்கருவி **தேவதுந்துபி.**

116. காரணம் : கம்பீரத்துடன் ஆடுதல் என்பது ஒயிலாட்டத்தின் சிறப்பு.
கூற்று : கரகாட்டத்தின் துணை ஆட்டமாக இது கருதப்படுகிறது.
**காரணம் சரி, கூற்று தவறு.**

117. கலைஞாயிறு என்று அழைக்கப்படுபவர் **ந.முத்துசாமி**

118. போலச் செய்தல் பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகளில் ஒன்று **பொய்க்கால் குதிரையாட்டம்.**

119. ‘‘நீரற வறியாக் கரகத்து’’ என்ற **புறநானூறு** பாடலடியில் கரகம் என்ற சொல் இடம் பெற்றுள்ளது.

120. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி **பறை.**

121. பன்னெடும் காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று **கரகாட்டம்.**

122. கரகாட்டத்திற்கு இசைக்கப்படும் இசைக்கருவிகள் **நையாண்டி மேள இசை, நாகசுரம், தவில், பம்பை முதலியன.**

123. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும், குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா **கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?**

124. பாடல்கள் பயன்படுத்தாத ஆட்ட வகை **பொய்க்கால் குதிரை.**

125. மலர்கள் தரையில் நழுவும். எப்போது? **தளரப் பிணைத்தால்.**

126. காலில் அணியும் அணிகலன் **சிலம்பு, கிண்கிணி.**

127. பிள்ளைத்தமிழில் இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் **7.**

128. கம்பர் தாம் இயற்றிய காப்பியத்திற்கு இட்ட பெயர் **இராம அவதாரம்.**
129. விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் **கம்பன்.**
130. பொய்யோ எனும் இடையாளொடும், இளையானோடும் போனாள். இதில் கோடிட்ட சொற்களுக்கு உரியவர்கள் யார்? யார்? **சீதை, இலக்குவன்.**
131. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன? **அங்கு வறுமை இல்லாததால்.**
132. முன்பனிக் காலத்தை பொழுதாகக் கொண்ட நிலங்கள் **குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்.**
133. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் **குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்**
134. முதுவேனிற்காலம் **ஆனி, ஆடி** மாதங்கள்.
135. ஐப்பசி, கார்த்திகை - **குளிர்காலம்.**
136. விளரியாழ் எத்திணைக்குரியது? **நெய்தல்.**
137. முல்லை நில மக்களின் உணவுப் பொருள்கள் **வரகு, சாமை**
138. நெய்தல் நிலத்துக்குரிய தொழில் **மீன் பிடித்தல், உப்பு விளைத்தல்.**
139. முல்லை நிலப் பறை **ஏறுகோட்பறை**

இயல் 7.

140. காந்தியடிகள் சத்தியாகிரகம் என்ற அறப்போர் முறையை தொடங்கி வைத்த ஆண்டு **1906**
141. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்னும் நூலின் ஆசிரியர் **ம.பொ.சிவஞானம்**
142. சாகித்ய அகாதெமி விருது பெற்ற ம.பொ.சியின் நூல் **வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு.**
143. தலைநகர் காக்க தன் முதலமைச்சர் பதவியைத் துறக்க முன் வந்தவர் **இராஜாஜி.**
144. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது எது? **சிலப்பதிகாரம்**
145. குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர் **மார்ஷல் ஏ.நேசமணி**
146. மாலவன் குன்றம் போனாலென்ன, வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும். - மாலவன் குன்றமும், வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே **திருப்பதியும், திருத்தணியும்.**
147. காளைகளை ஒட்டிக் கடுகிச் செல் முன்பு - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் **விரைந்து செல்**
148. 'திருபுவனச் சக்கரவர்த்தி' என்ற பட்டம் பெற்றவன் **இரண்டாம் இராசராசன்.**
149. தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயுமாக இருந்த அரசன் என்னும் மெய்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் **நெறியோடு நின்று காவல் காப்பவர்.**
150. மெய்கீர்த்திக்கு முன்னோடியாய்த் திகழும் சங்க இலக்கியங்கள் **பதிற்றுப்பத்து.**
151. மூவேந்தர் பற்றிய செய்திகளைக் கூறும் பெருங்காப்பியம் **சிலப்பதிகாரம்.**
152. புறத்திணைகள் மொத்தம் **12.**
153. இட்லிப்பூ என்பது **வெட்சிப்பூ** என்று அழைக்கப்படுகிறது.
154. ஆநிரைகளை மீட்டல் **கரந்தை**
155. காஞ்சி மரம் **நீல** நிறப்பூக்கள் கொண்டவை.
156. தற்போது முடக்கத்தான் என்று அழைக்கப்படுவது **உழிஞைப்பூ**
157. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடி போரிடுவதன் காரணம் **வலிமையை நிலைநாட்டல்.**
158. வாகை என்பதன் பொருள் **வெற்றி.**
159. உழுபவருக்கே நில உரிமை இயக்கம் தொடங்கியவர் **கிருஷ்ணம்மாள்.**
160. இசைக்கு கிடைத்த மகுடம் எனப் போற்றப்பட்ட விருது **மகசேசே விருது.**

இயல் 8.

161. அறம் அறக் கண்ட நெறிமான் அவையம் என்கிறது **புறநானூறு.**
162. சங்க இலக்கிய அறங்கள் இயல்பானவை. கவிதை வாழ்க்கையின் திறனாய்வு என்று கூறியவர் **அர்னால்டு.**
163. உதவி செய்தலை ஈழத்து பூதன் சேந்தனார் குறிப்பிடும் முறை **உதவியாண்மை.**
164. அறம் செய்வதில் **வணிக** நோக்கம் இருக்கக்கூடாது என்று முடமோகியார் குறிப்பிட்டுள்ளார்.
165. மேன்மை தரும் அறம் என்பது **கைம்மாறு கருதாமல் அறம் செய்வது.**
166. தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, தன் நாட்டை இழந்த துன்பத்தை விட பெருந்துன்பம் எனக்கூறும் மன்னன் **குமணன்.**
167. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் **அதியன், பெருஞ்சாத்தன்.**
168. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்றவர் **ஔவையார்.**
169. நாக்கு ஓர் அதிசய திறவுகோல்.

170. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் இவ்வடி குறிப்பிடுவது **இடையறாது அறப்பணி செய்தல்.**
171. மீட்சி விண்ணப்பம் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் **தி.சொ.வேணுகோபால்.**
172. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் **இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது.**
173. புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக்காது.
இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது. - இவ்வடிகளில் அமைந்த முரண் சொல்
**புகழ்ந்தால், இகழ்ந்தால்.**
174. ஒருவர் பேசுவது போல அமையும் ஓசை **அகவலோசை.**
175. பெருங்கதை என்னும் காப்பியம் **ஆசிரியப்பாவால்** அமைந்த நூல்.
176. மூன்றடி முதல் எழுதுபவர் மனநிலைக்கு ஏற்ப அடிகள் அமையும் பா வகை **ஆசிரியப்பா.**
177. இருவர் உரையாடுவது போன்ற ஓசை **செப்பலோசை**
178. சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் அமைந்த பாவினம் **அகவற்பா.**
179. பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும் பா வகை **கலிவெண்பா.**
180. ஊர்மக்கள் என்பது **நேர் நேர் நேர்**
181. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு - **கூவிளம் தேமா மலர்.**
182. நான் மட்டும் தண்டனை பெற்று நரகம் சேர்வேன். மக்கள் அனைவருக்கும் நலம் கிட்டும் - என்று கூறியவர் **இராமானுசர்.**

## இயல் 9.

183. ஜெயகாந்தன் படைப்புகளில் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் **சில நேரங்களில் சில மனிதர்கள்.**
184. சிறுகதை மன்னன் என்று சிறப்பிக்கப்படுபவர் **ஜெயகாந்தன்.**
185. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையாகவும், சவாலுமாகவும் ஜெயகாந்தன் கருதுவது **பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்**
186. ஜெயகாந்தனின் சிறுகதைத் தொகுப்பு **உண்மை சுடும்.**
187. ஜெயகாந்தனின் சோவியத் நாட்டு விருது பெற்ற நூல் **உன்னைப் போல் ஒருவன்.**
188. கலையின் கணவனாகவும், சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன். இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது? **சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.**
189. இவள் தலையில் எழுதியதோ, கற்காலம்தான் எப்போதும் - இவ்வடிகளில் 'கற்காலம்' என்பது **தலையில் கல் சுமத்தல்.**
190. தேம்பாவணியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை **3615.**
191. 'வாய்மையே மழை நீராகி' என்னும் தொடரில் வெளிப்படும் அணி **உருவகம்.**
192. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவோடு காக்க என்று **கருணையன் எலிசபெத்துக்காக** வேண்டினார்.
193. தீவகம் என்னும் சொல்லின் பொருள் **விளக்கு.**
194. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று உண்டாகச் செய்வான் வினை. இக்குறட்பாவில் பயின்று வரும் அணி **உவமை அணி.**
195. உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றி பெறுவன **உவமையை விட உருவகமே.**

## பொது - இலக்கணம்

196. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடு. **உழவு, ஏர், மண், மாடு**
197. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள். இத்தொடர் **கலவைத் தொடர்**
198. ஆடுக - இலக்கணக்குறிப்பு - **வியங்கோள் வினைமுற்று.**
199. ஏமரா மன்னன் - இலக்கணக் குறிப்பு **ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்.**
200. வெளிநாட்டில் வேலை செய்து கொண்டிருக்கும் தாயைப் பிரிந்திருக்கும் மகள் **மழை முகம் காணாப் பயிர் போல** வருந்திக் கொண்டிருந்தாள்.
201. காற்றுள்ள போதே தூற்றிக் கொள் - இப்பழமொழி உணர்த்தும் சரியான பொருள் **உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாக செய்து விட வேண்டும்.**
202. காற்றின் மெல்லிய **தொடுதல்** பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான **தொடுத்தல்** பூக்களை மாலையாக்குகிறது.
203. புதிருக்கான விடையை வரிசைப் படுத்துக.
பொய்கையிடம் போனால் குளிர்ந்து போகிறாய் ;
பூக்களைத் தொட்டால் நறுமணத்தோடு வருகிறாய்;
புல்லாங்குழலில் புகுந்தால் இசையாகி விடுகிறாய்
**வளி, காற்று.**

204. சங்க இலக்கியங்கள், ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இருதிணைகளும் பயன் பெற எடுத்து இயம்புகின்றன. - இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக. **ஐந்திணை : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை**

**இருதிணை : உயர்திணை, அஃறிணை.**

205. புதிருக்கான விடையை வரிசைப்படி தேர்ந்தெடுக்க.

தவழும்போது ஒரு பெயர் ; விழும்போது ஒரு பெயர்; உருளும்போது ஒரு பெயர்; திரண்டோடும் போது ஒரு பெயர் - அவை என்ன? **மேகம், மழை, நீர், வெள்ளம்.**

206. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், நாலடியார் - இவ்விலக்கியங்களுக்குள் இருக்கும் தமிழெண்களைக் கண்டறிக. - **18, 4**

207. ஒயிலாட்டத்தில் இரு வரிசையில் நின்று ஆடுகின்றனர். - இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது? **ஒயிலாட்டம் இரு வரிசையில் நின்று ஆடப்படுகிறது.**

208. பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம் நிறுவப்பட்ட ஆண்டு **1988.**

209. களிஇயல் யானைக் கரிகால் வளவ - என்று பாடியவர் **வெண்ணிக் குயத்தியார்.**

<u>இயல் 2</u>

| | |
|---|---|
| கொண்டல் | - **கிழக்கு** |
| கோடை | - **மேற்கு** |
| வாடை | - **வடக்கு** |
| தென்றல் | - **தெற்கு** |

<u>இயல் 3</u>

| | |
|---|---|
| இறடி | - **தினை** |
| பொம்மல் | - **சோறு** |
| கடும்பு | - **சுற்றம்** |
| படுகர் | - **பள்ளம்** |

<u>இயல் 3</u>

| | |
|---|---|
| விருந்தே புதுமை | - **தொல்காப்பியர்** |
| மோப்பக்குழையும் அனிச்சம் | - **திருவள்ளுவர்** |
| மருந்தே ஆயினும் விருந்தொடு உண் | - **ஔவையார்** |
| விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை | - **இளங்கோவடிகள்** |

<u>இயல் 6</u>

| | |
|---|---|
| குறிஞ்சி | - **தேனெடுத்தல்** |
| முல்லை | - **நிரை மேய்த்தல்** |
| மருதம் | - **நெல்லறிதல்** |
| நெய்தல் | - **உப்பு விளைவித்தல்** |

<u>இயல் 6</u>

| | |
|---|---|
| குறிஞ்சி | - **குளிர்காலம், முன்பனிக்காலம்** |
| முல்லை | - **கார்காலம்** |
| மருதம் | - **ஆறு பெரும்பொழுதுகள்** |
| பாலை | - **இளவேனில், முதுவேனில், பின்பனி** |

<u>இயல் 9</u>

| | |
|---|---|
| தற்குறிப்பேற்ற அணி | - **கவிஞனின் குறிப்பேற்றல்** |
| தீவக அணி | - **ஒரு சொல் பல இடங்களில் உள்ள சொற்களோடு பொருள் கொள்ளல்** |
| நிரல் நிறை அணி | - **சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்திப் பொருள் கொள்ளல்** |
| தன்மையணி | - **உண்மையான இயல்புத் தன்மை** |

*வினா எண் 12 முதல் 15 வரை*
*பாடலைப் படித்து விடையளிக்க*

*தென்னன் மகளே திருக்குறளின் மாண்புகழே*
*இன்னறும் பாப்பத்தே எண்தொகையே நற்கணக்கே*
*மன்னுஞ் சிலம்பே மணிமேகலை வடிவே*
*முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே*
*12. இப்பாடல் இடம் பெற்று கவிதைத் தொகுப்பின் பெயர் என்ன?* **கனிச்சாறு**
*13. இப்பாடலின் ஆசிரியர்* **பெருஞ்சித்திரனார்**
*14. நற்கணக்கே என்பது* **பதிணென் கீழ்க்கணக்கு நூல்கள்**
*15. தென்னன் மகள் - என்பதன் பொருள் யாது?* **பாண்டியன் மகள்**
*16. இன்னறும் - இலக்கணக்குறிப்புத் தருக.* **பண்புத்தொகை**
*17. எண்தொகையே - பிரித்து எழுதுக.* **எண் + தொகையே**

*முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்*
*மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்*
*அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு*
*இணைகிடந்த தே தமிழ்*
*12. இப்பாடலின் ஆசிரியர்* **தமிழழகனார்**
*13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்* **இரட்டுற மொழிதல் (தனிப்பாடல் திரட்டு)**
*14. இப்பாடலில் வந்துள்ள அடியெதுகை சொற்கள்* **முத்தமிழ், மெத்த, அணைகிடந்தே, இணைகிடந்த**
*15. முத்தமிழ் - விரித்தெழுதுக -* **இயல், இசை, நாடகம்**
*16. இப்பாடலில் தமிழ் எதனோடு ஒப்பிடப்படுகிறது?* **கடல்**

*நனந்தலை உலகம் வளைஇ நேமியோடு*
*வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை*
*நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,*
*பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,*
*கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி*
*பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை*
*12. இப்பாடலின் ஆசிரியர்* **நப்பூதனார்**
*13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்* **முல்லைப்பாட்டு**
*14. நனந்தலை உலகம் - இத்தொடரின் பொருள் -* **அகன்ற உலகம்**
*15. பாடலில் இடம் பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.* **பாடுஇமிழ், கோடுகொண்டு**

*சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்*
*உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்*
*நடுங்கு சுவல் அசைத்த கையல், கைய*
*கொடுங்கோற் கோவல் பின்நின்று உய்த்தர*
*இன்னே வருகுவர், தாயர் என்போள்*
*நன்னர் நன்மொழி கேட்டனம்.*
*12. இப்பாடலின் ஆசிரியர்* **நப்பூதனார்**
*13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்* **முல்லைப்பாட்டு**
*14. உறுதுயர் - இலக்கணக்குறிப்பு -* **வினைத்தொகை**
*15. பாடலில் இடம் பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.* **சிறுதாம்பு, உறுதயர், நடுங்கு, கொடுங்கோற், இன்னே, நன்னர்**

*வினா எண் 12 முதல் 15 வரை*
*பாடலைப் படித்து விடையளிக்க*

*விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்*
*வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்*
*திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்*
*எழுதல் முன் மகிழ்வனச் செப்பல்*
*பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்*
*போமெனில் பின் செல்வதாதல்*
*பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்*
*ஒழுக்கமும் வழிபடும் பண்பே*

*12. இப்பாடல் இடம் பெற்ற நூல் யாது?* **காசிக்காண்டம்**
*13. இப்பாடலின் ஆசிரியர்* **அதிவீரராம பாண்டியர்**
*14. பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்கள் யாவை?* **விருந்தினனாக, வியத்தல்**
*15. வியத்தல் என்பதன் இலக்கணக்குறிப்பு* **தொழிற்பெயர்**
*16. முகமன் என்பது* **விருந்தோம்பல் சொல்**

*அன்று அவன் அசைஇ அல்சேர்ந்து அல்கி*
*கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து*
*சேந்த செயலைச் செப்பம் போகி,*
*அலங்கு கழை நாலும் ஆரிப்படுகர்ச்*
*சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி*
*நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்*
*மான விறல்வேள் வயிரம் எனினே*

*12. இப்பாடலின் ஆசிரியர்* **பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்**
*13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்* **மலைபடுகடாம்**
*14. கடும்பு என்பதன் பொருள் -* **சுற்றம்**
*15. பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்களைக் குறிப்பிடுக.*
**அன்று, அவன், அசைஇ, அல்சேர்ந்து, அல்கி, அலங்கு,**
*16. அசைஇ - இலக்கணக்குறிப்பு* **சொல்லிசை அளபெடை**
*17. பாக்கம் என்பதன் பொருள் -* **சிற்றூர்**
*18. பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள்* **அன்று, கன்று, அலங்கு, சிலம்பு**

*வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன்பால்*
*மாளாத காதல் நோயாளன் போல மாயத்தால்*
*மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட்டமா நீ*
*ஆளா உனதருளே பார்ப்பன் அடியனே.*

*12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்* **பெருமாள்திருமொழி**
*13. இப்பாடலின் ஆசிரியர்* **குலசேகராழ்வார்**
*14. பாடலில் இடம் பெற்றுள்ள எதுகைச் சொற்கள் யாவை?* **வாளால், மாளாத, மீளாத், ஆளா**
*15. மாயம் - என்பதன் பொருள் யாது?* **விளையாட்டு**
*16. வித்துவக்கோட்டமா - இதில் இடம் பெற்றுள்ள வழுவமைதி* **பால் வழுவமைதி**
*17. மீளா என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு -* **ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்**
*18. மாளாத - என்பதன் பொருள் யாது?* **தீராத**

*விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்*
*கருவளர் வானத்து இசையில் தோன்றி,*
*உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;*
*உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்*

*12. ஊழ் ஊழ் - இலக்கணக்குறிப்பு* **அடுக்குத்தொடர்**
*13. இப்பாடலின் ஆசிரியர்* **கீரந்தையார்**
*14. பாடலில் உணர்த்தப்படும் கருத்து* **அறிவியல்**
*15. விசும்பு, இசை, ஊழி - இச்சொற்களின் பொருள்கள் முறையே* **வானம், பேரொலி, யுகம்**

<u>வினா எண் 12 முதல் 15 வரை</u>

<u>பாடலைப் படித்து விடையளிக்க</u>

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருந்துவதும் கல்வியென்றே போற்று.

12. பாடலில் இடம் பெற்றுள்ள சீர் எதுகைகளை எழுதுக. **அருளை, பெருக்கி, திருத்தி**
13. அருந்துணையாய் - இச்சொல்லைப் பிரித்தால் **அருமை + துணையாய்**
14. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் **நீதிவெண்பா**
15. இப்பாடலின் ஆசிரியர் **கா.ப.செய்குதம்பிப் பாவலர்**
16. மருளை அகற்றி என்பதன் பொருள் **மயக்கம் அகற்றி**
17. இப்பாடலில் போற்றிக் கற்க வேண்டியதாய் ஆசிரியர் கூறுவது **கல்வி**
18. அருந்துணை - இலக்கணக் குறிப்பு - **பண்புத்தொகை**
19. அறிவுக்குத் தெளிவைத் தருவது **கல்வி**

புண்ணியப்புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வியோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

12. இப்பாடலின் ஆசிரியர் **பரஞ்ஜோதி முனிவர்**
13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் **திருவிளையாடற்புராணம்**
14. இப்பாடல் வரி யார் கூற்றாக அமைந்துள்ளது? - **மன்னன், புலவர்**
15. நுவன்ற என்ற சொல்லின் பொருள் - **சொல்லிய**

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யோடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடப்
கம்பி விதம்பொதி குண்டல மூங்குழை காது மசைந்தாடக்
கட்டிய குழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் **முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்**
13. இப்பாடலின் ஆசிரியர் **குமரகுருபரர்**
14. பாடலில் இடம் பெற்றுள்ள எதுகைச் சொற்கள் யாவை? **செம்பொன், பைம்பொன்**
15. பண்டி - சொல்லின் பொருள் **வயிறு**

தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க
கொண்டல்கள் முழவினேங்க குவளைகண் விழித்து நோக்க
தெண்டிரை யெழினி காட்ட தேம்பிழி மகரயாழின்
வண்டுகளி னிதுபாட மருதம்வீற்றி ருக்கும்மாதோ.

12. இப்பாடலின் ஆசிரியர் **கம்பர்**
13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் **கம்பராமாயணம்**
14. கொண்டல் - இச்சொல்லின் பொருள் - **மேகம்**
15. இப்பாடலில் உள்ள அடி ஏதுகைகளை தேர்க.

**தண்டலை, கொண்டல்கள், தெண்டிரை, வண்டுகளி**

*வினா எண் 12 முதல் 15 வரை*

*பாடலைப் படித்து விடையளிக்க*

*உறங்குகின்ற கும்பகன்ன உங்கள் மாய வாழ்வெலாம்*
*இறங்குகின்றது இன்று காண் எழுந்திராய் எழுந்திராய்*
*கறங்குபோல வில்பிடித்த காலதூதர் கையிலே*
*உறங்குவாய் உறங்குவாய் இனிக்கிடந்து உறங்குவாய்*

*12. இப்பாடலின் ஆசிரியர்* **கம்பர்**
*13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்* **கம்பராமாயணம்**
*14. கறங்கு - இச்சொல்லின் பொருள் -* **காற்றாடி**
*15. இப்பாடலில் உள்ள சீர் மோனைச் சொற்களை தேர்க* **உறங்குகின்ற, உங்கள்**
*16. மாய என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.* **மெய்யான**

*முதல்மழை விழுந்ததும்*
*மேல் மண் பதமாகி விட்டது*
*வெள்ளி முளைத்திடுது விரைந்து போ நண்பா!*
*காளைகளை ஓட்டிக் கடுகிச் செல் முன்பு!*
*பொன் ஏர் தொழுது, புலன் வழிபட்டு*
*மாட்டைப் பூட்டி*
*காட்டைக் கீறுவோம்*
*ஏர்புதிதன்று, ஏறும் நுகத்தடி கண்டது.*

*12. இப்பாடல் இடம்பெறும் கவிதைத் தொகுப்பின் பெயர் யாது?* **ஏர் புதிதா? (கு.ப.ரா. படைப்புகள்)**
*13. இப்பாடலின் ஆசிரியர்* **கு.ப.ராஜகோபாலன்**
*14. புதிதன்று - பிரித்து எழுதுக* **புதிது + அன்று**
*15. கடுகிச் செல் என்பதன் பொருள்* **விரைந்து செல்**

*வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்*
*பூவும் புகையும் மேவிய விரையும்*
*பகர்வனர் திரிதரு நகரவீதியும்;*
*பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்*
*கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;*

*12. இப்பாடலின் ஆசிரியர்* **இளங்கோவடிகள்**
*13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்* **சிலப்பதிகாரம்**
*14. வண்ணமும் சுண்ணமும் - இலக்கணக்குறிப்பு -* **எண்ணும்மை**
*15. விரை என்பதன் பொருள்* **மணம்**
*16. காருகர் என்பதன் பொருள்* **நெய்பவர் (சாலியர்)**
*17. இப்பாடலில் இடம் பெற்றுள்ள நறுமணப்பொருட்கள் யாவை?* **சந்தனமும் அகிலும்**

*தூசும் துகிரும் ஆரமும் அகிலும்*
*மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்*
*அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா*
*வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்:*
*பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு*
*கூலம் குவித்த கூல வீதியும்*

*12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்* **சிலப்பதிகாரம்**
*13. இப்பாடலின் ஆசிரியர்* **இளங்கோவடிகள்**
*14. பாடலில் இடம் பெற்றுள்ள எதுகைச் சொற்கள் யாவை?* **தூசும், மாசுஅறு**
*15. தூசும் - என்பதன் பொருள் யாது?* **பட்டு**

*வினா எண் 12 முதல் 15 வரை*

*பாடலைப் படித்து விடையளிக்க*

*மண்ணுள் வினைஞரும் மண்ணீட்டு ஆளரும்*
*பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்*
*துன்னகாரரும் தோலின் துன்னரும்*
*கிழியினும் கிடையினும் தொழில் பல பெருக்கி*

*12. இப்பாடலின் ஆசிரியர்* **இளங்கோவடிகள்**
*13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்* **சிலப்பதிகாரம்**
*14. மண்ணுள் வினைஞர் பொருள் தருக.* **ஓவியர்**
*15. இப்பாடலில் உள்ள சீர் ஏதுகைகளை தேர்க* **பொன்செய் - நன்கலம்**

*பழுதுஇல் செய்வினைப் பால்கெழு மாக்களும்;*
*குழலினும் யாழினும் குரல் முதல் ஏழும்*
*வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டும்*
*அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்;*
*சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு*
*மறுஇன்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்*

*12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்* **சிலப்பதிகாரம்**
*13. இப்பாடலின் ஆசிரியர்* **இளஙகோவடிகள்**
*14. இப்பாடலில் பயின்று வந்துள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக*
**பழுதுஇல், வழுவின்றி, சிறுகுறுங், மறுஇன்றி**
*15. குழலினும் யாழினும் - இலக்கணக்குறிப்பு -* **எண்ணும்மை**

*பூக்கையைக் குவித்து பூவே*
*புரிவோடு காக்கென்று அம்பூஞ்*
*சேக்கையைப் பரப்பி இங்கண்*
*திருந்திய அறத்தை யாவும்*
*யாக்கையைப் பிணித்தென்று ஆக*
*இனிதிலுள் அடக்கி வாய்ந்த*
*ஆக்கையை அடக்கிப் பூவோடு*
*அழுங்கணீர் பொழிந்தான் மீதே.*

*12. இப்பாடலின் ஆசிரியர்* **வீரமாமுனிவர்**
*13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்* **தேம்பாவணி**
*14. கணீர் - இலக்கணக்குறிப்பு -* **இடைக்குறை**
*15. சேக்கை என்ற சொல்லின் பொருள் -* **படுக்கை**

*நவமணி வடக்க யில்போல்*
*நல்லறப் படலைப் பூட்டும்*
*தவமணி மார்பன் சொன்ன*
*தன்னிசைக்கு இசைகள் பாடத்*
*துவமணி மரங்கள் தோறும்*
*உவமணி கானம்கொல் என்று*
*ஒலித்து அழுவ போன்றே.*

*12. இப்பாடலின் ஆசிரியர்* **வீரமாமுனிவர்**
*13. இப்பாடல் இடம் பெற்ற நூல்* **தேம்பாவணி**
*14. பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.*
**நவமணி, தவமணி, துவமணி, உவமணி**
*15. பொருள் தருக. படலை -* **மாலை**

வினா எண் 16 முதல் 20 வரை

விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க

1. ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.
**நாட்டு மக்களின் அறிவொழுக்கம் எதன் அடிப்படையில் அமையும்?**
2. 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.
**எப்போது கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது?**
3. செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன் சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.
**சில நிமிடங்களில் நோயாளியின் புற்றுநோயைக் கண்டறியும் கருவி யாது?.**
4. திறன்பேசிகளில் இயங்கும் உதவும் மென்பொருள், நாம் படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும்.
**திறன்பேசிகளில் நாம் படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடுவது எது?**
5. வடக்கிலிருந்து வீசும் காற்று வாடைக்காற்று.
**வடக்கிலிருந்து வீசும் காற்றின் பெயரென்ன?**
6. புறஊதாக் கதிர்கள் நேரடியாக உயிரினங்களைத் தாக்குவதால் மிகுந்த துன்பத்தை உயிரினங்கள் அடைகின்றன.
**புற ஊதாக் கதிர்களால் ஏற்படும் விளைவு யாது?**
7. பத்துப்பாட்டில் மிகக்குறைந்த அடிகளைக் கொண்ட நூல் முல்லைப்பாட்டு.
**பத்துப்பாட்டில் மிகக்குறைந்த அடிகளைக் கொண்ட நூல் எது?**
8. முல்லைப்பாட்டைப் பாடியவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகரது மகனாவார்.
**முல்லைப்பாட்டைப் பாடியவர் யார்?**
9. செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் ஆகும்.
**செயற்கை நுண்ணறிவு என்பது யாது?**
10. வானத்துத் தேவர்கள் ஆடும் ஆட்டம் தேவராட்டம் எனப்படும்.
**தேவராட்டம் என்றால் என்ன?**
11. நாம் இப்போது செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் இருக்கிறோம்.
**நாம் இப்போது எந்தக் காலத்தில் இருக்கிறோம்?**
12. கருத்தாழமும் வாசகர் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன்.
**கருத்தாழமும் வாசகர் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் யார்?**
13. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி
**ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?**
14. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
**நால்வகைப் பாக்கள் யாவை?**
15. நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டுவரும் கலையே தெருக்கூத்து என்பர்.
**நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டுவரும் கலை யாது?**
16. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்.
**எதைக் கொடுத்து தலைநகரைக் காக்க வேண்டும்?**
17. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக்காலத்தில் வழிப்போக்கர்களுக்காக மிகுதியான சத்திரங்கள் கட்டப்பட்டன.
**யாருடைய ஆட்சிக்காலத்தில் மிகுதியான சத்திரங்கள் கட்டப்பட்டன?**
18. பாடுவதற்குத் தகுதி உடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப்பாடுவது பாடாண் திணையாகும்.
**பாடாண் திணை என்றால் என்ன?**
19. மொழி என்பது உலகின் போட்டி போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். அக்கருவி காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும்.
**உலகின் போட்டி போராட்டத்திற்கு காரணமாக விளங்குவது எது?**
20. காலை நேரம் ஒரு நிகழ்ச்சிக்காகத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன் அவரை மாலையிட்டு வரவேற்றனர்.
**தொடர்வண்டியில் வந்து இறங்கிய தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதனை எவ்வாறு வரவேற்றனர்?**
21. விருந்து பற்றி எடுத்துரைக்கும் சங்க இலக்கிய நூல்கள் புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை.
**விருந்து பற்றி எடுத்துரைக்கும் சங்க இலக்கிய நூல்கள் யாவை?**

வினா எண் 16 முதல் 20 வரை

விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க

22. வேப்பமாலை அணிந்த குசேலபாண்டியன். தமிழறியும் பெருமான். அடியார்க்கு நலநிதி போன்றவன்.
**வேப்பமாலை அணிந்த குசேலபாண்டியன் எத்தகையவன்?**

23. ரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில் எழுதிய கீதாஞ்சலியை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பிறகு நோபல் பரிசு கிடைத்தது.
**ரவீந்திரநாத் தாகூருக்கு எப்போது நோபல் பரிசு கிடைத்தது?**

24. தமிழர்களின் மிகப்பழமையான மரபுவழிக் கலைகளில் ஒன்று பொம்மலாட்டம்.
**தமிழர்களின் மிகப்பழமையான மரபுவழிக் கலைகளில் ஒன்று எது?**

25. மரபார்ந்த கலைகளில் ஒன்று கரகாட்டம் ஆகும்.
**மரபார்ந்த கலைகளில் ஒன்று யாது?**

26. நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் என்றார் ந,முத்துசாமி.
**நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் என்றவர் யார்?**

27. 1948 ஆகஸ்டு எட்டாம் நாள், இந்திய வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கத்தக்க புனித நாளாகும்.
**இந்திய வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கத்தக்க புனித நாள் எது?**

28. முதலாம் இராசராசன் காலம் தொட்டு மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டன.
**யாருடைய காலம் தொட்டு மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டன?**

29. பாவாணர் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட இயக்குநராகப் பணியாற்றினார்.
**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் யார்?**

30. தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை.
**தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை யாது?**

31. இல்வாழ்க்கை என்பது அன்பும் அறனும் நிறைந்தது.
**இல்வாழ்க்கை என்பது எத்தகையது?**

32. பேரரசனது மெய்ப்புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி.
**மெய்க்கீர்த்தி என்றால் என்ன?**

33. ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்கிறார் மணவை முஸ்தபா.
**ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்றவர் யார்?**

34. சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன.
**சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் யாரை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டன?**

35. பாவாணர் உலகத்தமிழ் கழகத்தை நிறுவி தலைவராக இருந்தவர்.
**உலகத்தமிழ் கழகத்தை நிறுவி தலைவராக இருந்தவர் யார்?**

36. செங்கீரைச் செடி காற்றில் ஆடுவது போன்று குழந்தையின் தலை 5 முதல் 6 ஆம் மாதங்களில் மென்மையாக அசையும் பருவத்தைச் செங்கீரைப் பருவம் என்பர்.
**செங்கீரைப் பருவம் என்பது யாது?**

37. கா என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள்.
**கா என்பதன் பொருள் யாது?**

38. வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயருக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.
**ஆங்கிலேயருக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர் யார்?**

39. இளங்கோ தந்த சிலம்பு தமிழினத்தின் பொதுச் சொத்து.
**தமிழினத்தின் பொதுச் சொத்து யாது?**

40. கிரேக்க அறிஞர் ஹிப்பாலஸ் என்பவர் பருவக் காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்.
**பருவக் காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தியவர் யார்?**

41. மொழி பெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெற முடியும்.
**அனைத்துலக அறிவை நாம் எளிதாகப் பெற என்ன செய்ய வேண்டும்?**

42. இந்தியாவின் மகத்தான சாதனையாக கருதுவது பெற்ற சுதந்திரத்தை பேணிக் காத்தது என்கிறார் ஜெயகாந்தன்.
**ஜெயகாந்தன், இந்தியாவின் மகத்தான சாதனையாக கருதுவது எதனை?**

வினா எண் 16 முதல் 20 வரை

விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க

43. பிள்ளைத்தமிழ் இரண்டு வகைப்படும்.

**பிள்ளைத்தமிழ் எத்தனை வகைப்படும்?**

44. கம்பராமாயணப் பாடல்கள் சந்தநயம் மிக்கவை.

**கம்பராமாயணப் பாடல்கள் எந்த நயம் மிக்கவை?**

45. மொழிபெயர்ப்பு, மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி மொழிவளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

**மொழிவளர்ச்சிக்கு வழிவகுப்பது எது?**

46. தமிழ்நூல்கள், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், வடமொழி, ரஷ்ய மொழி, வங்க மொழி, மராத்தி மொழி போன்ற பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**தமிழ்நூல்கள் எந்தெந்த மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன ?**

47. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் என்று முழங்கினார் ம.பொ.சிவஞானம்.

**தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் என்று முழங்கியவர் யார்?**

48. இளம் வயதிலேயே சமூக விடுதலைக்காகப் போராடியவர் மார்ஷல்.ஏ.நேசமணி ஆவார்.

**இளம் வயதிலேயே சமூக விடுதலைக்காகப் போராடியவர் யார்?**

49. விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகின்றனர்.

**இக்காலத்தில் விருந்தினர் என்போர் யார்?**

50. ஞானம் என்னும் கவிதையை இயற்றியவர் தி.சொ.வேணுகோபாலன்.

**ஞானம் என்னும் கவிதையை இயற்றியவர் யார்?**

51. தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது.

**எந்த ஆட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது?**

52. ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

**ஒயிலாட்டத்தில் எந்தெந்த இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன?**

53. மொழிப்பெயர்த்தல் என்ற தொடரை மரபியலில் குறிப்பிட்டவர் தொல்காப்பியர் ஆவார்.

**மொழிப்பெயர்த்தல் என்ற தொடரை மரபியலில் குறிப்பிட்டவர் யார்?**

54. இராமாயணம், மகாபாரதம் போன்ற வடமொழி இலக்கியங்கள் தமிழ்க் காப்பியங்களை அழகுபடுத்தின.

**தமிழ்க் காப்பியங்களை அழகுபடுத்தியவை யாவை?**

வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (16 முதல் 20)

இயல் - 1

1. மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! - ஐம்பெருங்காப்பியங்களுள் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள இரு காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

**சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி**

2. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

**அன்னை மொழியாகவும், அழகாய் அமைந்த செந்தமிழாகவும், பழமைக்குப் பழமையாய் தோன்றிய நறுங்கனியாகவும் உள்ளது தமிழ்.**

**கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலக பேரரசாகவும், பாண்டியன் மகளாகவும் விளங்குவது தமிழ்.**

**திருக்குறளின் பெருமைக்கு உரியவளாக, பத்துப்பாட்டாக, எட்டுத்தொகையாக, பதிணென்கீழ்க்கணக்காக, நிலைத்த சிலப்பதிகாரமாக, அழகான மணிமேகலையாக உள்ளது தமிழ்.**

**உன் பொங்கி எழும் நினைவுகளால் உன்னைத் தலை பணிந்து வாழ்த்துகின்றோம் என்று பாவலரேறு வாழ்த்துகின்றார்.**

3. பன்மொழிப் புலவர் க.அப்பாத்துரையார் குறித்து எழுதுக.

**உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல்நாடு மலேசியா. மாநாட்டுக்குரிய முதல் மொழியும் தமிழே! என்று கூறியவர்.**

வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (16 முதல் 20)

4. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.

**இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு முதலியன.**

5. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிகாட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

**சரியான தொடர்கள்**
**ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**
**பிழையான தொடர் : ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
**பிழைக்கான காரணம் : தாறு - வாழைக்குலை; சீப்பு - வாழைத்தாற்றின் பகுதி**
**வாழைத்தாற்றில் பல சீப்புகள் உள்ளன என்று கூறி இருக்க வேண்டும்.**

6. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

**வெளியூர் சென்று வந்த பாவாணரிடம் அவரது நண்பர் பகலுணவும் இரவுணவும் எப்படி இருந்தது என்று கேட்டார். அதற்கு பாவாணர் பகலுணவு பகல் உணவாகவும், இரவுணவு இரா உணவாகவும் இருந்தது என்றார். பகல் - பகிர்தல், இரா - இல்லை.**

7. சிலேடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**சிலேடை இரண்டு வகைப்படும். அவை**
**செம்மொழிச் சிலேடை**
**பிரிமொழிச் சிலேடை**

8. தாய்மொழியும், ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டு காரணம் எழுதுக.

**கற்க விரும்பும் மொழி : தெலுங்கு**
**காரணம் : தமிழுக்கு அடுத்து அதிக மக்கள் பேசும் மொழி.**
**தமிழோடு தொடர்புடைய மொழி.**

இயல் - 2

9. நமக்கு உயிர் காற்று, காற்றுக்கு வரம் மரம் - மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம். - இது போன்ற உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

**மரம் வளர்ப்போம்! மாசற்றக் காற்றைப் பெறுவோம்!!**
**மரமின்றி மாசில்லாக் காற்றில்லை!**

10. ஓசோன் படலத்தின் பயன்களைக் கூறு.

**கதிரவனிடமிருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்களைத் தடுக்கிறது.**
**புவியைப் போர்வை போலச் சுற்றி கதிரவனின் வெப்பத்தைக் குறைத்துக் கொடுக்கிறது.**

11. பருவமழை தரும் காற்றுகள் யாவை?

**வடகிழக்குப் பருவக்காற்று, தென்மேற்குப் பருவக்காற்று**

12. காற்றின் ஆற்றல், வேகம் இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றன?

**வளி மிகின் வலி இல்லை என்று ஐயூர் முடவனார், காற்றின் ஆற்றலைச் சிறப்பித்துள்ளார்.**
**மதுரை இளநாகனார், கடுங்காற்று மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று காற்றின் வேகத்தைச் சிறப்பிக்கிறார்.**

13. காற்றைக் குறிக்கும் வேறுபெயர்கள் யாவை?

**வளி, தென்றல், புயல், சூறாவளி**

14. நம் தமிழகத்தில் காற்றாலை மின்உற்பத்தி பற்றி எழுதுக.

**காற்றாலை மின்உற்பத்தியில் இந்திய அளவில் தமிழகம் முதன்மை வகிக்கும் மாநிலமாகும்.**

15. காற்று மாசு அடையாமல் பாதுகாக்கும் வழிகள் இரண்டு கூறுக.

**குப்பைகள், நெகிழிப் பைகள், மெது உருளைகள் போன்றவற்றை எரிக்கக் கூடாது.**
**பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த வேண்டும்.**

16. வசன கவிதை - குறிப்பு வரைக.

**உரைநடையும், கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படுவது வசன கவிதை.**

வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (16 முதல் 20)

17. முல்லைப்பாட்டு - நூல் குறிப்பு வரைக.

**பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.**

**அடிகளின் எண்ணிக்கை 103.**

**ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது.**

**முல்லைநிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது.**

**பத்துப்பாட்டு நூல்களுள் மிகக்குறைந்த அடிகளைக் கொண்ட நூல்.**

18. விரிச்சி - விளக்குக.

**ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? என ஐயம் கொண்ட பெண்கள், மக்கள் நடமாட்டம் குறைவான ஊர்ப்பக்கத்தில் போய், தெய்வத்தைத் தொழுது நின்று அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்பர். அவர்கள் நல்ல சொல்லைக் கூறின் தம் செயல் நன்மையில் முடியும் என்றும், தீய மொழியைக் கூறின் தீதாய் முடியும் என்றும் கொள்வர்.**

19. முதுபெண்டிர் விரிச்சி கேட்டு தலைவிக்குக் கூறிய செய்தி யாது?

**சிறுதாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள்.**

**புல்லை மேய்ந்த உன் தாயாரை வளைந்த கத்தியுடைய கம்பைக் கொண்ட எம் இடையர், இப்போது ஓட்டி வந்து விடுவர். வருந்தாதே என்றாள் இடைமகள்.**

இயல் - 3

20. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

**வாருங்கள்! அமருங்கள்! நலமா? நீர் அருந்துங்கள்.**

21. விருந்து பேணுவதற்காக எவற்றையெல்லாம் தலைவன் பணையம் வைத்ததாகப் புறநானூறு கூறுகிறது?

**இரும்பினால் செய்யப்பட்ட பழைய வாள், கருங்கோட்டு சீறியாழ்.**

22. தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி என்பது இலக்கியச்செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.

**கருத்து 1 : வெறுங்கை முழம் போடுமா? என்ற பழமொழியைக் கூறியவர்களும் நம் முன்னோரே. ஆகவே விருந்தோம்பலுக்கு செல்வம் இன்றியமையாதது.**

**கருத்து 2 : மனமிருந்தால் மார்க்கம் உண்டு என்ற பழமொழிக்கேற்ப விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்ற மனநிலை இருந்தால் மட்டுமே வறுமையிலும் விதைக்காக வைத்திருந்த தானியத்தைக் குற்றி உணவளிக்க முடியும்.**

23. கடினப்பாதையில் எவ்வோசை எழும் என மலைபடுகடாம் கூறுவதை எழுதுக.

**அசையும் மூங்கில்கள் ஓசை எழும்.**

24. இறடிப் பொம்மல் பெறுகுவீர் - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

**தினைச் சோற்றைப் பெறுவீர்கள்.**

25. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.

உயிரை விடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் - **உயிரினும் ஓம்பப்படும்**

ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது - **நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று.**

ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் - **ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை**

26. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார்? ஏன்?

**குற்றம் கண்டபோது இடித்துத் திருத்தும் பெரியாரின் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளாத மன்னன், தன்னைக் கெடுக்க பகைவர் இல்லையெனினும் தானே கெட்டழிவான்.**

27. யாருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது?

**நடுநிலையாகக் கடமை தவறாமல், இரக்கம் காட்டுபவருக்கு இவ்வுலகம் உரிமையாகும்.**

28. <u>நச்சப்படாதவன்</u> செல்வம் - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.

**நச்சப்படாதவன் என்பதன் பொருள், பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர்.**

இயல் - 4

29. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

**இயந்திர மனிதன், திறன்பேசி**

<u>வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (16 முதல் 20)</u>

30. பெப்பர் என்பது என்ன?

**ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர்.**

**இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ.**

**வீட்டுக்கு, வணிகத்துக்கு, படிப்புக்கு என மூன்று வகை ரோபோக்கள் உள்ளன.**

**இவை மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுகின்றன.**

**பெப்பரை வரவேற்பாளராக, பணியாளராக வீடுகளிலும், வணிக நிறுவனங்களிலும், உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.**

31. இலா என்னும் மென்பொருள் குறித்து எழுதுக.

**பாரத ஸ்டேட் வங்கி 'இலா' என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கி உள்ளது.**

**ஒரு வினாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் உரையாடும்.**

**அவர்களுக்கான சேவையை இணையம் மூலம் அளிக்கிறது.**

32. வேர்டுஸ்மித் - குறிப்பு வரைக.

**இதழியியலில் மொழிநடையை உருவாக்கும் மென்பொருளின் பெயர் வேர்டுஸ்மித். இதற்கு எழுத்தாளி என்று பெயர்.**

**இதில் தகவல்களைக் கொடுத்தால் மட்டும் போதும்; சில நொடிகளிலேயே அழகான கட்டுரையை உருவாக்குகின்றன.**

33. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும், நம்பிக்கையும் ஆற்றும் பங்கினை எழுதுக.

**மருத்துவர், தன்னைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது தம் மீது கொண்ட அன்பின் காரணமாகவே என நோயாளி கருதுகிறார்.**

**அந்த அன்பும், மருத்துவத்தின் மீதான நம்பிக்கையும் அவர் நோயைக் குணமாக்குகிறது.**

34. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

**நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐந்தும் ஆகும்.**

35. பால்வீதி குறித்து எட்வின் ஹப்பிள் நிருபித்துக் கூறிய செய்தியை எழுதுக.

**அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன.**

**வெளியே நின்று அதைப் பார்த்தோமெனில் சிறுதூசி போலக் கோடிக்கணக்கான பால்வீதிகள் தூசுகளாகத் தெரியும்.**

<u>இயல் - 5</u>

36. மொழிபெயர்ப்புக் குறித்து மணவை முஸ்தபா குறிப்பிடுவது யாது?

**ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்று சொன்னவர் மணவை முஸ்தபா**

37. மொழிபெயர்ப்பு எவ்வாறு அமைய வேண்டும்?

**மொழிபெயர்ப்புகள் கழிவின்றி சிதறலின்றி மூலமொழியின் கருத்துகளை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.**

38. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

**''கற்போம் கற்போம் கல்வியைக் கற்போம்''**

**''அருளினைப் பெருக்கக் கல்வியைக் கற்போம்''**

**''அறிவினைத் திருத்தக் கல்வியைக் கற்போம்''**

**''மயக்கம் அகற்றக் கல்வியைக் கற்போம்''**

39. கழிந்த பெரும் கேள்வியினான் எனக்கேட்டு
முழுது உணர்ந்த கபிலன் தன்பால் பொழிந்த
பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்
காட்டுப் புலவின் தென் சொல்

- இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல் மிகு கேண்மையினான் யார்?

**கழிந்த பெரும் கேள்வியினான் குசேல பாண்டியன்.**

**காதல் மிகு கேண்மையினான் இடைக்காடனார்.**

*வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (16 முதல் 20)*

*இயல் - 6*

*40. கரகாட்டம் என்றால் என்ன?*

**கரகம் என்னும் பித்தளைச் சொம்பையோ, சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுதல்.**

*41. மயிலாட்டத்தின் அடவுகள் யாவை?*

**ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல், இறகை விரித்து ஆடுதல், தலையைச் சாய்த்து ஆடுதல், தாவியாடுதல், இருபுறமும் சுற்றி ஆடுதல், அகவுதல், தண்ணீர் குடித்துக் கொண்டே ஆடுதல் முதலியன.**

*42. காவடியின் அமைப்புக்கேற்ப அவை எந்தெந்தப் பெயர்களில் அழைக்கப்படுகின்றன?*

**மச்சக்காவடி, தேர்க்காவடி, சர்ப்பக்காவடி, பறவைக்காவடி, பூக்காவடி.**

*43. தேவராட்டம் என்றால் என்ன?*

**வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம்.**

*44. பொய்க்கால் குதிரையாட்டம் வேறு எந்தெந்த மாநிலங்களில் ஆடப்படுகிறது?*

**இராஜஸ்தான், கேரளா**

*45. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்*
*சுமக்கின்றன ஒல்லித்தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.*

**சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்றன ஒல்லித்தண்டுகளாகக் குறிப்பிடப்படுவோர் பெண்கள். அமைதியான முறையில் இவ்வுலகத்தைத் தாங்கி நிறுத்தப் போராடும் போராளிகள்.**

*46. உறங்குகின்ற கும்பகன்ன உங்கள் மாய வாழ்வெலாம்*
*காலதூதர் கையிலே உறங்குவாய் உறங்குவாய் - கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?*

**கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்கத் தொடங்கி விட்டது. அதைக் காண்பதற்கு எழுந்திடுவாய்.**

**வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையிலே படுத்து உறங்கச் சொல்கிறார்கள்.**

*47. மருத நில மக்களின் உணவுப் பொருள்கள் யாவை?*

**செந்நெல், வெண்ணெல்**

*48. அமைச்சருக்குரிய ஐந்து சிறப்புகள் யாவை?*

**மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சி முறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், விடாமுயற்சி.**

*49. அறத்தையும் இன்பத்தையும் தருவது எது?*

**முறையறிந்து தீமையற்ற வழியில் சேர்ந்த பொருள், ஒருவனுக்கு அறத்தையும் தரும். இன்பத்தையும் தரும்.**

*50. செறுநர் செருக்கறுக்கும் ஆயுதம் எது?*

**பொருள் ஈட்டுதல் போன்ற பகைவரை வெல்லும் ஆயுதம் இல்லை.**

*51. கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன்?*

**உழைப்பால் கிடைத்த ஊதியம். அதுவே எப்போதும் நிலையானது.**

*52. கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக.*

**தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லவர்.**

*53. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?*

**இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், இரப்பவரின் உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.**

*இயல் - 7*

*54. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.*

**நூல் வாங்குவதற்குப் போதிய பணமில்லாத வறுமை நிலையிலும், பழைய புத்தகங்கள் விற்கும் கடைக்குச் செல்வார்.**

**விருப்பமான புத்தகங்களை மிகக் குறைந்த விலைக்கு வாங்குவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார். உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு பட்டினி கிடந்திருக்கிறார். செவி வழியாகவும் இலக்கிய அறிவைப் பெற்றிருக்கிறார்.**

வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (16 முதல் 20)

*55. ம.பொ.சி. சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்களிடம் கொண்டு செல்ல விரும்பியக் காரணம் என்ன?*

**சிலப்பதிகாரம் தமிழினத்தின் பொதுச்சொத்து. இந்திய தேசிய ஒருமைப்பாட்டையும், தமிழ் இனத்தையும் ஒன்றுபடுத்தும் முயற்சிக்கு உண்டான செய்திகள் அனைத்தும் சிலப்பதிகாரத்தில் காணப்பட்டதால் மக்களிடையே சிலப்பதிகாரத்தைக் கொண்டு சென்றார்.**

*56. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?*

**மன்னர்களின் வரலாற்று நிகழ்வுகளை அறிய, அவை அழியாமல் பாதுகாக்க கல்லில் செதுக்கினர்.**

*57. இரண்டாம் இராசராச சோழன் பெற்ற பட்டங்கள் யாவை?*

**கோப்பரகேசரி, திருபுவனச் சக்கரவர்த்தி**

*58. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?*

**பாசவர் - வெற்றிலை விற்பவர், வாசவர் - நறுமணம் விற்பவர்,**
**பல்நிண விலைஞர் - பல வகை இறைச்சி விற்பவர், உமணர் - உப்பு விற்பவர்.**

## இயல் - 8

*59. குறிப்பு வரைக - அவையம்*

**அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன.**
**அறம் அறக் கண்ட நெறிமான் அவையம் என்கிறது புறநானூறு.**
**உறையூரிலிருந்த அற அவையம் தனிச் சிறப்பு பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.**

*60. வாய்மை குறித்து நற்றிணை கூறுவது யாது?*

**பிழையா நன்மொழி; பொய்ம்மொழி கடுஞ்சொல்.**

*61. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?*

**காலக்கழுதை கட்டெறும்பானது என்பது காலம் மாறி வயது முதிர்தலைக் குறிப்பது ஆகும்.**
**வயது முதிர்ந்து உடலும், உடல் உறுப்புகளும் வலுவிழந்தாலும் அறப்பணியைத் தொடர்ந்து செய்கிறார்.**
**வாளித் தண்ணீர், சாயக்குவளை, துணி கந்தையானாலும், சாயம் அடிக்கும் தூரிகை.**
**கட்டையானாலும் சுத்தம் செய்து போல, காலக்கழுதை கட்டெறும்பான பின்னும் அறப்பணி ஓயாது தொடர்கிறது.**

*62. உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது - இத்தொடரின் பொருள் ஆழத்தை விளக்குக.*

**ஒருவர் தன் வாயால் புகழ்வதும் இகழ்வதும் நம் உடம்பின் மீது வந்து சேராது.**

## இயல் - 9

*63. ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை?*

**குடியரசுத் தலைவர் விருது, சாகித்ய அகாதெமி விருது, சோவியத் நாட்டு விருது, ஞானபீட விருது, தாமரைத்திரு விருது.**

*64. ஜெயகாந்தனின் சிறுகதை தொகுப்பு சிலவற்றை எழுதுக.*

**குருபீடம், யுகசக்தி, ஒரு பிடி சோறு, உண்மை சுடும்.**

*65. தலைக்கனமே வாழ்வு என்று யாருடைய வாழ்வை நாகூர் ரூமி கூறுகிறார்?*

**பணம், பட்டம், பதவி, பொருள் ஆகியவற்றால் மற்றவர்களை மதிக்காமல் வாழ்பவர்களைத் தலைக்கணம் பிடித்தவர்கள் என்கிறார்.**

**எப்போதும் பசி, பட்டினி, வறுமை என்றிருக்கும் சித்தாள் தன் தலையில் சுமையைத் தூக்கிச் செல்வதால் மட்டுமே வாழ்க்கை நடைபெறும் என்று சித்தாளின் வாழ்வைப் பற்றி கூறுகிறார்.**

*66. காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன் - உவமை உணர்த்தும் கருத்து யாது?*

**இளம்பயிரானது வளர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்பே, தூய மணி போன்று பெய்கின்ற மழைத்துளி இல்லாமல் வாடிக்காய்ந்து விட்டதைப் போல, கருணையனாகிய நானும் என் தாயை இழந்து வாடுகின்றேன்.**

## பொது

*67. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரியக் காரணமும் உண்டு! - இத்தொடரை இரு தொடர்களாக்குக.*

**நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதல் உண்டு. நான் எழுதுவதற்கு ஒரு காரணம் உண்டு.**

*68. பெற்றோர் வேலையிலிருந்து திரும்ப தாமதம் ஆகும்போது தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.*

**தம்பி அழாதே! அப்பாவும், அம்மாவும் விரைவில் வந்து விடுவார்கள். வரும்போது உனக்கு விளையாட்டுப் பொருள்களை வாங்கிக் கொண்டு வருவார்கள்.**

<u>வினா எண் 21</u>

<u>திருக்குறள்</u>

1. கண் என முடியும் திருக்குறள்

   **பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்**
   **கண்ணோட்டம் இல்லாத கண்.**

2. செயற்கை எனத் தொடங்கும் திருக்குறள்

2. செயல் என முடியும் திருக்குறள்

   **செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்**
   **தியற்கை அறிந்து செயல்.**

3. அறிவு என முடியும் திருக்குறள்

   **எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
   **மெய்ப்பொருள் காண்ப தறிவு.**

4. பொருள் என முடியும் திருக்குறள்

   **பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
   **பொருளல்ல தில்லை பொருள்.**

5. பல்லார் எனத் தொடங்கும் திருக்குறள்

5. விடல் என முடியும் திருக்குறள்

   **பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்த**
   **நல்லார் தொடர்கை விடல்.**

6. வினை என முடியும் திருக்குறள்

   **குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்**
   **றுண்டாகச் செய்வான் வினை**

7. விடும் என முடியும் திருக்குறள்

   **முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
   **இன்மை புகுத்தி விடும்.**

8. உலகு என முடியும் திருக்குறள்

8. குற்றம் எனத் தொடங்கும் திருக்குறள்

8. குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச் செய்து வாழ்பவரை உலகத்தார் உறவாகப் போற்றுவர் என்னும் பொருளைக் கொண்ட திருக்குறளை எழுதுக.

   **குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்**
   **சுற்றமாச் சுற்றும் உலகு.**

9. தரும் என முடியும் திருக்குறள்

   **அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்**
   **பெருமை முயற்சி தரும்.**

10. இன்னாதது என முடியும் திருக்குறள்

10. இன்மையின் எனத் தொடங்கும் திருக்குறள்

   **இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்**
   **இன்மையே இன்னா தது.**

<u>வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (22 முதல் 28)</u>

<u>இயல் -1</u>

1. மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலை மீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும். - இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.

வினைமுற்று - தொழிற்பெயர்
**அழைக்கும் - அழைத்தல்**
**ஏறுவேன் - ஏறுதல்**
**அமர்வேன் - அமர்தல்**
**பார்ப்பேன் - பார்த்தல்**
**எய்தும் - எய்தல்**

2. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.

தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே

**தே<u>னி</u>லே <u>ஊறி</u>ய செந்தமிழின் - சுவை**
**<u>தேறு</u>ம் சிலப்பதி கா<u>ர</u>மதை**
**ஊனிலே எம்முயிர் உ<u>ள்ளள</u>வும் - நிதம்**
**ஓதி யு<u>ண</u>ர்ந்தின் பு<u>று</u>வோமே**

3. கீழ்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.
(குவியல், குலை, மந்தை, கட்டு) - கல், பழம், புல், ஆடு

**கற்குவியல், பழக்குலை, புற்கட்டு, ஆட்டு மந்தை**

4. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.

அ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
**ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.**

ஆ) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
**நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.**

இ) பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.
**பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார்.**

ஈ) கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
**கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.**

5. தொடர்களில் உள்ள அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.

அ) <u>சோலையிற்</u> பூத்த மணமலர்களில் <u>சுரும்புகள்</u> மொய்த்துப் பண்பாடி <u>மது</u> உண்டன.
**<u>காவில்</u>** பூத்த மணமலர்களில் **<u>வண்டுகள்</u>** மொய்த்துப் பண்பாடி **<u>தேன்</u>** உண்டன.

ஆ) <u>பசுப்</u>போல் <u>சாந்தமும்</u>, <u>புலி</u> போல் <u>தீரமும்</u>, <u>யானை</u> போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.
**<u>ஆவினை</u>**ப்போல **<u>அமைதியும்</u>**, **வேங்கை** போல் **<u>சீற்றமும்</u>**, **<u>வேழம்</u>** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

இ) <u>உலகில்</u> வாழும் <u>மக்களில்</u> சிலர் <u>கனி</u>யிருக்க காயைப் <u>புசித்தலைப்</u> போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி <u>இன்னற்</u> படுகின்றனர்.

ஈ) **<u>புவியில்</u>** வாழும் **<u>மனிதர்களுள்</u>** சிலர் **<u>பழமிருக்க</u>** காயை **<u>உண்பதைப்</u>** போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி **<u>துன்பப்</u>**படுகின்றனர்.

உ) வள்ளல் குமணன் <u>வறுமையால்</u> வாடி வந்த <u>புலவனுக்குத்</u> தனது தலையைக் <u>கொடுத்து</u> மங்காப்<u>புகழ்</u> பெற்றான்.
வள்ளல் குமணன் **<u>ஏழ்மையால்</u>** வாடி வந்த **<u>கவிஞனுக்குத்</u>** தனது தலையை **<u>அளித்து</u>** மங்காப் **<u>பெருமை</u>** பெற்றான்.

ஊ) நளனும் அவனது <u>துணைவியும்</u> நிடத நாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை<u>முகில்</u> கண்ட <u>மஞ்ஞை</u> போலக் <u>களி</u> கொண்டனர்.
நளனும் அவனது **<u>மனைவியும்</u>** நிடத நாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை**<u>மேகம்</u>** கண்ட **<u>மயில்</u>** போலக் **<u>மகிழ்ச்சி</u>** கொண்டனர்.

6. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ

**மணிமேகலை, செய்வான், பொன்செய், வான் மழை, மணி விளக்கு, பொன் விலங்கு, பூ விலங்கு, தேன் மழை, பூ மழை, பொன்மழை, பொன்மணி.**

*வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (22 முதல் 28)*

*இயல் -1*

7. குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க.

அ) சுவைக்காத இளநீர் - **மன்னன் சுவைக்காத இளநீர் உண்டோ?**

ஆ) காப்பியச் சுவை - **கம்பர் காலத்தில் காப்பியச் சுவை உச்ச நிலையில் இருந்ததோ?**

இ) குறளின்பம் - **குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டோ?**

ஈ) மனித குல மேன்மை - **மனித குல மேன்மையை உணராத மனிதர் உண்டோ?**

உ) விடுமுறை நாள் - **மாணவர்க்கு மகிழ்ச்சியற்ற விடுமுறை நாள் உண்டோ?**

8. எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.

நாற்றிசையும் செல்லாத நாடில்லை - **நான்கு**

எறும்புந் தன் கையால் எண்சாண் - **எட்டு**

ஐந்துசால்பு ஊன்றிய தூண் - **ஐந்து**

நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி - **நான்கு, இரண்டு**

ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி - **ஆயிரம்**

*இயல் - 2*

9. தொகைச் சொற்களை வகைப்படுத்துக.

1. அன்புச்செல்வன் திறன்பேசியின் தொடுதிரையில் படித்துக் கொண்டிருந்தார்

**அன்புச்செல்வன் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

**தொடுதிரை - வினைத்தொகை**

2. அனைவருக்கும் மோர்ப்பானையைத் திறந்து மோர் கொடுக்கவும்.

**மோர்ப்பானை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை**

**மோர் கொடுக்கவும் - இரண்டாம் வேற்றுமைத் தொகை**

3. வெண்டைக்காய்ப் பொரியல் மோர்க்குழம்புக்குப் பொருத்தமாக இருக்கும்.

**வெண்டைக்காய், மோர்க்குழம்பு - இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

4. தங்கமீன்கள் தண்ணீர்த்தொட்டியில் விளையாடுகின்றன.

**தங்கமீன்கள் - உவமைத்தொகை**

**தண்ணீர்த்தொட்டி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை**

10. சொற்களில் மறைந்துள்ள தொகையை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.

அ) இன்சொல் - **பண்புத்தொகை. - வள்ளுவரின் இன்சொல் வாழ்வுக்கு வழி காட்டும்.**

ஆ) எழுகதிர் - **வினைத்தொகை. - மனித வாழ்வானது கிழக்கே தோன்றி மேற்கே மறையும் எழுகதிர் போன்றது.**

இ) கீரிபாம்பு - **உம்மைத்தொகை. - அண்ணனும் தம்பியும் கீரியும் பாம்பும் போல சண்டையிட்டுக் கொண்டனர்.**

ஈ) இரவு பகல்- **உம்மைத்தொகை. - கபிலன் இரவு பகல் பாராது உழைத்தான்.**

உ) பூங்குழல் வந்தாள் - **இரண்டாம் வேற்றுமைத் தொகை புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை - அன்னை அழைத்த போது பூங்குழல் கூந்தலாள் வந்தாள்.**

ஊ) மலைவாழ்வார் - **ஏழாம் வேற்றுமைத் தொகை. மலை வாழ்வாரை மலையாளிகள் என்பர்.**

எ) முத்துப்பல் - **உவமைத்தொகை. - மாலாவின் முத்துப்பல் அவளுக்கு மேலும் அழகு சேர்க்கிறது.**

11. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.

1. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்; நீக்காவிட்டாலும் வாசனை தரும். - **நறுமணம்**
2. பழமைக்கு எதிரானது - எழுதுகோலில் பயன்படும். - **புதுமை**
3. இருக்கும்போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை. - **காற்று**
4. நாலெழுத்தில் கண் சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும். - **விண்மீன்**
5. ஒரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம். - **காடு**

12. நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.

1. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக்காற்று வீசியது. **காற்றின் பாடல்**
2. புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்த்தது; அச்செடியை வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன. - **மொட்டின் வருகை**

வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (22 முதல் 28)

3. சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல்; பூக்கள் அதன் வருகையை உணர்ந்து நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று மலர்களில் அமர்கின்றன.
**மிதக்கும் வாசம்**

4. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள். வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம்; மழைக்கு ஏங்கும் புவி வெப்பப் பெருமூச்சு விடும்; கசகசத்த உயிரினங்கள்.
**உயிர்ப்பின் ஏக்கம்**

5. நின்றுவிட்ட மழை தரும் குளிர்; சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர் பட்டுச் சிலிர்க்கும் உயிரினம். - **நீரின் சிலிர்ப்பு**

6. குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும். இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம். - **வானத்தின் நடனம்**

இயல் - 3

13. கீழ்க்காணும் பத்தியில் அடிக்கோடிட்ட சொற்களின் தொடர் வகைகளை எடுத்து எழுதுக.

மாடியிலிருந்து இறங்கினார் முகமது. அவர் பாடகர். பாடல்களைப் பாடுவதும் கேட்பதும் அவருக்குப் பொழுதுபோக்கு. அவரது அறையில் கேட்ட பாடல்களையும், கேட்காத பாடல்களையும் கொண்ட குறுந்தகடுகளை அடுக்கு அடுக்காக வைத்திருப்பார்.

இறங்கினார் முகமது - **வினைமுற்றுத் தொடர்**
அவர் பாடகர் - **எழுவாய்த் தொடர்**
பாடுவதும் கேட்பதும் - **இடைச்சொல் தொடர்**
கேட்ட பாடல் - **பெயரெச்சத் தொடர்**
கேட்காத பாடல் - **எதிர்மறை பெயரெச்சத் தொடர்**
அடுக்கு அடுக்காக - **அடுக்குத் தொடர்**

14. அடிக்கோடிட்ட சொற்களின் தொடர் வகைகளை எழுதுக.

1. பழகப் பழக பாலும் புளிக்கும். - **அடுக்குத் தொடர்**
2. வடித்த கஞ்சியில் சீலையை அலசினேன். - **பெயரெச்சத் தொடர்**
3. மேடையில் நன்றாகப் பேசினான் - **வினையெச்சத் தொடர்**
4. வந்தார் அண்ணன் - **வினைமுற்றுத் தொடர்**
5. அரிய கவிதைகளின் தொகுப்பு இது - **வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்**

15. பழமொழியை நிறைவு செய்க.

1. உப்பில்லாப் **பண்டம் குப்பையிலே**
2. ஒரு பானை **சோற்றுக்கு ஒரு சோறு பதம்**
3. உப்பிட்டவரை **உள்ளளவும் நினை**
4. விருந்தும் **மருந்தும் மூன்று நாள்களுக்கு மட்டுமே**
5. அளவுக்கு **மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு**
6. பொறுத்தார் **பூமி ஆள்வார்**
7. தோல்வியே **வெற்றிக்கு முதல்படி**

16. விடுபட்ட எழுத்துகளை நிரப்பி இந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடிக்க.

1. அறையின் மறுபெயர் - பாதி - தி
2. மழை என்பது - மாரி - ரி
3. இரவும் - பகலும் - க
4. வனத்தின் மறுபெயர் - காடு - டு
5. பார்க்க உதவுவது - கண் - க
6. படமெடுப்பது - பாம்பு - ம்

நூலின் பெயர் : **திரிகடுகம்**

1. அறிவின் மறுபெயர் - மதி - தி
2. சிவப்பு நிறத்தில் இருக்கும் - குருதி - ரு
3. தங்கைக்கு மூத்தவள் - அக்கா - க்
4. நீரில் செல்வது - படகு - கு
5. பறவையிடம் இருப்பது - இறகு - ற
6. மன்னரிடம் இருப்பது - வாள் - ள்

நூலின் பெயர் : **திருக்குறள்**

<u>வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (22 முதல் 28)</u>

17. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

சிலை - சீலை - **சிலையை** திரைச்**சீலை**யால் மறைத்து வைத்தனர்.
தொடு - தோடு - கையால் காதைத் **தொடு, தோடு** உள்ளதா?
மடு - மாடு - மலை **மடு**வில் **மாடு** மேய்ந்தது.
மலை - மாலை - **மாலை** நேரத்தில் **மலை**யில் மேகங்கள் தவழும்.
வளி - வாளி - **வளி**யை **வாளி**யால் அள்ள முடியாது.
விடு - வீடு - தவறு செய்வதை **விடு, வீடு** பேறு கிடைக்கும்.
இயற்கை - செயற்கை - பாதை தெரியாத **இயற்கை**க் காடுகளில் பயணிக்க **செயற்கை**க் கருவிகள் - பயன்படுகின்றன.
கொடு - கோடு - **கோடு** வரைய அளவுகோளைக் **கொடு.**
கொள் - கோள் - **கோள்**களைப் பற்றி அறிந்து **கொள்.**
சிறு - சீறு - **சிறு** பாம்பு, **சீறு**வதைப் பார்
தான் - தாம் - **தான்** செய்த தவற்றை **தாம**ே ஒப்புக்கொள்பவனே உயர்ந்தவன்.
விதி - வீதி - **வீதி**தோறும் நூலகம் அமைத்து, நாட்டின் தலை**விதி**யை மாற்றுவோம்.

18. உணவு, விருந்து சார்ந்த பழமொழி ஒன்றினையும், விழிப்புணர்வுத் தொடர் ஒன்றினையும் எழுதுக.

**பழமொழிகள் - நொறுங்கத் தின்றால் நூறு வயது, ஏழைக்கேற்ற எள்ளுருண்டை, உப்பில்லாப் பண்டம் குப்பையிலே, கூழானாலும் குளித்துக் குடி.**

**விழிப்புணர்வுத் தொடர் - உணவே மருந்து, சுட்ட எண்ணெயைத் தொடாதே, வறுத்த பருப்பை விடாதே.**

<u>இயல் - 4</u>

19. கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.

1. அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார். - **கால வழுவமைதி**
2. அவனும் நீயும் அலுவலரைப் பார்க்க ஆயத்தமாகுங்கள். - **இட வழுவமைதி**
3. இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அதை அனைவரும் ஏற்பர் என்று கூறினான். - **இட வழுவமைதி**
4. சிறிய வயதில் இந்த மரத்தில் தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம். - **கால வழுவமைதி**
5. செல்வன் இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்திருக்கிறார். - **பால் வழுவமைதி**

20. அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

1. தந்தை, மகனே! நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்து வா! என்று சொன்னார். ( ஆண்பாற்பெயர்களைப் பெண்பாலாக மாற்றித் தொடரை எழுதுக)
**தாய், மகளே! நாளை உன்னுடைய தோழி அழகியை அழைத்து வா! என்று சொன்னாள்.**
2. அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக)
**அக்கா நேற்று வீட்டுக்கு <u>வந்தாள்.</u> அக்கா புறப்படும்போது அம்மா <u>வழியனுப்பினாள்</u>.**
3. அண்ணன் நேற்று வீட்டிற்கு வந்தது. அண்ணன் புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக)
**அண்ணன் நேற்று வீட்டிற்கு <u>வந்தான்.</u> அண்ணன் புறப்படும்போது அம்மா <u>வழியனுப்பினாள்.</u>**
4. இதோ முடித்து விடுவேன் என்று செயலை முடிக்கும் முன்பே கூறினார். (வழா நிலையை வழுவமைதியாக மாற்றுக)
**இதோ முடித்து விட்டேன் என்று செயலை முடிக்கும் முன்பே கூறினார்.**
5. அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை. (படர்க்கையை முன்னிலையாக, முன்னிலையைத் தன்மையாக, தன்மையைப் படர்க்கையாக மாற்றுக)
**<u>நீ என்னிடமும் அவனிடமும்</u> செய்தியை இன்னும் கூறவில்லை.**
5. குழந்தை அழுகிறாள் பார். (வழுவை வழாநிலையாக மாற்றுக)
**குழந்தை அழுகிறது பார்**

21. வருகின்ற கோடைவிடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய் - மொழிக்குச் செல்கிறேன். - இத்தொடர் காலவழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?
**உறுதித்தன்மை நோக்கி காலவழுவமைதிக்கு எடுத்துக்காட்டாய் அமைகிறது.**

*வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (22 முதல் 28)*

*22. சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக்* **கேட்பான்.** *புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான் என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார்.*

*- இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.*

**சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்கும். புதியவர்களைப் பார்த்துக் குரைக்குமே தவிர கடிக்காது என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார்.**

*23. வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.*

*எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவிதுளைகள் இறகுகளால் மூடியிருக்கும். மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளது போல் புறசெவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காதுக் கேட்கும். பறவைகளுக்கு பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்றிருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறைவாகவும், நுகர்தல் உணர்வு இல்லையென்றேக் கூறலாம்.*

**எல்லாப் பறவைகளுக்கும் காது உண்டு. செவித்துளைகள் இறகுகளால் மூடியிருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளது போல் புறச்செவிமடல் இருக்காது. காகத்திற்குக் காது உண்டு. காது கேட்கும். பறவைகளுக்குப் பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சி பெற்றிருக்கும். சுவைத்தல் உணர்வு குறைவாகவும், நுகர்தல் உணர்வு இல்லையென்றே கூறலாம்.**

*24. தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.*

*( சோறு, கற்றல். கரு, பூவில், எழுத்து )*

*1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன்* *கற்றல்*

*2. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை* *கரு*

*3. கல் சிலை ஆகுமெனில், நெல்* **சோறு** *ஆகும்.*

*4. குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து* **எழுத்து**

*5. மீன் இருப்பது நீரில்; தேன் இருப்பது* **பூவில்**

*25. குறிப்பு - எதிர்மறையான சொல் எழுதுக.*

| | |
|---|---|
| *1. மீளாத் துயர்* | - **மீண்ட இன்பம்** |
| *2. கொடுத்துச் சிவந்த* | - **கொடாது சிவக்காத** |
| *3. மறைத்துக் காட்டு* | - **வெளிப்படுத்தி மறை** |
| *4. அருகில் அமர்க* | - **தொலைவில் நிற்க** |
| *5. பெரியவரின் அமைதி* | - **சிறியவரின் ஆர்ப்பாட்டம்** |
| *6. புயலுக்குப் பின்* | - **தென்றலுக்கு முன்** |

## *இயல் - 5*

*26. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ, இருக்கிறது! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.*

*மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? -* **அறியா வினா.**

*இதோ, இருக்கிறது! -* **சுட்டு விடை.**

*மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? -* **ஐய வினா.**

*27. சொல் - இச்சொல்லை பெயரெச்ச, விளி மற்றும் வேற்றுமைத் தொடராக மாற்றுக.*

**பெயரெச்சத் தொடர் - சொன்ன அம்மா, விளித் தொடர் - அம்மா சொல்,**

**வேற்றுமைத் தொடர் - கதையைச் சொன்னார்.**

*28. செல் - இவ்வேர்ச்சொல்லை பெயரெச்சமாகவும், வினையெச்சமாகவும் மற்றுக.*

**பெயரெச்சத் தொடர் - சென்ற மாதவி, வினையெச்சத் தொடர் - சென்று வந்தான்**

*29. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.*

*1. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும். -* **பயன்தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.**

*2. வாழக்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தரும்.*

**இன்பமும், துன்பமும் நிறைந்த வாழக்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தரும்.**

*3. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும். -* **நெறிப்படுத்த உதவும் கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.**

*4. குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.*

**படைப்பாற்றல் மிக்க குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.**

*5. கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.*

**அழகிய, குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.**

வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (22 முதல் 28)

30. கீழ்க்காணும் தொடரை முழுமை செய்க.

1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் **புதையல்** யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் **புதைத்தல்** நிலத்தடி நீர் வளத்தைக் குன்றச் செய்யும். (புதையல் / புதைத்தல்)
2. காட்டு விலங்குகளைச் **சுடுதல்** தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் **சுட்டல்** திருந்த உதவுகிறது.
3. காற்றின் மெல்லிய **தொடுதல்** பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான **தொடுத்தல்** பூக்களை மாலையாக்குகிறது. (தொடுத்தல் / தொடுதல் )
4. பசுமையான **காட்சியைக் காணுதல்** கண்ணுக்கு நல்லது.
5. பொது வாழ்வில் **நடித்தல்** கூடாது. **நடிப்பில்** அவரை மிஞ்ச ஆள் கிடையாது. ( நடிப்பில், நடித்தல்)

## இயல் - 6

31. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.

1. உழவர்கள் மலையில் உழுதனர். - உழவர்கள் **வயலில்** உழுதனர்.
2. முல்லைப் பூச்செடியை பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

**நெய்தல்ப் / தாழைப்** பூச்செடியை பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

32. தொடர்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.

1. அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார். (கலவைச் சொற்றொடராக மாற்றுக)

**அழைப்பு மணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.**

2. இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்குகளில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார். - (கலவைச் சொற்றொடராக மாற்றுக)

**இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்குகளில் அடுக்கி, கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.**

3. ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்து கொண்டு, கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர். (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)

**ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக்கொள்வர். காலில் சலங்கை அணிந்து கொள்வர். கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசி ஆடுவர்.**

4. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். (கலவைச் சொற்றொடராக மாற்றுக)

**கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதும் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.**

5. பெருமழை பெய்தது. மரங்கள் வேரோடு சாய்ந்தன. (கலவைச் சொற்றொடராக மாற்றுக)

**பெருமழை பெய்ததால், மரங்கள் வேரோடு சாய்ந்தன.**

33. தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.

1. நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டது.

**நேற்று புயல் வீசியது. பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டது.**

2. கண்ணன் இரவும் பகலும் அயராது படித்ததால், கூடுதல் மதிப்பெண்கள் பெற்றான்.

**கண்ணன் இரவும் பகலும் அயராது படித்தான். கூடுதல் மதிப்பெண்கள் பெற்றான்.**

34. பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக மாற்றி எழுதுக.

யூஸ் - **பயன்,** ஈக்வலாக - **சமமாக,** செவன் - **ஏழு,** கோல்டு பிஸ்கட் - **தங்கக்கட்டி**
பேலன்ஸ் - **மீதம்,** வெயிட் - **காத்திரு,** பட் - **ஆனால்,** எக்ஸ்பெரிமெண்ட் - **ஆய்வு**
ரிப்பீட் - **திரும்பவும்**

35. தொடரில் விடுபட்ட இடங்களை உங்கள் எண்ணங்களால் நிரப்புக.

1. வானம் **கருக்கத்** தொடங்கியது. மழை வரும் போலிருக்கிறது.
2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் **சிவந்தது.**
3. **வெள்ளை** மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் **பச்சைப்** புல்வெளிகளில் கதிரவனின் **மஞ்சள்** வெயில் பரவிக் கிடக்கிறது.
5. வெயிலில் அலையாதே; உடல் **கறுத்து விடும்.**

வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (22 முதல் 28)

36. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.

தோற்பாவை, விருது, தோற்பவை, விருந்து, தயங்கும், அவிழும், கவிழும், தங்கும், மரவீடு, மரம் வீடு

1. விரட்டாதீர்கள் - பறவைக்கு **மரம் வீடு.**
   வெட்டாதீர்கள் - மனிதருக்கு அவை தரும் **மரவீடு.**
2. காலை ஒளியினில் மலரிதழ் **அவிழும்.** சோலை பூவினில் வண்டினம் **கவிழும்.**
3. மலைமுகட்டில் மேகம் **தங்கும்.** அதை பார்க்கும் மனங்கள் செல்லத் **தயங்கும்.**
4. வாழ்க்கையில் **தோற்பவை** மீண்டும் வெல்லும். இதைத் தத்துவமாகத் **தோற்பாவை** கூத்து சொல்லும்.
5. தெருக்கூத்தில் நடிகருக்குக் கைத்தட்டலே **விருது.** அதில் வரும் காசு குறைந்தாலும் அதுவேயவர் **விருந்து**

## இயல் - 7

37. பின்வரும் தொடரைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க:

1. வரப்போகிறேன் - **என் நண்பன் இன்னும் சிறிது நேரத்தில் வரப்போகிறேன் என்றான்.**
2. இல்லாமல் இருக்கிறது - **எங்கள் நாடு பஞ்சம் இல்லாமல் இருக்கிறது.**
3. கொஞ்சம் அதிகம் - **சங்க காலத்தில் மன்னர்களுக்கு காதலும் வீரமும் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது.**
4. முன்னுக்குப் பின் - **திருடன் முன்னுக்குப்பின் பேசுவான்.**
5. மறக்க நினைக்கிறேன் - **தீயவற்றை மறக்க நினைக்கிறேன்.**

38. தொகைச் சொற்களை விரித்தெழுதிப் பின் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.

1. மூவேந்தர் - **சேரர், சோழர், பாண்டியர் - மூன்று + வேந்தர்**
2. நாற்றிசை - **வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு - நான்கு + திசை**
3. முத்தமிழ் - **இயல், இசை, நாடகம் - மூன்று + தமிழ்**
4. இருதிணை - **உயர்திணை, அஃறிணை - இரண்டு + திணை**
5. முப்பால் - **அறம், பொருள், இன்பம் - மூன்று + பால்**
6. முச்சங்கம் - **முதல், இடை, கடை - மூன்று + சங்கம்**
7. ஐந்திணை - **குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை - ஐந்து + திணை**
8. நானிலம் - **குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் - நான்கு + நிலம்**
9. அறுசுவை - **இனிப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, கசப்பு, கார்ப்பு - ஆறு + சுவை**
10. பத்துப்பாட்டு - **திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, - பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி, குறிஞ்சிப்பாட்டு, - பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை - பத்து + பாட்டு**
11. எட்டுத்தொகை - **நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, - அகநானூறு, புறநானூறு - எட்டு + தொகை**

39. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. புதுக்கோட்டை | - **புதுகை** | 2. திருச்சிராப்பள்ளி | - **திருச்சி** |
| 3. உதகமண்டலம் | - **உதகை** | 4. கோயம்புத்தூர் | - **கோவை** |
| 5. நாகப்பட்டினம் | - **நாகை** | 6. புதுச்சேரி | - **புதுவை** |
| 7. கும்பகோணம் | - **குடந்தை** | 8. திருநெல்வேலி | - **நெல்லை** |
| 9. மன்னார்குடி | - **மன்னை** | 10. மயிலாப்பூர் | - **மயிலை** |
| 11. சைதாப்பேட்டை | - **சைதை** | 12. தஞ்சாவூர் | - **தஞ்சை** |

## இயல் - 8

40. மரபுத் தொடருக்கான பொருள் அறிந்து தொடர் அமைக்க.

1. மனக்கோட்டை - **தலைவர் பதவி கிடைக்கும் என மனக்கோட்டை கட்டாதே.**
2. கண்ணும் கருத்தும் - **கண்ணும் கருத்துமாக கவனமுடன் படித்தால் முதல் மதிப்பெண் பெறலாம்.**
3. அள்ளி இறைத்தல் - **பாரதியார், பறவைகளுக்குத் தானியங்களை அள்ளி இறைத்தார்.**
4. ஆறப்போடுதல் - **நல்ல காரியங்களைச் செய்ய ஆறப்போடுதல் கூடாது.**

வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (22 முதல் 28)

41. பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

தம்பீ! எங்க நிக்கிறே?
நீங்க சொன்ன எடத்துலதாண்ணே! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது.
அங்னனக்குள்ளயே டீ சாப்டுட்டு, பேப்பரப் படிச்சிகிட்டு இரு.... நா வெரசா வந்துருவேன்
அண்ணே! சம்முவத்தையும் கூட்டிகிட்டு வாங்கண்ணே! அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு!
அவம்பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனெக் கூட்டிகிட்டு வர்றேன்.
ரொம்பச் சின்ன வயசுல பார்த்ததுண்ணே! அப்பம் மூணு வயசு இருக்கும்!
இப்ப ஒசரமா வளந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்கூட வருவாம் பாரேன்! சரி, போனை வையி. நாங் கெளம்பிட்டேன்...
சரிங்கண்ணே

எழுத்து வழக்கு

**தம்பி! எங்கே நிற்கிறாய்?**
**நீங்க சொன்ன இடத்தில் தான் நிற்கிறேன் அண்ணா!**
**எதிர்புறத்தில் ஒரு தேநீர்க்கடை இருக்கிறது. அங்கேயே தேநீர் சாப்பிட்டு விட்டு, செய்தித்தாளைப் படித்துக் கொண்டு இரு.... நான் விரைவாக வந்து விடுவேன்**
**அண்ணா! சண்முகத்தையும் அழைத்துக் கொண்டு வாருங்கள் அண்ணா! அவனைப் பார்த்து வெகு நாட்கள் ஆகி விட்டன.**
**அவன் பாட்டியோடு வெளியூர் போயிருக்கிறான். உங்கள் ஊருக்கு அவனையும் அழைத்துக் கொண்டு வருகிறேன்.**
**மிகச் சிறிய வயதில் பார்த்தது அண்ணா! அப்பொழுது அவனுக்கு மூன்று வயது இருக்கும்!**
**இப்பொழுது அவன் உயரமாக வளர்ந்து விட்டான். உனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு என்னோடு வருவான் பார்! சரி, தொலைபேசியை வை. நான் புறப்பட்டு விட்டேன்...**
**சரி அண்ணா**

42. சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக.

1. கானடை
**கான் அடை - காட்டைச் சேர்; கான் நடை - காட்டுக்கு நடத்தல்; கால் நடை - காலால் நடத்தல்.**
2. வருந்தாமரை
**வரும் + தாமரை - வருகிற தாமரை; வரும் + தா + மரை - வரும் தாவுகின்ற மான்; வருந்தா + மரை - வருந்தாத மான்**
3. பிண்ணாக்கு
**பிண்ணாக்கு - எண்ணெய் எடுத்த கழிவு; பின் + நாக்கு - பிளவுபட்ட நாக்கு**
4. பலகையொளி
**பலகை + ஒலி - பலகையின் சத்தம்; பல + கையொலி - பலருடைய கையொலி; பல + கை + ஒலி - பல்வேறு சிறு ஒலிகள்**

இயல் - 9

43. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.

1. தாமரை இலை நீர் போல - **என் நண்பன் தாமரை இலை நீர் போல பட்டும், படாமலும் பழகுவான்.**
2. மழைமுகம் காணாப் பயிர் போல - **தாயை இழந்த கருணையன் மழை முகம் காணாப் பயிர் போல வாடினான்.**
3. சிலைமேல் எழுத்து போல - **சிறுவயதில் கற்றவை சிலைமேல் எழுத்து போல மனதில் பதிந்தது.**
4. கண்ணினைக் காக்கும் இமைபோல - **எனது தாயும், தந்தையும் கண்ணினைக் காக்கும் இமைபோல என்னைக் காத்தனர்.**

பொது

44. கீழ்க்காணும் சொற்களுக்கு இலக்கணக்குறிப்பு தருக.

1. உறுதுயர் - **வினைத்தொகை** 2. பயில்தொழில் - **வினைத்தொகை**

45. சொற்களுக்கு இணையான வேறுபெயர்களை எழுதுக.

1. காற்று - **வளி, தென்றல், புயல், சூறாவளி**
2. மாலை - **காழ், அணி, தார், ஆரம்**

வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (22 முதல் 28)

46. அகராதியில் கண்டு பொருள் எழுதுக.

1. ஊண் - **இரை, உணவு, சோறு, ஆன்மாவின் சுகதுக்க அனுபவம்**
2. ஊன் - **உடல் தசை, நிணம், மாமிசம், சரீரம்.**
3. திணை - **இடம், ஒழுக்கம், குடி, குலம், பூமி, பொருள்** 4. தினை - **ஒரு தானியம் (சாமை), சிறுமை**
5. அண்ணம் - **மேல்வாயின் உட்புறம்** 6. அன்னம் - **சோறு, பறவை**
7. வெல்லம் - **இனிப்புப் பொருள்** 8. வெள்ளம் - **நீர்ப்பெருக்கு**
9. அடவி - **காடு** 10. அவல் - **பள்ளம், விளைநிலம்** 11. சுவல் - **மேட்டுநிலம், தோள், கழுத்து**
12. செறு - **வயல், பாத்தி** 13. பழனம் - **பொய்கை** 14. பறவு - **காடு, புறா, முல்லை நிலம்**
15. அகன்சுடர் - **உயர்ந்த தீபம்** 16. ஆர்கலி - **கடல், மழை, பறவை** 17. கட்புள் - **விழித்திருக்கும் பறவை**
18. கொடுவாய் - **வளைந்த வாய்** 19. திருவில் - **வானவில்** 20. அவிர்தல் - **விளங்குதல்** 21. அழல் - **நெருப்பு**
22. உவா - **முழுநிலவு** 23. கங்குல் - **இரவு** 24. கனலி - **நெருப்பு, ஞாயிறு** 25. மன்றல் - **திருமணம்**
26. அடிச்சுவடு - **காலடியின் அடையாளம்** 27. அகராதி - **அகரமுதலி** 28. தூவல் - **மழை, இறகு**
29. மருள் - **மயக்கம், வியப்பு** 30. தால் - **நாக்கு** 31. உழுவை - **புலி** 32. அகவுதல் - **அழைத்தல், ஒலித்தல்**
33. ஏந்தெழில் - **மிகுந்த அழகு** 34. அணிமை - **அண்மை, அருகு, பக்கம்** 35. மிரியல் - **மிளகு**
36. வருத்தனை - **பெருகுதல், தொழில், சீவனம்** 37. அதசி - **சணல்** 38. துரிஞ்சில் - **வெளவால் வகை**
39. ஆசுகவி - **இன்னசொல் கொண்டு, இன்ன பொருள்படப் பாடுக என்றால் உடனே பாடுவது.**
40. மதுரகவி - **சொற்சுவையும் பொருட்சுவையும் ததும்பப் பாடுவது.**
41. சித்திரகவி - **எழுத்தைச் சித்திரமாக வடித்து நிறுத்துவது.**
42. வித்தாரக்கவி - **எதையும் விரிவாகப் பாடுவது.** 43. குணதரன் - **கருணையாளன்**
44. செவ்வை - **நேர்மை, சரியான நிலை** 45. நகல் - **பிரதி, சிரிப்பு** 46. பூட்கை - **வலிமை, உறுதி, கொள்கை**

## இயல் - 1

47. உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**மூன்று வகைப்படும். அவை 1. செய்யுளிசை அளபெடை 2.இன்னிசை அளபெடை 3. சொல்லிசை அளபெடை**

48. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ் - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.

**உடுப்பதூஉம், உண்பதூஉம் - இன்னிசை அளபெடை**

**செய்யுலிள் ஓசை குறையாத இடத்தும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.**

49. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல் - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

**கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் - இன்னிசை அளபெடை**

50. வேங்கை என்பதைத் தொடர் மொழியாகவும், பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

**வேங்கை : வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும் (தனிமொழி)**

**வேம் + கை : வேகின்ற கை எனவும் பொருள் தருகிறது (தொடர் மொழி)**

51. தொடர்மொழி என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி.**
**எ.கா: கண்ணன் வந்தான்.**

52. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் வேறுபாடுகள் இரண்டினை எழுதுக.

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
| --- | --- |
| 1. வினை, பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும். | 1. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும். |
| 2. காலம் காட்டாது. | 2. காலம் காட்டும் |
| 3. படர்க்கைக்கே உரியது. | 3. மூவிடத்திற்கும் உரியது. |
| 4. எ.கா. பாடுதல், படித்தல் | 4. எ.கா. பாடியவள், படித்தவர். |

*வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (22 முதல் 28)*

*53. கீழ்க்காணும் வினைமுற்றுகளைத் தொழிற்பெயர் ஆக்குக.*

*1. அறிந்தது* - **அறிதல்** *2. அறியாதது* - **அறியாமை**

*3. புரிந்தது* - **புரிதல்** *4. புரியாதது* - **புரியாமை**

*5. தெரிந்தது* - **தெரிதல்** *6. தெரியாதது* - **தெரியாமை**

*7. பிறந்தது* - **பிறத்தல்** *8. பிறவாதது* - **பிறவாமை**

*இயல் - 2*

*54. தண்ணீர்க் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.*

**தண்ணீரைக் குடி (இரண்டாம் வேற்றுமைத் தொகை) - மிகுந்த தாகத்தினால் தண்ணீரைக் குடித்தேன்.**

**தயிரை உடைய குடம் (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை) அந்தத் தயிரை உடைய குடத்தை எடுத்து வா.**

*இயல் - 3*

*55. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ரவிவர்மா ஓவியர், கலைக்கூடம் சென்றார் ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?*

*பாரதியார் கவிஞர்* - *கவிஞர்* **பெயர்ப் பயனிலை**

*நூலகம் சென்றார்* - *சென்றார்* **வினைப் பயனிலை**

*அவர் யார்?* - *யார்* **வினாப் பயனிலை**

*ரவிவர்மா ஓவியர்* - *ஓவியர்* **பெயர்ப் பயனிலை**

*கலைக்கூடம் சென்றார்* - *சென்றார்* **வினைப் பயனிலை**

*56. எவ்வகைத் தொடர் என அறிக.*

*1. நண்பா எழுது* - **விளித் தொடர்**

*2. பாடி மகிழ்ந்தனர்* - **வினையெச்சத் தொடர்**

*57. 1. அம்மா சொன்னார் என்னும் எழுவாய்த் தொடருக்கான விளித்தொடரை எழுதுக.*

**அம்மா சொல்**

*2. வந்த குழந்தை என்னும் பெயரெச்சத் தொடருக்கான வினையெச்சத் தொடரை எழுதுக.*

**வந்து சென்றது.**

*58. எழுது என்றாள் என்பது விரைவு காரணமாக எழுது எழுது என்றாள் என அடுக்குத் தொடரானது. அப்படியானால் சிரித்துப் பேசினார் என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?*

**சிரித்து சிரித்து**

*இயல் - 4*

*59. வழு என்றால் என்ன? சான்று தருக.*

**இலக்கண முறையின்றி பேசுவதும், எழுதுவதும் வழு எனப்படும்.**

**எ.கா: அண்ணன் வந்தது.**

*60. மரபு வழுவமைதிக்குச் சான்று தந்து அதற்கான காரணத்தைக் கூறு.*

**எ.கா: கத்துங் குயிலோசை என்றன் காதில் விழ வேண்டும். - பாரதியார் (குயில் கூவும் - மரபு)**

**காரணம்: பாரதியார் இந்திய மக்களைச் சுதந்திரப் போராட்டத்திற்கு தட்டியெழுப்பம் வகையில் குயில் கத்தும் என்று கூறியதால் வழுவாயினும் மரபு வழுவமைதியாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.**

*61. கால வழுவமைதி என்றால் என்ன?*

**உறுதித்தன்மை கருதி கால வழுவாயினும் அப்படியே ஏற்பது கால வழுவமைதி.**

**எ.கா: குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்.**

**வருவார் என்று அமைய வேண்டும். ஆயினும் உறுதித்தன்மை கருதி வருகிறார் என்பதை கால வழுவமைதியாக ஏற்கிறோம்.**

<u>வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (22 முதல் 28)</u>

<u>இயல் - 5</u>

62. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

விடை எட்டு வகைப்படும். அவை,

சுட்டு, மறை, நேர், ஏவல், வினா எதிர் வினாதல், உற்றது உரைத்தல், உறுவது கூறல், இனமொழி

63. நேர்மறை விடைகள் எத்தனை? அவை யாவை?

நேர்மறை விடைகள் மூவகைப்படும். அவை, நேர், மறை, சுட்டு.

64. உறுவது கூறல் விடை என்றால் என்ன?

நீ விளையாடவில்லையா? என்ற வினாவிற்கு கால் வலிக்கும் என்று இனிமேல் நேர்வதை விடையாகக் கூறுவது உறுவது கூறல் எனப்படும்.

65. இனமொழி விடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

வினாவிற்கு விடையாக இனமான மற்றொன்றை விடையாகக் கூறுதல்.

எ.கா: கதை எழுதத் தெரியுமா? எனும் வினாவிற்கு கட்டுரை எழுதுவேன் எனக் கூறுவது.

66. ஆற்றுநீர் பொருள்கோளைச் சான்றுடன் எழுதுக.

பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை ஆற்றுநீரின் போக்கைப் போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்தால் அது ஆற்றுநீர்ப் பொருள்கோள் எனப்படும்.

எ.கா: சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம் போல் எனத் தொடங்கும் சீவக சிந்தாமணிப் பாடலில் நெல் எனும் எழுவாய் அதன்தொழில்களான இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினையெச்சங்களைப் பெற்றுக் காய்த்தவே என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்தது.

67. கொண்டு கூட்டுப் பொருள்கோளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக் கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள்கோள் ஆகும்.

எ.கா: ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு. - மயிலைநாதர் உரை

மேற்கண்ட பாடலில் ஆலத்து மேல் குவளை என்றும், குளத்தின் வாலின் நெடிய குரங்கு என்றும் பொருள் கொண்டால் பொருத்தமற்றதாகி விடும். இதில் ஆலத்து மேல குரங்கு, குளத்துள குவளை - என்ற கருத்தைக் கொண்டு அங்குமிங்கும் கொண்டு பொருள்கோள் அமைந்திருப்பதால் இது கொண்டு கூட்டுப் பொருள்கோள் எனப்படும்.

<u>இயல் - 6</u>

68. எற்பாடு பிரித்து பொருள் தருக.

எல் + பாடு - எற்பாடு - சூரியன் மறையும் நேரம். - எல் - சூரியன்; பாடு - மறையும் நேரம்.

69. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். - இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருளை எழுதுக.

| | | |
|---|---|---|
| நிலம் | - காடு | - முல்லை |
| பொழுது | - பெரும்பொழுது | - கார்காலம் |
| | - சிறுபொழுது | - மாலை |
| உணவு | - வரகு | |

70. சிறுபொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?

சிறுபொழுது ஆறு வகைப்படும். அவை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை.

71. ஐந்திணைக்குரிய பெரும்பொழுதுகளை எழுதுக.

| திணை | | பெரும்பொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | - | குளிர்காலம், முன்பனிக் காலம் |
| முல்லை | - | கார்காலம் |
| மருதம் | - | ஆறு பெரும்பொழுதுகள் |
| நெய்தல் | - | ஆறு பெரும்பொழுதுகள் |
| பாலை | - | இளவேனில், முதுவேனில், பின்பனி |

72. ஐந்திணைக்குரிய சிறுபொழுதுகளை எழுதுக.

| திணை | | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | - | யாமம் |
| முல்லை | - | மாலை |
| மருதம் | - | வைகறை |
| நெய்தல் | - | எற்பாடு |
| பாலை | - | நண்பகல் |

*வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (22 முதல் 28)*

*இயல் - 7*

*73. புறத்திணைகளில் எதேனும் இரண்டு எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.*

**வெட்சி - கரந்தை**
**வஞ்சி - காஞ்சி**
**நொச்சி - உழிஞை**
**தும்பை - வாகை**

*74. பாடாண் திணையை விளக்குக.*

**பாடு + ஆண் + திணை எனப் பிரிக்கப்படும்.**
**பாடப்படும் ஆண்மகனது கல்வி, வீரம், செல்வம், புகழ், ஈகை முதலியனவற்றைப் போற்றிப் பாடுவது பாடாண் திணையாகும்.**

*75. வாகைத்திணை என்றால் என்ன?*

**போரில் வெற்றி பெற்ற மன்னன் வாகைப் பூச்சூடி மகிழ்வது வாகைத்திணை எனப்படும்.**

*இயல் - 8*

*76. ஆசிரியப்பாவின் வகைகள் யாவை?*

**நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா,**
**நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா.**

*77. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.*

**வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று இரண்டு அடிகளால் வரும்..**
**முதல் அடிகளில் நான்கு சீர்களும், இரண்டாம் அடியில் மூன்று சீர்களும் வரும்.**
**எ.கா : அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.**

*இயல் - 9*

*78. தீவக அணியின் வகைகள் யாவை?*

**முதல் நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம்.**

பொது

79. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

*பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - ம.பொ.சி.*

**பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி, விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - ம.பொ.சி.**

*சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவர்கள் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர் இதற்கு சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன*

**சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன், மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவர்கள், 'கொல்லி வெற்பன்' எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள், 'மலையமான்' எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்கு சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.**

*விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகின்றனர் உறவினர் வேறு விருந்தினர் வேறு முன்பின் அறியாதப் புதியவர்களுக்கு விருந்தினர் என்று பெயர் விருந்தே புதுமை என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்*

**விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகின்றனர். உறவினர் வேறு. விருந்தினர் வேறு. முன்பின் அறியாதப் புதியவர்களுக்கு விருந்தினர் என்று பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.**

*மனிதா மனிதா அழைப்பது கேட்கிறதா எங்கு பார்க்கிறாய் யாரைத் தேடுகிறாய்*

**மனிதா! மனிதா! அழைப்பது கேட்கிறதா? எங்கு பார்க்கிறாய்? யாரைத் தேடுகிறாய்?**

<u>வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (22 முதல் 28)</u>

**79. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.**

ஒரு மொழி வளம் பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும் உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும் என்கிறார் மு.கு.ஜகந்நாதராஜா

**‘‘ஒரு மொழி வளம் பெறவும், உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும்; உலக நாகரிக வளர்ச்சிக்கும், பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்’’ என்கிறார் மு.கு.ஜகந்நாதராஜா.**

அரசரால் நிறுவப்படும் கட்டடங்களில் சிலைகளில் நிறுவியவர் பெயர் நிறுவப்பட்ட காலம் நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள் இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை அது போலவே கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம் பெற்றிருக்கும்

**அரசரால் நிறுவப்படும் கட்டடங்களில், சிலைகளில் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள்! இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை. அது போலவே கோவில்களிலும், பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம் பெற்றிருக்கும்.**

*80. <u>கலைச் சொற்கள் தருக.</u>*

| | | | |
|---|---|---|---|
| Rote | - நெட்டுரு | Vowel | - உயிரெழுத்து |
| to look up | - எட்டிப் பார்த்தேன் | Consonant | - மெய்யெழுத்து |
| Chamber | - அறை | Discussion | - கலந்துரையாடல் |
| Grand daughter | - பேத்தி | Monolingual | - ஒரு மொழி |
| didactic compilation | - நீதிநூல் திரட்டு | Conversation | - உரையாடல் |
| Aesthetics | - அழகியல், முருகியல் | Homograph | - ஒப்பெழுத்து |
| Artifacts | - கலைப் படைப்புகள் | Tornodo | - சூறாவளி |
| Terminology | - கலைச்சொல் | Tempest | - பெருங்காற்று |
| Myth | - தொன்மம் | Storm | - புயல் |
| Consulate | - துணைத் தூதரகம் | Land Breeze | - நிலக்காற்று |
| Document | - ஆவணம் | Sea Breeze | - கடற்காற்று |
| Irrigation | - பாசனம் | Whirlwind | - சுழல்காற்று |
| Patent | - காப்புரிமை | Modern Literature | - நவீன இலக்கியம் |
| Guild | - வணிகக்குழு | Epic Literature | - காப்பிய இலக்கியம் |
| Territory | - நிலப்பகுதி | Folk Literature | - நாட்டுப்புற இலக்கியம் |
| Belief | - நம்பிக்கை | Classical Literature | - செவ்விலக்கியம் |
| Philosopher | - மெய்யியலாளர் | Ancient Literature | - பண்டைய இலக்கியம் |
| Renaissance | - மறுமலர்ச்சி | Regional Literature | - வட்டார இலக்கியம் |
| Revivalism | - மீட்டுருவாக்கம் | Devotional Literature | - பக்தி இலக்கியம் |
| Humanism | - மனிதநேயம் | Nanotechnology | - மீநுண் தொழில்நுட்பம் |
| Cabinet | - அமைச்சரவை | Biotechnology | - உயிரித் தொழில்நுட்பம் |
| Cultural Boundaries | - பண்பாட்டு எல்லை | Ultraviolet rays | - புறஊதாக் கதிர்கள் |
| Cultural Values | - பண்பாட்டு விழுமியங்கள் | Space Technology | - விண்வெளித் தொழில்நுட்பம் |
| Symbolism | - குறியீட்டு வாதம் | Cosmic rays | - விண்வெளிக் கதிர்கள் |
| Emblem | - சின்னம் | Infrared rays | - அகச்சிவப்புக் கதிர்கள் |
| Thesis | - ஆய்வறிக்கை | Lute music | - யாழிசை |

வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க (22 முதல் 28)

81. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பொறித்த
பொறி + த் + த் + அ
பொறி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

உரைத்த
உரை + த் + த் + அ
உரை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

வருக
வா(வரு) + க
வா - பகுதி வரு எனக் குறுகியது விகாரம்
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

மலைந்து
மலை + த்(ந்) + த் + உ
மலை - பகுதி
த் - சந்தி ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

பொழிந்த
பொழி + த்(ந்) + த் + அ
பொழி - பகுதி
த் - சந்தி ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

கிளர்ந்த
கிளர் + த்(ந்) + த் + அ
கிளர் - பகுதி
த் - சந்தி ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

தணிந்தது
தணி + த்(ந்) + த் + அ + து
தணி - பகுதி
த் - சந்தி ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - சாரியை
து - படர்க்கை வினைமுற்று விகுதி

பதிந்து
பதி + த்(ந்) + த் + உ
பதி - பகுதி
த் - சந்தி ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

மயங்கிய
மயங்கு + இ(ன்) + ய் + அ
மயங்கு - பகுதி
இ - இறந்தகால இடைநிலை
ன் - புணர்ந்து கெட்டது
ய் - உடம்படுமெய்
அ - பெயரெச்ச விகுதி

அறியேன்
அறி + ய் + ஆ + ஏன்
அறி - பகுதி
ய் - சந்தி
ஆ - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று

ஒலித்து
ஒலி + த் + த் + உ
ஒலி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

நின்று
நில்(ன்) + ற் + உ
நில் - பகுதி ன் ஆனது விகாரம்
ற் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

வந்தனன்
வா(வ) + த்(ந்) + த் + அன் + அன்
வா - பகுதி வ எனக் குறுகியது விகாரம்
த் - சந்தி ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அன் - சாரியை
அன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

நோக்கிய
நோக்கு + இ(ன்) + ய் + அ
நோக்கு - பகுதி
இ(ன்) - இறந்தகால இடைநிலை
ய் - உடன்படு மெய் சந்தி
அ - பெயரெச்ச விகுதி

அமர்ந்தான்
அமர் + த்(ந்) + த் + ஆன்
அமர் - பகுதி
த் - சந்தி ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

அமர்ந்தனன்
அமர் + த்(ந்) + த் + அன் + அன்
அமர் - பகுதி
த் - சந்தி ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அன் - சாரியை
அன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

சுருக்கமாக விடையளிக்க (29 முதல் 30)

இயல் 1

1. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. - இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
 பிள்ளை - தென்னம் பிள்ளை வாங்கி வந்தேன்.
 வடலி - காட்டில் பனை வடலியைப் பார்த்தேன்.
 நாற்று - வயலில் நெல் நாற்று நட்டேன்.
 கன்று - கிளிமூக்கு வகை மாங்கன்று ஒன்றை நட்டு வைத்தேன்.
 பைங்கூழ் - சோளப் பைங்கூழ் பசுமையாக உள்ளது.
2. தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்களையும் அதற்குரிய தாவரங்களின் பெயர்களையும் எழுதுக.
 நாற்று - நெல், கத்தரியின் இளநிலை
 கன்று - மா, புளி, வாழையின் இளநிலை
 குருத்து - வாழையின் இளநிலை
 பிள்ளை - தென்னையின் இளநிலை
 குட்டி - விளாவின் இளநிலை
 மடலி (அ) வடலி - பனையின் இளநிலை
 பைங்கூழ் - நெல், சோளத்தின் இளநிலை
3. தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள் யாவை?
 தாள் - நெல், கேழ்வரகு
 தண்டு - கீரை, வாழை
 கோல் - நெட்டி, மிளகாய்ச் செடி
 தூறு - குத்துச்செடி, புதர்
 தட்டு (அ) தட்டை - கம்பு, சோளம்
 கழி - கரும்பு
 கழை - மூங்கில்
 அடி - புளி, வேம்பு
4. தானியங்களுக்குத் தமிழகத்தில் வழங்கும் சொற்கள் குறித்து விளக்குக.
 கூலம் - நெல், புல், கம்பு
 பயறு - அவரை, உளுந்து
 கடலை - வேர்க்கடலை, கொண்டைக்கடலை
 விதை - கத்தரி, மிளகாய்
 முத்து - வேம்பு, ஆமணக்கு
 கொட்டை - மா, பனை
 தேங்காய் - தென்னை
 முதிரை - அவரை, துவரை
5. பூவின் நிலைகளைக் குறிக்கும் பெயர்களை எழுதுக.
 அரும்பு : பூவின் தோற்ற நிலை
 போது : பூ விரியத் தொடங்கும் நிலை
 மலர் (அலர்) : பூவின் மலர்ந்த நிலை
 வீ : மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை
 செம்மல் : பூ வாடின நிலை.

இயல் 2

6. ஹிப்பாலஸ் பருவக்காற்று குறிப்பு வரைக.
 முதலாம் நூற்றாண்டில், பருவக்காற்றின் மூலம் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்கு விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தவர் ஹிப்பாலஸ் என்னும் கிரேக்க மாலுமி. அதனால் அவர் பெயரில் ஹிப்பாலஸ் பருவக்காற்று என பெயர் பெற்றது.
7. காற்று மாசடைதலைத் தவிர்க்கும் வழிகளைக் கூறுக.
 மேம்பட்ட குப்பை மேலாண்மையை மேற்கொள்ளுதல்
 பொதுப் போக்குவரத்திற்கு முன்னுரிமை அளித்தல்
 மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகளை மிகுதியாகப் பயன்படுத்துதல்
 புதைவடிவ எரிபொருட்களைத் (கச்சா எண்ணெய், நிலக்கரி) தவிர்த்தல்
 சமையலுக்கு விறகுகளைப் பயன்படுத்தாமை.
8. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்.... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு நீர் தன்னைப் பற்றிப் பேசினால் ..... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.
 உலகின் முக்கால் பாகம், உயிர் காப்பான், விண்ணின் மழைத்துளி, உணவின் மூல ஆதாரம்
9. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல ஓர் உரையாடல் அமைக்க.
 மின் விசிறிக் காற்று : நண்பா வா எங்கெல்லாம் சுற்றித் திரிந்து வருகிறாய்? என்னைப் போல் நிலையாக ஓரிடத்திலிருந்து வீசக் கூடாதா?
 சோலைக் காற்று : உன்னை இயக்க ஒருவர் தேவை. நீ கொடுக்கும் வெப்பக்காற்றை வேறு வழியின்றி பயன்படுத்துகின்றனர். மின்சாரம் இன்றி நீ இயங்க முடியாது.
 மின் விசிறிக் காற்று : மனிதர்கள் உன்னை விரும்புகிறார்களா?
 சோலைக் காற்று : ஆம். குளிர்ந்த காற்றைக் கொடுக்கிறேன். மின்சாரம் தயாரிக்க உதவுகிறேன். புதுப்பிக்கக் கூடிய வளமாக என்னை பயன்படுத்தி வருகின்றனர்.
 மின் விசிறிக் காற்று : சிறப்பு மிக்க உனக்காக ஒரு புது மொழி சொல்லவா?
 சோலைக் காற்று : சொல் பார்க்கலாம்.
 மின் விசிறிக் காற்று : காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக் கொள்.

<u>சுருக்கமாக விடையளிக்க (29 முதல் 30)</u>

<u>இயல் 3</u>

10. மினசோட்டா வாழையிலை விருந்து விழா பற்றி எழுதுக.

அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் வாழையிலை விருந்து விழாவை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.

தமிழர்களின் பாரம்பரிய உணவுகளைக் கொண்டு விருந்து வைக்கின்றனர்.

முருங்கைக்காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய் கூட்டு, தினைப் பாயாசம், அப்பளம்.

தமிழர்கள் பலரும் இந்த விருந்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.

11. புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர். திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காண முடிகிறது.

இப்படியாக காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.

<u>சத்திரங்கள் பெருகின :</u>

கால மாற்றத்தினால் விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகின. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக்காலத்தில் வழிப்போக்கர்களுக்காக மிகுதியான சத்திரங்கள் கட்டப்பட்டன.

<u>திண்ணை இன்மை :</u>

இன்று வீட்டுத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை. அறிமுகமில்லாத புதியவர்களை ஏற்பதும் இல்லை. இதற்கான காரணம் மனிதர்களின் மனிதநேயம் நசுக்கப்பட்டதேயாகும். தன் வீடு, தன் மனைவி, தன் பிள்ளை என்ற சுயநலமே காரணமாகும்.

<u>விருந்தளிக்கும் நிலை :</u>

பண்பாட்டு மாற்றமாக இன்று சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து செய்யும் விருந்தோம்பல் நடைபெறுவதைக் காண முடிகிறது. கூட்டு மனப்பான்மையோடு செய்யும் செயலைத் தனியொருவராக செய்யும் நிலைக்கு மனிதர்களின் நிலை ஒடுக்கப்பட்டதே இதற்குக் காரணம்.

12. முல்லை நிலத்திலிருந்தும், மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப்பொருட்கள் யாவை?

முல்லை நில உணவுப் பொருள்கள் : இயற்கையாய் விளையும் வரகு, தினை, சாமை, முதிரை நெய் மற்றும் பால்

மருத நில உணவுப் பொருள்கள் : செந்நெல், வெண்ணெல்

13. விருந்தை எதிர்கொள்ளும் தன்மையைக் கூறுக.

இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததாகக் குறுந்தொகை கூறுகிறது.

14. இன்மையிலும் விருந்தோம்பலை சங்க இலக்கியங்கள் எவ்வாறு படம்பிடித்து காட்டுகிறது?

வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேனும் முயன்று விருந்தளித்தனர் பழந்தமிழர் என்று புறநானூறு கூறுகிறது.

தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தளித்தாள் தலைவி. இன்று வந்த விருந்தினருக்கு விருந்தளிக்க கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்தான்.

தன் வீட்டிற்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க, அன்று விதைத்து விட்டு வந்த நெல்லை அரிந்து விருந்து படைத்ததைப் பெரியபுராணம் மூலம் அறியலாம்.

<u>இயல் 4</u>

15. நீவிர் அறிந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மூன்றினை எழுதுக.

ரோபோ, திறன்பேசி, செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள்.

செயற்கை நுண்ணறிவால் இயங்கும் பெட்ரோல் நிலையங்கள்.

செயற்கை நுண்ணறிவால் இயங்கும் கட்டுமானத் தொழிலாளர்கள்.

16. மின்னணுப் புரட்சிக்கான காரணங்களைக் கூறுக.

1980 களில் ஒவ்வொருவருக்குமான தனிநபர் கணினிகளின் வளர்ச்சி.

இணையப் பயன்பாட்டின் பிறப்பு

17. மெய்நிகர் உதவியாளர் குறித்து அறிவன யாவை?

திறன்பேசிகளில் இயங்கும் உதவு மென்பொருள். கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப் போல நம்முடன் உரையாடி, சில உதவிகள் செய்கிறது. இதனையே மெய்நிகர் உதவியாளர் என்கிறோம்.

சுருக்கமாக விடையளிக்க (29 முதல் 30)

18. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

புதிய கண்டுபிடிப்பு :

இன்றைய கண்டுபிடிப்புகள் அறிமுகமாகும் போதும் பழைய வேலை வாய்ப்புகள் புதிய வடிவில் மாற்றம் பெறுகின்றன.

மின்னணுக் கல்வியறிவு :

வாழ்க்கையில் முன்னேறுவதற்கு எழுதப்படிக்கத் தெரிந்தால் மட்டும் போதாது. கல்வியறிவுடன் மின்னணுக் கல்வியறிவையும், மின்னணு சந்தைப்படுத்தலையும் அறிந்திருப்பது வாழ்க்கையை எளிதாக்கி வணிகத்தில் வெற்றியடைய உதவுகிறது.

நான்காவது தொழிற்புரட்சி :

எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவும், நான்காவது தொழிற் புரட்சியின் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் அறிவுமே நம்மை வளப்படுத்த உதவும்.

எதிர்கால முன்னேற்றம் :

இப்போது உலகில் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பயன்பாட்டில் இருக்கின்ற செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம், எதிர்காலத்தில் உலகின் ஒவ்வொரு துறையிலும் அளவிட முடியாத முன்னேற்றத்தைத் தரும்.

இயல் 5

19. மொழிபெயர்ப்பு சரியாக அமையவில்லை என்றால் என்ன நேரும் என்பதற்குச் சான்று தருக.

உலகப் போரின் போது அமெரிக்கா, சரணடையாவிட்டால் குண்டு வீசப்படும் என்ற செய்தியை ஜப்பானுக்கு அனுப்பியதாகவும், அதற்கு ஜப்பான், மொகு சாஸ்ட்டு என்று பதில் அனுப்பியதாகவும் கூறுவர். அந்தத் தொடரின் பொருள் தெரியாமையால் அமெரிக்கா, ஹிரோஷிமாவில் குண்டு வீசியது என்று சொல்கிறார்கள். அந்தத் தொடருக்கு விடைதர அவகாசம் வேண்டும் என்பதாம். ஆனால் அதற்கு அமெரிக்கர்கள் மறுக்கிறோம் என்று பொருள் கொண்டதாக கூறுவர். அதனால்தான் அழிவு தரும் களங்கம் நேர்ந்தது; மொழிபெயர்ப்பு சரியாக அமைந்து இருந்தால் பேரழிவு தடுக்கப்பட்டிருக்கும்.

20. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கல்வி கற்பதன் இன்றியமையாமையை எவ்வெவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

இளமைக்கு உரியது கல்வி. இளமையில் கல் என்றனர் சான்றோர்கள்.

நாம் இந்த வயதில் பள்ளிக்குச் செல்லாமல், வேலைக்குச் செல்வதால் இன்றைய தேவைதான் பூர்த்தியாகும். நாளைய நம் தேவை பூர்த்தியாகுமா?

கல்வியில் கவனத்தைக் காட்டு. வருங்கால வாழ்க்கை எளிதாக அமைய கல்வி அவசியமாகும்.

கல்வியற்ற மனிதன் களர் நிலத்திற்கு ஒப்பாவான்.

21. இடம் பார்த்து மொழிபெயர்க்க வேண்டும் என்பதைச் சான்றுடன் விவரிக்க.

**Tele** என்பது தொலை என்பதைக் குறிக்கிறது. ஆகவே **Telegraph, Television, Telephone, Telescope, Telemetry** முதலிய சொற்கள் மொழிபெயர்க்கப்படுகிற போது தொலைவரி, தொலைக்காட்சி, தொலைபேசி, தொலைநோக்கி, தொலை அளவியல் என்றவாறு முன்ஒட்டுகளுடன் மொழிபெயர்க்கப்பட்டன.

இதற்கு மாறாக **Transcribe, Transfer, Transform, Transact** ஆகியவற்றை மொழிபெயர்க்கும்போது படியெடுத்தல், மாறுதல், உருமாற்றுதல், செயல்படுத்துதல் என்றவாறு மொழிபெயர்க்கப்படுகின்றன. இங்கு **Trans** என்ற முன்ஒட்டை வைத்து மொழிபெயர்க்கவில்லை. எனவே இடம் பார்த்து மொழிபெயர்க்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

22. மொழிபெயர்ப்பின் செம்மை குறித்து எழுதுக.

**Hundred railsleepers were washed away** என்பதை மொழிபெயர்ப்புத் தவறுதலால், தொடர் வண்டியில் உறங்கிக் கொண்டிருந்த நூறு பேர், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்கள் என்று ஒரு செய்தித்தாள் தவறாக, செய்தியை வெளியிட்டது.

**Camel** என்பதற்கு வடம் (கயிறு), ஒட்டகம் என இரு பொருள்கள் உண்டு. ஊசிக் காதில் வடம் நுழையாது என்னும் பொருளுடைய வேற்றுமொழித் தொடரை, ஊசியின் காதில் ஒட்டகம் நுழையாது என்று மொழிபெயர்த்துப் பயன்படுத்துகிறோம்.

எனவே, மொழி பெயர்ப்பு செம்மையுற கழிவின்றி, சிதறலின்றி மூலமொழியின் கருத்துக்களை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.

சுருக்கமாக விடையளிக்க (29 முதல் 30)

23. மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி, மொழி வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு உதவுகிறது என்பதை நிறுவுக.

நல்ல மொழிபெயர்ப்பாளன், சில விதிமீறல்களைச் செய்வதால், புதிய இலக்கண விதிகள் உருவாகின்றன. செய்யுளைத் தன் வெளியீட்டு வடிவமாகக் கொண்டிருந்த தமிழ், அச்சு இயந்திர வரவால் மொழிபெயர்ப்பை எதிர்கொள்ள நேரிட்டது. அதனால் உரைநடை வளர்ச்சி ஏற்பட்டது.

தொடர் (வாக்கிய) அமைப்புகளுக்கு ஆங்கில உரைநடைத் தொடர் அமைப்புகளை ஏற்கும் நிலை உருவானது. இத்தகைய மொழிப் பிரச்சனைகளைக் கடந்து, புதுக்கூறுகளை உருவாக்கி வளர்ச்சி பெற வழிவகுத்தது. இவ்வகையில் மொழிவளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு காரணமாயிற்று.

இயல் 6

24. தேவராட்டம் மற்றும் கரகம் குறித்த இரு வினாக்களை எழுப்பி விடைகளை எழுதுக.

தேவராட்டம் : தேவராட்டம் என்பதன் பொருள் யாது?
வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் என்பது பொருள்
தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி எது?
தேவதுந்துபி

கரகம் : கரகம் பற்றி புறநானூறு கூறுவன என்ன?
நீரற வறியாக் கரகத்து
கரகாட்டத்திற்குரிய இசைக்கருவிகள் எவை?
நையாண்டி மேளம், நாகசுரம், தவில், பம்பை.

25. பொய்க்கால் குதிரை ஆட்டம் குறித்த இரு வினாக்களை எழுப்பி விடைகளை எழுதுக.

பொய்க்கால் குதிரை ஆட்டத்தில் பின்பற்றப்படும் பண்பு யாது?
போலச் செய்தல்
பொய்க்கால் குதிரை ஆட்டம் யாருடைய ஆட்சிக்காலத்தில் தமிழகத்திற்கு வந்தது?
மராத்தியர்

26. காவடியாட்டம் குறித்து எழுதுக.

கா - என்பதற்குப் பாரம் தாங்கும் கோல் என்பது பொருள். இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடி ஆட்டம் எனப்படும்.

27. தமிழ்நாட்டில் நிகழ்த்தப்படும் நிகழ்கலைகள் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகிறது என்பதை சான்றுடன் நிறுவுக.

பொய்க்கால் குதிரை ஆட்டம் : இராஜஸ்தான் - கச்சிகொடி, கேரளா - குதிரைக்களி

28. கபிலன் தான் கண்ட மயிலாட்டத்தை மணியனிடம் கூறினான். மணியன் எங்கள் ஊர் திருவிழாவில் புலி ஆட்டம், தப்பு ஆட்டம் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது என மறுமொழி கூறினான்.

உரைப்பத்தியில் காணும் ஆட்டங்கள் எக்கலையை சேர்ந்தவை? அதன் பண்புகள் மற்றும் ஆட்ட முறைகள் குறித்து எழுதுக.

உரைப்பத்தியில் காணும் ஆட்டங்கள் நிகழ்கலை வகையைச் சேர்ந்தவை.

மயிலாட்டம் : மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு, நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடும் ஆட்டமே மயிலாட்டமாகும்.

ஆட்ட முறைகள் : ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல், இறகை விரித்தாடுதல், தலையைச் சாய்த்தாடுதல், தாவியாடுதல், இருபுறமும் சுற்றியாடுதல், அகவுதல், தண்ணீர் குடித்துக் கொண்டே ஆடுதல்.

புலி ஆட்டம் : தமிழ் மக்களின் வீரத்தை வெளிப்படுத்தும் வகையில் உடம்பெங்கும் புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமாக வண்ணக்கோடுகளையிட்டுத் துணியாலான வாலை இடுப்பில் கட்டிக்கொண்டு புலியைப் போன்று ஆடும் ஆட்டம்.

ஆட்ட முறைகள் : புலியைப் போன்று நடந்தும், பதுங்கியும், பாய்ந்தும், எம்பிக் குதித்தும், நாக்கால் வருடியும், வாயைப் பிளந்தும், உறுமியும் ஆடுதல்.

தப்பாட்டம் : தப்பு என்ற தோற்கருவியை இசைத்துக் கொண்டே, அதன் இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ்கலையே தப்பாட்டமாகும்.

ஆட்ட முறைகள் : வட்டமாக ஆடுதல், இரண்டு வரிசையாக எதிர்எதிர்த் திசையில் நின்று ஆடுதல், அனைவரும் நேர் வரிசையில் நின்று ஆடுதல், குதித்துக் குதித்து ஆடுதல், உட்கார்ந்து எழுதல், நடையாட்டம்.

சுருக்கமாக விடையளிக்க (29 முதல் 30)

இயல் 7

29. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் இடஞ்சுட்டி விளக்குக.

இடம் : சென்னையை ஆந்திராவின் தலைநகராக மாற்ற முயற்சி செய்தனர்.

பொருள் : சென்னை, ஆந்திராவின் தலைநகராக மாற்றக்கூடாது. மீறினால், என்ன விலை கொடுக்கவும் தயார் என்பதே பொருள்.

விளக்கம் : ஆந்திர மாநிலம் பிரியும் பொழுது சென்னை தமிழருக்கே உரிமையானது.

இயல் 8

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு தருக.

அறம் மனித உறவின் மையமாகக் கருதப்பட்ட காலம் சங்ககாலம். சங்க இலக்கியம் காட்டும் அறக்கருத்துகள் இன்றைய சூழலுக்கு மிகவும் தேவையே.

அரசியல் அறம் :

நீர் நிலை பெருக்கி, நிலவளம் கண்டு, உணவுப் பெருக்கம் காண்பதும், அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் அறம்.

வணிகத்தில் அறம் :

அறம் செய்வதில் வணிக நோக்கம் இருத்தல் கூடாது. நோக்கமின்றி அறம் செய்வதே வணிக அறனின் மேன்மையாகும்.

போர் அறம் :

தமிழர் போர் செய்வதிலும் அறநெறி உடையவர்களாக இருந்தனர். போர் அறம் என்பது, வீரமற்றோர், சிறார், முதியோர் போன்றவரை எதிர்த்து போர் செய்யாமல் இருப்பது.

உதவி செய்வதில் அறம் :

பிறருக்கு உதவி செய்வதை அறமாகக் கருதினர். அதாவது, தன்னைத் தாண்டி பிறரைப் பற்றிச் சிந்திக்கும் நிலை.

வாய்மை அறம் :

பிழையா நன்மொழி என்று நற்றிணை கூறுகிறது.

நிலம் பெயர்ந்தாலும் பொய் சொல்லக் கூடாது. மெய் பேசும் நாவே மனிதனை உயர்த்தும்.

சங்க இலக்கியங்கள் காட்டும் அறம் ஒரு மனிதன் தனியாகவும், சமூக உறுப்பினராகவும் இயங்குவதற்கு பண்பு நலனே காரணம் என்று சங்க இலக்கியம் மூலமாக அறிய முடிகிறது.

31. சங்ககாலப் போர் அறம் குறித்து எழுதுக.

தமிழர் போரிலும் அறத்தைப் பின்பற்றினர்.

போர் அறம் என்பது, வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் போன்றவரை எதிர்த்து போர் செய்யாமல் இருப்பது.

பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போரிடுவதும் போர் அறமாகக் கருதப்பட்டது.

32. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்களில் கொடை பற்றி எழுதுக.

கடையெழு வள்ளல்களின் கொடைச் சிறப்பு, சிறுபாணாற்றுப் படையிலும், பெருஞ்சித்திரனார் பாடலிலும் போற்றப்பட்டுள்ளது.

ஆற்றுப்படை இலக்கியங்கள் கொடை இலக்கியங்களாகவே உள்ளன.

பதிற்றுப்பத்து, சேர அரசர்களின் கொடைப் பதிவாகும்.

புறநானூற்றிலும் கொடைப்பதிவுகள் உள்ளன.

33. போதி தர்மர் யார்? அவர் போதித்த தத்துவம் யாது?

காஞ்சி மாநகரத்துச் சிற்றரசர் ஒருவர் போதிதர்மர் என்னும் சமயப்பெயர் பூண்டு, கி.பி. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சீனாவுக்குச் சென்றார்.

அவர் போதித்த தத்துவம் ஜென் தத்துவமாகும்.

சுருக்கமாக விடையளிக்க (29 முதல் 30)

இயல் 9

34. ஜெயகாந்தன் எழுதிய புதினங்கள் நான்கனை எழுதுக. அவர் எழுதிய புதினங்களில் எது திரைப்படமாக எடுக்கப்பட்டது?

**பாரீசுக்குப் போ! சுந்தரகாண்டம் கங்கை எங்கே போகிறாள்**
**ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் இன்னும் ஒரு பெண்ணின் கதை**
**ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் சில நேரங்களில் சில மனிதர்கள்**
**உன்னைப் போல் ஒருவன் யாருக்காக அழுதான்**

**திரைப்படம் ஆன புதினங்கள்**

**சில நேரங்களில் சில மனிதர்கள் ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்**
**உன்னைப் போல் ஒருவன் யாருக்காக அழுதான்**

35. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் கூறு ஒன்றைத் தர்க்கத்திற்கு அப்பால் கதை மாந்தர் வாயிலாகக் குறிப்பிடுக.

**ஜெயகாந்தனின் தர்க்கத்திற்கு அப்பால் கதையில் பிச்சை எடுக்கும் கண் தெரியாதவனும், தர்மம் செய்தவனுமே கதை மாந்தர்கள்.**

**ஜெயகாந்தன் தன்னிடமிருந்த ரூபாயில் இரயில் கட்டணத்திற்கு ஒதுக்கி விட்டு காபி குடிக்கிறார். மீதமுள்ள இரண்டணாவை தர்மம் செய்கிறார். ஸ்டேஷனுக்குள் நுழையும் போது இரயில் கட்டணம் 13 அணா என்று எண்ணி, யோசனை செய்கிறார்.**

**பிச்சைக்காரனுக்குப் போட்ட இரண்டணாவிலிருந்து ஓரணா எடுத்துக் கொள்ளலாம் என்று யோசிக்கிறார். அதன்படி, ஓரணாவைப் போட்டு விட்டு, இரண்டணா எடுக்கும்போது பிச்சைக்காரன் சாமி இதுதான் தர்மமா! குருடனை ஏமாற்றாதே என்கிறார்.**

**தர்மம் செய்பவன் தனக்குள்ளே எப்போதும் தர்க்கம் செய்யும் சிறப்புக்கூறு கொண்டவனாய் இருக்கிறான். தோல்வி நிச்சயம் என்ற மனப்பான்மையுடன் சென்ற நான் வழக்கத்திற்கு மாறாக தோற்றுப் போனேன்.**

**வெற்றியைக் கூட இப்படி ஒரு தர்க்கரீதியாக எண்ணிப் பார்க்கிற கதை மாந்தர் மூலம் மேற்கூறிய கூற்றை ஜெயகாந்தன் தன் கதையில் மெய்ப்பித்துள்ளார்.**

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க (31)

1. தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு. விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால் தான் விருந்தே புதுமை என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

அ) விருந்தினர் என்போர் யாவர்? **முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.**

ஆ) விருந்து குறித்து தொல்காப்பியர் கூறியது என்ன? **விருந்தே புதுமை.**

இ) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக. **விருந்தோம்பல்.**

2. சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன. சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும், செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குக் கற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணை செய்கின்றன.

அ) சிற்றூர் மக்களின் வாழ்வியல் கூறுகளை எடுத்துக்காட்டுபவை எவை? **நிகழ்கலைகள்.**

ஆ) எவற்றின் எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணை செய்கின்றன?

**பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை**

இ) நிகழ்கலைகள் மக்களுக்கு எதைக் கொடுத்து, எதைப் போக்குகின்றன?

**மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன.**

3. 16.01.2003 இல் அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ் - 107 விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த விண்கலத்தில் சாவ்லா உட்பட ஏழு பேர் பயணித்தனர். பதினாறு நாட்கள் ஆய்வை முடித்து விட்டு திரும்பிய போது, அமெரிக்காவின் டெக்ஸாஸ் வான்பரப்பில் அவ்விண்கலம் வெடித்துச் சிதறியது. சாவ்லா உட்பட ஏழு பேரும் பலியாகினர்.

அ) விண்ணில் பயணித்தவர் எத்தனை பேர்? **ஏழு பேர்**

ஆ) விண்கலத்தின் பெயர் என்ன? **கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ் - 107**

இ) விண்கலம் எந்த ஆண்டு செலுத்தப்பட்டது? **2003**

<u>உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க (31)</u>

4. ஐ.நா. அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்து கொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது. ஆனால் ஒருவர் பேசும் போதே மொழிபெயர்ப்பது, விளக்குவது என்று சொல்லப்படுகிறது. ஐ.நா. அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதை காதணிக் கேட்பியில் கேட்டபடி சில நொடிகளில் மொழி பெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணி கேட்பியை எடுத்துப் பொருத்திக் கொண்டு அவரவர் மொழியில் புரிந்து கொள்வார்.

அ) மொழிபெயர்ப்பு என்றால் என்ன? **மொழிபெயர்ப்பு என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது.**

ஆ) பார்வையாளர்கள் அவையில் பேசுவோர் உரையை எப்படிப் புரிந்து கொள்கின்றனர்?

**பார்வையாளர் தம்முன் உள்ள காதணி கேட்பியை எடுத்துப் பொருத்திக் கொண்டு அவரவர் மொழியில் புரிந்து கொள்வார்.**

இ) மொழிபெயர்ப்பாளர்கள் எங்கு அமர்ந்திருப்பர்?

**மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார்.**

5. ஆந்திர மாநிலம் பிரியும் போது சென்னை அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று சில ஆந்திரத் தலைவர்கள் கருதினர். தலைநகரைக் காக்க தன் முதலமைச்சர் பதவியைத் துறக்கவும் இராஜாஜி முன்வந்தார். மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு சென்னை பற்றிய தீர்மானம் முன்மொழியப்பட்டது. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் என்று முழங்கியதன் விளைவாக 25.08.1953 அன்று சென்னை தமிழருக்கே என்பது உறுதியானது என்று சென்னையை மீட்போம் என்று சென்னையை மீட்டது குறித்து ம.பொ.சி குறிப்பிடுகிறார்.

அ) முதலமைச்சர் பதவியைத் துறந்தவர் யார்? **இராஜாஜி.**

ஆ) யார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது? **மாநகரத் தந்தை செங்கல்வராயன்.**

இ) எந்த ஆண்டு சென்னை தமிழருக்கு உறுதியானது? **1953.**

6. சீனாவில் 50க்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் இயந்திர மனிதர்களை பணிக்கு அமர்த்தி உள்ளன. அவை அங்கு வரும் நோயாளிகளின் குரலையும், முகத்தையும் அடையாளம் கண்டு அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்கின்றன. சீன மொழியின் வெவ்வேறு வட்டார வழக்குகளையும் கூட அவை புரிந்து கொண்டு பதிலளிக்கின்றன.

அ) இயந்திர மனிதன் என்பவன் யார்? **மனிதனைப் போன்றே செயல்படும் இயந்திரக் கருவி.**

ஆ) இயந்திர மனிதன் எங்கு பயன்படுத்தப்படுகிறான்? **மருத்துவமனை**

இ) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக. **இயந்திர மனிதன்**

7. மலர் உண்டு. பெயரும் உண்டு; ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள்: சுள்ளி மலர், பாங்கர் மலர். அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள்: அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா, பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன: நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப்பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை, இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப்பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும். - கோவை.இளஞ்சேரன்.

அ) மலர் உண்டு; பெயரும் உண்டு - இரண்டு தொடர்களையும் ஒரு தொடராக்குக. **மலரும் பெயரும் உண்டு.**

ஆ) குடிநீருக்கு மணம் தரும் மலர் எது? **பாதிரிப்பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும்.**

இ) எந்த மரத்திலிருந்து அரிசி கிடைக்கும்? **மூங்கில்**

8. ஜெயகாந்தனின் தர்க்கத்திற்கு அப்பால் கதையில் பிச்சை எடுக்கும் கண் தெரியாதவனும், தர்மம் செய்தவனுமே கதை மாந்தர்கள் ஆவர். ஜெயகாந்தன் தன்னிடமிருந்த ரூபாயில் இரயில் கட்டணத்திற்கு ஒதுக்கிவிட்டு காபி குடிக்கிறார். மீதமுள்ள இரண்டணாவை தர்மம் செய்கிறார். ஸ்டேஷனுக்குள் நுழையும் போது இரயில் கட்டணம் பதின்மூன்றணா என்று எண்ணி, யோசனை செய்கிறார். பிச்சைக்காரனுக்குப் போட்ட இரண்டணாவிலிருந்து ஓரணா எடுத்துக் கொள்ளலாம் என்று யோசிக்கிறார். அதன்படி, ஓரணாவைப் போட்டு விட்டு இரண்டணா எடுக்கும்போது பிச்சைக்காரன் சாமி இதுதான் தர்மமா! குருடனை ஏமாற்றாதே! என்கிறார்.

அ) ஜெயகாந்தன் பிச்சைக்காரனுக்கு எவ்வளவு தர்மம் செய்கிறார்? **இரண்டணா**

ஆ) இரயில் கட்டணம் எவ்வளவு? **பதின்மூன்றணா**

இ) இவ்வுரைப் பத்தி ஜெயகாந்தனின் எக்கதையிலிருந்து எடுத்தாளப்பட்டள்ளது? **தர்க்கத்திற்கு அப்பால்**

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க (31)

9. வீட்டிற்கு வந்த உறவினர்களிடம் வாருங்கள், அமருங்கள், நலமா? நீர் அருந்துங்கள், குடும்பத்தினர் அனைவரும் நலமா? என சில வார்த்தைகளைக் கூறி முகமலர்ச்சியுடன் விருந்தினரை வரவேற்றேன். வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு அறுசுவை உணவைத் தயார் செய்து அவரை உணவருந்த வருமாறு அழைத்தேன். தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது மரபு. ஆகவே தமிழ்ப் பண்பாடு மறையாதிருக்க தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவிட்டேன்.

அ) வீட்டிற்கு வரும் விருந்தினரை எவ்வாறு அழைப்பாய்?

**வாருங்கள், அமருங்கள், நலமா? நீர் அருந்துங்கள், குடும்பத்தினர் அனைவரும் நலமா?**

ஆ) நா உணரும் சுவை எத்தனை? **அறுசுவை**

இ) தமிழ்ப் பண்பாடு மறையாதிருக்க எந்த இலையில் உணவு பறிமாறினர்? **தலைவாழை இலை**

10. சீன நாட்டில் காண்டன் நகருக்கு 500 கல் வடக்கே சூவன்செள என்னும் துறைமுக நகர் உள்ளது. வணிகத்திற்காகத் தமிழர்கள் அடிக்கடி சூவன்செள நகருக்குச் சென்றதால் சிவன் கோவில் ஒன்று அங்கே கட்டப்பட்டது. சீனப் பேரரசரான குப்லாய்கானின் ஆணையின் கீழ் சிவன் கோவில் கட்டப்பட்டது என்பதற்கான தமிழ்க் கல்வெட்டு அங்குள்ளது. இக்கோயிலில் சோழர் காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அ) சூவன்செள என்னும் துறைமுக நகர் எங்கு உள்ளது?

**சீன நாட்டில் காண்டன் நகருக்கு 500 கல் வடக்கே உள்ளது.**

ஆ) யாருடைய ஆணையின் கீழ் சிவன் கோவில் கட்டப்பட்டது? **சீனப் பேரரசரான குப்லாய்கான்**

இ) தமிழர்கள் எதற்காக சீனாவிற்குச் சென்றனர்? **வணிகத்திற்காக**

11. தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்க தமிழில் புதிய சொல்லாக்கம் தேவை. உலகின் பிற ஆய்வுச் சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி எழுதும் போது பிறமொழி அறியாத் தமிழனும் அச்சிந்தனைகள் குறித்து அறிந்து கொள்ள முடியும். மொழியே கலாச்சாரத்தின் வழிகாட்டி. ஆகவே மொழியின் மூலம் கலாச்சாரத்தை நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவை. மக்களிடையே பரந்த மனப்பான்மையையும், விரிவான ஆளுமையையும் நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவைப்படுகிறது. பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தால் தமிழின் இனிமை குறையும். அத்துடன் தமிழ்ச் சொற்கள் நாளடைவில் மறைந்து அயல்மொழிச் சொற்களே நிலைபெற்றிட வாய்ப்புகள் உள்ளன. இத்தகைய நிலை ஏற்படாதிருக்க தமிழில் புதிய சொல்லாக்கம் தேவை.

அ) தமிழின் பெருமையும், மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

**தமிழில் புதிய சொல்லாக்கம் தேவை.**

ஆ) கலாச்சாரத்தின் வழிகாட்டியாக அமைவது எது? **மொழியே கலாச்சாரத்தின் வழிகாட்டி.**

இ) தமிழின் இனிமை எப்போது குறையும்?

**பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தால் தமிழின் இனிமை குறையும்.**

12. பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழைபொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும் படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

அ) பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக. **மீண்டும் மீண்டும்**

ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது? **தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது.**

இ) பெய்த மழை - இத்தொடரை வினையெச்சத் தொடராக மாற்றுக. **பெய்து தீர்த்தது.**

ஈ) இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது? **பெருவெடிப்புக் கொள்கை**

13. ராகுல் சாங்கிருத்யாயன் 1942ஆம் ஆண்டு ஹிஜிராபாக் மத்திய சிறையில் இருந்தபோது வால்காவிலிருந்து கங்கை வரை என்ற நூலை இந்தி மொழியில் எழுதினார். 1949ஆம் ஆண்டு இந்நூலை கணமுத்தையா என்பவர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இந்நூல் ஒவ்வொரு தமிழரும் விரும்பிப் படிக்கும் நூலாக இருக்கிறது.

அ) வால்காவிலிருந்து கங்கை வரை என்ற நூல் யாரால் எழுதப்பட்டது? **ராகுல் சாங்கிருத்யாயன்**

ஆ) இந்நூலைத் தமிழில் யார், எப்போது மொழிபெயர்த்தார்? **கணமுத்தையா - 1949**

இ) இந்நூல் எம்மொழியில் எழுதப்பட்டது? எம்மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது?

**இந்தி மொழியில் எழுதப்பட்டு, தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.**

*உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க (31)*

14. *தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர்அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்கு தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மை விட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.*

*அ) போரிலும் அறநெறிகளைப் பின்பற்றியவர் யார்?* **தமிழர்**

*ஆ) போர் அறம் என்பது யாது?*

**போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.**

*இ) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.* **போர் அறம்**

*ஈ) ஆவூர் மூலங்கிழாரின் போர் அறம் யாது?*

**தம்மை விட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.**

*உ) யாருக்கெல்லாம் தீங்கு வராதவண்ணம் போர் புரிய வேண்டும்?*

**பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர்**

15. *பாவை குறித்த செய்திகள் சங்ககாலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. திருக்குறளில் மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவாசகத்திலும், பட்டினத்தார் பாடலிலும் தோற்பாவை கூத்து பற்றிய செய்திகளைக் காண முடிகிறது. ஊருராகச் சென்று நிகழ்த்துகிற கூட்டுக் குடும்பக் கலையாகத் தோற்பாவைக் கூத்து விளங்குகிறது. தோற்பாவைக் கூத்தானது கையுறைப்பாவைக் கூத்தாகவும், பொம்மலாட்டமாகவும் மாற்றம் பெற்றுள்ளது.*

*அ) மரப்பாவை பற்றி குறிப்பிடும் நூல் எது?* **திருக்குறள்**

*ஆ) பாவை குறித்த செய்திகள் தமிழ் இலக்கியங்களில் எப்போது வரை காணப்படுகிறது?*

**சங்ககாலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை**

*இ) தோற்பாவைக் கூத்தின் மாற்று வடிவங்கள் எவை?* **கையுறைப்பாவைக் கூத்து, பொம்மலாட்டம்.**

16. *ஜெர்மனியில் ஓராண்டில் பிற மொழிகளிலிருந்து 5000 நூல்கள் வரை மொழிபெயர்க்கப்படுகின்றன. புள்ளிவிவரப்படி அதிகமான தமிழ் நூல்கள் பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவ்வரிசையில் முதலிடம் ஆங்கிலம், இரண்டாமிடம் மலையாளம்; அதைத் தொடர்ந்து அடுத்தடுத்த நிலைகளில் முறையே தெலுங்கு, இந்தி, கன்னடம், வடமொழி, ரஷ்ய மொழி, வங்க மொழி, மராத்தி மொழி போன்றவை இடம் பெறுகின்றன. மொழி பெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரீகம், பழக்கவழக்கம் போன்றவற்றை அறிய முடிகிறது.*

*அ) தமிழ் நூல்களை மொழிபெயர்ப்பதில் முதலிரு இடங்களைப் பிடித்த மொழிகள் யாவை?*

**ஆங்கிலம், மலையாளம்**

*ஆ) மொழிபெயர்ப்பின் பயன்கள் யாவை?*

**மொழி பெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரீகம், பழக்கவழக்கம் போன்றவற்றை அறிய முடிகிறது.**

*இ) மேற்கண்ட பத்தி எதைக் குறிப்பிடுகின்றது?* **மொழிபெயர்ப்பு**

17. *நான் உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கின்றேன். தாவரங்களின் ஒளிச்சேர்க்கையில் உணவு உற்பத்திக்கு உதவுகின்றேன். விதைகளை எடுத்துச் சென்று பல இடங்களிலும் தூவுகின்றேன். பூவின், தேனின், கனியின், தாவரத்தின் உயிரினத்தின் மணத்தை என்னில் சுமந்து புவியின் உயிர் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகிறேன். இவை மட்டுமல்ல, உங்கள் நவீன தொலைத்தொடர்பின் மையமாகவும் நானே உள்ளேன்.*

*அ) உணவு உற்பத்திக்கு காற்று எவ்வாறு உதவுகிறது?* **ஒளிச்சேர்க்கைக்குப் பயன்படுகிறது.**

*ஆ) உயிர்ச் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க செய்யும் பணி யாது?*

**உயிரினத்தின் மணத்தை என்னில் சுமந்து புவியின் உயிர் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகிறேன்.**

*இ) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.* **உயிர்வளி**

18. *உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார். இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் நச்செள்ளையார். பேகன் மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்கிறார் பரணர்.*

*அ) அதியனின் சிறப்பு யாது?* **உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன்**

*ஆ) பரணர் குறிப்பிடும் வள்ளல் யார்?* **பேகன்**

*இ) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.* **கொடை அறம்**

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க (31)

19. பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்றே கரகாட்டம். கரகம் என்பது பித்தளை செம்பையோ, சிறிய குடத்தையோ தலையில் வைத்து தாளத்திற்கு ஏற்ப ஆடுவது கரகாட்டம். இந்த நடனம் கரகம், கும்பாட்டம் என்றும் அழைக்கப்படுகின்றது.

அ) கரகாட்டம் என்றால் என்ன?

**பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று கரகாட்டம்.**

ஆ) மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்றை எழுதுக. **கரகாட்டம்.**

இ) கரகாட்டத்தின் வேறு பெயர்களை எழுதுக. **கரகம், கும்பாட்டம்**

20. கிழக்கு என்பதற்குக் குணக்கு என்னும் பெயருமுண்டு. கிழக்கிலிருந்து வீசும் போது நான் கொண்டல் எனப்படுகிறேன். கடல் பகுதிக்கு மேலுள்ள மழைமேகங்களைச் சுமந்து வருவதால் மழைக்காற்று எனப்படுகிறேன்.

அ) கிழக்கு என்பதன் வேறு பெயர் என்ன? **குணக்கு**

ஆ) கொண்டல் காற்று எத்திசையிலிருந்து வீசுகிறது? **கிழக்கு**

இ) மழைக்காற்று என்று ஏன் அழைக்கப்படுகிறது?

**கடல் பகுதிக்கு மேலுள்ள மழைமேகங்களைச் சுமந்து வருவதால்**

21. எந்த ஒரு புதிய தொழில்நுட்பமும் ஒரே நாளில் வந்து விடுவதில்லை. 1980களில் ஒவ்வொருவருக்குமான தனிநபர் கணினிகளின் வளர்ச்சியும், இணையப் பயன்பாட்டின் பிறப்பும், இன்றைய மின்னனுப் புரட்சிக்குக் காரணமாயின. அவற்றுள் இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு.

அ) தனிநபர் கணினி வளர்ச்சியடைந்த ஆண்டு எது? 1980

ஆ) மின்னனுப் புரட்சிக்குரிய காரணங்கள் யாவை?

**தனிநபர் கணினிகளின் வளர்ச்சி, இணையப் பயன்பாட்டின் பிறப்பு.**

இ) இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய தொழில்நுட்பம் எது? **செயற்கை நுண்ணறிவு**

22. தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர். உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும், வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வர வேண்டும். ஏனென்றால் வலக்கையால் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் நாம்.

அ) உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்தவர்கள் யாவர்? **தமிழர்கள்**

ஆ) வாழை இலையின் விரிந்த பகுதி எப்பக்கத்தில் வர வேண்டும்? **உண்பவரின் வலப்பக்கம்**

இ) நாம் எவ்வாறு உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள்? **வலக்கையால் உணவு உண்பவர்கள்**

23. இந்திய விடுதலைக்குப் பிறகு மாநிலங்களை மொழிவாரியாகப் பிரித்தனர். அப்போது ஆந்திர தலைவர்கள் சித்தூர் மாவட்டம் முழுவதையும் புதிதாக அமையவிருக்கும் ஆந்திர மாநிலத்துடன் இணைக்க விரும்பினர். அச்சூழலில் வடக்கெல்லைத் தமிழ் மக்களை ஒருங்கிணைத்துத் தமிழுணர்வு கொள்ளச் செய்தவர் தமிழாசான் மங்கலங்கிழார். தமிழரசர் கழகம் சென்னையிலும், திருத்தணியிலும் தமிழர் மாநாடு நடத்தியது. சித்தூர், புத்தூர், திருத்தணி ஆகிய இடங்களிலும் வடக்கெல்லைப் போராட்டத்தைத் தொடங்கியது.

அ) இந்திய மாநிலங்கள் எப்பொழுது பிரிக்கப்பட்டது? **இந்திய விடுதலைக்குப் பிறகு**

ஆ) சித்தூர் மாவட்டத்தை எதனுடன் இணைக்க விரும்பினார்?

**புதிதாக அமையவிருக்கும் ஆந்திர மாநிலத்துடன் இணைக்க விரும்பினார்.**

இ) வடக்கெல்லைப் போராட்டம் தொடங்கிய இடங்கள் எவை? **சித்தூர், புத்தூர், திருத்தணி**

24. தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையது என்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிறநாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும், சிலவகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ, பலவாகவும், கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கோதுமையை எடுத்துக் கொண்டால் அதில் சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற் கோதுமை முதலிய சில வகைகளேயுண்டு.

அ) தமிழ்நாட்டின் பொருள் வளத்தை எவ்வாறு அறியலாம்? **விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.**

ஆ) கோதுமையின் வகைகள் சிலவற்றை எழுதுக. **சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற் கோதுமை**

இ) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக. **தமிழக விளைபொருள்கள்**

25. அறம் கூறம் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன. அறம் கூறும் அவையம் பற்றி அறம் அறக்கண்ட நெறிமான் அவையம் என்கிறது புறநானூறு. மதுரையிலிருந்து அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக்கோல் போல் நடுநிலை மிக்கது என்கிறது.

அ) அறம் கூறும் மன்றங்களின் சிறப்பு யாது? **அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன.**

ஆ) அறம் அவையம் பற்றிக் கூறும் இலக்கியங்கள் எவை? **புறநானூறு, மதுரைக்காஞ்சி.**

இ) உரைப்பத்திக்கு ஏற்ற தலைப்பினை எழுதுக. **அறம் கூறும் மன்றம்.**

சுருக்கமாக விடையளிக்க (32 முதல் 33)

இயல் 1

1. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

| பாடல் அடிகள் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் | முத்தினை அமிழ்ந்து எடுத்தல் |
| முச்சங்கம் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்கள் | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகள். |
| மெத்த வணிகலன் | ஐம்பெரும்காப்பியங்கள் | மிகுதியான வணிகக் கப்பல்கள் |
| சங்கத்தவர் காக்க | சங்கப்பலகையில் அமர்ந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தமை | நீரலையைத் தடுத்தி நிறுத்தி சங்கினைக் காத்தல் |

இயல் 2

2. மகாகவி பாரதியார் குறிப்பு வரைக.

பெயர் : மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

பெற்றோர் : சின்னசாமி - இலக்குமி அம்மையார்

பாராட்டுகள் : சிந்துக்குத் தந்தை, பாட்டுக்கொரு புலவன் பாரதி.

பணி : ஆசிரியர், இதழாசிரியர், சிறுகதை ஆசிரியர்

படைப்புகள் : கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாப்பா பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திச்சூடி

பணியாற்றிய இதழ்கள் : இந்தியா, சுதேசமித்திரன்.

3. காற்றே வா என்னும் கவிதையில் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

மகரந்தத்தூளைச் சுமந்து கொண்டு மனதை மயங்கச் செய்கின்ற வாசனையுடன் வா.

இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து வா.

உயிர்வளியைக் கொடு. ஆனால் பேய்போல் வீசி உயிராகிய நெருப்பை அணைத்து விடாதே.

நீடித்து நின்று நன்றாக வீசு, உன் சக்தி குறைத்து எம் உயிரை அழித்து விடாதே.

உம்மை நாம் பாடுகிறோம், புகழ்கிறோம், வழிபடுகிறோம் என்று பாரதி காற்றை பாடுகிறார்.

4. முல்லைப்பாட்டு பாடலில் இடம் பெற்றுள்ள முதல், கரு, உரிப்பொருள்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| முதற்பொருள் : | நிலம் | : காடும் காடு சார்ந்த இடமும் |
| | பெரும்பொழுது | : கார்காலம் (ஆவணி, புரட்டாசி) |
| | சிறுபொழுது | : மாலை |
| கருப்பொருள் | நீர் | : குறுஞ்சுனை நீர், காட்டாறு |
| | மரம் | : கொன்றை, காயா, குருந்தம் |
| | பூ | : முல்லை, பிடவம், தோன்றிப்பூ |
| உரிப்பொருள் : | இருத்தலும், இருத்தல் நிமித்தமும். | |

இயல் 3

5. காசிக்காண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கங்களை எழுதுக.

விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை எதிர்கொண்டு வியந்து உரைத்தல் வேண்டும்.

நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல் வேண்டும்.

முகமலர்ச்சியுடன் அவரை நோக்கி, வீட்டிற்குள் வருக என்று வரவேற்று, அவர் எதிரில் நின்று, அவர்முன் மனம் மகிழும்படி பேசுதல் வேண்டும்.

அவர் அருகிலேயே அமர்ந்து கொண்டு, அவர் விடை பெற்றுச் செல்லும் போது, வாயில் வரை பின்தொடர்ந்து செல்லல் வேண்டும்.

வந்தவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் வேண்டும்.

6. நெய்க்கண் வேவையொடு குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

இடம் : பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம் எனும் பாடல்.

பொருள் : பரிசில் பெற்ற கூத்தன் பெறப் போகும் கூத்தனை ஆற்றுப்படுத்துதல்

விளக்கம் : நன்னனின் ஊரில் பரிசு பெற்ற கூத்தன் பரிசு பெறப்போகும் கூத்தனிடம், அங்கே, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும், தினைச்சோற்றையும் உணவாகப் பெறுவீர் என்று ஆற்றுப்படுத்துகின்றான்.

<u>சுருக்கமாக விடையளிக்க (32 முதல் 33)</u>

7. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

<u>ஆற்றுப்படுத்துதல் பொருள் :</u>

ஆற்றுப்படுத்தும் கூத்தன் வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று கூறுகின்றோம், நீயும் அவ்வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக எனக் கூறுதல் ஆற்றுப்படுத்துதல்.

<u>பயணம் - சிற்றூரை அடைதல் :</u>

பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள். இரவில் சேர்ந்து தங்குங்கள். எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துக்களைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள். சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்கள், மூங்கில்கள் ஓசை எழுப்பும் மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.

<u>நன்னனின் கூத்தர்கள் :</u>

பகைவரைப் பெறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.

<u>இனிய சொற்கள் :</u>

நீங்கள் உரிமையுடன் நன்னன் ஊரார் வீட்டிற்குள் நுழையுங்கள். அவர்கள் உங்களுடன் உறவினர்கள் போலப் பழகி இனிய சொற்களைப் பேசுவார்கள்.

<u>உணவு :</u>

நெய்யில் வெந்த மாமிசம், தினை சோறு ஆகியவற்றை உணவாக அளிப்பர்.

மேற்கண்டவாறு கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தினான்.

8. மலைபடுகடாம், ஆற்றுப்படை இவற்றின் பெயர்க் காரணம் கூறுக.

மலைபடுகடாம் :

மலைக்கு யானையை உவமையாகக் கூறி அதன் ஓசையைக் கடாம் எனச் சிறப்பித்துள்ளதால் மலைபடுகடாம் எனப்பெயர் பெற்றது.

ஆற்றுப்படை :

ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து பரிசில் கிடைக்கும் இடத்திற்கான வழியினைக் காட்டுதல்.

9. பகைவர் இன்றியும் தானே கெடுபவன் யார்?

குற்றம் கண்டபோது இடித்துத் திருத்தும் பெரியோரின் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளாத மன்னன் தன்னைக் கெடுக்க பகைவர் இல்லை எனினும் தானே கெட்டழிவான்.

<u>இயல் 4</u>

10. மாளாத காதல் நோயாளன் போல என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

உடலில் ஏற்பட்ட புண் :

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார்.

நீங்காத துன்பம் :

வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! மருத்துவரைப் போன்று நீ எனக்கு துன்பத்தைத் தந்தாலும், உன் அடியவனாகிய நான் (நோயாளியைப் போல) உன் அருளையே எப்போதும் எதிர்பார்த்து வாழ்கிறேன்.

11. உயிர்கள் தோன்றி நிலைபெற்ற நிகழ்வை பரிபாடல் வழிநின்று கூறுக.

எதுவுமே இல்லாத பெருவெளியில், அண்டம் தோன்றக் காரணமான பரமாணு பேரொலியுடன் தோன்றியது. தொடர்ந்து பூத அணுக்கள் வளர வானம் தோன்றிப் பல ஊழிகள் ஆன பிறகு நெருப்புப் பந்துபோல் புவி உருவான ஊழி கழிந்தது.

தொடர்ந்து மழை பெய்த ஊழியும் வெள்ளத்தில் மூழ்கிய ஊழியும் கழிந்தன. அதனைத் தொடர்ந்து உயிர்கள் தோன்றும்படியான ஊழி வந்தது எனப் பரிபாடலில் கீரந்தையார் கூறியுள்ளார்.

12. மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும் உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும் - தொடர் பொருள் விளக்குக.

மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தில் மூழ்குதல் நடந்த இப்பெரிய உலகத்தில், உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது. அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலை பெறும்படியான ஊழிக்காலம் வந்தது.

<u>சுருக்கமாக விடையளிக்க (32 முதல் 33)</u>

13. பால்வீதிகள் கண்டுபிடிப்பில், எட்வின் ஹப்பிளுக்கு முன்னோடி மாணிக்கவாசகர் என்பதை நிருபிக்க.

எட்வின் ஹப்பிள் :

நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன. வெளியில் நின்று பார்த்தால், சிறு தூசி போல கோடிக்கணக்கில் பால்வீதிகள் தூசுகளாகத் தெரியும். இதனை 1924இல் அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் நிருபித்தார்.

மாணிக்கவாசகர் :

1300 ஆண்டுகளுக்கு முன் திருவாசகத்தில் மாணிக்கவாசகர் அண்டப்பகுதியில், <u>அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்</u> என்ற அடிகள் பால்வீதிகள் பற்றிய கருத்துகளைக் கூறுகின்றது. இல்லத்துள் நுழையும் கதிரவனின் ஒளிக் கற்றையில் தெரியும் தூசுத் துகள் போல பால்வீதிகள் நுண்மையாக இருக்கின்றன.

பால்வீதிகள் கண்டுபிடிப்பில், எட்வின் ஹப்பிளுக்கு முன்னோடி மணிக்கவாசகர் என்பதை அறிய முடிகிறது.

<u>இயல் 5</u>

14. செய்குதம்பி பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

அருளினைப் பெருக்கிட கல்வியைக் கற்போம்! அறிவினைச் சீராக்கிட கல்வியைக் கற்போம்!
மயக்கம் அகன்றிட கல்வியைக் கற்போம்! அறிவு தெளிந்திட கல்வியைக் கற்போம்!
உயிருக்குத் துணையாய் வரும் கல்வியைக் கற்போம்!
வாழ்வில் இன்பம் சேர்க்கும் கல்வியைக் கற்போம்!
கற்போம் கற்போம் கல்வியை என்றும் போற்றிக் கற்போம்!

15. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்குக.

குசேல பாண்டியன் தமிழ்ப் புலமை வாய்ந்தவன்.
அவன் இடைக்காடனார் கவி பாட, பாடலைப் பொருட்படுத்தாமல் அவமதித்தான்.
இடைக்காடனார் கடம்பவனத்து இறைவனிடம் முறையிட, இறைவன் கடம்பவனத்தை விட்டு வெளியேறி வைகை ஆற்றில் அமர்ந்தார்.
இதை அறிந்த மன்னர் தன் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டினார்.
இறைவன் இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றமே தவிர வேறு குற்றம் இல்லை என்றார்.
பிறகு பாண்டியன் மாளிகையை அலங்கரித்து, புலவர்கள் சூழ இடைக்காடனார் மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் அமர்த்தி, புலவர்களே! நான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று பணிந்து வணங்கினான். புலவர்களும் அவனை மன்னித்தனர்.

<u>இயல் 6</u>

16. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக. இறுக்கி முடிச்சிட்டால் - கையாலே பூவெடுத்தா

| நவீன கவிதை கருத்து | நாட்டுப்புறப் பாடல் கருத்து |
|---|---|
| 1. பூவை இறுக்கி முடிச்சிட்டால் காம்பின் கழுத்து முறிவது போல பெண்களின் கழுத்து முறியும். | 1. மாரியாகிய பெண் தெய்வத்திற்கு கையாலே பூப்பறித்தால் காம்பு அழுகிவிடும் என்று கையாலே பூப்பறிக்கவில்லை. |
| 2. தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவுவது போல பெண்ணின் தளர்ந்த வாழ்வும் நழுவும். | 2. விரலால் பூப்பறித்தால் பயனற்றதாய் வெம்பி விடும் என்று விரலால் பூப்பறிக்கவில்லை. |
| 3. வாசலிலே மரணம் வந்து நின்றாலும் வருந்தாமல் சிரிக்கும் பூவைப் போல பெண்ணும் வருத்தங்கள் வந்தபோது அவற்றைச் சுமையாக கருதாமல் சிரிக்கின்றாள். இந்தப்பெண் பூவை தொடுப்பது எப்படி? | 3. மேற்கண்ட காரணத்தால் மாரியாகிய பெண்தெய்வத்திற்கு தங்கத் துரட்டி கொண்டு பூப்பறித்தார். |

<u>சுருக்கமாக விடையளிக்க (32 முதல் 33)</u>

17. *வைத்தியநாதபுரி முருகன், அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.*

கிண்கிணி : கால்களில் அணிந்திருந்த சிறு செம்பொண் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடின.

அரைஞாண் மணி : இடையில் அரைஞாண் மணியோடு ஒளி வீசுகின்ற அரை வட்டங்கள் ஆடின.

சிறு வயிறு : பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறு வயிறு சரிந்தாடியது.

நெற்றிச்சுட்டி : பட்டம் கட்டிய நெற்றியில் பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பந்தாடியது.

குண்டலங்கள் : கம்பிகளால் உருவான குண்டலங்களும், காதின் குழைகளும் அசைந்தாடின.

உச்சிக் கொண்டை : உச்சிக் கொண்டை அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளியுள்ள முத்துக்களோடு ஆடியது.

18. *மருதம் எவ்வாறு வீற்றிருக்கிறது என்று கம்பர் வருணனை செய்கிறார்? விளக்குக.*

குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற ஆடின.

விரிதாமரை மலர்கள் விளக்குகள் ஏற்றியது போல தோன்றின.

சூழும் மேகங்கள் மத்தள ஒலியாய் எழுந்தன.

மலரும் குவளை மலர்கள் கண்கள் விழித்துப் பார்ப்பது போல காட்சியளித்தன.

நீர்நிலைகள் எழுப்பும் அலைகள் திரைச்சீலைகளாய் விரிந்தன.

மகர யாழின் தேன் ஒத்த இசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட மருதம் வீற்றிருந்தது.

19. *வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருத்துவதைக் குறள்வழி விளக்குக.*

தொழில் செய்வதற்குத் தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து அரிய செயல்களைச் செய்தல் வேண்டும்.

மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சி முறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், விடாமுயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைய வேண்டும்.

இயற்கையான நுண்ணறிவு, நூலறிவு இவற்றை உடையவர்கள் முன், எந்த சூழ்ச்சியும் நிற்க இயலாது.

ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல்வழியாக அறிந்திருப்பினும் உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

20. *பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும், சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?*

பகைவரின் வலிமை :

சுற்றத்தாரிடம் ஒருவர் அன்பு இல்லாமலும், பொருந்திய துணை இல்லாமலும், வலிமை இல்லாமலும் இருந்தால் அவரால் பகைவரின் வலிமையை எதிர்கொள்ள முடியாது.

பகைக்கு ஆட்படல் :

மனதில் துணிவு இல்லாதவராய், அறிய வேண்டியவற்றை அறியாதவராய், பொருந்தும் பண்பு இல்லாதவராய், பிறருக்குக் கொடுத்து உதவாதவராய் இருந்தால் எளிதில் பகைக்கு ஆட்பட நேரும்.

21. *பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.*

கூரான ஆயுதம் : உழைத்ததால் கிடைத்த ஊதியம்.

காரணம் : அதுவே அவனுடைய பகைவனை வெல்லும் கூரான ஆயுதம்.

<u>*இயல் 7*</u>

22. *முதல்மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவி பாடுகிறார்?*

முதல் மழை விழுந்தவுடன் நிலம் ஈரத்தால் பண்பட்டது.

விரைந்து சென்று பொன் ஏரிலே காளைகளைப் பூட்டி, நிலத்தை உழுதனர்.

ஊக்கத்துடனும், வலிமையுடனும் உழைத்தனர். நாற்று நட்டனர்.

மேலும் மழை பொழிய நிலம் குளிர்ந்தது. நாற்றுகள் நிமிர்ந்து வளர்ந்தன. கிழக்கும் வெளுத்தது. கவலையும் மறைந்தது.

23. *சோழ நாட்டில் மையுடையன, மருளுடையன யாவை?*

இராசராச சோழன் நாட்டில் நீண்ட மலையை இருள் சூழ்ந்து இருக்கின்றன. ஆனால் நாட்டில் வறுமை இருள் இல்லை.

இளமான்களின் கண்கள் மருளுகின்றன. ஆனால் மக்களின் கண்களில் மருட்சி இல்லை.

<u>சுருக்கமாக விடையளிக்க (32 முதல் 33)</u>

24. சிலப்பதிகாரம் - குறிப்பு வரைக.

சிலப்பதிகாரம் - சிலம்பு + அதிகாரம்

ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று. முதன்மைக் காப்பியம்

கண்ணகியின் கால் சிலம்பால் உருவானக் கதையைக் கூறுவது.

மூன்று காண்டம் - முப்பது காதை

புகார்காண்டம் - 10 காதைகள்; மதுரைக் காண்டம் - 13 காதைகள்; வஞ்சிக் காண்டம் - 7 காதைகள்

மூன்று உண்மைகள் : 1. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.

2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர். 3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

வேறு பெயர்கள் : முத்தமிழ் காப்பியம், குடிமக்கள் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், ஒற்றுமைக் காப்பியம்

25. பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும் - - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

இடம் சுட்டல் : சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தில் இந்திர விழா, ஊரெடுத்த காதையில் மருவூர்ப்பாக்கத் தெருக்களில் நடைபெற்ற வணிகம் பற்றிக் கூறுமிடத்தில் இவ்வரிகள் இடம் பெறுகின்றன.

பொருள் விளக்கம் : மருவூர்ப்பாக்கத் தெருக்களில் பலப்பல பண்டங்களின் விற்பனை நடைபெறுகின்றது. எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலத்தெருக்களும் உள்ளன.

26. சிலப்பதிகாரம் குறிப்பிடும் இசை பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

குழலிலும் யாழிலும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகளைக் (ஸ, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு சுரங்களை) குற்றமில்லாமல் இசைத்துச் சிறந்த திறமையைக் காட்டும் பெரும்பாணர்கள் இருப்பிடங்களும் உள்ளன.

<u>இயல் 8</u>

27. உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

இடம் சுட்டல் :

காலக்கணிதம் என்னும் கண்ணதாசனின் கவிதைத் தொகுப்பில், கவிஞன் தன் இயல்பைப் பற்றிக் கூறுமிடத்தில் இவ்வரிகள் இடம் பெறுகின்றன.

பொருள் விளக்கம் :

ஒருவர் தன் வாயால் புகழ்வதும் இகழ்வதும் நம் உடம்பின் மீது வந்து சேராது.

<u>இயல் 9</u>

28. சித்தாளின் மனச் சுமைகள் செங்கற்கள் அறியாது - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

இடம் :

சித்தாளு என்னும் தலைப்பில் நாகூர்ரூமி எழுதியுள்ள கவிதையில் இடம் பெற்றுள்ளது.

பொருள் விளக்கம் :

அடுத்த வேளை உணவுக்காக சுமைகளை இறக்காமல் சுமக்கும் இவர்களின் மரணம் கூட சிறிதளவே சலனத்தை ஏற்படுத்தும். பல இன்னல்களின் நடுவே தன் வாழ்வை தொலைக்காதிருக்க சுமை சுமக்கும் சித்தாள்களின் மனச்சுமையை செங்கற்களும், கற்களும் அறியாது.

29. அலுக்காமல் இவள் சுமக்கும் கற்களெல்லாம்
அடுத்தவேளை உணவுக்காக - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

இடம் :

சித்தாளு என்னும் தலைப்பில் நாகூர்ரூமி எழுதியுள்ள கவிதையில் இடம் பெற்றுள்ளது.

பொருள் விளக்கம் :

அடுக்குமாடி வீடாகவோ அல்லது அலுவலகமாகவோ, எதுவாக இருப்பினும் அடுத்தவர் கட்டும் கட்டிடத்தின் கனவுக்கு அலுப்பில்லாமல் கற்களைச் சுமந்து உழைப்பது எல்லாம், சித்தாளின் அடுத்த வேளை உணவுக்காகத் தான்.

30. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன்.

அறிவுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத உடலின் தன்மையை அறியேன்.

உடலுக்குத் தேவையான உணவைத் தேடிக் கொணரும் வழிவகை அறிவேன்.

காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன்.

<u>அடிபிறழாமல் எழுதுக. (34)</u>

<u>அன்னை மொழியே</u>

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

<u>முல்லைப்பாட்டு</u>

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்

<u>காசிக்காண்டம்</u>

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
  வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
  எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
  போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
  ஒழுக்கமும் வழிபடும் பண்பே

<u>பெருமாள் திருமொழி</u>

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

<u>நீதி வெண்பா</u>

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

<u>திருவிளையாடற்புராணம்</u>

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

<u>அடிபிறழாமல் எழுதுக. (34)</u>

<u>முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்</u>

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
  திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
  பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
  கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
  ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை

<u>கம்பராமாயணம்</u>

தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க,
கொண்டல்கள் முழவினேங்க குவளைகண் விழித்து நோக்க,
தெண்டிரை யெழினி காட்ட தேம்பிழி மகரயாழின்
வண்டுகளி னிதுபாட மருதம்வீற்றி ருக்கும்மாதோ.

<u>கம்பராமாயணம்</u>

வெய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்;
மையோ? மரகதமோ? மறிகடலோ? மழை முகிலோ?
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்.

<u>சிலப்பதிகாரம்</u>

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;

<u>காலக் கணிதம்</u>

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

<u>தேம்பாவணி</u>

நவமணி வடக்க யில்போல்
  நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
  தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
  துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
  ஒலித்து அழுவ போன்றே.

சுருக்கமாக விடையளிக்க (35 முதல் 37)

அலகிட்டு வாய்பாடு தருக

1. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | பொரு/ளல் | நிரை நேர் | புளிமா |
| 2. | லவ/ரைப் | நிரை நேர் | புளிமா |
| 3. | பொரு/ளா/கச் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 4. | செய்/யும் | நேர் நேர் | தேமா |
| 5. | பொரு/ளல்/ல | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 6. | தில்/லை | நேர் நேர் | தேமா |
| 7. | பொருள் | நிரை | மலர் |

இக்குறட்பா மலர் என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

2. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | அரி/யவற்/றுள் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| 2. | எல்/லாம் | நேர் நேர் | தேமா |
| 3. | அரி/தே | நிரை நேர் | புளிமா |
| 4. | பெரி/யா/ரைப் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 5. | பே/ணித் | நேர் நேர் | தேமா |
| 6. | தம/ராக் | நிரை நேர் | புளிமா |
| 7. | கொளல் | நிரை | மலர் |

இக்குறட்பா மலர் என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

3. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | நச்/சப் | நேர் நேர் | தேமா |
| 2. | படா/தவன் | நிரை நிரை | கருவிளம் |
| 3. | செல்/வம் | நேர் நேர் | தேமா |
| 4. | நடு/ஊ/ருள் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 5. | நச்/சு | நேர் நேர் | தேமா |
| 6. | மரம்/பழுத் | நிரை நிரை | கருவிளம் |
| 7. | தற்/று | நேர் நேர் (நேர்பு) | காசு |

இக்குறட்பா காசு என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

4. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | எப்/பொருள் | நேர் நிரை | கூவிளம் |
| 2. | எத்/தன்/மைத் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 3. | தா/யினும் | நேர் நிரை | கூவிளம் |
| 4. | அப்/பொருள் | நேர் நிரை | கூவிளம் |
| 5. | மெய்ப்/பொருள் | நேர் நிரை | கூவிளம் |
| 6. | காண்/ப | நேர் நேர் | தேமா |
| 7. | தறி/வு | நிரை நேர் ( நிரைபு ) | பிறப்பு |

இக்குறட்பா பிறப்பு என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

5. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | பண்/என்/னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 2. | பா/டற் | நேர் நேர் | தேமா |
| 3. | கியை/பின்/றேல் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 4. | கண்/என்/னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 5. | கண்/ணோட்/டம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6. | இல்/லா/த | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 7. | கண் | நேர் | நாள் |

இக்குறட்பா நாள் என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

சுருக்கமாக விடையளிக்க (35 முதல் 37)

அலகிட்டு வாய்பாடு தருக

6. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | ஊ/ழை/யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 2. | உப்/பக்/கம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 3. | காண்/பர் | நேர் நேர் | தேமா |
| 4. | உலை/வின்/றித் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 5. | தா/ழா/து | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6. | உஞற்/று | நிரை நேர் | புளிமா |
| 7. | பவர் | நிரை | மலர் |

இக்குறட்பா மலர் என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

7. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாய்ச் சுற்றும் உலகு

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | குற்/றம் | நேர் நேர் | தேமா |
| 2. | இல/னாய்க் | நிரை நேர் | புளிமா |
| 3. | குடி/செய்/து | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 4. | வாழ்/வா/னைச் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 5. | சுற்/றமாய்ச் | நேர் நிரை | கூவிளம் |
| 6. | சுற்/றும் | நேர் நேர் | தேமா |
| 7. | உல/கு | நிரை நேர் (நிரைபு) | பிறப்பு |

இக்குறட்பா பிறப்பு என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

8. சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | சொல்/லப் | நேர் நேர் | தேமா |
| 2. | பயன்/படு/வர் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 3. | சான்/றோர் | நேர் நேர் | தேமா |
| 4. | கரும்/புபோல் | நிரை நிரை | கருவிளம் |
| 5. | கொல்/லப் | நேர் நேர் | தேமா |
| 6. | பயன்/படும் | நிரை நிரை | கருவிளம் |
| 7. | கீழ் | நேர் | நாள் |

இக்குறட்பா நாள் என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

9. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | தா/ளாண்/மை | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 2. | என்/னும் | நேர் நேர் | தேமா |
| 3. | தகை/மைக்/கண் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 4. | தங்/கிற்/றே | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 5. | வே/ளாண்/மை | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6. | என்/னும் | நேர் நேர் | தேமா |
| 7. | செருக்/கு | நிரை நேர் (நிரைபு) | பிறப்பு |

இக்குறட்பா பிறப்பு என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

10. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | கரு/வியும் | நிரை நிரை | கருவிளம் |
| 2. | கா/லமும் | நேர் நிரை | கூவிளம் |
| 3. | செய்/கை/யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 4. | செய்/யும் | நேர் நேர் | தேமா |
| 5. | அரு/வினை/யும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| 6. | மாண்/ட | நேர் நேர் | தேமா |
| 7. | தமைச்/சு | நிரை நேர் (நிரைபு) | பிறப்பு |

இக்குறட்பா பிறப்பு என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

சுருக்கமாக விடையளிக்க (35 முதல் 37)

அலகிட்டு வாய்பாடு தருக

11. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | இன்/மை/யின் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 2. | இன்/னா/த | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 3. | தியா/தெனின் | நிரை நிரை | கருவிளம் |
| 4. | இன்/மை/யின் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 5. | இன்/மை/யே | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6. | இன்/னா | நேர் நேர் | தேமா |
| 7. | தது | நிரை | மலர் |

இக்குறட்பா மலர் என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

12. அழுக்கா றுடையான்கண் ஆக்கம் போன்றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | அழுக்/கா | நிரை நேர் | புளிமா |
| 2. | றுடை/யான்/கண் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 3. | ஆக்/கம் | நேர் நேர் | தேமா |
| 4. | போன்/றில்/லை | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 5. | ஒழுக்/கம் | நிரை நேர் | புளிமா |
| 6. | இலான்/கண் | நிரை நேர் | புளிமா |
| 7. | உயர்/வு | நிரை நேர் (நிரைபு) | பிறப்பு |

இக்குறட்பா பிறப்பு என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

13. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | உல/கத்/தோ | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 2. | டொட்/ட | நேர் நேர் | தேமா |
| 3. | ஒழு/கல் | நிரை நேர் | புளிமா |
| 4. | பல/கற்/றும் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 5. | கல்/லார் | நேர் நேர் | தேமா |
| 6. | அறி/விலா | நிரை நிரை | கருவிளம் |
| 7. | தார் | நேர் | நாள் |

இக்குறட்பா நாள் என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

14. பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | பெயக்/கண்/டும் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 2. | நஞ்/சுண் | நேர் நேர் | தேமா |
| 3. | டமை/வர் | நிரை நேர் | புளிமா |
| 4. | நயத்/தக்/க | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 5. | நா/கரி/கம் | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| 6. | வேண்/டு | நேர் நேர் | தேமா |
| 7. | பவர் | நிரை | மலர் |

இக்குறட்பா மலர் என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

15. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | முயற்/சி | நிரை நேர் | புளிமா |
| 2. | திரு/வினை | நிரை நிரை | கருவிளம் |
| 3. | ஆக்/கும் | நேர் நேர் | தேமா |
| 4. | முயற்/றின்/மை | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 5. | இன்/மை | நேர் நேர் | தேமா |
| 6. | புகுத்/தி | நிரை நேர் | புளிமா |
| 7. | விடும் | நிரை | மலர் |

இக்குறட்பா மலர் என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

சுருக்கமாக விடையளிக்க (35 முதல் 37)

அலகிட்டு வாய்பாடு தருக

16. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | பல்/லார் | நேர் நேர் | தேமா |
| 2. | பகை/கொள/லின் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| 3. | பத்/தடுத்/த | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| 4. | தீ/மைத்/தே | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 5. | நல்/லார் | நேர் நேர் | தேமா |
| 6. | தொடர்/கை | நிரை நேர் | புளிமா |
| 7. | விடல் | நிரை | மலர் |

இக்குறட்பா மலர் என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

17. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | கொடுப்/பதூ/உம் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| 2. | துய்ப்/பதூ/உம் | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| 3. | இல்/லார்க் | நேர் நேர் | தேமா |
| 4. | கடுக்/கிய | நிரை நிரை | கருவிளம் |
| 5. | கோ/டிஉண் | நேர் நிரை | கூவிளம் |
| 6. | டா/யினும் | நேர் நிரை | கூவிளம் |
| 7. | இல் | நேர் | நாள் |

இக்குறட்பா நாள் என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

18. கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | கரப்/பிடும்/பை | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| 2. | இல்/லா/ரைக் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 3. | கா/ணின் | நேர் நேர் | தேமா |
| 4. | நிரப்/பிடும்/பை | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| 5. | எல்/லாம் | நேர் நேர் | தேமா |
| 6. | ஒருங்/கு | நிரை நேர் | புளிமா |
| 7. | கெடும் | நிரை | மலர் |

இக்குறட்பா மலர் என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

19. அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
உன்பரியும் ஏதிலான் துப்பு

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | அன்/பிலன் | நேர் நிரை | கூவிளம் |
| 2. | ஆன்/ற | நேர் நேர் | தேமா |
| 3. | துணை/யிலன் | நிரை நிரை | கருவிளம் |
| 4. | தான்/துவ்/வான் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 5. | உன்/பரி/யும் | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| 6. | ஏ/திலான் | நேர் நிரை | கூவிளம் |
| 7. | துப்/பு | நேர் நேர் (நேர்பு) | காசு |

இக்குறட்பா காசு என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

20. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | வே/லொடு | நேர் நிரை | கூவிளம் |
| 2. | நின்/றான் | நேர் நேர் | தேமா |
| 3. | இடு/வென் | நிரை நேர் | புளிமா |
| 4. | றது/போ/லும் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 5. | கோ/லொடு | நேர் நிரை | கூவிளம் |
| 6. | நின்/றான் | நேர் நேர் | தேமா |
| 7. | இர/வு | நிரை நேர் (நிரைபு) | பிறப்பு |

இக்குறட்பா பிறப்பு என்னும் வாய்பாடு கொண்டு முடிந்துள்ளது.

சுருக்கமாக விடையளிக்க (35 முதல் 37)

இயல் 1

1. கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, கோறல் - இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.

**கட்டு, சொட்டு : முதனிலைத் தொழிற்பெயர்கள்**

**வழிபாடு, கோறல் : விகுதி பெற்ற தொழிற்பெயர்கள்**

**கேடு : முதனிலை திரிந்த தொழிற்பெயர்**

இயல் 2

2. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

இப்பத்தியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

**மல்லிகைப்பூ : இருபெயரொட்டுப் பண்புத்தொகை**
**மல்லிகை என்னும் பூ ( மல்லிகை - சிறப்புப் பெயர், பூ -பொதுப்பெயர் )**

**பூங்கொடி : உவமைத் தொகை பூ போன்ற கொடி**

**தண்ணீர்த் தொட்டியில் : இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை**
**தண்ணீரை ஊற்றும் தொட்டி**

**குடிநீர் நிரப்பினாள் : இரண்டாம் வேற்றுமைத் தொகை**
**குடிநீரை நிரப்பினாள்**

3. தொகைநிலைத் தொடர்களைச் சான்றுடன் கூறுக.

**வேற்றுமைத் தொகை : மதுரை சென்றார்**
**வினைத்தொகை : விரிகதிர்**
**பண்புத்தொகை : செந்தமிழ்**
**உவமைத்தொகை : பாதமலர்**
**உம்மைத் தொகை : தாய்சேய்**
**அன்மொழித் தொகை : பெரிய மீசை சிரித்தார்**

இயல் 3

4. அடிக்கோடிட்ட சொற்களுக்கான தொடர் வகைகளை எழுதுக.

அ) <u>பாம்பு பாம்பு</u> என அலறி ஓடினர். - **அடுக்குத்தொடர்**
ஆ) <u>படித்த மாணவன்</u> தேர்ச்சி பெற்றான். - **பெயரெச்சத்தொடர்**
இ) அரிய <u>வினாக்களின் தொகுப்பு</u> இது. - **ஐந்தாம் வேற்றுமை தொகாநிலைத் தொடர்**

5. கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே!
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடிஆடி ஓய்ந்துறங்கு! - இத்தாலாட்டு பாடலில் அமைந்துள்ள தொகாநிலைத் தொடர் வகைகளை எழுதுக.

**கண்ணே கண்ணுறங்கு - விளித்தொடர்**
**காலையில் நீயெழும்பு - ஐந்தாம் வேற்றுமை தொகாநிலைத் தொடர்**
**மாமழை பெய்கையிலே - உரிச்சொல் தொடர்**
**மாம்பூவே கண்ணுறங்கு - விளித்தொடர்**
**பாடினேன் தாலாட்டு - வினைமுற்றுத் தொடர்**
**ஆடிஆடி ஓய்ந்துறங்கு - அடுக்குத் தொடர்**

6. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு

இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக. (அல்லது) உவமை அணியைக் கூறி விளக்குக.

**அணி : உவமையணி**

**அணி இலக்கணம் : உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் அமையும். இடையில் வரும் உவமஉருபு வெளிப்படையாக வரும்.**

**விளக்கம் : உவமை : வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்தல்.**
**உவமேயம் : ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு மன்னன் வரி விதித்தல்.**
**உவமஉருபு : போல**

**பொருத்தம் : வழிப்பறி செய்பவன் வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வான். அதுபோல ஓர் அரசன் தன் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு மக்களுக்கு அதிகமான வரியை விதிக்கிறான்.**

<u>சுருக்கமாக விடையளிக்க (35 முதல் 37)</u>

7. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண் - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

அணி : எடுத்துக்காட்டு உவமையணி

அணி இலக்கணம் : உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உவமஉருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமையணி.

விளக்கம் : உவமை : பாடலோடு பொருந்தவில்லை எனில் இசையால் பயனில்லை.
உவமேயம் : இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் பயன் இல்லை.
உவமஉருபு : போல (மறைந்து வந்துள்ளது)

பொருத்தம் : பாடலோடு பொருந்தவில்லை எனில் இசையால் பயன் இல்லை. அதுபோலவே, இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் பயன் இல்லை.

8. ஏகதேச உருவக அணியைக் கூறி விளக்குக.

அணி இலக்கணம் : கவிஞர் தாம் எடுத்துக்கொண்ட இரு பொருள்களில் ஒன்றனை மட்டும் உருவகப்படுத்தி விட்டு அதனோடு தொடர்புடைய மற்றொன்றனை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணியாகும்.

எடுத்துக்காட்டு : தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு

விளக்கம் : விடாமுயற்சி என்ற உயர்பண்பு கொண்டவர்களால் தான் பிறருக்கு உதவுதல் என்ற உயர்ந்த நிலையை அடைய முடியும் என்பது பொருள். இதில் விடாமுயற்சியை உயர்பண்பு என உருவகப்படுத்திய கவிஞர் உதவும் தன்மையை உயர்ந்தநிலை என உருவகப்படுத்தாமல் விட்டு விட்டார்.

<u>இயல் 4</u>

9. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்ற மாடு கத்தியது; தந்தை என்னிடம், இலச்சுமி கூப்பிடுகிறாள் போய் பார் என்றார். இதோ சென்றுவிட்டேன் என்றவாறே அங்கு சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, என்னடா விளையாட வேண்டுமா? என்று கேட்டு அவனை அவிழ்த்து விட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம் நீயும் இவனும் விளையாடுங்கள் என்று கூறினேன். அவிழ்த்து விடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்து நீரைக் குடித்தாள். - இப்பத்தியிலுள்ள வழுக்களைத் திருத்தியும், வழுவமைதிகளைப் பட்டியலிட்டும் எழுதுக.

<u>திருத்தப்பட்ட வழுக்கள் :</u>

நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை <u>நிறைத்தது</u> .
வாழைத் <u>தோட்டத்தில் கன்றுடன்</u> நின்ற மாடு கத்தியது.
துள்ளிய <u>கன்றைத்</u> தடவிக்கொடுத்து...

| <u>வழுவமைதித் தொடர்கள்</u> | <u>வழுவமைதி வகை</u> |
|---|---|
| 1. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது.(நிறைத்தது) | கால வழுவமைதி |
| 2. இலச்சுமி கூப்பிடுகிறாள் (மாட்டைக் குறிக்கிறது) | திணை வழுவமைதி |
| 3. இதோ சென்றுவிட்டேன் (சென்று விடுகிறேன்) | கால வழுவமைதி |
| 4. என்னடா விளையாட வேண்டுமா? (மாட்டைக் குறிக்கிறது) | திணை வழுவமைதி |
| 5. அவனை அவிழ்த்து விட்டேன் ( பசு மாட்டைக் குறிக்கிறது) | பால் வழுவமைதி |
| 6. இலச்சுமி தொட்டியிலிருந்து நீரைக் குடித்தாள்.(மாட்டைக் குறிக்கிறது) | திணை வழு |

10. வழுவமைதி என்றால் என்ன? அதன் வகைகளில் மூன்றினைச் சான்றுடன் விளக்குக.

இலக்கண முறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக் கொள்ளப்படுவது வழுவமைதி.

திணை வழுவமைதி : என் அம்மை வந்தாள் என மாட்டைக் கூறுவது.
உவப்பின் காரணமாக அஃறிணை உயர்திணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பால் வழுவமைதி : வாடா ராசா, வாடா கண்ணா, என்று தன் மகளை அழைப்பது.
உவப்பின் காரணமாக பெண்பால் ஆண்பாலாகக் கொள்ளப்பட்டது.

கால வழுவமைதி : குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார் (வருவார் என்பதே சரி)
உறுதித்தன்மை காரணமாக கால வழுவமைதியாக ஏற்கிறோம்.

சுருக்கமாக விடையளிக்க (35 முதல் 37)

இயல் 5

11. வினாக்களின் வகைகளை விவரி

வினா ஆறு வகைப்படும்.

அவை அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா

அறிவினா : தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்ள வினவும் வினா.
எ.கா : சீறாப்புராணத்தை இயற்றியவர் யார் என ஆசிரியரிடம் மாணவன் கேட்பது.

அறியாவினா : தான் அறிந்த ஒன்றை அறியாதவரிடம் சோதிப்பதற்காக வினவும் வினா.
எ.கா : சீறாப்புராணத்தை இயற்றியவர் யார் என மாணவனிடம் ஆசிரியர் கேட்பது.

ஐயவினா : தமது ஐயத்தைப் போக்கிக் கொள்ள வினவும் வினா.
எ.கா : தொலைவில் வருவது எருதோ? பசுவோ?

கொளல் வினா : ஒரு பொருளை பெறுவதற்காக வினவும் வினா.
எ.கா : கடைக்காரரிடம் பருப்பு உள்ளதா? என வினவுதல்.

கொடை வினா : ஒரு பொருளை தருவதற்காக வினவும் வினா.
எ.கா : அரசன் புலவரைப் பார்த்து, புலவரிடம் பொருள் இல்லையோ? என கேட்பது.

ஏவல் வினா : ஒரு செயலைச் செய்யுமாறு கேட்க வினவும் வினா.
எ.கா : நீ கடைக்குச் செல்கிறாயா? என மகனிடம் தாயார் கேட்பது.

12. கொண்டு கூட்டுப் பொருள்கோளை விளக்குக.

விடை பக்கம் எண் : 34 வினா எண் : 67 இல் காண்க.

13. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் - இக்குறளில் பயின்று வரும் பொருள்கோளை விளக்குக.

பொருள்கோள் : எதிர் நிரல் நிறைப் பொருள்கோள்

விளக்கம் : செய்யுளில் எழுவாய்களை வரிசைப்படுத்தி, அவை ஏற்கும் பயனிலைகளை எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ளுதல் எதிர் நிரல் நிறைப் பொருள்கோள் ஆகும்.

பாடல் பொருள் : மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமிடையே என்ன வேற்றுமையோ அதே அளவு வேற்றுமை கற்றவருக்கும், கல்லாதவருக்கும் இடையே உண்டு.

விளக்கம் : இக்குறளில் விலங்கு, மக்கள் என்ற எழுவாய்களை முதல் அடியில் வரிசைப்பட நிறுத்தி விட்டு கற்றார், கல்லாதவர் என்ற பயனிலைகளை அடுத்த வரிசையில் நிறுத்தி விட்டு பொருள் கொள்ளும் போது கற்றார் மக்கள் என்றும், கல்லாதார் விலங்கு என்றும் பயனிலைகளை எதிர் எதிராக மாற்றிப் பொருள் கொள்ளும் முறைக்கு எதிர் நிரல் நிறைப் பொருள்கோள் என்று பெயர்.

14. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வரும் பொருள்கோளை விளக்குக.

பொருள்கோள் : முறைநிரல் நிறைப் பொருள்கோள்

விளக்கம் : செய்யுளில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொற்களை அல்லது வினைச் சொற்களை வரிசையாக நிறுத்தி அவை ஏற்கும் பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளுதல் முறைநிரல் நிறைப் பொருள்கோள் ஆகும்.

பாடல் பொருள் : இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக விளங்குமானால் அந்த வாழ்க்கை பண்பும் பயனும் உடையதாக அமையும்.

விளக்கம் : இக்குறளில் பண்பு, பயன் இரு சொற்களை வரிசைப்படுத்தி அவற்றின் விளைவுகளாக அன்பு அறன் என்று வரிசைப்படுத்தியுள்ளார். இல்வாழ்க்கையின் பண்பு, அன்பு என்றும், அதன் பயன் அறன் என்றும் பொருள்கொள்ள வேண்டும்.

அன்புக்கு பண்பும், அறத்துக்கு பயனும் என்றும் நிரல் நிறையாக நிறுத்திப் பொருள் கொள்வதால் முறைநிரல் நிறைப் பொருள்கோள் ஆகும்.

15. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். - இக்குறளில் பயின்று வரும் பொருள்கோளை விளக்குக.

பொருள்கோள் : ஆற்றுநீர்ப் பொருள்கோள்

விளக்கம் : பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை ஆற்றுநீரின் போக்கைப் போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைதல் ஆற்று நீர்ப் பொருள்கோள்.

பாடல் பொருள் : முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும். முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையை உருவாக்கி விடும்.

விளக்கம் : இப்பாடலில் முயற்சி செல்வத்தைத் தரும். முயற்சி செய்யாமை வறுமையைத் தரும் என்ற பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை நேராகப் பொருள் கொள்ளும் முறையில் அமைந்திருப்பதால் இது ஆற்று நீர்ப் பொருள்கோள் ஆயிற்று.

சுருக்கமாக விடையளிக்க (35 முதல் 37)

இயல் 6

16. சிறுபொழுதிற்குரிய கூறுகள் எத்தனை? அவை யாவை?

சிறுபொழுதிற்குரிய கூறுகள் ஆறு.

காலை : காலை 6 மணி முதல் காலை 10 மணி வரை.
நண்பகல் : காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை.
எற்பாடு : பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை.
மாலை : மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை.
யாமம் : இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை.
வைகறை : இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை.

17. சொற்பொருள் பின்வருநிலையணி குறித்து எழுதுக.

அணி இலக்கணம் : ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

எடுத்துக்காட்டு : பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்

விளக்கம் : பொருள் என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருகிறது. ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரை மதிக்கச் செய்வது பொருள். அதைவிட சிறந்த பொருள் உலகில் வேறு எதுவும் இல்லை.

18. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

அணி : உவமையணி

அணி இலக்கணம் : உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் அமையும். இடையில் வரும் உவமஉருபு வெளிப்படையாக வரும்.

விளக்கம் : உவமை : மலைமேல் பாதுகாப்பாக நின்று யானைப் போரைக் காணுதல்.
உவமேயம் : தன் கைப்பொருளைக் கொண்டு செய்யும் செயல்.
உவமஉருபு : அற்று (வெளிப்படை)

பொருத்தம் : ஒருவன் தன் கைப்பொருளைக் கொண்டு ஒரு செயலைச் செய்வது மலைமேல் பாதுகாப்பாக நின்று கொண்டு யானைப் போரைக் காணுபது போன்றது.

19. வஞ்சப் புகழ்ச்சி அணியைக் கூறி விளக்குக.

அணி இலக்கணம் : பழிப்பது போலப் புகழ்வதும், புகழ்வதும் போலப் பழிப்பதும் வஞ்சப்புகழ்ச்சி அணி ஆகும். இப்பாடல் புகழ்வது போலக் கூறி பழிக்கப்பட்டுள்ளது.

சான்று : தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.

பொருள் விளக்கம் : புகழ்தல் : கயவர் தேவர்களுக்கு ஒப்பாவர்
பழித்தல் : கயவர் தம் மனம் போன போக்கில் தீய செயல்களைச் செய்வார்கள்.

குறள் விளக்கம் :

தேவரும் கயவரும் ஒரு தன்மையர். தேவரைப் போல கயவரும் தாம் விரும்பியதைச் செய்வர்.

இயல் 7

20. அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான். அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

இந்நிகழ்வுக்குப் பொருத்தமான திணை வஞ்சித்திணை ஆகும்.

மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணையாகும்.

அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் பகை கொண்டு போர் புரிந்து மருத நாட்டைக் கைப்பற்ற நினைப்பதால் இந்நிகழ்வு வஞ்சித்திணைக்குப் பொருந்தி வருகிறது.

இயல் 8

21. வெண்பாவின் பொது இலக்கணத்தை விளக்குக.

செப்பல் ஓசை பெற்று வரும்.
ஈற்றடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும்.
இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும்.
இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும்.
ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் ஒன்று கொண்டு முடியும்.

சுருக்கமாக விடையளிக்க (35 முதல் 37)

22. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

அகவல் ஓசை பெற்று வரும்.

ஈரசைச் சீர் மிகுதியாகவும் காய்ச்சீர் குறைவாகவும் வரும்.

ஆசிரியத்தளை மிகுதியாக வரும்.

வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவி வரும்.

மூன்றடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும்.

ஏகாரத்தில் முடியும்.

இயல் 9

23. தன்மை அணி குறித்து எழுதுக. (அல்லது) எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும் அணி எது? சான்றுடன் விளக்குக.

அணி விளக்கம் : எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணி ஆகும். இதனை தன்மை நவிற்சி அணி எனறும் கூறுவர்.

சான்று : மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் - வையைக் கோன்
கண்டளவே தோற்றான், அக்காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர். (சிலப்பதிகாரம்)

அணிப் பொருத்தம் : கண்ணகியின் துன்பம் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால் இது தன்மையணிக்குச் சான்றாயிற்று.

24. கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை (கருத்தை) ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

எ.கா: போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி வாரல்
என்பனபோல் மறித்துக் கைகாட்ட

கோட்டை மதில்மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பது போல, கைகாட்டியது என்பது பொருள்.

கவிஞர் தன் கருத்தை ஏற்றிக் கூறுதல்:

கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேல் இருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன.

இந்நிகழ்வைக் கண்ணுற்ற இளங்கோவடிகள் மதுரையில் கோவலன் கொலை செய்யப்படுவான் எனக் கருதி அக்கொடிகள், கையை அசைத்து அம்மதுரைக்குள் வரவேண்டா என்று தெரிவிப்பது போலக் காற்றில்அசைந்ததாக தன் கருத்தைக் கொடியின் மேல் ஏற்றிக் கூறுகிறார்.

25. தீவக அணி குறித்து எழுதுக.

அணி விளக்கம் : தீவகம் என்னும் சொல்லுக்கு விளக்கு என்று பொருள். ஓர் அறையில், ஓர் இடத்தில் வைக்கப்பட்டுள்ள விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல செய்யுளில் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இஃது தீவக அணி எனப்பட்டது.

சான்று : சேந்தன வேந்தன் திருநெடுங்கண் தெவ்வேந்தர் ஏந்து தடந்தோள்....
.... புள்குலமும் வீழ்ந்து

அரசனுடைய கண்கள் கோபத்தால் சிவந்த வேளையில், பகைவனின் தோள் சிவந்தன. குருதி பாய்ந்து திசைகள் சிவந்தன. அம்புகள் சிவந்தன. பறவைகள் கூட்டம் யாவும் சிவந்தன.

அணிப் பொருத்தம் :

இப்பாடலில் முதலில் நிற்கும் சேந்தன எனும் சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்தோடும் பொருந்திப் பொருள் தருகிறது.

விடையளிக்க (38)

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
**விடை பக்கம் எண் : 17 வினா எண் : 2 இல் காண்க.**

2. தமிழையும், கடலையும் ஒப்பிட்டு இரட்டுற மொழியும் பாங்கினை சந்தக்கவிமணி தமிழழகனாரின் வழிநின்று விளக்குக.
**விடை பக்கம் எண் : 48 வினா எண் : 1 இல் காண்க.**

3. மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

தாயே! தமிழே! வணக்கம்.

செய்யுள் ஒன்றனை இயற்றும்போது தெய்வத்தையோ, இயற்கையையோ, உயர்ந்தாரையோ, நாட்டையோ, மொழியையோ வாழ்த்தித் தொடங்குவது கவிஞர்களின் இயல்பு. இங்கு இரு கவிஞர்களின் வாழ்த்துப் பாடல்கள் பற்றி ஆய்ந்து ஒப்பிடுவோம்.

நாடு மொழி :

பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழ்மொழியை அன்னை மொழியாகவும், செந்தமிழாகவும், நற்கனியாகவும், பேரரசாகவும், பாண்டியனின் மகனாகவும், திருக்குறளின் பெருமைக்குரியவளாகவும் ஒப்புமைப்படுத்திக் காட்டியுள்ளார்.

மனோன்மணீயம் சுந்தரனார் தமிழ் நிலத்தைப் பெண்ணாக உருவகம் செய்துள்ளார். அந்நிலப்பெண் கடலை ஆடையாக அணிந்துள்ளாள். அவள் நெற்றியிலிட்ட பொட்டு மணம் வீசுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மணம் எல்லாத் திசைகளிலும் புகழ் மணக்கும்படி இருக்கின்ற தமிழ்ப் பெண்ணே என்று பெண் தெய்வத்திற்கு ஒப்பிட்டுள்ளார்.

பெருமை :

திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, நிலைத்த சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களின் மூலம் பொங்கி எழும் நினைவுகளால் தலைபணிந்து வாழ்த்துகிறோம் என்று பாவலரேறு வாழ்த்துகிறார்.

பெருமையை பரப்புதல் :

பழம்பெருமையும், தனக்கெனத் தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்டதாக தமிழ் உள்ளது. நீண்ட நிலைத்த தன்மை கொண்டது தமிழ்மொழி. உள்ளத்தில் கனல் மூள, வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

தமிழ்ப்பெண்ணே இன்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து எங்கள் செயல்களை மறந்து உனது புகழைப் போற்றுவோம்.

நிறைவாக,

சாகும்போதும் தமிழ்ப்படித்துச் சாகவேண்டும் - என்றன்
சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்

என்று கவிஞர் க.சச்சிதானந்தன் கூறுவதற்குக் காரணம் கூட தமிழின் மேற்கண்ட சிறப்புகளே என்று கூறலாம்.

4. காற்றே வா பாடலின் வாயிலாக பாரதியார் கூறும் செய்தியினை தொகுத்து எழுதுக.
**விடை பக்கம் எண் : 48 வினா எண் : 3 இல் காண்க.**

5. முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலைப் பற்றி விவரிக்க.

மக்கள் பிறருக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தனக்கு ஏற்பட்ட துன்பமாகவே கருதி இருக்கின்றனர்.
மனிதர்களுடைய துன்பங்கள் மட்டுமின்றி அஃறிணை உயிரினங்களின் துன்பங்களையும் நீக்க முற்பட்டிருக்கின்றனர்.
தெய்வ நம்பிக்கை உடையவர்கள்.
விரிச்சி கேட்டலில் நம்பிக்கை உடையவர்கள்.
ஒருவரை ஒருவர் ஆற்றுப்படுத்தி மகிழ்ந்திருக்கின்றனர்.

விடையளிக்க (38)

6. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

மழை மேகம் :

மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்போது மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்த திருமாலின் உருவத்தைப் போன்று அமைந்தது பெரிய மழை மேகம்.

மழைப்பொழிவு :

பெருந்தோற்றம் கொண்ட மேகம் வலமாய் எழுந்தது. மலையைச் சூழ்ந்தது. விரைந்த வேகத்துடன் பெரு மழையைப் பொழிந்தது.

தெய்வ வழிபாடு :

முதுபெண்கள் காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர்.

யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் நறுமணம் கொண்ட பூக்களைச் சுற்றி ஆரவாரிக்கும்.

மலர்ந்த முல்லைப்பூவோடு நாழியளவு நெல்லையும் சேர்த்து தெய்வத்தின் முன் தூவுவர்.

தெய்வத்தைத் தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நிற்பர்.

கன்றின் வருத்தம் :

சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள்.

வருந்தாதே :

புல்லை மேய்ந்த உன் தாய்மாரை வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட என் இடையர் இப்பொழுது ஓட்டி வந்து விடுவார் வருந்தாதே என்றாள் இடைமகள்.

முதுபெண்டிர் தலைவியிடம் கூறியது :

இடைமகள் மூலம் நற்சொல்லைக் கேட்டோம். நின் தலைவன் பகைவரை வென்று திரைப்பொருளோடு வருவது உறுதி. மனத்தடுமாற்றம் கொள்ளாதே.

7. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலை கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

விடை பக்கம் எண் : 49 வினா எண் : 7 இல் காண்க.

8. ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும், கவிஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. இன்றைய நிலையில் ஆற்றுப்படுத்துதல் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

அன்றைய ஆற்றுப்படுத்துதல்

பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்.

இரவில் சேர்ந்து தங்குங்கள்.

எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள்.

அசோக மரங்களையுடைய பொருத்தமான பாதையில் சொல்லுங்கள்.

சிற்றூரை அடைந்து நன்னனின் கூத்தர் என்று சொல்லுங்கள்.

உரிமையுடன் ஊரார் வீட்டிற்குள் நுழையுங்கள்.

உறவினர் போலவே பழகி இனிய சொற்களைப் பேசுவார்கள்.

திருப்தியான உணவைத் தருவார்கள். மகிழ்வுடன் உண்ணுங்கள்.

இன்றைய வழிகாட்டுதல் :

அதிக வெயில் அல்லது வேலைப்பளு காரணமாக ஏற்படும் அசதியைப் போக்க சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.

இரவில் எங்கும் தனித்து செல்லாதீர்கள். திருடர் பயம் அதிகமாக உள்ளதால் சேர்ந்து செல்லுங்கள்.

சுபநிகழ்வுகளில் மணமிடும் பூக்களை பெண்களே சூடிக்கொள்ளுங்கள்.

மக்கள் நடமாட்டம் மிகுதியான சாலை வழியே செல்லுங்கள்.

இன்னார் அனுப்பினார் என்று சொல்லுங்கள்.

உள்ளே வரலாமா என்று அனுமதி பெற்றபின் உள்ளே செல்லுங்கள்.

சற்று கடினமாகவே பழகுவார். கடினமான சொற்களையே பேசுவார். சற்றுப் பொறுத்துக் கொள்ளுங்கள்.

குளிர்சாறு அல்லது விரைவு உணவு ஏதேனும் உண்ணக் கொடுத்தால் மிக்க நன்றி என்று கூறுங்கள்.

விடையளிக்க (38)

9. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

மன்னனின் அவையில் இடைக்காடனார் :

குசேலபாண்டியன் மிகுந்த கல்வியறிவு உடையவன். இதைக் கேள்வியுற்ற இடைக்காடனார் வேப்ப மாலை அணிந்த குசேலனின் அவைக்குச் சென்று தான் இயற்றிய கவிதையைப் படித்தார்.

இடைக்காடனாரின் புலமையை அவமதித்தல் :

வேப்பமாலை அணிந்த குசேலபாண்டியன், தமிழறியும் பெருமான், அடியார்க்கு நல்நிதி போன்றவன், பொருட்செல்வமும் கல்விச்செல்வமும் உடையவன் என்று கேட்டுணர்ந்து தாங்கள் முன் சுவை நிரம்பிய கவிதை பாடினேன் என்றார் இடைக்காடனார். பாண்டியன் சிறிதேனும் தலை அசைக்காமல் புலவரின் புலமையை அவமதித்தான்.

இடைக்காடனார் இறைவனிடம் முறையிடுதல் :

பாண்டியன் என்னை இகழவில்லை. சொல்லின் வடிவமான பார்வதியையும், பொருளின் வடிவான உம்மையும் அவமதித்தான் என்று சினத்துடன் இறைவனிடம் கூறினார்.

இறைவன் கோவிலை விட்டு வெளியேறுதல் :

இடைக்காடனாரும் கோவிலை விட்டு வெளியேறினார். வெளியேறுவதால் நண்பர் கபிலருக்கும் மனம் மகிழ்வு உண்டாகும் என நினைத்தார். இறைவனும் கோவிலை விடுத்து வடக்கே வையை ஆற்றின் தென்பக்கம் கோவில் கொண்டார்.

இறைவனிடம் மன்னன் வேண்டுதல் :

என் படைகளால், பகைவரால், கள்வரால், விலங்குகளால் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? மறையவர் ஒழுக்கம் குறைந்தாரோ? தவமும், தானமும் சுருங்கியதோ? இல்லறமும், துறவறமும் தத்தம் வழியில் தவறினவோ? தந்தையே நான் அறியேன் என்றார் குலசேகர பாண்டியன்.

இறைவனின் பதில் :

வயல் சூழ்ந்த கடம்பவனத்தை விட்டு ஒருபோதும் நீங்க மாட்டோம். இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர உன்னிடம் குற்றம் இல்லை என்றார். இடைக்காடன் மீது கொண்ட அன்பினால் இங்கு வந்தோம் என்றார்.

பிழையைப் பொறுத்தருள இறைவனிடம் வேண்டுதல் :

வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொல் கேட்டான் குசேல பாண்டியன். பரம்பொருளே! புண்ணியனே! சிறியவரின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமை என்று குற்றத்தைப் பொறுக்க வேண்டினான்.

மன்னன் இடைக்காடனாருக்குப் பெருமை செய்தல் :

மன்னனின் மாளிகை வாழை, சாமரை இவற்றாலான விதானமும் விளக்கும் உடையது. பூரண கும்பம், மாலை, கொடி இவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது. புலவர்கள் சூழ இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் அமர்த்தினான்.

மன்னன் புலவரிடம் வேண்டுதல் :

மன்னன் புலவர்களிடம் தான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றான். புலவர்களும் நீர் கூறிய அமுதம் போன்ற சொல்லால் எங்கள் சினம் தணிந்து விட்டது என்றனர்.

10. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புற பாலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.

விடை பக்கம் எண் : 50 வினா எண் : 16 இல் காண்க.

11. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

தண்டலை மயில்கள் ஆட என்னும் பாடலில் கம்பரின் கவித்திறம் :

சோலையை நாட்டிய மேடையாகவும், மயிலை நடன மாதராகவும், குளங்களில் உண்டான அலைகளைத் திரைச்சீலையாகவும், தாமரை மலரை விளக்காகவும், மேகக்கூட்டங்களை மத்தளமாகவும், வண்டுகளின் ஓசையை யாழின் இசையாகவும், பார்வையாளர்களை குவளை மலர்களாகவும் சித்தரித்து தன் கவித்திறனை சான்றாக்குகிறார்.

இந்தப் பாடலில் கம்பனின் சொல்லாட்சி மாண்புறச் செய்கின்றன. கம்பனின் கவித்திறம், தான் சொல்ல வந்ததை விளக்க கையாண்ட உத்திகள் அனைத்தையும் நாம் நினைத்துப் பார்த்தால் கம்பன் தமிழுக்கு கிடைத்த வரம் எனலாம்.

விடையளிக்க (38)

படைப்பாளி தான் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்லாது, தான் வீழ்ந்த பின்னரும் வாழ்கின்றான் என்றால் மிகையாகாது. அந்த வகையில் கம்பன் இன்றும் தன் சந்தக் கவிதையோடு வாழ்ந்து வருகின்றான்.

காலமெனும் ஆழியிலும்
காற்றுமழை ஊழியிலும் சாகாது
கம்பனவன் பாட்டு, அது
தலைமுறைக்கு அவன் எழுதி வைத்த சீட்டு

எனக் கண்ணதாசன் கம்பனைப் பாடுகிறார்.

கம்பன் கவிகளை எழுதுவதற்கு முன்னர் அவன் ரசிக்கிறான். ரசித்ததை அனுபவித்து, அதனுள் கரைந்து விடாமல் படிக்கும் வாசகனை உள்ளே இழுத்து வருகிறான். தன் ஒவ்வொரு வார்த்தையிலும் ஓசை நயத்தை உருவாக்குகிறான். தம்மை உச்சிக்கு கொண்டு சேர்க்கிறான்.

உதாரணமாக,

தாடகை என்ற அரக்கியை கம்பர் உருவாக்குகிறார்.

இறைக்கடை துடித்த புருவங்கள் எயிறு என்னும்
பிறைக்கிடை பிறக்கிட மடித்த பிலவாயள
மறக்கடை அரக்கி - என எவ்வளவு அழகாக தன் கவித்திறனைப் பதிவு செய்கிறார்.

கம்பனின் கவிதை மூலம் பெறும் இன்பங்கள் எத்தனையோ. அதில் ஒன்று சந்தம். ஓசை தரும் இன்பம் ஒரு கோடி பெறும் என்பதற்கு ஏற்ப,

ஆழ நெடுந்திரை எனத் தொடங்கும் பாடலில் உலக்கையால் மாறி மாறி இடிக்கும் ஒத்த ஓசையில் அமைந்த சந்தம் இடிக்கும் காட்சியை கம்பர் கண்முன் எழுப்புகிறார்.

உறங்குகின்ற கும்பகன்ன! போன்ற கவிதைகளை உற்றுநோக்கும் போது சந்தக் கவிதையில் சிறகடித்துப் பறக்கும் தமிழ் நெடிய உலகில் கம்பனைத் தவிர வேறு யாருமில்லை என்பதை அறிய முடிகிறது.

12. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

விடை பக்கம் எண் : 51 வினா எண் : 19 இல் காண்க.

13. கயமை என்னும் அதிகாரத்தில் கயவர் குறித்து வள்ளுவர் குறிப்பிடும் செய்தி யாது?

| | |
|---|---|
| தோற்ற ஒப்புமை : | கயவருக்கும் மக்களுக்கும் உள்ள ஒப்புமை தோற்றம் மட்டுமே. வேறெதிலும் ஒப்புமை இல்லை. |
| தேவரும் கயவரும் : | தேவரும் கயவரும் ஒரே தன்மையர். தேவர்களைப் போலவே கயவர்களும் தான் நினைத்தவற்றைச் செய்து ஒழுகுவார்கள். |
| சான்றோர் - கயவர் : | ஒருவர் தம் குறையைச் சொல்வதைக் கேட்ட உடனேயே உதவி செய்பவர் சான்றோர். கரும்பைப் பிழிவது போல நெருக்கிப் பிழிந்தால் தான் பயன்படுவர் கயவர். |

14. மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக.

சோழ நாட்டின் வளத்தையும், மன்னனின் சிறப்பையும் நயமுடன் எடுத்துரைக்கிறது.

| நாட்டு வளம் | மக்கள் வளம் |
|---|---|
| யானைகள் மட்டும் பிணிக்கப்படுகின்றன | மக்கள் பிணிக்கப்படுவதில்லை |
| சிலம்புகள் மட்டும் புலம்பும் | மக்கள் புலம்புவதில்லை |
| ஓடைகள் மட்டும் கலக்கமடையும் | மக்கள் கலக்கம் அடைவதில்லை |
| மாங்காய் மட்டும் வடுப்படும் | மக்கள் வடுப்படுவதில்லை |
| மலர்கள் மட்டும் பறிக்கப்படுகின்றன | மக்கள் உரிமை பறிக்கப்படுவதில்லை |
| காடுகள் மட்டும் கொடி உடையதாய் இருக்கும் | மக்கள் கொடியவராய் இல்லை |
| வண்டுகள் மட்டும் கள் உண்டு மயங்கும் | மக்கள் கள் உண்பதில்லை |
| மலை மூங்கில் மட்டுமே வெறுமையாய் இருக்கும் | மக்களிடையே வெறுமை இல்லை |
| வயலில் நெற்கதிர் மட்டுமே போராய் எழுகின்றன | சோழ நாட்டில் போர் இல்லை |
| நீண்ட மலைகளை இருள் சூழ்கின்றன | நாட்டில் வறுமை இருள் இல்லை |
| மான்களின் கண்கள் மருளுகின்றன | மக்கள் கண்களில் மருட்சியில்லை |
| குளத்து மீன்கள் பிறழ்ந்து செல்கின்றன | மக்கள் நிலை பிறழ்வதில்லை |
| செவிலியரே சினங்கொள்வர் | வேறு யாரும் சினங்கொள்வதில்லை |
| புலவர் பாட்டில் பொருள் மறைந்து இருக்கிறது | சோழ நாட்டில் யாரும் பொருளை மறைப்பதில்லை |
| இசைப்பாணரே தெருவில் கூடி ஆடிப்பாடுவர் | வேறு யாரும் அவ்வாறு ஆடுவதில்லை |

மன்னனின் சிறப்பும் பெருமையும்:

மன்னன் மக்களுக்கு காவல் தெய்வமாக, தாயாக, தந்தையாக இருக்கிறான். மகன் இல்லாதோர்க்கு மகனாக இருக்கிறான். உலக உயிர்களுக்கு உயிராக, விழியாக, மெய்யாக, புகழ் பெற்ற நூலாக, புகழ் அனைத்துக்கும் தலைவனாக விளங்குகிறான்.

இவ்வாறாக சோழ அரசனின் பெருமையும், அவன் காலத்தில் நாடு பெற்றிருந்த வளத்தையும் மெய்க்கீர்த்திப் பாடல் நயம்பட உரைக்கிறது.

<u>விடையளிக்க (38)</u>

15. முதல்மழை விழுந்ததும் - தொடர்ந்து நிகழும் உழவுச்செயல்களை ஏர் புதிதா கவிதை கொண்டு விவரித்து எழுதி, பொன்னேர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம் என்பதையும் விளக்குக.

முதல் மழை பெய்ததால் மேல்மண் பதமாகி விட்டது. எனவே, காளைகளை ஓட்டிக் கொண்டு வெள்ளி முளைக்கும் முன் விரைந்து செல்ல வேண்டும். தமிழர் பண்பாட்டின் மகுடமாக திகழும் பொன் போன்ற ஏரைத் தொழுது, மாட்டைப் பூட்டி நிலத்தை உழ வேண்டும். ஏரோ, நுகத்தடியோ, காடோ, கரையோ, நம் கையோ புதியன அல்ல!

அந்த நாளும், அன்றைய நட்சத்திரமும், ஊக்கமும், வலிமையும் புதியனவாகும். மாடுகளைத் தூண்டிக் கொழுமுனை அழுந்த மண்ணைப் புரளுமாறு உழ வேணடும். அதனால் மழை பொழிந்ததும் நிலம் புத்துயிர் பெறும். அதில் முளைக்கும் நாற்றும் நிமிர்ந்து நிற்கும்.

கவலைகள் விலக, கிழக்கு வெளுக்கும் முன் நல்ல வேளையில் ஏரின் கொழுவை நாட்டி உழ வேண்டும்.

16. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிகவீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் ஒப்பிட்டு எழுதுக.

மருவூர்ப்பாக்கத்து வணிகவீதிகளில் வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி விற்பது போல இன்றைய அங்காடிகளிலும், வணிக வளாகங்களிலும் விற்கப்படுகின்றன.

குளிர்ச்சி பொருந்திய சந்தனம், பூ வகைகள், ஊதுவத்தி, அகில் போன்ற நறுமணப் பொருள்கள் இன்றைய வணிக வளாகத்திலும் விற்கப்படுகின்றன.

பொன், மணி. முத்து, பவளம் ஆகியவை மருவூர்ப்பாக்க வீதிகளில் விற்பனை செய்யப்பட்டது. இன்று வணிக வளாகத்திலும், நகைக்கடைகளிலும் விற்கப்படுகின்றன.

வணிக வீதிகளில் குவியலாகக் கிடந்தது தானிய வகைகள். இன்று அங்காடிகளில் தானிய வகைகளை எடைபோட்டு பொட்டலங்களில் கட்டி விற்பனை செய்கின்றனர்.

மருவூர்ப்பாக்கத் தெருக்களில் உப்பு, வெற்றிலை, நறுமணப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது போல், இன்றைய அங்காடிகளிலும் விற்கப்படுகிறது.

வெண்கலம், செம்புப் பாத்திரம், மரப்பொருட்கள், இரும்புப் பொருட்கள் கிடைத்ததைப் போல, இன்றைய அங்காடி, வணிக வளாகங்களில் கிடைப்பதோடு, கூடுதலாக பல நவீனப் பொருள்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட நெகிழிப் பொருள்கள் நவீன அலங்காரங்களுடன் கிடைக்கின்றன.

மருவூர்ப்பாக்க வீதிகளில் பொற்கொல்லர், இரத்தினவேலை செய்பவர், தையற்காரர், தோல் பொருள் செய்பவர், துணியாலும், கட்டையாலும் பொம்மை செய்பவர்கள் என பலதிறப்பட்ட கைவினைஞர்கள் இருந்தனர். இன்றைய அங்காடியிலும், வணிக வளாகங்களிலும் இத்தகு கைவினைக் கலைஞர்கள், நவீன தொழில் நுட்பத்துடன் அழகு மிளிரும் கைவினைப் பொருள்களை செய்து விற்பனை செய்கிறார்கள்.

17. காலக் கணிதம் கவிதையில் கண்ணதாசன் நயம்படக் கூறியவற்றை எழுதுக.

(அல்லது)

காலக் கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படுபொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னிலும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!

<u>திரண்ட கருத்து :</u>

கவிஞன் நானே காலத்தைக் கணிப்பவன். உள்ளத்தில் உதிக்கும் பொருளை வார்த்தை வடிவம் கொடுத்து ஒரு உருவமாய் அவற்றை நான் படைப்பதால் இப்பூமியில் நானும் புகழ்பெற்ற தெய்வம். பொன்னை விட விலை உயர்ந்த செல்வம் என்னுடைய கருத்துகள். சரியானவற்றை எடுத்துச் சொல்வதும், தவறானவற்றை எதிர்ப்பதும் என் பணி. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று பணிகளும் நானும் கடவுளும் அறிந்தவை.

மோனை நயம் :

கவிஞன்...
கருப்படு....
இவை சரி
இவை தவறாயின்...

விடையளிக்க (38)

எதுகை நயம் :

கருப்படு பொருளை
உருப்பட வைப்பேன்

முரண் :

ஆக்கல்
அழித்தல்

இயைபு நயம் :

.... புகழுடைத் தெய்வம்
.... பொருளென் செல்வம்

அணி நயம் :

கண்ணதாசன் இப்பாடலில், கடவுளுக்கு இணையாக
யானோர் காலக்கணிதம்
நானோர் புகழுடை தெய்வம்
என உருவகப்படுத்தி உள்ளதால் இப்பாடலில் உருவக அணி பயின்று வந்துள்ளது.

சந்த நயம் :

இப்பாடலில் எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் இடம் பெற்றுள்ளது. அகவலோசையுடன் இனிய சந்த நயமும் பெற்றுள்ளது.

18. சித்தாளின் மனச்சுமையாக நாகூர் ரூமி கூறும் செய்தியைத் தொகுத்து எழுதுக.

சித்தாள் பணி செய்பவர் பொற்காலமாக இருந்தாலும் தலையில் செங்கற்களைச் சுமக்க வேண்டியிருப்பதால் அவள் தலையில் எழுதியதோ கற்காலம் தான்.

சித்தாள் தலையில் கல் வைக்கிறாள். தன் வாழ்வைத் தொலைக்காமல் இருப்பதற்காகச் செங்கற்களைத் தலையில் வைக்கிறாள்.

பணம், பதவிகளால் தலைக்கனம் பிடித்தவர் உலகில் பலர் உண்டு. அன்றாட வாழ்வை நடத்துவதற்காகவே செங்கற்களைச் சுமந்து வேலை செய்யும் சித்தாளுக்குத் தலைக்கனமே வாழ்வாகிப் போனது.

அடுக்குமாடி வீடாகவோ அல்லது அலுவலகமாகவோ, எதுவாக இருப்பினும் அடுத்தவர் கட்டும் கட்டிடத்தின் கனவுக்கு அலுப்பில்லாமல் கற்களைச் சுமந்து உழைப்பது எல்லாம், சித்தாளின் அடுத்த வேளை உணவுக்காகத் தான்.

அடுத்த வேளை உணவுக்காக சுமைகளை இறக்காமல் சுமக்கும் இவர்களின் மரணம் கூட சிறிதளவே சலனத்தை ஏற்படுத்தும். பல இன்னல்களின் நடுவே தன் வாழ்வை தொலைக்காதிருக்க சுமை சுமக்கும் சித்தாள்களின் மனச்சுமையை செங்கற்களும், கற்களும் அறியாது.

19. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும், உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரி.

வீரமாமுனிவரின் உவமை, உருவக கவிதாஞ்சலி (தாயார் எலிசபெத்துக்காக):

கருணையனின் தாய் மறைந்து விட்டாள்.

கருணையன் தன் கையைக் குவித்துப் பூமித்தாயே! என் அன்னையின் உடலை காப்பாயாக என்று கூறி, குழியிலே மலர்ப்படுக்கையை பரப்பினாள்.

அன்னையின் உடலை மண்ணிட்டு மூடி மலர்களையும், தன் கண்ணீரையும் பொழிந்தான்.

என் தாயின் மார்பில் மணிமாலையென அசைந்து வாழ்ந்தேனே! இப்பொழுது இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து காய்ந்து மணியாகு முன்பே, தூயமணி போன்ற மழைத்துளி இன்றி வாடிக் காய்ந்து விட்டது போல நானும் வாடுகிறேன்.

என் மனம் மரக்கிளையில் இருந்து பறிக்கப்பட்ட மலர் போல் வாடுகிறது.

தீயையும், நஞ்சையும் தன் முனையில் கொண்ட அம்பு துளைத்தால் ஏற்படும் புண்ணின் வலியைப் போல என் துயரம் வேதனை தருகிறது.

துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போல நான் இக்காட்டில் அழுது வாடுகிறேன்.

சரிந்த வழுக்கு நிலப்பகுதியிலே தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல ஆனேன்.

நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்தது போன்று நல்ல அறன்கள் எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன் புலம்பினான்.

இப்புலம்பலைக் கேட்டு பல்வேறு இசைகளை இயக்கியது போல் தேன்மலர்கள் மணம் வீசும் மலர்களும், மலர்ந்த சுனைதோறும் உள்ள பறவைகளும், வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போல கூச்சலிட்டன.

*விடையளிக்க (39)*

*1. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கும், வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படும் இடையூறுகளைக் குறிப்பிட்டு, புதிய மின்விளக்குகளைப் பொருத்தும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.*

அனுப்புநர் :

அஅஅ,
வடக்குத் தெரு,
தளவாய்.

பெறுநர் :

மின் வாரிய அலுவலர்,
மின் வாரிய அலுவலகம்,
மாத்தூர் - அஞ்சல்,
அரியலூர் மாவட்டம்.

ஐயா,

பொருள் : தெரு மின்விளக்குகள் பழுது - புதிய மின் விளக்குகள் பொருத்தக் கோருதல் - சார்பு.

வணக்கம். எங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இரவில் சாலையில் நடந்து செல்வோரும், வாகன ஓட்டிகளும் தெருவில் உள்ள வேகத்தடைகளில் விழும் நிலை தொடர்கதையாக மாறி வருகிறது. கடும் இருள் சமூக விரோதச் செயல்கள் நடைபெற ஏதுவாக உள்ளது. எனவே மின் விளக்குகளை சரி செய்து, புதிய மின்விளக்குகளைப் பொருத்த ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இடம் : தளவாய்
நாள் : 16.05.20

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
அஅஅ

உறைமேல் முகவரி :

பெறுநர் : மின் வாரிய அலுவலர்,
மின் வாரிய அலுவலகம்,
மாத்தூர் - அஞ்சல்,
அரியலூர் மாவட்டம்.

*2. மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பில் மாநில அளவில் நடத்தப்பெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.*

தளவாய்
16.05.20

அன்புள்ள நண்பன் ராமுவுக்கு,

வணக்கம். நான் இங்கு நலம். நீ மற்றும் உனது குடும்பத்தார் நலமறிய ஆவல். பள்ளியில் நடைபெறும் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்ற சாதனையாளன் நீ. தற்போது மாநில அளவில் மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்றதை எண்ணி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். பள்ளிக்கும், நமது ஊருக்கும் பெருமை சேர்த்துள்ள உன்னை பாராட்ட வார்த்தைகள் இல்லை. வாழ்வில் மேலும் வெற்றிகளைக் குவிக்க வாழ்த்துக்கள்.

இப்படிக்கு
உன் அன்பு நண்பன்,
பாபு

உறைமேல் முகவரி :

பெறுநர் : க.இராமு,
7, வடக்குத் தெரு,
மதுரை - 10.

விடையளிக்க (39)

3. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரியச் சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

அனுப்புநர் :

அஅஅ,
வடக்குத் தெரு,
தளவாய்.

பெறுநர் :

உணவுப் பாதுகாப்பு ஆணையர்,
உணவுப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்,
அரியலூர்.

ஐயா,

பொருள் : உணவு தரமற்ற நிலை மற்றும் விலை கூடுதல் குறித்து உரிய நடவடிக்கை கோருதல் - சார்பு.

வணக்கம். எங்கள் ஊரில் உள்ள எஎஎ என்ற பெயருடைய உணவு விடுதியில் 16.05.20 அன்று மதிய உணவு உண்டோம். அப்போது பரிமாறப்பட்ட உணவு தரமற்றதாவும், விலையும் அதிகமாக இருந்தது. கடை உரிமையாளரிடம் கேட்டபோது சரியான பதில் சொல்லாததுடன் தரமற்ற முறையில் ஏளனமாக பேசினார். எனவே கடையின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு மக்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இடம் : தளவாய்
நாள் : 16.05.20

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
அஅஅ

உறைமேல் முகவரி :

பெறுநர் : உணவுப் பாதுகாப்பு ஆணையர்,
உணவுப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்,
அரியலூர்.

4. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

அனுப்புநர் :

அஅஅ,
வடக்குத் தெரு,
தளவாய்.

பெறுநர் :

ஆசிரியர்,
தினமணி நாளிதழ்,
திருச்சி.

ஐயா,

பொருள் : பொங்கல் மலரில் எனது கட்டுரை - உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற கட்டுரையை வெளியிடக் கோருதல் - சார்பு.

வணக்கம். தங்களது நாளிதழ் மூலமாக வருகின்ற தமிழர் திருநாளாம் பொங்கலை ஒட்டி வெளியிட உள்ள பொங்கல் மலர் வெற்றி பெற வாழ்த்துக்கள். பொங்கல் மலருக்காக, உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் எனும் தலைப்பில் நான் எழுதிய கட்டுரையினை இத்துடன் இணைத்து அனுப்பி உள்ளேன். கட்டுரையை பொங்கல் மலரில் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இடம் : தளவாய்
நாள் : 16.05.20

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
அஅஅ

உறைமேல் முகவரி :

பெறுநர் : ஆசிரியர்,
தினமணி நாளிதழ்,
திருச்சி.

<u>விடையளிக்க (39)</u>

5. தங்கைக்குத் திறன்பேசிப் பயன்பாட்டினால் ஏற்படும் நன்மை, தீமைகளைக் குறிப்பிட்டு அறிவுரைக் கடிதம் எழுதுக.

தளவாய்
16.05.20

அன்புத்தங்கை சீதாவுக்கு,

வணக்கம். நான் இங்கு நலம். நீ அங்கு நலமா? எவ்வாறு படித்துக் கொண்டிருக்கின்றாய்? கல்லூரியில் படிக்கும் உனக்கு அப்பா புதிதாக திறன்பேசி வாங்கித் தந்துள்ளார். மகிழ்ச்சி. உலகத்தை நம் விரல் நுனியில் கொண்டு வருவதுடன், இணையவழிக் கல்வி, பல்வேறு கட்டணங்களைச் செலுத்துதல், முன்பதிவு மேற்கொள்ளுதல், செய்திகளை அறிதல் என பல நன்மைகள் இருப்பினும் சில தீமைகளும் இருக்கவே செய்கின்றன. தவறான நண்பர்களிடம் இருந்து விலகியே இரு. எந்நேரமும் திறன்பேசியைப் பார்த்துக் கொண்டும், விளையாடிக் கொண்டும் இருந்தால் கண்கள் பாதிக்கப்படும். எனவே அல்லன நீக்கி, நல்வனவற்றை திறன்பேசியில் அளவாக பயன்படுத்தி மகிழக் கேட்டுக்கொள்கிறேன். வாழ்வில் வெற்றிகளைக் குவிக்க வாழ்த்துக்கள்.

இப்படிக்கு
உன் அன்பு சகோதரன்,
பாபு

உறைமேல் முகவரி :

பெறுநர் : க. சீதா,
7, வடக்குத் தெரு,
மதுரை - 10.

6. பள்ளித்திடலில் கிடந்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும், அதற்குப் பாராட்டு பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

தளவாய்
16.05.20

அன்புள்ள மாமாவுக்கு,

வணக்கம். நான், அப்பா, அம்மா, தங்கை அனைவரும் இங்கு நலம். நீங்கள் மற்றும் குடும்பத்தார் அனைவரின் நலமறிய ஆவல்.

நான் இன்று மிக்க மகிழ்ச்சியில் உள்ளேன். நேற்று வகுப்பு முடிந்து வெளியே வந்து கொண்டிருந்தேன். பள்ளித் திடலில் ஒரு பணப்பை கிடந்தது. அதில் அதிகமான பணம் இருந்தது. பையை எடுத்துச் சென்று தலைமை ஆசிரியரிடம் ஒப்படைத்தேன். பணப்பையை தவற விட்ட அலுவலக ஊழியர் கண்ணீருடன் அங்கு நின்றிருந்தார்.

தலைமையாசிரியர் மிகவும் மகிழ்ந்தார். மறுநாள் காலை வழிபாட்டுக் கூட்டத்தில் என்னை அனைவரது முன்னிலையில் பாராட்டினார். எனது நேர்மையை பாராட்டியதோடு அனைவரும் பாபுவைப் பின்பற்றி வாழ வேண்டும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியை உங்களுடனும், அத்தை, ஆனந்தன், மாலா ஆகியோருடனும் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள,
பாபு

உறைமேல் முகவரி :

பெறுநர் : க.இராமு,
7, வடக்குத் தெரு,
மதுரை - 10.

விடையளிக்க (39)

7. உங்கள் ஊர்த்திருவிழாவில் நடைபெற்ற நிகழ்கலையை நீ கண்டு மகிழ்ந்ததை உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

தளவாய்
16.05.20

அன்புள்ள நண்பன் ராமுவுக்கு,

வணக்கம். நான் இங்கு நலம். நீ மற்றும் உனது குடும்பத்தார் நலமறிய ஆவல். எங்கள் ஊரில் உள்ள புகழ்பெற்ற மாரியம்மன் கோவில் திருவிழா கடந்த வாரம் நடைபெற்றது. அத்திருவிழாவில் கரகாட்டம் மற்றும் தப்பாட்டம் போன்ற நிகழ்கலைகள் நடைபெற்றன. நமது மண்ணின் பெருமையினை பறை சாற்றும் வண்ணம் அக்கலைகள் அமைந்திருந்தன. நவீன தொழில்நுட்பங்களின் காரணமாக பாரம்பரிய கலைகளை நாம் எவ்வளவு இழந்திருக்கிறோம் என்பதை உணர்ந்தேன். மகிழ்ச்சி தரும் அந்நிகழ்கலைகளை வளர்க்க வேண்டியது நமது கடமை. அடுத்த ஆண்டு நடைபெறும் திருவிழாவிற்கு நீ கண்டிப்பாக வரவேண்டும்.

இப்படிக்கு
உன் அன்பு நண்பன்,
பாபு

உறைமேல் முகவரி :

பெறுநர் : க.இராமு,
7, வடக்குத் தெரு,
மதுரை - 10.

8. பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல் - குறித்த செயல்திட்ட வரைவு முறை ஒன்றை உருவாக்கி தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்துக.

அனுப்புநர் :
மாணவர்கள்,
அரசு மேல் நிலைப் பள்ளி,
தளவாய் - 621730.

பெறுநர் :
தலைமை ஆசிரியர்,
அரசு மேல் நிலைப் பள்ளி,
தளவாய் - 621730.

ஐயா,

பொருள் : பள்ளித் தூய்மை குறித்த செயல்திட்ட வரைவு - ஒப்புதல் வழங்கி செயல்படுத்த வேண்டுதல் - சார்பு.

வணக்கம். நாங்கள் நமது பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வருகிறோம். கடந்த நான்கு ஆண்டுகளாக நம் பள்ளியை கவனித்து வருகிறோம். அதன் மூலம் நம் பள்ளி மாணவர்களின் கற்றல் அடைவுகளுக்குத் தடையாக இருக்கும் காரணிகளைப் பற்றி ஆய்வு செய்து வந்தோம். அவற்றை ஒரு செயல்திட்டமாக தயாரித்து தங்கள் பார்வைக்கு அனுப்பி உள்ளோம். அதனை ஆய்வு செய்து ஒப்புதல் அளித்து மாணவர்களின் உடல் நலன், கல்வி நலன் ஆகியவற்றை பராமரிக்க பணிவுடன் வேண்டுகிறோம்.

இடம் : தளவாய்
நாள் : 16.05.20

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
மாணவர்கள்

உறைமேல் முகவரி :

பெறுநர் : தலைமை ஆசிரியர்,
அரசு மேல் நிலைப் பள்ளி,
தளவாய் - 621730.

<u>விடையளிக்க (39)</u>

9. புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியை மீட்பு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் ஒன்று எழுதுக.

அனுப்புநர் :

அஅஅ,
வடக்குத் தெரு,
தளவாய்.

பெறுநர் :

மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
அரியலூர்.

ஐயா,

பொருள் : புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியை மீட்க நடவடிக்கை எடுக்கக் கோருதல் - சார்பு.

வணக்கம். நேற்று முன்தினம் வீசிய அகோரப் புயலின் சீற்றத்தாலும், மழை வெள்ளத்தாலும் எங்கள் ஊர் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. பலர் வீடிழந்து, உண்ண உணவின்றி தவித்து வருகிறோம். எல்லா பகுதிகளிலும் வெள்ள நீர் தேங்கி உள்ளதால் நோய்த்தொற்று பரவும் அபாயம் மிகுந்து காணப்படுகிறது. எனவே பாதிப்புக்கு உள்ளான எங்களது பகுதியை மீட்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இடம் : தளவாய் — இப்படிக்கு,
நாள் : 16.05.20 — தங்கள் உண்மையுள்ள,
அஅஅ

உறைமேல் முகவரி :

பெறுநர் : மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
அரியலூர்.

10. உம் ஊருக்கு பேருந்து வசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

அனுப்புநர் :

அஅஅ,
வடக்குத் தெரு,
தளவாய்.

பெறுநர் :

மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
அரியலூர்.

ஐயா,

பொருள் : பேருந்து வசதி செய்து தரக் கோருதல் - சார்பு.

வணக்கம். எங்கள் ஊர் தளவாய். இவ்வூரில் மூவாயிரம் மக்கள் வாழ்ந்து வருகிறோம். எங்கள் ஊரிலிருந்து கல்வி கற்கவும், வேலைக்குச் செல்லவும் பேருந்து வசதியின்மையால் நடந்தே 5 கி.மீ தொலைவு சென்று பக்கத்து ஊரில் பேருந்தினைப் பிடித்து நகரங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் நோய் போன்ற அவசர நிலை ஏற்படின் நாங்கள் படும் துன்பங்கள் சொல்லில் அடங்காதவை. எனவே எங்கள் ஊருக்கு பேருந்து வசதி செய்து தர உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இடம் : தளவாய் — இப்படிக்கு,
நாள் : 16.05.20 — தங்கள் உண்மையுள்ள,
அஅஅ

உறைமேல் முகவரி :

பெறுநர் : மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
அரியலூர்.

விடையளிக்க (39)

11. உம் ஊருக்கு நூலக வசதி வேண்டி பொது நூலகத்துறை இயக்குநருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

அனுப்புநர் :

அஅஅ,
வடக்குத் தெரு,
தளவாய்.

பெறுநர் :

இயக்குநர் ,
பொது நூலகத் துறை,
சென்னை - 600002.

ஐயா,

பொருள் : நூலகம் அமைத்துத் தரக் கோருதல் - சார்பு.

வணக்கம். எங்கள் ஊர் தளவாய். இவ்வூரில் மூவாயிரம் மக்கள் வாழ்ந்து வருகிறோம். ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் உள்ளோம். அன்றாடச் செய்திகளை அறிந்து கொள்ளவும், பொது அறிவை பெருக்கிக் கொள்ளவும், பயனுள்ள வகையில் பொழுதைக் கழிக்கவும் நூலகம் ஒன்றை எங்கள் ஊரில் அமைத்துத் தர ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இடம் : தளவாய்
நாள் : 16.05.20

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
அஅஅ

உறைமேல் முகவரி :

பெறுநர் : இயக்குநர் ,
பொது நூலகத் துறை,
சென்னை - 600002.

12. உம் ஊரில் நடைபெற உள்ள கோயில் திருவிழா நிகழ்ச்சியை தினசரி நாளிதழில் வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் ஒன்று வரைக.

அனுப்புநர் :

அஅஅ,
வடக்குத் தெரு,
தளவாய்.

பெறுநர் :

ஆசிரியர்,
தினமணி நாளிதழ்,
திருச்சி.

ஐயா,

பொருள் : எமது ஊரில் நடைபெற உள்ள கோயில் திருவிழா நிகழ்ச்சி குறித்த செய்தியினை தங்களது நாளிதழில் வெளியிடக் கோருதல் - சார்பு.

வணக்கம். எமது ஊரில் உள்ள புகழ்பெற்ற மாரியம்மன் கோவில் தேர்த்திருவிழா குறித்த செய்தினை தங்களது நாளிதழ் மூலமாக வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். கோவில் திருவிழா நிகழ்ச்சிகள் குறித்த அழைப்பிதழ் ஒன்றை இத்துடன் இணைத்துள்ளேன். எனவே தங்களது செய்தி சேகரிப்பாளரை அனுப்பி வைத்து எமது ஊர் கோவில் திருவிழா பற்றிய செய்திகளை தங்களது நாளிதழில் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இடம் : தளவாய்
நாள் : 16.05.20

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
அஅஅ

இணைப்பு : கோவில் திருவிழா அழைப்பிதழ்.

உறைமேல் முகவரி :

பெறுநர் : ஆசிரியர்,
தினமணி நாளிதழ்,
திருச்சி.

<u>விடையளிக்க (39)</u>

*13. நிகழ்வுகளைத் தொகுத்து எழுதுக.*

*மகளிர் நாள் விழா*

*இடம் : பள்ளிக் கலையரங்கம் நாள் : 08.03.2020*

*கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - மாணவத்தலைவரின் நன்றியுரை.*

***<u>மகளிர் நாள் விழா</u>***

***விழா நாள் : 08.08.2019 இடம் : பள்ளிக் கலையரங்கம் மாணவர், ஆசிரியர் கூடுதல்.***

*எம் பள்ளி 08.08.2019 அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. சரியாக மாலை 3.30 மணி அளவில் விழா நிகழ்விடமான பள்ளிக் கலையரங்கிற்குள் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மகிழ்வுடன் வந்து அமர்ந்தனர். சரியாக 4.00 மணிக்கு சிறப்பு விருந்தினர் இதழாளர் கலையரசி வருகை புரிந்தார். மாணவர்கள், ஆசிரியர்கள் மகிழ்வுடன் ஆரவாரம் செய்து கைதட்டி சிறப்பு விருந்தினர் அவர்களை வரவேற்றனர்.*

*<u>தலைமையாசிரியரின் வரவேற்பு :</u>*

*இதழியல் துறையில் பட்டம் பெற்று, பட்டப்படிப்புடன் அச்சுத்துறையில் முதுகலையும் பயின்று, நாளிதழ், வார இதழ் படிப்பவர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்திருக்கும் இதழாளர் திருமதி. கலையரசி அவர்களை வருக! வருக! என வரவேற்கிறேன். ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களையும் இந்நிகழ்விற்கு வரவேற்கிறேன்.*

*<u>இதழாளரின் சிறப்புரை :</u>*

*காரிருள் அகத்தில் கதிரொளி பாய்ச்சுவதும், துயில்பவர்களின் நெஞ்சில் எழுச்சியை ஏற்படுத்துவதும் இதழ்களே என்றால் மிகையில்லை. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்களால் இயலும் என்பதை மகாகவி நமக்கு ஒரு ஊக்க சக்தியாக தந்து சென்றிருக்கிறார்.*

*இப்பள்ளியில் மாணவர்களை விட மாணவிகளே அதிக எண்ணிக்கையில் இருக்கிறீர்கள் என்பதை பார்த்தாலே புரிகிறது. பெண்களே உங்களுக்கு முழுமையான கல்வி கட்டாயம் தேவை. எந்த ஒரு காரணத்திற்காகவும் உங்கள் கல்வியை விட்டுக் கொடுக்காதீர்கள். கல்வியில்லா பெண் களர் நிலம் என்றார் புரட்சிக்கவி. நாம் களர் நிலமாக பயனற்றுப் போக பிறக்கவில்லை.*

*நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், யார்க்கும் அஞ்சாமல் இருப்பது வேண்டும். ஞானச்செருக்கும் உடையவர்களாய், புதிய உலகம் படைக்கும் வலிமை பொருந்தியவர்களாய் பிறந்திருக்கிறோம். எனவே நன்கு படியுங்கள்; புதிய சமுதாயம் படையுங்கள்; புதுமைப் பெண்ணின் மகிழ்வு கண்டு இம்மண்ணுலகு வியக்கட்டும் என்று சிறப்புரை ஆற்றினார்.*

*<u>உறுதிமொழி :</u> விழாவின் ஓர் அங்கமாக மகளிர் நாள் விழா உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டது.*

*<u>நன்றியுரை :</u> பள்ளியின் மாணவத்தலைவர் மோகனா நன்றி கூறினார்.*

*நிறைவாக நாட்டுப்பண்ணுடன் விழா இனிதாக நிறைவேறியது.*

*14. பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மரம் நடு விழாவிற்கு வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும், பெற்றோருக்கும் பள்ளியின் பசுமைப் பாதுகாப்புப் படை சார்பாக நன்றியுரை எழுதுக.*

*<u>நன்றியுரை</u>*

*எம் பள்ளியின் பசுமைப் பாதுகாப்பு படையின் சார்பாக கொண்டாடிக் கொண்டிருக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழாவிற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் நன்றி!*

*எம் அழைப்பிற்கிணங்க, பல அலுவல்களுக்கு மத்தியிலும் தன் நேரத்தை எங்களுக்காக ஒதுக்கித் தந்து, இவ்விழாவை சிறப்பு செய்து கொண்டிருக்கும் வனச்சரக அலுவலர் அவர்களுக்கு எம் நன்றியை உரித்தாக்குகிறோம்.*

*அதுமட்டுமின்றி, மரம் நடுவதற்குத் தேவையான மரக்கன்றுகளைத் தந்து உதவியதற்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*விழாவைச் சிறப்பிக்க வருகை தந்திருக்கும் பெற்றோர்களுக்கும், எம்மை ஊக்குவித்த தலைமை ஆசிரியருக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும், அமைதி காத்த நண்பர்களுக்கும், எம் பசுமைப் பாதுகாப்புப் படை சார்பாக நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி விடைபெறுகிறேன்.*

*நன்றி! வணக்கம்!*

விடையளிக்க (39)

15. உம் ஊருக்கு குடிநீர் வசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

அனுப்புநர் :

அஅஅ,
வடக்குத் தெரு,
தளவாய்.

பெறுநர் :

மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
அரியலூர்.

ஐயா,

பொருள் : குடிநீர் வசதி வேண்டுதல் - சார்பு.

வணக்கம். எங்கள் ஊர் தளவாய். இவ்வூரில் மூவாயிரம் மக்கள் வாழ்ந்து வருகிறோம். இங்கு ஒரே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மட்டுமே உள்ளது. இதில் நிரப்பப்படும் நீர் போதுமானதாக இல்லை. எனவே அதிக கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டியினை அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இடம் : தளவாய் இப்படிக்கு,
நாள் : 16.05.20 தங்கள் உண்மையுள்ள,
அஅஅ

உறைமேல் முகவரி :

பெறுநர் : மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
அரியலூர்.

16. உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டு நலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்குக.

வாழ்த்துரை :

அன்பார்ந்த மாணவர்களே! நாட்டு நலப்பணித்திட்ட தொடக்க விழாவில் உமக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமை கொள்கிறேன்.

மாணவப்பருவத்திலே உங்களுக்கு நாட்டுப்பற்று, சமூக அக்கறை, தொண்டுள்ளம் ஆகியவற்றை வளர்ப்பதற்கே நாட்டு நலப்பணித் திட்ட முகாம் நடத்தப்படுகிறது.

மற்ற மாணவர்களுக்குக் கிடைக்காத பெரிய வாய்ப்பை பெற்றிருக்கும் உங்களை வாழ்த்துகிறேன்.

இக்கிராமத்தைத் தத்தெடுத்து ஒருவார காலம் தங்கியிருந்து , தேவையான அறப்பணிகள் செய்துள்ளீர்.

கோவில் வளாகம் சுத்தம் செய்தல், விழிப்புணர்வுக் கூட்டம் நடத்துதல் (சாலை பாதுகாப்பு, நெகிழி ஒழிப்பு) முதலானவற்றை மேற்கொள்வீர்.

நாளைய சமுதாயத்தின் விடி விளக்குகளாய், சமூக அக்கறை கொண்ட ஆர்வலர்களாய், மனித நேயம் மிக்கவர்களாய் மாறுவீர்கள் என்பதில் ஐயமில்லை.

முழுமனதுடன் சேவை செய்து செயல்வீரர்களாய் திகழ வாழ்த்திப் பாராட்டுகிறேன்.

விடையளிக்க (39)

17. நேர்மைக்கான விருது பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

தளவாய்
16.05.20

அன்புள்ள நண்பன் ராமுவுக்கு,

வணக்கம். நான் இங்கு நலம். நீ மற்றும் உனது குடும்பத்தார் நலமறிய ஆவல்.

உனது நேர்மை மிக்க செயலை கேள்விப்பட்டு மிக்க மகிழ்ச்சியில் உள்ளேன். பள்ளித் திடலில் அதிக பணத்துடன் உள்ள பணப்பையை தலைமை ஆசிரியரிடம் ஒப்படைத்து தலைமையாசிரியர், ஆசிரியர்கள், சக மாணவர்களிடம் பாராட்டு பெற்றதோடு நேர்மைக்கான விருது பெற்ற உன்னை பாராட்ட வார்த்தைகளே இல்லை. உன்னை நண்பனாக அடைந்ததைப் பெருமையாக எண்ணுகிறேன். வாழ்வில் வளம் பல பெற வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு
உன் அன்பு நண்பன்,
பாபு

உறைமேல் முகவரி :

பெறுநர் : க.இராமு,
7, வடக்குத் தெரு,
மதுரை - 10.

18. ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உறவினருக்கு முக்கியச் சாலை விதிகளை விளக்கி, அவற்றைக் கடைபிடிக்க வற்புறுத்திக் கடிதம் ஒன்று வரைக.

தளவாய்
16.05.20

அன்புள்ள மாமாவுக்கு,

வணக்கம். நான், அப்பா, அம்மா, தங்கை அனைவரும் இங்கு நலம். நீங்கள் மற்றும் குடும்பத்தார் அனைவரின் நலமறிய ஆவல்.

தாங்கள் கடந்த வாரம் ஓட்டுநர் உரிமம் பெற்ற செய்தி கேட்டு மகிழ்ந்தேன். ஓட்டுநர் உரிமம் பெற்றால் மட்டும் போதாது. சாலை விதிகள், சாலையில் உள்ள குறியீடுகளை புரிந்து கொள்வதோடு மித வேகத்தோடு, விபத்தில்லா பயணத்தை உறுதி செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இன்றைய சூழலில் நாம் விதிமுறைகளை பின்பற்றினாலும், எதிரில் வருபவர்கள் விதிமுறைகளை பின்பற்றாத சூழல் உள்ளது. எனவே அனைத்து வித சூழல்களையும் எதிர்கொண்டு வெற்றிகரமான ஓட்டுநராக திறம்பட செயலாற்ற வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.


இப்படிக்கு
தங்கள் அன்புள்ள,
பாபு

உறைமேல் முகவரி :

பெறுநர் : க.இராமு,
7, வடக்குத் தெரு,
மதுரை - 10.

விடையளிக்க (40)

காட்சியைக் கண்டு கவினுற கவிதை ஒன்று எழுதுக.



குரங்கு மரத்திற்கு மரம் தாவுவது போல
நாள்தோறும் எதை எதையோ எண்ணி
உனது பெருமைகளை இழக்கிறாய்.
காரணம் உன் அறிவுப்பூட்டு
இன்னும் திறக்கப்படாததே
உன் அறிவுப்பூட்டைத் திற
வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான
செயல்களில் ஈடுபடு உன்
உடலும் உள்ளமும் செழிக்கும்
வாழ்வின் உயர்விடத்தில் இருப்பாய் நீ!



“அடிமை நீங்க
அகிம்சை
சுமந்தோம் ...... நேற்று
அறியாமை அகல
புத்தகப்பை
சுமப்போம் ....... இன்று
நோய்மை நீங்கி
இயற்கைக் காற்றைச் சுமப்போம் ....... நாளை
மானிடா!”



“வறுமையில் வாடிய
எனக்கு
ஒருநாள் கிடைத்தது
நல்லுணவு......
உண்ணும் வேளையில்
நீ வந்தாய்......
பசியால் இணைந்தோம்
பகிர்ந்து உண்ணலாம்
வா! தோழா வா!”

**2. கவிதையைத் தொடர்க.**

தண்ணீர் நிறைந்த குளம்
தவித்தபடி வெளிநீட்டும் கை
கரையில் கைபேசி படமெடுத்தபடி
**பதறுகிறது என் நெஞ்சமடி**
**வருங்கால சமுதாயம் என்னவாகுமடி**
**எப்போது தீரும் செல்ஃபி மோகமடி**
**மூழ்கியவன் மூச்சு நின்னுப்போச்சு**
**மனிதநேயம் செத்துப்போச்சு**




விடையளிக்க (40)


காட்சியைக் கண்டு கவினுற கவிதை ஒன்று எழுதுக.



மாட்டிற்கு......
மூக்கணாங்கயிறு போடும்
மானிடப் பிறவிகளே!
இதோ......
உனக்கு
மூக்கணாங்கயிறு போட
வந்துவிட்டான்
திறன்பேசி நாயகன்''



மரங்கள் பூமியின் ஆடைகள்
அவை சரிகின்ற போதெல்லாம்
பூமித்தாய் துகிலுரியப்படுகிறாள்
மரங்கள் வருண தேவனுக்கும்
பூமித்தாய் காட்டும் பச்சைக் கொடிகள்
உப்புநீரை உண்ணும் நீராய் உருவாக்குகின்ற
விஞ்ஞான கூட்டம்
ஓசோன் படலத்தை ஒட்டையை அடைக்க
ஓடிச்சென்று மரத்தின் கரங்களை
சூரியக் கரங்கள் சுட்டெரித்தால்
உலகமே இங்கு சுடுகாடாச்சி
வெட்ட வெளியில் அமர்ந்து படிக்கும்
அவல நிலைக்கும் காரணமாச்சு
இனி ஒரு விதி செய்வோம்!
பூமிப்பந்தின் வெப்பம் தணிக்க
வீட்டிற்கு ஒரு மரம் உடனே நடுவோம்!
பூமித் தாயின் மானங் காப்போம்!



ஆடுவோம் மேள தாளத்தோடு
பாடுவோம் பம்பை உடுக்கையோடு
வண்ண துணியசைத்து
வட்டமாய் ஆடுவோம்
எண்ணக் கருத்துகளை
எல்லோருக்கும் கூறுவோம்

விடையளிக்க (40)

காட்சியைக் கண்டு கவினுற கவிதை ஒன்று எழுதுக.

**படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக.**

**செய்தி**



பகை கொண்ட வேற்று அரசரை எதிர்த்துப் போரிட்டு பகைவர் நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு செல்கின்றனர். வஞ்சி சூடி 'வென்றே தீர்வோம்' என்று வஞ்சினம் கூறி, நால்வகைப் படைகளுள். முப்படைகள் மட்டுமே முன்னேறிச் செல்கின்றன. காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை மூன்றும் முன்னேறிச் சென்று வெற்றி வாகை சூடப் போகிறது. இப்படம் 17ம் நூற்றாண்டுச் சுவரோவியம் ஆகும்.



கிழக்கு வெளுத்தது
பொழுது புலர்ந்தது
அரைகுறை உறக்கத்திலும்
எழுந்தான் எழுச்சியோடு
தோளிலே ஒற்றினான் ஏரினை
சந்ததிகள் செழித்து வளர
பசித்தவனுக்குப் பசியாற்ற.....
யாவர்க்கும் தேவாமிர்தமாம்
உணவைப் படைக்க
புறப்பட்டு விட்டான்.
அரை நிர்வாணத்தோடு.....



"மனம் நொந்து மறுகி
கேட்கவும் நா எழாது
வாழவும் வகை யறியாது
இரத்தலே வழி என்பதை
இறுதி முடிவு ஆக்கி
"ஈயென" இரத்தல் கொடிது
இரக்கத்துடன் ஈவாரைத்
தடுத்தல் அதனினும் கொடிதன்றோ"



அறம் என்பது
வலக்கைக் கொடுப்பது
இடக்கைக்குத் தெரியக்கூடாது - இது
தர்மத்தின் வேர்
அறமும் நியதியும்
அக்காலமும் இக்காலமும் உண்டு
தர்மம் செய்வது விளம்பரமல்ல
தாழ்ந்தோர் உயர்வு பெற
சுயப்படம் எடுத்து
வலைதளம் அனுப்பும்
வழக்கமே இன்று அறமா?

படிவம் நிரப்புதல் (41)

1. தட்டச்சர் பணிவாய்ப்பு வேண்டித் தன்விவரப் பட்டியல் ஒன்றை நிரப்புக.

## பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புதல்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | க.பாபு |
| 2. | பாலினம் | : | ஆண் |
| 3. | பிறந்த நாள் மற்றும் வயது | : | 29.09.1998 - 22 |
| 4. | தேசிய இனம் | : | இந்தியன் - இந்து |
| 5. | பெற்றோர் / பாதுகாவலர் பெயர் | : | கந்தன் - கல்பனா |
| 6. | வீட்டு முகவரி | : | 16, வடக்குத் தெரு, தளவாய் - 621730. |
| 7. | தொலைபேசி / அலைபேசி எண் | : | 9942165494 |
| 8. | பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் | : | 425 |
| 9. | தாய்மொழி | : | தமிழ் |
| 10. | பயின்ற மொழிகள் | : | தமிழ், ஆங்கிலம் |
| 11. | தட்டச்சு | : | உயர்நிலை |
| 12. | கணினி | : | அடிப்படை & டேலி |

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதிகூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் தட்டச்சர் பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள

க.பாபு

இடம் : தளவாய்

நாள் : 16.05.2020

<u>படிவம் நிரப்புதல் (41)</u>

2. நூலக உறுப்பினர் படிவம் நிரப்புக.

**நூலக உறுப்பினர் படிவம்**

## அரியலூர் மாவட்ட நூலக ஆணைக்குழு

~~மைய / கிளை /~~ ஊர்ப்புற நூலகம் தளவாய்

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் — உறுப்பினர் எண்

1. பெயர்: க.பாபு
2. தந்தை பெயர்: கந்தன்
3. பிறந்த தேதி: 29.09.2005
4. வயது: 15
5. படிப்பு: பத்தாம் வகுப்பு
6. தொலைபேசி எண்: 9942165494
7. முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்): 16, வடக்குத் தெரு, தளவாய் - 621730, அரியலூர் மாவட்டம்.

நான் ஊர்ப்புற நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. 50/-, சந்தா தொகை ரூ. 25/- ஆக மொத்தம் ரூ. 75/- ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : தளவாய்

நாள் : 16.05.2020

தங்கள் உண்மையுள்ள

க.பாபு

~~திரு / திருமதி / செல்வி /~~ செல்வன் க.பாபு அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

அலுவலக முத்திரை

பிணைப்பாளர் கையொப்பம்
(பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

படிவம் நிரப்புதல் (41)

3. மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவம் ஒன்றை நிரப்புக.

**மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

சேர்க்கை எண்: தேதி: 10.06.2020 வகுப்பும் பிரிவும்: +1, ஆ

1. மாணவ / மாணவியின் பெயர் : க.பாபு
2. பிறந்த தேதி : 29.09.2004
3. தேசிய இனம் : இந்தியன் - இந்து
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : கந்தன் - கல்பனா
5. வீட்டு முகவரி : 16, வடக்குத் தெரு, தளவாய் - 621730.
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : பத்தாம் வகுப்பு
7. பயின்ற மொழி : தமிழ்
8. பெற்ற மதிப்பெண்கள் : 425
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : அ.மே.நி.பள்ளி, தளவாய் - 621730.

| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்புச் சான்றிதழ் | 1718191 மார்ச்சு - 2020 | தமிழ் | 88 |
| | | ஆங்கிலம் | 77 |
| | | கணிதம் | 90 |
| | | அறிவியல் | 92 |
| | | சமூக அறிவியல் | 78 |
| | | மொத்தம் | 425 |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம்
11. தாய்மொழி : தமிழ்
12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும் : அறிவியல் - தமிழ்

மாணவ / மாணவியின் கையெழுத்து
க.பாபு

படிவம் நிரப்புதல் (41)

4. தடகள விளையாட்டுப் பயிற்சி உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை**

**விண்ணப்பப் படிவம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாணவரின் பெயர் | : | க.பாபு |
| 2. | பாலினம் | : | ஆண் |
| 3. | பிறந்த நாள் | : | 29.09.2005 |
| 4. | தேசிய இனம் | : | இந்தியன் - இந்து |
| 5. | இரத்த வகை | : | பி + |
| 6. | உயரம் மற்றும் எடை | : | 150 செ.மீ - 50 கி.கி |
| 7. | பெற்றோர் / பாதுகாவலர் பெயர் | : | கந்தன் - கல்பனா |
| 8. | வீட்டு முகவரி | : | 16, வடக்குத் தெரு, தளவாய் - 621730. |
| 9. | தொலைபேசி / அலைபேசி எண் | : | 9942165494 |
| 10. | இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு | : | பத்தாம் வகுப்பு |
| 11. | பள்ளியின் முகவரி | : | அ.மே.நி.பள்ளி, தளவாய் - 621730. |
| 12. | சேரவிரும்பும் விளையாட்டு | : | கோ - கோ |

சேர்க்கை எண்:

மாணவரின் கையெழுத்து
க.பாபு

இடம் : தளவாய்

நாள் : 16.05.2020

பெற்றோர் / பாதுகாவலரின் கையெழுத்து
மு.கந்தன்

வினாவுக்கு விடையளி (42)

1. நாம் மற்றவர்களிடம் இன்சொல் பேசினால் என்ன விளையும்? தீய சொற்கள் பேசினால் என்ன விளையும்? இரண்டிற்கும் ஐந்தைந்து விளைவுகளை எழுதுக?

இன்சொல் பேசினால் :

1. பிறர் மனம் மகிழும். 2. அறம் வளரும். 3. புகழ் பெருகும்.
4. நல்ல நண்பர்கள் சேருவர். 5. அன்பு நிறையும்.

தீயசொல் பேசினால் :

1. பிறர் மனம் வாடும். 2. அறம் தேயும். 3. இகழ் பெருகும்.
4. நல்ல நண்பர்கள் விலகுவர். 5. பகைமை நிறையும்.

2. இன்சொல் வழி, தீயசொல் வழி - இதில் உங்கள் வாழ்க்கையில் பின்பற்றும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?

நாங்கள் இன்சொல் வழியையே பின்பற்றுவோம். எங்கள் நண்பருக்கும் அவ்வழியையே காட்டி அவர்களையும் அவ்வழியின் படி நடக்கச் சொல்வோம்.

3. புயல் அறிவிப்பைக் கேட்ட நீங்கள் உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

புயலின் போது வெளியே செல்ல மாட்டேன்.
தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்பேன்.
மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப்பகுதியில் குடும்பத்தாரோடு தங்குவேன்.
காற்றடிப்பது நின்றாலும் வானொலி அறிவிப்பைக் கேட்டு அதற்கேற்ப செயல்படுவோம்.

4. தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி, திறன்பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை, காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன், எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி...

இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல், கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியலிடுக. **(அல்லது)**

தொலைபேசியில் மூழ்கி இருக்கும் உன் நண்பனைத் திருத்துவதற்கான வழிமுறைகளை எழுதுக.

குழு மனப்பான்மையை வளர்க்கும் கபடி போன்ற விளையாட்டுகளை விளையாடச் செய்வோம்.
கோலி, பம்பரம் போன்ற விளையாட்டுகளை விளையாடச் செய்வோம்.
பெண்கள் பாண்டி, பல்லாங்குழி, கழங்கு முதலிய விளையாட்டுகளை விளையாடுவதால் உடலும், மனமும் புத்துணர்வு பெறும்.
உலக நிகழ்வுகளைக் கலந்துரையாடல் மூலம் தெரிந்து கொள்ளச் செய்வோம்.
ஆர்வமூட்டும் பிற கலைச் செயல்பாடுகளில் ஈடுபடச் செய்வதன் மூலமாக நேர்மறை விளைவுகளைப் பெறுவோம்.

5. தமிழக பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விரும்புவனவற்றை வரிசைப்படுத்தி எழுதுக.

பிறந்த நாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன்.
எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன்.
திருமண விழாக்களில் பொய்க்கால் ஆட்டத்தை நடத்துவேன்.
விளையாட்டு விழாக்களில் புலியாட்டம் நடத்த ஏற்பாடு செய்வேன்.
கோவில் திருவிழாக்களில் கரகாட்டம், காவடியாட்டம் முதலிய கலை நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்வேன்.
விடுமுறை காலங்களில் தெருக்கூத்து நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்வேன்.

6. நாம் வாழ்வில் இதுகாறும் கற்ற அறங்கள் கைகொடுக்க வேண்டாமா? மாணவ நிலையில் நாம் செய்ய வேண்டிய அறங்கள் எவை? அவற்றால் ஏற்படும் நன்மைகள் எவை எவையென பட்டியலை நிறைவு செய்க.

**(அல்லது)**

மாணவர் நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும், அதனால் ஏற்படும் நன்மைகளையும் பற்றி எழுதுக.

| நாம் செய்ய வேண்டுவன | - | அறங்கள் தரும் நன்மைகள் |
|---|---|---|
| 1. நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல் | - | நல்ல நண்பர்களைப் பெறலாம். எதிரியையும் நண்பராக்கலாம். |
| 2. ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் - பேசாதிருத்தல் | - | தேவையற்ற சண்டையைத் தவிர்த்து அனைவருடனும் அன்பாய் வாழலாம். |
| 3. பழி வாங்கும் எண்ணத்தைக் கைவிடல் | - | மனஅமைதி பெறலாம். நண்பரிடத்தும், உறவினரிடத்தும் நற்பெயர் பெறலாம். |
| 4. பொய் தவிர்த்து உண்மை பேசுதல் | - | உண்மை நம் வாழ்வை உயர்த்தும். அச்சமின்றி வாழலாம். |

வினாவுக்கு விடையளி (42)

7. ஒவ்வொரு சூழலிலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தபடி இருக்கிறார்கள்; உதவி பெற்றபடியும் இருக்கிறார்கள்; சில உதவிகள் அவர்கள் மீதுள்ள அன்பினால் செய்கிறோம். தொடர்வண்டியில் பாட்டுப் பாடிவரும் ஒருவருக்கு நம்மையறியாமல் பிச்சை போடுகிறோம். தொல்லை வேண்டாம் என்று கருதி வேண்டாவெறுப்போடு சில இடங்களில் உதவி செய்கிறோம்.

**நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை**

**உதவிகள்**

1. வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவிய போது....
2. உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவிய போது...
3. பேருந்தில் பயணம் செய்த போது உடன் பயணம் செய்த முதியவருக்குப் பயணச்சீட்டு எடுத்துக் கொடுத்து உதவிய போது...
4. ஒருவேளை உணவு வழங்கிய போது....

மனநிலை

1. இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு; அவருக்கு மகிழ்ச்சி!
2. கல்லூரிப் படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு!
3. மனநிறைவு, அவரது முகத்தின் அமைதியும், மகிழ்ச்சியும் என்னை மகிழச் செய்தது.
4. பசிப்பிணி தீர்த்த மகிழ்ச்சி ஏற்பட்டது.

8. பாடலைப் படித்து பாடல் எழுந்த சூழலை எழுதுக.

பாடல்

பாடறியேன் படிப்பறியேன் - நான்தான்
பள்ளிக்கூடம் தானறியேன்
ஏடறியேன் எழுத்தறியேன் - நான்தான்
எழுத்துவகை தானறியேன்
படிக்க நல்லா தெரிஞ்சிருந்தா - நான்தான்
பங்காளிய ஏன் தேடுறேன்
எழுத நல்லா தெரிஞ்சிருந்தா - நான்தான்
எதிராளிய ஏன் தேடுறேன்
நாலெழுத்துப் படிச்சிருந்தா - நான்தான்
நாலு தேசம் போயிருப்பேன்
நாலு பக்கம் வரப்புக்குள்ள - தெனமும்
நான் பாடுறேன் தெம்மாங்குதான்.

பாடல் எழுந்த சூழல்

**வரப்புகளுக்கு இடையே நின்று வயலில் வேலை செய்யும் விவசாயி ஒருவன் தனக்கு கல்வியறிவு இல்லாத காரணத்தினால் தான் படும் துன்பத்தை எண்ணி வருத்தத்துடன் பாடிக் கொண்டே தன் வேலையைச் செய்கிறான்.**

9. கவிதைகளை ஒப்பிட்டுக் கருத்துரைக்க.

| கவிசக்கரவர்த்தி | - | கவியரசு |
|---|---|---|
| நதியின் பிழையன்று | - | நதிவெள்ளம் காய்ந்து விட்டால் |
| நறும்புனலின்மை அன்றே | | நதிசெய்த குற்றம் இல்லை |
| பதியின் பிழையன்று | | விதிசெய்த குற்றம் இன்றி |
| பயந்த நம்மைப் புரந்தான் | | வேறு - யாரம்மா! |
| மதியின் பிழையன்று | | |
| மகன் பிழையன்று மைந்த | | |
| விதியின் பிழை நீ | | |
| இதற்கென்னை | | |
| வெகுண்டதென்றன் | | |

**நதியின் பிழையன்று....**

**இராமன் கானகம் செல்ல வேண்டும் என்றவுடன் இலக்குவன் சினம் கொண்டான். அண்ணனை கானகம் போகச் சொல்லிவிட்டீர்களே, விதிக்கு விதி காரணம் என் வில்லினால் அனைவரையும் அழிப்பேன் என்று ஆவேசப்பட்ட இலக்குவனனைத் தடுத்து நிறுத்தி இராமன் கூறியது இது.**

<u>வினாவுக்கு விடையளி (42)</u>

நதியின் பிழை எதுவும் அல்ல நல்ல தண்ணீர் இல்லாதது.

நறும்புனல் இன்மை என்பது, நதியில் நீர் இருக்கிறது. ஆனால் நல்லதாக இல்லை. அதுபோல நான் கானகம் செல்வது தசரதன் பிழையும் அன்று. அன்போடு நம்மை வளர்த்த கைகேயின் மதியின் பிழையும் அன்று.

பரதன் பிழையும் இதில் இல்லை. விதியின் பிழை. நீ ஏன் இதற்காகக் கோபப்படுகிறாய். சினமும் வேகமும் தவிர்.

<u>நதிவெள்ளம் காய்ந்து விட்டால்...</u>

கண்ணதாசனின் பாடல் உணர்த்துவதும் விதியைத் தான்.

தவறு செய்யாத நாயகன் மீது பழி சுமத்தப்படும் சூழலில் மானுடர் உள்ளங்களில் இருக்கும் நற்பண்புகள், மனசாட்சி, உண்மை, பொய் அறிதல் வற்றிவிடுகிறது.

நதி வற்றி விட்டால் அது நதியின் குற்றம் அல்ல. விதியின் குற்றமே.

அதைப் போலவே மானுடர் பண்புகள் மாற்றம் பெற்று நாயகன் மீது சுமத்தப்பட்ட பழி பாவங்களுக்கு விதி செய்த பிழையேயன்றி வேறு யாருமில்லை என்பதை கண்ணதாசன் கூறியுள்ளார்.

10. கவிதையை உரையாடலாக மாற்றுக.

மகள் சொல்கிறாள்

அம்மா என் காதுக்கொரு தோடு - நீ
அவசியம் வாங்கி வந்து போடு!
சும்மா இருக்க முடியாது - நான்
சொல்லி விட்டேன் உனக்கு இப்போது

தாய் சொல்கிறாள்

காதுக்கு கம்மல் அழகன்று - நான்
கழறுவதைக் கவனி நின்று
நீதர் மொழியை வெகுபணிவாய் - நிதம்
நீ கேட்டு வந்து காதில் அணிவாய்!

பின்னும் மகள்

ஆபரணங்கள் இல்லையானால் - என்னை
யார் மதிப்பார் தெருவில் போனால்?
கோபமோ அம்மா இதைச் சொன்னால் - என்
குறை தீர்க்க முடியும்.

அதற்குத் தாய்

கற்பது பெண்களுக்கு ஆபரணம் - கெம்புக்
கல்வைத்த, நகைதீராத ரணம்!
கற்ற பெண்களை இந்த நாடு - தன்
கண்ணில் ஒற்றிக்கொள்ளும் அன்போடு

<u>கவிதையை உரையாடலாக மாற்றுதல்</u>

மகள் : அம்மா! என் காதுக்கொரு தோடு வாங்கித் தாங்கம்மா! தோடு இல்லாமல் வெறுங்காதோடு என்னால் இருக்க முடியாது... சொல்லி விட்டேன்.

தாய் : காதுக்கு தங்கக் கம்மல் மட்டுமே அழகு கிடையாது. நான் சொல்வதைக் கவனித்து பணிவான சொற்களையும், நல்ல கருத்துகளையும் உன் காதுகளுக்கு அணியாக அணிந்து கொள்.

மகள் : அணிகலன்கள் இல்லாமல் தெருவில் போனால் என்னை யார் தான் மதிப்பார்? இதைச் சொன்னால் உனக்கு கோபம் வருகிறது. என் குறையை நீக்க மாட்டாய்....

தாய் : கல்வி தான் பெண்களுக்கு உண்மையான அணிகலன்; மாணிக்கக்கல் வைத்த அணிகலன் தீராத ரணத்தையே தரும் மகளே; கல்வி என்னும் அணிகலன் அணிந்த பெண்களை இந்த நாடு கண்ணுக்குள் வைத்துப் போற்றும் என்பதை உணர்ந்து கொள்.

11. வீட்டிலும், பள்ளியிலும் நீங்கள் நடந்து கொள்ளும் விதங்கள் ஐந்தினைப் பட்டியலிடுக.

<u>பள்ளியில் நான் :</u> 1. நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன்.
2. பாடத்தைக் கூர்ந்து கவனிப்பேன். 3. சக மாணவர்களின் திறமைகளை பாராட்டுவேன்.
4. நண்பர்களுக்கு உதவி செய்வேன். 5. பள்ளித் தூய்மை பராமரிப்பேன்.

<u>வீட்டில் நான் :</u> 1. வீட்டு வேலையை உரிய நேரத்தில் செய்வேன்.
2. பெற்றோர் கூறுவதைக் கூர்ந்து கவனிப்பேன்.
3. சகோதர, சகோதரிகளின் திறமைகளை பாராட்டுவேன்.
4. வீட்டு வேலைகளில் உதவி செய்வேன். 5. வீட்டுத் தூய்மை பராமரிப்பேன்.

<u>மொழி பெயர்க்க (42)</u>

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart – **Nelson Mandela**

*நீங்கள் ஒரு மனிதரிடம் பேசினால் அது அவரின் அறிவைச் சென்றடைவதால் அவர் புரிந்து கொள்கிறார். நீங்கள் அவருடைய சொந்த மொழியில் பேசினால், அது அவருடைய இதயத்தைத் தொடும். - நெல்சன் மண்டேலா.*

Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going – **Rita Mae Brown**

*மொழி என்பது பண்பாட்டின் வழிகாட்டி. அது மக்கள் எங்கே இருந்து வந்தார்கள், எங்கே செல்கிறார்கள் என்பதனைக் கூறும். - ரீட்டா மே பிரவுன்.*

2. The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows every where and makes everything pleasant.

*பொன்னான சூரியன் தினமும் காலையில் எழுந்து அதன் ஒளிக்கதிர்களை வீசி, இருளை மறையச் செய்யும். பால் போன்ற மேகங்கள் சுற்ற ஆரம்பித்து விடும். வண்ணப்பறவைகள் இதமான சூழ்நிலையை தன் இறகுகளை அடிப்பதன் மூலம் உருவாக்கும். அழகான வண்ணத்துப்பூச்சி மலர்களைச் சுற்றி ஆடும். பூக்களின் நறுமணம் தென்றல் காற்றை நிரப்பும். அந்தக் காற்று அனைத்து இடங்களிலும் பரவி ஒரு புத்துணர்வான சூழ்நிலையை உருவாக்கும்.*

3. Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

*மரியாதைக்குரியவர்களே! என் பெயர் இளங்கோவன். நான் பத்தாம் வகுப்பில் படிக்கிறேன். நான் தமிழ்க் கலாச்சாரத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வந்திருக்கிறேன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கலாச்சாரத்திலும், நாகரீகத்திலும் சிறந்து விளங்கியவர்கள் தமிழர்கள் என்று சங்க இலக்கியம் கூறுகிறது. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழரே வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்தனர். தமிழர்களின் கலாச்சாரம் இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகமெங்கும் உள்ள தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தில் வேரூன்றி உள்ளது. நம் கலாச்சாரம் பழமையானதாக இருந்தாலும் அது சீரான முறையில் தன்னை மேம்படுத்தி வருகிறது. நாம் நம் கலாச்சாரத்தைப் பற்றி பெருமிதம் கொள்ள வேண்டும். அனைவருக்கும் நன்றி!*

4. Malar: Devi, switch off the lights when you leave the room.

Devi: Yeah. We have to save electricity.

Malar: Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.

Devi: Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

Malar: I have read some other countries are going to launch these types of illumination satellites near future.

Devi: Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power!

*மலர் :* தேவி, நீ அறையை விட்டு வெளியே செல்லும் முன் விளக்கை அணைத்து விடு.

தேவி : ஆம். நாம் மின்சாரத்தைச் சேமிக்க வேண்டும்.

*மலர் :* நம் நாடு தெரு விளக்குகளை எரிய வைப்பதற்கு நிறைய மின்சாரத்தைச் செலவு செய்கிறது.

தேவி : *யாருக்குத் தெரியும்? வருங்காலத்தில் நம் நாடு செயற்கை நிலாவை நிறுவி இரவில் வானத்தில் வெளிச்சத்தை ஏற்படுத்தலாம்.*

*மலர் :* *வருங்காலத்தில் மேலும் சில நாடுகள் இவ்வகையான செயற்கைக் கோலை நிறுவ இருப்பதாக நான் வாசித்துள்ளேன்.*

தேவி : *நல்ல செய்தி! நாம் செயற்கை நிலவை நிறுவினால், அது பேரழிவு மற்றும் மின்சாரம் இல்லாத சமயத்தில் ஒளியூட்டி நிவாரணம் அளிக்கும்.*

<u>மொழி பெயர்க்க (42)</u>

5.

It's like new lute music
Wondering at the lute music
Coming from the chamber
Entered I to look up to in still
My grand-daughter
Learning by rote the verses
Of a didactic compilation.
Translated by Kavignar Desini

<u>யாழிசை</u>
அறைக்குள் யாழிசை
ஏதென்று சென்று
எட்டிப் பார்த்தேன்;
பேத்தி,
நெட்டுருப் பண்ணினாள்
நீதிநூல் திரட்டையே.
- பாரதிதாசன்

It gave Valluva the Great
For all the world to have;
And the fame rose sky high
Of our Tamil – Land
It made a necklace of gems,
Named 'The Lay of the Anklet'
Which grips enraptured hearts
In our Tamil – Land.
- The voice of Bharati

வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி
யாரம் படைத்த தமிழ்நாடு (செந்தமிழ்)
- பாரதியார்

6. Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

தெருக்கூத்து அதன் பெயருக்கு ஏற்றார்போல் தெருவில் நடக்கும் ஒரு மிகச் சிறந்த கலை. இதில் கிராமப்புற கலைஞர்கள் பங்கேற்கிறார்கள். இந்தக் கதைகள் பழங்காவியமான இராமாயணம், மகாபாரதம் மற்றும் பழைய புராணங்களில் இருந்து எடுக்கப்படுகிறது. இதில் பாடல்களை உரையாடலுடன் கலைஞர்கள் உருவாக்குகிறார்கள். பதினைந்து முதல் இருபது கலைஞர்கள் சிறிய இசைக்குழுவாக சேர்ந்தது தான் தெருக்கூத்துக் கூட்டம். இசைக்குழுவில் சில பாடகர்கள் இருந்தபோதும் கலைஞர்கள் தங்கள் சொந்தக் குரலிலேயே பாடுவார்கள். கலைஞர்கள் மிகச் சிறந்த உடையலங்காரமும், ஒப்பனையும் செய்திருப்பர். கிராமப்புறங்களில் கூத்து மிகவும் பிரபலமானது.

7. Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The properity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils.

பண்டைய சங்க இலக்கிய காலத்தில், பூகோள அடிப்படையில் தமிழ்நாடு ஐந்து வகையாக இருந்தது. அவற்றுள் மருத நிலப்பகுதியே உழவுத் தொழிலுக்கு ஏற்றதாய் இருந்தது. அந்த நிலப்பகுதியில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேவையான பருவ காலங்கள் சிறந்திருந்தன. தேவையான சூரிய வெப்பம், வளமான நிலம், போதுமான அளவு மழையும் இருந்தது. அதனால் விவசாயம் செழித்தது. மருத நிலத்தின் இயற்கைக் கூறுகளாலும், போதுமான சூரிய வெப்பத்தினாலும் பழந்தமிழகத்தில் மருத நிலத்தில் உழவுத் தொழில் சிறந்திருந்தது.

மொழி பெயர்க்க (42)

8. Once upon a time there were two beggars in Rome. The first beggar used to cry in the streets of the city, "He is helped whom God helps". The Second beggar used to cry, "He is helped who the king helps". This was repeated by them everyday. The Emperor of Rome heard it so often that he decided to help the beggar who popularized him in the streets of Rome. He ordered a loaf of bread to be baked and filled with pieces of gold. When the beggar felt the heavy weight of the bread, he sold it to his friend as soon as he met him. The latter carried it home. When he cut the loaf of bread he found sparkling pieces of gold. Thanking God, he stopped begging from that day. But the other continued to beg through the city. Puzzled by the beggar's behaviour, the Emperor summoned him to his presence and asked him, "What have you done with the loaf of bread that I had sent you lately?" The man replied, "I sold it to my friend, because it was heavy and did not seem well baked" Then the Emperor said, "Truly he whom God helps is helped indeed," and turned the beggar out of his palace.

*முன்பொருநாள் ரோம் நகரில் இரண்டு பிச்சைக்காரர்கள் இருந்தனர். முதல் பிச்சைக்காரன் கடவுள் எப்படியாவது, யார் மூலமாவது எனக்கு உதவுவார் என்று கண்ணீர் விட்டான். இரண்டாம் பிச்சைக்காரன் மன்னனைப் புகழ்ந்து பாடினால் மன்னன் தன்னைக் காப்பான் என்றான். தினமும் இருவரும் இப்படியே சொல்லிக் கொண்டு இருந்தார்கள். ரோம் அரசர் தன்னைப் பற்றிப் பேசிப் புகழ்ந்து, எப்படியாவது நான் பாதுகாப்பேன் என்று நம்புகிற பிச்சைக்காரனுக்கு உதவ விரும்பினார். நீளமான ரொட்டிப் பொட்டலத்தில், ரொட்டித் துண்டுகள் நடுவே சில பொற்காசுகளை வைத்துக் கொடுத்தான். இரண்டாம் பிச்சைக்காரன் ரொட்டித் துண்டு கனமாக இருக்கிறது; விற்றால் பணம் சம்பாதிக்கலாம் என்று முதல் பிச்சைக்காரனிடம் விற்று விடுகிறான். இப்படியே ரொட்டித் துண்டை தினமும் விற்கிறான். அதனை வாங்கும் முதலாம் பிச்சைக்காரன் ரொட்டித்துண்டை வெட்டிப் பார்த்தால் தினமும் பொற்காசுகள் மின்னின. தினமும் கடவுளுக்கு நன்றி சொல்லி பொற்காசுகளை எடுத்து சேர்த்து வைத்தான். பிச்சை எடுப்பதை நிறுத்தி விடுகிறான். இரண்டாம் பிச்சைக்காரன் தொடர்ந்து வீதிகளில் பிச்சை எடுத்துக்கொண்டே இருக்கிறான். மன்னன் அவனை அழைத்து நான் கொடுத்த ரொட்டிப் பொட்டலங்களை என்ன செய்தாய் என்று கேட்டார். அது எடுத்துச் செல்ல கனமாக இருந்தபடியால் என் பிச்சைக்கார நண்பனிடம் விற்று விட்டேன் என்றான். மன்னர் தனக்குள் நினைத்துக் கொண்டார், கடவுள் தன்னைத் தேடுபவர்களுக்கு உண்மையில் யார் மூலமாவது உதவுகிறார். இரண்டாம் பிச்சைக்காரனிடம் திரும்பி சரி நீ போகலாம் என்று அரண்மனையிலிருந்து வெளியேறச் சொன்னார்.*

9.

1. Education is what remains after one has forgotten what one has learned in School. – Albert Einstein

   *பள்ளியில் கற்றதை ஒருவன் மறந்தபின் மிஞ்சி இருப்பதே கல்வி - ஆல்பர்ட் ஐன்ஸ்டின்*

2. Tomorrow is often the busiest day of the week. – Spanish Proverb

   *நாளை தான் எப்பொழுதுமே வாரத்தின் பரபரப்பான நாளாக இருக்கும். - ஸ்பானிஷ் பழமொழி*

3. It is during our darkest moments that we must focus to see the light. – Aristotle

   *நம் வாழ்வின் இருளான பொழுதுகளின் போதுதான் ஒளியைக் காண பார்வையைச் செலுத்த வேண்டும். - அரிஸ்டாட்டில்*

4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.

   *வெற்றியே முடிவானதல்ல. தோல்வியும் முடிவல்ல. தொடருவதற்கான தைரியமே கணக்கில் கொள்ளப்படும். - வின்ஸ்டன் சர்ச்சில்.*

விரிவாக விடையளி (43)

1. தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

சொல் வளம் :

இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொது எனினும், தமிழ் மட்டும் அதில் தலை சிறந்ததாகும்.
தமிழ்ச்சொல் வளத்தைப் பலதுறைகளிலும் காணலாம்.
ஒரு பொருட் பல சொல் வரிசைகள் தமிழைத் தவிர வேறு எந்த திராவிட மொழிகளின் அகராதிகளிலும் காணப்படவில்லை.
பிற திராவிட மொழிகளுக்கு உரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள என்கிறார் கால்டுவெல்.

சொல்லாக்கத்தின் தேவை :

சொல்லாக்கத்திற்கான தேவை என்பது அதன் பயன்பாட்டு முறையைக் கொண்டே அமைகிறது.
இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கேற்ப நூல்களைப் புதிய சொல்லாக்கத்துடன் படைத்தல் வேண்டும்.
இலக்கிய மேன்மைக்கும் மக்கள் அறிவுடையவர்களாக உயர்வதற்கும் புதிய சொல்லாக்கம் தேவை.
மொழி என்பது உலகின் போட்டி போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். அக்கருவி காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும்.
தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்க தமிழில் புதிய சொல்லாக்கம் தேவை.
உலகின் பிற ஆய்வுச் சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி எழுதும் போது பிறமொழி அறியா தமிழனும் அச்சிந்தனைகள் குறித்து அறிந்து கொள்ள முடியும்.
மொழியே கலாச்சாரத்தின் வழிகாட்டி. ஆகவே மொழியின் மூலம் கலாச்சாரத்தை நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவை.
மக்களிடையே பரந்த மனப்பான்மையையும் விரிவான ஆளுமையையும் நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவைப்படுகிறது.
பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தால் தமிழின் இனிமை குறையும். அத்துடன் தமிழ்ச் சொற்கள் நாளடைவில் மறைந்து அயல்மொழிச் சொற்களே நிலைபெற்றிட வாய்ப்புகள் உள்ளன.
இத்தகைய நிலை ஏற்படாதிருக்க தமிழில் புதிய சொல்லாக்கம் தேவை.
தமிழின் தனித்தியங்கும் தன்மை மாறாமலிருக்கவும் சொல்லாக்கம் அவசியமான ஒன்று.
தமிழுக்குச் சிறந்த எதிர்காலம் வேண்டுமாயின் புதிய சொல்லாக்கம் தேவை.

2. மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே - வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்தஇளந் தென்றலே - வளர்
பொதிகை மலைதோன்றி மதுரைநகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும், கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

காற்றைப் பாராட்டல் :

மலர்ந்தும் மலராத பாதி மலரையும், விடிந்தும் விடியாத காலைப் பொழுதையும் விரும்பாதார் எவருமில்லை. அனைவரும் காற்றாகிய உன்னை, நீ இளந்தென்றலாக வரும் போது விரும்புவர் எனக் குறிப்பிட்டுள்ளார் கண்ணதாசன். காற்றானது நதிகளை வருடியும், செடி கொடிகளை வருடியும் இளந்தென்றலாக வருகிறது. காற்றைப் போலவே தமிழும் அனைவராலும் விரும்பத்தக்கதாய் இருக்கிறது. தெற்கிலுள்ள பொதிகை மலையில் தோன்றிய தமிழுக்கு மதுரையிலே சங்கம் வைத்து அழகிய தமிழ் வளர்த்ததாகவும் கருத்து கொள்ளலாம்.

மோனை நயம் :

| | |
|---|---|
| சீர் மோனை : | வளரும், விழி, வண்ணமே, வந்து<br>மலை, மதுரை |
| அடி மோனை : | விடிந்தும், விளைந்த |
| எதுகை நயம் : | நதியில், பொதிகை |
| முரண் நயம் : | மலர்ந்தும் - மலராத<br>விடிந்தும் - விடியாத |
| இயைபு நயம் : | வண்ணமே, அன்னமே, மன்றமே |
| அணி நயம் : | இப்பாடலில் உவமையணி மற்றும் இயல்பு நவிற்சியணி என பல அணிகள் அமைந்துள்ளன. |
| பொருள் நயம் : | காற்றோடு தமிழையும் சிறப்பித்து நல்ல பொருள் நயத்தோடு இப்பாடல் எழுதப்பட்டுள்ளது. |

விரிவாக விடையளி (43)

3. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

**(அல்லது)**

நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் உங்கள் வீட்டிற்கு வருகிறார். நீங்கள் அவரை எதிர்கொண்டு விருந்து அளித்த நிகழ்வினை விரிவாக ஒரு கட்டுரை எழுதுக.

வரவேற்பு வார்த்தைகள் :

வீட்டிற்கு வந்த உறவினர்களிடம் வாருங்கள், அமருங்கள், நலமா?, நீர் அருந்துங்கள், குடும்பத்தினர் அனைவரும் நலமா? என சில வார்த்தைகளைக் கூறி முகமலர்ச்சியுடன் விருந்தினரை வரவேற்றேன்.

அறுசுவை உணவு :

வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு அறுசுவை உணவைத் தயார் செய்து அவரை உணவருந்த வருமாறு அழைத்தேன்.

தலைவாழை இலை :

தலைவாழை இலை விருந்தினருக்கு உணவளிப்பது மரபு. ஆகவே தமிழ்ப் பண்பாடு மறையாதிருக்க தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவிட்டேன்.

உணவு பரிமாற்றம் :

உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும், வலப்பக்கம் விரிந்த பகுதியும் வருமாறு வாழையிலையினை விரித்தேன்.

இலையில் வைக்கப்பட்ட உணவுகள் :

வாழை இலையின் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான சிறிய உணவு வகைகளை வைத்தேன். வாழை இலையின் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான பெரிய உணவு வகைகளையும், நடுவில் சோறும் வைத்தேன்.

பரிவுடன் பரிமாற்றம் :

உண்பவர் மனமறிந்து அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளை மீண்டும் மீண்டும் பரிவுடன் பரிமாறினேன்.

கைகழுவுதல் :

உண்பவர் வெளியே போய் கைகழுவாதபடி ஒரு குவளையில் நீரைக் கொண்டு வந்தேன். அதைக் கொண்டு அவர் அருகில் வைக்கப்பட்ட வெற்றுப் பாத்திரத்தில் அவர் கைகழுவுமாறு நீர் ஊற்றினேன்.

வெற்றிலை பாக்கு :

உணவு உண்டு எழுந்தவருக்கு ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு வைத்தேன். அவர் அதை மகிழ்வுடன் உண்டார்.

வழி அனுப்புதல் :

உணவுண்டவரிடம் திருப்தியாக உண்டீர்களா? என விசாரித்து வீட்டில் உள்ள உணவுப் பொருட்கள் சிலவற்றையும் கொடுத்து வீட்டில் உள்ளவர்களுக்குக் கொடுக்குமாறு கூறி, வாசல் வரை சென்று வழியனுப்பி வைத்தேன்.

4. ஒரு குழந்தையைத் தூக்கவும், கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும், மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துக்களை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

ஊர்திகளை இயக்குதல் :

1. எதிர்காலத்தில் நாம் இயக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவு கொண்டு இயக்கப்படும்.
2. விபத்துகள் குறையும்.
3. போக்குவரத்து நெரிசல் இருக்காது.
4. பயண நேரம் குறையும்.
5. எரிபொருள் மிச்சப்படும்.

மனிதர்களிடம் போட்டி :

மென்பொருள்கள், கவிதைகள், கதைகள், விதவிதமான எழுத்து நடைகள் போன்றவற்றைக் கற்றுக் கொண்டு மனிதர்களிடம் போட்டியிட்டாலும் வியப்பதற்கில்லை.

கல்வித்துறை :

கல்வித்துறையில் இத்தொழில் நுட்பத்தைப் பல விதங்களில் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

பிற செயல்பாடுகள் :

விடுதிகளில், வங்கிகளில், அலுவலகங்களில் தற்போது மனிதன் அளிக்கும் சேவையை ரோபோக்கள் செய்யும்.

நம்முடன் உரையாடுவது, ஆலோசனை வழங்குவது, பயண ஏற்பாடு செய்து தருவது, தண்ணீர் கொண்டு வந்து தருவது, குழந்தைகளுக்குப் பொம்மை கொண்டு வந்து தருவது, குழந்தைகளுக்கு வேடிக்கைக் காட்டுவது என பலவற்றையும் செய்யும் நிலை வரும்.

விரிவாக விடையளி (43)

வேலை வாய்ப்புகளில் மாற்றம் :

வேலை வாய்ப்புகளில் கணிசமான மாற்றத்தை எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு கொண்டு வரும்.

ரோபோவிடம் குழந்தை :

எதிர்காலத்தில் ரோபோவிடம் குழந்தையை ஒப்படைத்து விட்டு அலுவலகம் செல்லும் பெற்றோரைப் பார்க்க முடியும்.

தோழனாய் ரோபோ :

வயதானவர்களுக்கு உதவிகள் செய்தும், அவர்களுக்கு உற்ற தோழனாய்ப் பேச்சுக் கொடுத்தும் பேணும் ரோபோக்களைப் பார்க்க முடியும்.

உயிராபத்தை விளைவித்தல் :

செயற்கை நுண்ணறிவுள்ள ரோபோக்களால் மனிதர் செய்ய இயலாத அலுப்புத் தட்டக்கூடிய கடினமான செயல்களையும் செய்ய முடியும்.

மனித முயற்சியில் உயிராபத்தை விளைவிக்கக் கூடிய செயல்களையும் செய்ய முடியும்.

வணிக வாய்ப்புகள் :

பெருநிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும், சந்தைப் படுத்தவும், புதிய வணிக வாய்ப்புகளைச் செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்திக் கொடுக்கும்.

5. எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் என்னும் தலைப்பில் கருத்துகளை தொகுத்துரைக்க.

எதிர்காலத் தொழில் நுட்பம் :

உயிரினங்களில் மனிதரை உயர்த்திக் காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றலே! அந்த சிந்தனைக்குத் தொழில்நுட்பமும் துணை செய்கிறது. திறன்பேசிகளில் இயங்கும் உதவு மென்பொருள் கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப் போல நம்முடன் உரையாடி உதவி செய்கிறது.

செயல்பாடுகள் :

நாம் சொல்கிறவர்களுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுக்கும்.

நாம் திறக்கக் கட்டளையிடுகிற செயலியைத் திறக்கும்.

நாம் கேட்பதை உலாவியில் தேடும்.

நாம் விரும்பும் அழகான கவிதைகளை இணையத்தில் தேடித்தரும்.

எந்தக்கடையில் எது விற்கும் என்று சொல்லும்.

படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும்.

நாம் எடுத்த ஒளிப்படங்களைப் பற்றி பட்டியலிடும்.

எதிர்காலத்தில் நம் நெருங்கிய நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோரை விடவும் உதவு மென்பொருள் நம்மை நன்கு அறிந்திருக்கும்.

6. தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறை கருத்துகள் - தமிழுக்குச் செழுமை - மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்க கட்டுரை எழுதுக.

தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை

முன்னுரை :

உலகம் தகவல் தொழில்நுட்பத்தினால் சுருங்கிவிட்ட சூழலில் கூட மொழிபெயர்ப்புத் துறை முக்கிய இடம் பெறுகிறது. இத்தகு மொழிபெயர்ப்புக் கலை மக்களின் வாழ்வில் எத்தகு போக்கினை ஏற்படுத்தி உள்ளது என்பதைக் காண்போம்.

வரையறை :

மொழிபெயர்ப்பு என்பது மூல மொழியில் உள்ள சொல் அல்லது சொற்றொடர்களை எந்தவித பொருள் மாற்றமும் இல்லாமல் வேறு மொழியில் பெயர்ப்பு செய்வது மொழிபெயர்ப்பு எனப்படும்.

தமிழ் இலக்கிய வளம் :

தமிழ் இலக்கிய வளம் பெற வேண்டும் என்றால் பிறமொழியில் சிறந்து விளங்கும் நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்தே தமிழில் மொழிபெயர்ப்பு பணி நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் கம்பரின் இராமவதாரம், வில்லிப்புத்தூராரின் வில்லிபாரதம் போன்ற காவியங்கள் அனைத்தும் மொழிபெயர்க்கப்பட்டவையே.

விரிவாக விடையளி (43)

கல்வி மொழி :

மொழிபெயர்ப்பைக் கல்வியாக்குவதன் மூலம் அனைத்துலக அறிவை நாம் பெற்று பல்வேறு துறைகளில் சிறந்து விளங்க முடியும்.

பிறமொழி இலக்கியம் :

ரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில் எழுதிய கீதாஞ்சலியை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தப் பிறகு நோபல் பரிசு கிடைத்தது.

அறிவியல் கருத்துகள் :

மொழிபெயர்ப்பு அறிவியல் சார்ந்த துறையிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. **Tele** என்ற ஆங்கிலச் சொல் தொலை என்பதைக் குறிக்கும். இதனடிப்படையில் **Telephone, Telescope** - தொலைபேசி, தொலைநோக்கி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பல்துறை கருத்துகள் :

கல்வி, அறிவியல், இலக்கியம் மட்டுமல்லாமல் பிறதுறையிலும் வளர்ச்சி அடைந்துள்ளன. வானொலி, திரைப்படம், இதழியியல், விளம்பரம் போன்ற துறைகளிலும் மொழிபெயர்ப்புப் பணி சிறந்து விளங்குகிறது. தொலைக்காட்சித் தொடர்கள் வேற்று மொழிக்கு மாற்றப்படுவதால் அனைத்து மக்களையும் சென்றடைகிறது.

முடிவுரை :

எந்த மொழியின் படைப்பாக இருந்தாலும் எதை மொழிபெயர்க்க வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? என்பதனை அறிந்து இலக்கண விதிமுறையுடன் செய்தால் நிலைபெற்று விளங்கும்.

7. நெகிழிப்பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

நெகிழிப் பைகளினால் ஏற்படும் தீமைகளைப் பொம்மலாட்டம் நிகழ்த்திக் காட்டிய குழுவினருக்கு பள்ளியின் சார்பாக எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெகிழியைத் தவிர்த்தல் :

தீமைகள் ஒழிந்திட நெகிழியைத் தவிர்ப்போம் என்ற உறுதி மொழியை மக்கள் அனைவரும் ஏற்கும் வகையில் இசை, உரையாடல்கள், நாட்டியம் மற்றும் அசைவு மூலம் தெரிவித்த பொம்மலாட்டக் குழுவினருக்கு மீண்டும் மீண்டும் மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழர்களின் மிகப்பழமையான மரபுவழிக் கலைகளில் ஒன்று பொம்மலாட்டம். இது பொழுதுபோக்கு காட்சிக்கலை ஆகும். இது பொழுது போக்கு காட்சியாக மட்டுமில்லாமல் கல்வியறிவு, மக்களிடையே காணப்படும் அறியாமையை பாடல் வழியாக போக்குவதற்கு நல்ல கலையாக விளங்குகிறது. குறைந்த நேரத்தில் அதிக செலவில்லாமல் இக்கலை வடிவம் வாயிலாக நம் பள்ளியின் ஆண்டு விழாவில் பொம்மலாட்ட நிகழ்ச்சியை நடத்திய கலைக்குழுவுக்கு மனமார்ந்த பாராட்டுகள்.

நெகிழிப் பைகளால் ஏற்படும் தீமையைப் பொம்மலாட்டம் வாயிலாக நிகழ்த்தி நெஞ்சத்தை நெகிழச் செய்த அனைவருக்கும் வணக்கம்.

8. நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழமையும் - இக்கலைகள் அருகி வருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்க்க நாம் செய்ய வேண்டுவன - இவை குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

நிகழ்கலை வடிவங்கள் :

| | | | |
|---|---|---|---|
| கரகாட்டம் | புலியாட்டம் | பொய்க்கால் குதிரையாட்டம் | தெருக்கூத்து |
| காவடியாட்டம் | தோற்பாவைக்கூத்து | தேவராட்டம் | மயிலாட்டம் |
| ஒயிலாட்டம் | பொம்மலாட்டம் | சேவையாட்டம் | தப்பாட்டம் |
| கையுறைப் பாவைக்கூத்து | | | |

நிகழும் இடங்கள் :

தெருக்கூத்து - திறந்தவெளி, களத்துமேடு, தெருச்சந்திப்பு

பிற நிகழ்கலைகள் - திறந்தவெளி மற்றும் மேடைகள்

ஒப்பனைகள் :

| | |
|---|---|
| கரகாட்டம் : | ஆண், பெண் வேடமிட்டு ஆடுதல் |
| மயிலாட்டம் : | மயில் வடிவ கூண்டுக்குள் உடலை மறைத்தல் |
| ஒயிலாட்டம் : | ஒரே நிறத்துணியை முண்டாசு போலக் கட்டுதல், காலில் சலங்கை, கையில் சிறுதுணி |
| தேவராட்டம் : | வேட்டி, தலையிலும் இடுப்பிலும் சிறு துணி, எளிய ஒப்பனை. |
| பொய்க்கால் ஆட்டம் : | அரசன், அரசி உடை அணிதல், தலையில் கிரீடம் அணிதல். |
| புலியாட்டம் : | உடலில் கறுப்பு, மஞ்சள் கோடு, துணியாலான வாலை இடுப்பில் வைத்தல். |

விரிவாக விடையளி (43)

சிறப்பும் பழமையும்

சிறப்பு :

வாழ்வியல் நிகழ்வில் பிரிக்க முடியாதது. மகிழ்ச்சி தரும். கவலையைப் போக்கும்.

பழமை :

தோற்ப்பாவை கூத்து - பொம்மலாட்டம், கையுறைப் பாவைக்கூத்து

தெருக்கூத்து - நாடகம்

அருகி வருவதற்கான காரணங்கள் :

நாகரிக மாற்றம் காலச்சூழல் போதிய வருமானமின்மை தொழில் மாற்றம்

வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன :

விழாக்களில் நிகழ்கலை நிகழ்ச்சிகள் வாழ்வைத் தூய்மைப்படுத்தும் கலைகள்

கலைகளையும், கலைஞரையும் பாராட்டல் வாய்ப்பளித்தல்

9. உங்கள் பகுதியில் ஆடப்படும் நிகழ்கலைகள் குறித்தும், அதன் பண்புகளையும் தொகுத்துக் கூறுக.

எங்கள் பகுதியில் ஆடப்படும் நிகழ்கலைகள்

மயிலாட்டம், காவடியாட்டம் மற்றும் ஒயிலாட்டம்

மயிலாட்டம் :

மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு, நையாண்டி மேளத்திற்கு ஏற்ப, மயிலின் அசைவுகளைப் போன்று ஆடும் ஆட்டம்.

பண்புகள் :

ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல் இறகை விரித்தாடுதல், தலையைச் சாய்த்தாடுதல், தாவியாடுதல் ஆகிய அடவுகளில் ஆடுவர்.

காவடியாட்டம் :

கா - என்பதற்குப் பாரம் தாங்கும் கோல் என்பது பொருள். இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடி ஆட்டம் எனப்படும்.

காவடியின் அமைப்புக்கேற்ப மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக்காவடி என பல வகைப்படும்.

ஒயிலாட்டம் :

ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டியும், காலில் சலங்கை அணிந்தும், கையில் வைத்துள்ள சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஒயிலாக ஆடும் குழு ஆட்டமே ஒயிலாட்டம் ஆகும்.

உணர்ச்சிக்கேற்ப பாட்டின் சந்தமும், சந்தத்திற்கேற்ப ஆட்டத்தின் இசையும் மாறி மாறி மனதை ஈர்க்கும். இதில் கம்பீரத்துடன் ஆடுதல் என்பது தனிச்சிறப்பானது.

10. மூன்று நிகழ்கலை கலைஞர்களை நேர்முகம் கண்டு அவர்களது கருத்துக்களையும், அவர்களது மறுவாழ்விற்கான வழிமுறைகளாக நீங்கள் கருதுவனவற்றையும் குறிப்பிடுக.

நிகழ்கலை கலைஞர்களின் கருத்துக்கள் :

நமது கலாச்சாரம் மற்றும் பண்பாட்டின் அடையாளமாக விளங்கும் நிகழ்கலைகளை மேற்கொண்டு வருவதில் நாங்கள் பெருமை அடைகிறோம்.

தற்கால தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியால் நிகழ்கலைகள் மீதான மக்களின் ஈடுபாடு குறைந்து வருகிறது.

திருவிழாக்களின் மீதான ஆர்வம் குறைந்துள்ளமையால் எங்கள் கலை நலிந்து வருகிறது.

தொலைக்காட்சித் தொடர்களின் வருகையால் எங்களின் பாரம்பரியக் கலைகள் அழிவை நோக்கி பயணிக்கின்றன.

போதிய வாய்ப்பின்மையால் வேறு தொழிலை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

மறுவாழ்விற்கான வழிமுறைகள் :

கலாச்சாரம் மற்றும் பண்பாட்டின் அடையாளமாக விளங்கும் நிகழ்கலைகளுக்கு புத்துயிர் அளித்து அரசு காக்க வேண்டும்.

நம் பழம்பெருமையை, மரபை, பண்பாட்டைக் காக்க வேண்டியது நமது கடமையாகும்.

அரசு விழாக்களில் நிகழ்கலைகளை நிகழ்த்த வாய்ப்புகள் வழங்க வேண்டும்.

திருவிழாக்களுக்கு நமது பிள்ளைகளை அழைத்துச் சென்று பராம்பரிய கலைகளை காணச் செய்ய வேண்டும்.

தொலைக்காட்சிகளில் நிகழ்கலைகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

நலிவடைந்த கலைஞர்களுக்கு அரசு ஊக்கத்தொகை வழங்கி நம் கலாச்சார கலைகளை பாதுகாக்க வேண்டும்.

விரிவாக விடையளி (43)

11. சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைக் கவர்ந்த இரண்டு அறங்களைக் குறிப்பிட்டு, அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக. (அல்லது)
சங்க இலக்கியங்கள் கூறும் அறங்களில் போர் அறம், கொடை அறம், அரசியல் அறம் பற்றி எழுதுக.

போர் அறம் :

தமிழர் போரிலும் அறத்தைப் பின்பற்றினர்.

போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் போன்றவரை எதிர்த்து போர் செய்யாமல் இருப்பது.

பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போரிடுவதும் போர் அறமாகக் கருதப்பட்டது.

தம்மை விட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆலூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

கொடை அறம் :

அரியன என்று கருதாது , தயங்காது கொடுத்தலும், ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும், நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாக பேசப்படுகின்றன.

செல்வத்தின் பயன் ஈதலே என்றார் நக்கீரனார்.

கடையெழு வள்ளல்களின் கொடைச் சிறப்பு, சிறுபாணாற்றுப் படையிலும், பெருஞ்சித்திரனார் பாடலிலும் போற்றப்பட்டுள்ளது.

ஆற்றுப்படை இலக்கியங்கள் கொடை இலக்கியங்களாகவே உள்ளன.

பதிற்றுப்பத்து, சேர அரசர்களின் கொடைப் பதிவாகும்.

புறநானூற்றிலும் கொடைப்பதிவுகள் உள்ளன.

அரசியல் அறம் :

மன்னர்களுடைய செங்கோலும், வெண்கொற்றக்குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன.

நீர் நிலை பெருக்கி, நிலவளம் கண்டு, உணவுப் பெருக்கம் காண்பதும், அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் அறம்.

12. சங்க இலக்கியங்கள் கூறும் தமிழரின் கொடைத்திறம் பற்றிய கருத்துக்களை எழுதுக.

முன்னுரை :

வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது. தன் மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவது தான் உண்மையான மகிழ்ச்சி.

செல்வத்தின் பயன் :

தான் பெற்ற செல்வத்தின் பயன் மற்றவருக்கு கொடுப்பதுதான் என்கிறார் நக்கீரர்.

செல்வத்தின் பயன் ஈதலே (புறநானூறு)

கொடையின் சிறப்பு :

கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது. கடையேழு வள்ளல்களின் கொடைச் சிறப்பு, சிறுபாணாற்றுப் படையிலும், பெருஞ்சித்திரனார் பாடலிலும் போற்றப்பட்டுள்ளது.

ஆற்றுப்படை இலக்கியங்கள் கொடை இலக்கியங்களாகவே உள்ளன.

பதிற்றுப்பத்து, சேர அரசர்களின் கொடைப் பதிவாகும்.

அரியன என்று கருதாது , தயங்காது கொடுத்தலும், ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும், நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாக பேசப்படுகின்றன.

வள்ளல்கள் இல்லோர் ஒக்கல் தலைவன் பசிப்பிணி மருத்துவன் என்றெல்லாம் போற்றப்பட்டனர்.

விரிவாக விடையளி (43)

கொடையில் சிறந்தோர் :

உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார்.

இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் நச்செள்ளையார்.

பேகன் மறுமை நோக்கி கொடுக்காதவன் என்கிறார் பரணர்.

தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, தன் நாட்டை இழந்த துன்பத்தை விட பெருந்துன்பம் எனக் குமணன் வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார்.

எல்லாவற்றையும் கொடுப்பவன் என்று மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாராட்டுகிறார்.

அக இலக்கியத்தில் கொடை :

புற இலக்கியங்களில் மட்டுமின்றி அக இலக்கியங்களிலும் ஈதல் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இரப்போர்க்கு ஈயாது வாழ்தலை விட உயிரை விட்டு விடுதல் மேலானது என்று கலித்தொகை குறிப்பிடுகிறது.

முடிவுரை :

வள்ளல்கள் மட்டுமின்றிப் புலவர்களும் ஈந்து மகிழ்ந்ததை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளது.

13. எழுத்தாளர் ஜெயகாந்தனின் இன்னொரு முகம் குறித்து அவரிடம் தொடுத்த கேள்விகளுக்கு அவர் கொடுத்த பதில்களுமாக ஜெயகாந்தன் பற்றி நீங்கள் அறிந்தவற்றை விளக்குக.

தொடுத்த கேள்விகளும் அவர் கொடுத்த பதில்களும்

சிறுகதைகளைப் படைப்பதில் தங்களுடைய தனித்தன்மை வாய்ந்த திறமையை வாசகர்கள் கொண்டாடுகிறார்களே, இத்துறையில் தாங்கள் கடைபிடிக்கும் நுணுக்கங்கள் யாவை?

நுணுக்கமா? அப்படித் தனியாக நான் எதையும் கையாளுவதாக எண்ணிச் செய்வதில்லை. என் மனத்தால், புத்தியால், உணர்வால் நான் அறிந்து அனுபவப்படாத எதைப் பற்றியும் நான் எழுதினதில்லை. என்னைப் பெரிதும் பாதிப்பவை மனித வாழ்வின் பிரச்சினைகளே. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாக அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சினைகளே.

உங்கள் பார்வையில் சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனை எது? மிகப்பெரிய சவால் எது?

மகத்தான சாதனை - பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தது. மிகப் பெரிய சவாலும் அதுவே.

இந்த வயதில் தேசம் செல்லும் பாதை, எழுத்துலகத்தின் போக்கு இவற்றை எல்லாம் பார்க்கும் போது எப்படி இருக்கிறது?

காலந்தோறும் மாற்றங்களை நாம் பார்க்கிறோம். நாமும் மாறிக் கொண்டே இருக்கிறோம்.

ஜெயகாந்தன் பற்றி அறிந்தவை :

சமூக அமைப்பின் முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டியவர்.

நேர்முக, எதிர்முக விளைவுகளைப் பெற்றவர்.

உள்ளடக்க விரிவால், மனிதாபிமானத்தை வாசக நெஞ்சங்களில் விதைத்தவர்.

தன்னையறிதல் என்பதிலும், தன்னை உணர்த்துதல் என்பதிலும் முனைப்பாக இருந்தவர்.

14. எதற்காக எழுதுகிறேன்? என்று ஜெயகாந்தன் குறிப்பிடும் காரணங்களை தொகுத்து எழுதுக. (அல்லது) எதற்காக எழுதுகிறேன்? என்று ஜெயகாந்தன் குறிப்பிடும் காரணங்களில் இரண்டினையும், இவர்கள் பார்வையில் ஜெயகாந்தன் என்பது குறித்து அசோகமித்திரன், கா.செல்லப்பன் இருவரின் கருத்துகளையும் குறிப்பிட்டு எழுதுக.

எதற்காக எழுதுகிறேன்? என்று ஜெயகாந்தன் குறிப்பிடும் காரணங்கள்

நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும், காரணமும் உண்டு என்கிறார். தனது எழுத்துக்கு ஓர் இலட்சியம் இருப்பதாகவும் கூறுகிறார். தாம் எழுதுவது, முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்து தாம் பெறும் கல்வியின் விளைவும், தமது தனி முயற்சியின் பயனுமாகும் என்று கூறுகிறார் ஜெயகாந்தன்.

கலைத்தன்மைக்கு எந்தவித குறைவும் வராமல், கலாதேவியின் காதற் கணவனாகவும், சமுதாயத் தாயின் அன்புப் புதல்வனாகவும் இருந்தே தாம் எழுதுவதாகக் கூறும் ஜெயகாந்தன், சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே, தாம் எழுதுவதாகக் குறிப்பிடுகிறார்.

<u>விரிவாக விடையளி (43)</u>

<u>இவர்கள் பார்வையில் ஜெயகாந்தன் :</u>

<u>அசோகமித்திரன் :</u>

ஜெயகாந்தன், எத்தகைய பாத்திரங்களைப் படைத்தாலும் அந்தப் பாத்திரங்களின் சிறந்த அம்சங்களைக் குறிப்பிடத் தவறுவதில்லை. துவேஷத்தைப் பரப்புவது, அவருடைய இயல்புக்கு சற்றும் ஒவ்வாதது. அவர் அரசியலில் தொடர்ந்து பங்கு பெறாமல் போனதற்கு இது கூட காரணமாக இருந்திருக்கலாம்.

<u>கா.செல்லப்பன் :</u>

நேர் கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள். திமிர்ந்த ஞானச்செருக்கு, கம்பீரமான குரல், வளமான, புதுமையான வாழ்க்கைச் சித்தரிப்புகள் - இவைகள் தாம் ஜெயகாந்தன் என்ற செம்மாந்த தமிழனின் சிறப்பான அடையாளங்கள்.

படிக்காத மேதை என்று குறிப்பிடப்படும் அவர், முறையாகக் கல்லூரிகளில் படிக்கவில்லையே தவிர, தமிழ், இந்திய இலக்கியங்களை மட்டுமின்றி, சோவியத், பிரெஞ்சு இலக்கியங்களைத் தானே படித்து உணர்ந்தது மட்டுமின்றி, வாழ்க்கையையும் ஆழமாகப் படித்தவர். பிறகு அவற்றை வார்த்தைகளில் அழகுறப் படைத்தவர்.

15. ஜெயகாந்தனின் தர்க்கத்திற்கு அப்பால் கதையின் வழி மனித நேயம் வெளிப்படுவதை விவரிக்க.

**விடை பக்கம் எண் : 43 வினா எண் : 35 இல் காண்க.**

16. ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

சுவரொட்டி




17. நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளிகளை எங்கணும்
ஒட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ? - பாரதியார்

இப்பாடலில் உள்ள கவிதை நயங்களை பாராட்டி எழுதுக.

**தலைப்பு : இயற்கை ஆசிரியர் : பாரதியார்**

**திரண்ட கருத்து :**

நிலா, விண்மீன், காற்று ஆகிய இவற்றையெல்லாம் செம்மையுற ஏற்படுத்தி வைத்து, அவற்றிலெல்லாம் தோய்ந்துள்ளது திருவருளாகிய அமுதரசம். அந்த அமுதரசத்தைப் பருகி, அழகிய உன்னத நிலைக்கு யாம் உள்ளானோம். உலவுகின்ற மனமாகிய சிறுபறவையை எங்கெங்கும் செலுத்திக் களிப்படைவோம். பலாச்சுளை ஏற்றப்பட்ட வண்டியை ஒரு வண்டானது ரீங்காரம் செய்து வட்டமிடுவது ஆச்சரியமானதா என்ன?

மோனை நயம் : குலாவும், குழம்பைக், குடித்தொரு

எதுகை நயம் : நிலாவையும், குலாவும், உலாவும், பலாவின்

அணி நயம் : இப்பாடலில் இயல்பு நவிற்சி அணி இடம் பெற்றுள்ளது.

விரிவாக விடையளி (44)

1. புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும், ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

வருணனை :

கொளுத்தும் வெயில் இமை நேரத்தில் மறைந்தது.
மேகங்கள் பொதிந்து கும்மிருட்டாய் ஆகியது.
காற்றைக் காணோம். ஒரே இறுக்கம்.
இடிமுழக்கத்துடன் மின்னல் கீற்று வானைப் பிளந்தது.
வானம் உடைந்தன. வெள்ளம் கொட்டியது.
சூறாவளி ஆடிக்குதித்து கெக்கலித்தன.
வானுடன் கடல் கலந்து விட்டது.
திடுமென அமைதி. வானும் கடலும் பிரிந்து தென்பட்டன.
வானும், கடலும், வளியும், மழையும் மீண்டும் ஒன்று சேர்ந்து கூக்குரல் இட்டது.
வான் பிளந்து தீ கக்கியது.
வளி முட்டிப் புரட்டுகிறது. கடல்வெளிக் கூத்தாடியது.

அடுக்குத்தொடர்கள் :

தொங்கான் நடுநடுங்கித் தாவித் தாவிக் குதிகுதித்து விழுவிழுந்து நொறுநொறு நொறுங்குகிறது.
சுழன்று கிறுகிறுத்துக் கூத்தாடியது.
சிலுசிலு மரமரப்பு

ஒலிக் குறிப்புச் சொற்கள் :

நொய்ங் புய்ங் நொய்ங் புய்ங் என இடி முழக்க சீனப் பிசாசுகள் தாவி வீசுகின்றன.

2. அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

முன்னுரை :

இடைசெவல் ஊரைச் சேர்ந்த கி.ராஜநாராயணன் அவர்கள் எழுதிய கோபல்லபுரத்து மக்கள் என்ற கதை சாகித்திய அகாதெமி பரிசு பெற்றது. இதன் கதை மாந்தரான அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை இங்கு காண்போம்.

அன்னமய்யாவுடன் வந்த வாலிபன் :

அன்னமய்யாவுடன் வந்தது சன்யாசியோ, பரதேசியோ இல்லை. கிட்டே போய் பார்த்த பிறகு தான் தெரிந்தது அவன் ஒரு வாலிபன். வாலிபனது தாடியும், அழுக்கு ஆடையும், தள்ளாட்டமும் அவனை வயோதிகனைப் போலவும், சாமியாரைப் போலவும் காட்டியது.

நீச்சுத் தண்ணீர் :

அன்னமய்யாவைப் பார்த்த வாலிபன், குடிக்கத் தண்ணி கிடைக்குமா? எனக் கேட்டான். அதற்கு அன்னமய்யா நீச்சுத் தண்ணீர் வாங்கி வரவா? எனக் கேட்டான். கரிசல் மண்ணில் பாதி புதைக்கப்பட்டு இருந்த கரிய மலர் கலயங்களின் வாய் தேங்காய் பருமனுள்ள கற்களால் முடப்பட்டிருந்தது. அன்னமய்யா கலயத்தின் மேலிருந்த கல்லை அகற்றினான்.

ஜீவ ஊற்று :

அன்னமய்யா கலசத்திலிருந்து கஞ்சின் நீத்துப்பாகத்தைச் சிரட்டையில் ஊற்றிக் கொடுத்தான். நீத்துப் பாகமாகிய மேல் கஞ்சை வாலிபன் குடித்ததும் கலயத்தை அலசி தெளிவு மறைந்த சோற்றின் மகுளி கஞ்சையும் வாலிபனுக்கு ஊற்றிக் கொடுத்தான் அன்னமய்யா. வாலிபனுக்கு ஜீவ ஊற்று பொங்கியது.

அன்னமய்யாவின் மனநிறைவு :

கஞ்சினைக் குடித்த வாலிபன் வேப்ப மர நிழலைச் சொர்க்கமாய் நினைத்துத் தூங்கினான். இதைக் கண்ட அன்னமய்யாவுக்கு மனநிறைவு ஏற்பட்டது. மார்பில் பால் குடித்துக் கொண்டிருக்கும் போதே வயிறு நிறைந்து அப்படியே தூங்கிவிடும் குழந்தையைப் போலவே அவ்வாலிபனையும் பார்த்தான்.

பெயர் பொருத்தம் :

தூக்கம் தெளிந்து எழுந்த வாலிபன் உன் பெயர் என்ன? என்று அன்னமய்யாவிடம் கேட்டான். அதற்கு அவன் அன்னமய்யா என்றான். எவ்வளவு பொருத்தம். எனக்கு இன்று நீ இடும் அன்னம் தான் என் வாழ்வுக்கு மீண்டும் உயிர் கொடுத்தது என்று மனதுக்குள் கூறினான் அவ்வாலிபன்.

முடிவுரை :

அன்னமய்யா என்ற பெயருக்கு ஏற்ப அன்னமிட்டு மனிதநேயம் காத்த அன்னமய்யாவின் பெயர் அவனுக்கே பொருத்தமுடையதாக அமைகிறது.

விரிவாக விடையளி (44)

3. அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம் என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

இலக்கியங்களில் நிலவிய அறிவியல் கோட்பாடுகளையும், நம்பிக்கைகளையும் அறியும் பொருட்டு நானும், எம் வகுப்பு மாணவர்களும், ஆசிரியர்கள் சிலரோடு ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம் மேற்கொண்டோம்.

பேரண்டப் பெருவெடிப்பு, கருந்துளைகள் பற்றிய ஹாக்கிங்கின் ஆராய்ச்சிகள் முக்கியமானவை. இப்பேரண்டம் பெருவெடிப்பினால் உண்டானதே என்பதற்கான சான்றுகளைக் கணிதவியல் அடிப்படையில் எங்களுக்கு விளக்கினார். இப்புவியின் படைப்பில் கடவுள் போன்ற ஒருவர் பின்னணியில் இருந்தார் என்பதை மறுத்தார். பிரபஞ்சத்தை இயக்க வைக்கும் ஆற்றலாகக் கடவுள் என்ற ஒருவரைக் கட்டமைக்க வேண்டியதில்லை என்றார்.

விண்வெளியில் பால்வீதியில் எங்கள் விண்வெளி ஓடம் சுற்றிக் கொண்டிருந்தது. அப்போது ஹாக்கின் நமது பால்வீதியில் கோடிக்கணக்கான விண்மீன்கள் ஒளிருகின்றன. அவற்றுள் ஞாயிறும் ஒன்று. ஒரு விண்மீன் ஆயுள் கால முடிவில் உள்நோக்கிய ஈர்ப்பு விசை கூடுகிறது. அதனால் விண்மீன் சுருங்கத் தொடங்குகிறது. விண்மீன் சுருங்கச் சுருங்க அதன் ஈர்ப்பாற்றல் உயர்ந்து கொண்டே சென்று அளவற்றதாகிறது என்று விளக்கினார்.

சில நேரங்களில் உண்மையானது புனைவை விடவும் வியப்பூட்டுவதாக அமைகிறது. அப்படி ஓர் உண்மைதான் கருந்துளைகள் பற்றியதும் என்பதை அறிந்து கொண்டோம்.

எப்படியெனில், கருந்துளையினுள் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளியே வரமுடியாது. கருந்துளையின் ஈர்ப்பு எல்லையிலிருந்து கதிர்வீச்சுகள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. கருந்துளை உண்மையிலே கருப்பாக இல்லை என்பதை நேரில் கண்டோம். அப்போது ஹாக்கிங், கருந்துளையிலிருந்து ஒரு கட்டத்தில் கதிர்வீச்சும், அணுத்துகள்களும் கசியத் தொடங்கி இறுதியில் வெடித்து விடும் என்றார்.

முன்னர் அண்டவெளியில் காணப்படும் கருந்துளை அழிவு ஆற்றல் என்று கருதப்பட்டது. ஆனால் கருந்துளை என்பது படைப்பின் ஆற்றல் என்று எங்களிடம் ஹாக்கிங் விளக்கினார்.

விண்வெளி ஓடம் பூமிக்கு திரும்பிக் கொண்டிருந்த பல வடிவிலான விண்கற்கள் மற்றும் தொலைவில் தூசுகள் போன்ற பால்வீதிகளையும் கண்டு அதனைப் பற்றிய சில கருத்துக்களைப் பேசிக் கொண்டே பூமியை வந்தடைந்தோம். எங்களை வரவேற்க பலரும் கூடி வந்திருந்தனர். அவர்கள் எங்களைப் பாராட்டி வாழ்த்துகளைத் தெரிவித்தனர். இந்நிகழ்வுகள் அனைத்தும் எம் வாழ்வில் மறக்க முடியாதவையாக இருக்கின்றன.

4. கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளைக் குறிப்பிடுக.

<u>முன்னுரை :</u>

எந்த ஒரு சமூகம் கல்வி இல்லாமல் இருக்கிறதோ அச்சமூகம் அழிவை நோக்கி செல்கிறது என்பதாகும். அத்தகு சமூகத்தில் பிறந்து கல்வி எனும் ஒளிச்சுடரைத் தன் கையில் ஏந்தி ஓராயிரம் விளக்கை ஏற்றிய மேரிஜேனின் வாழ்க்கையோடு என் கருத்தையும் இங்கு விளக்க உள்ளேன்.

<u>மேரியின் குடும்பம் :</u>

தந்தை சாம், தாய் பாட்ஸி, பாட்டி, பல சகோதர, சகோதரிகளைக் கொண்ட ஏழ்மையான குடும்பம். காலை ஐந்து மணி முதல் மாலை வரை உழைக்கும் குடும்பம். கல்வி அறிவு இல்லாததால் இவர்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது.

<u>மேரியின் இளமை :</u>

தன் குடும்பத்தில் இவள் மட்டும் வித்தியாசமானவள். தாய் அழைக்கும் போதும், பருத்தியின் முதல் பூவைப் பார்க்க வேண்டும் என்று எண்ணம் தோன்றும் போதும், தான் முதலில் செய்ய வேண்டும் என்று எண்ணுபவள்.

<u>மேரிக்கு ஏற்பட்ட அவமானம் :</u>

தன் தாயுடன் வில்சன் வீட்டிற்குச் சென்ற மேரி அங்கு குழந்தைகள் விளையாடுவதைக் கண்டு வியப்புற்றாலும், அவள் கண்கள் அங்கு இருந்த புத்தகத்தின் மீதே சென்றது. ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்க்கின்றபோது வில்சனின் இளைய மகள் புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கி உன்னால் படிக்கமுடியாது என்று கூறினாள். அந்த வார்த்தை அவள் மனதைக் கிழித்தது. உடனே வீட்டை விட்டு வெளியேறினாள்.

விரிவாக விடையளி (44)

மேரியின் ஏக்கம் :

கற்றவர்களைத் தான் இச்சமூகம் மதிக்கும் என்று அவள் உணர்ந்தாள். அன்று முதல் அவள் மனம் ஒன்றைத் தீர்மானித்தது. நான் படிக்க வேண்டும் என்ற ஒற்றை வரி அவள் மனதை அசை போட வைத்தது. தன் ஆசையைத் தாய் தந்தையிடம் கூற சரியான பதில் இல்லாமல் ஏக்கம் அடைந்தாள். ஆனால் மேரி நம்பிக்கையோடு படித்தே ஆக வேண்டும் என்ற உணர்வோடு இருந்தாள்.

உதவிக்கரம் நீளுதல் :

வயலில் தன் முதுகில் இருந்த பருத்தி சுமையை இறக்கி வைத்து விட்டு திரும்புகின்றபோது தனக்கு அறிமுகம் இல்லாத பெண் நிற்பதைக் கண்டாள். என் பெயர் மிஸ் வில்சன். உன்னைப் போன்ற பெண்களைப் படிக்க வைக்க வேண்டும். அது தான் என் ஆசை. நீ எவ்வளவு சீக்கிரம் மேயெல் வர முடியுமோ வா என்றாள். பதில் கூற முடியாமல் வாயடைத்து நின்றாள் மேரி.

மேரியின் கனவும் களிப்பும் :

தன் வீட்டு மேசை மீது பலகாலமாக இருந்த பைபிளை எடுத்தாள். இதை நான் படித்து விடுவேன். படித்துக் காட்டவும் செய்வேன் என்று கனவு காணத் தொடங்கினாள். தந்தை மேரிக்குச் சிலேட்டு, பலப்பம் வாங்கித் தந்தார். உடன்பிறப்புகள் சூழ்ந்து மகிழ்ச்சியில் மகிழ்ந்து எங்களுக்குச் சொல்லித் தர வேண்டும் என்றனர். நம் சமுதாயத்திற்கு கிடைக்காத கல்வி தம் குடும்பத்திற்குக் கிடைத்ததை எண்ணி பெருமை அடைந்தாள்.

மேதகு மேரி :

புதிதாய் கற்றாள். வாழ்வில் உயரத் தொடங்கினாள். கல்வியால் புதிய நபராக மாறினாள்.

பட்டமளிப்பு விழா :

வில்சனின் இளையமகள் தந்த அவமதிப்பினால் ஊக்கம் பெற்ற மேரி எழுதப் படிக்கக் கற்றதுடன் மேற்படிப்பு பெற முனைந்தாள்.

புதியதோர் பயணம் :

பருத்திக் காட்டில் மீண்டும் தன் பணியினைத் தொடங்கிய மேரியை நோக்கி, மிஸ் வில்சன் வெள்ளைக்கார பெண்மணி ஒருவரின் உதவியைப் பற்றி கூறினாள். மேரி மிகவும் மகிழ்ந்தாள். மேல்படிப்பிற்காக புறப்பட்ட மேரியை ஊரே கூடி வாழ்த்தி வழி அனுப்பி வைத்தனர்.

முடிவுரை :

சாதாரணப் பெண்ணாகப் பிறந்து தனது முயற்சியாலும், பலரது உதவியாலும் வாழ்வில் உயர்ந்து சமுதாயத்தின் அறியாமை இருளைப் போக்கத் தோன்றிய மேரிஜேன்னின் வாழ்வியல் நிகழ்வுகளைப் போல, நாமும் அவமானங்களை வெகுமானமாக மாற்றி வெற்றி பெறுவோம்.

5. சா.கந்தசாமியின் பாய்ச்சல் கதையில் வரும் அனுமார் என்ற கலைஞனின் கலைத்திறனை விளக்குக.

(அல்லது)

அனுமார் ஆட்டம் குறித்து பாய்ச்சல் கதையின் வாயிலாக சா.கந்தசாமி கூறுவன யாவை?

முன்னுரை :

புதின எழுத்துகளால் தனது புகழைத் தமிழ் உலகில் முத்திரைப் பதித்து சாகித்ய அகாதெமி விருது பெற்ற சா.கந்தசாமியின் பாய்ச்சல் கதையில் வரும் அனுமார் கலைஞனின் கலை ஈடுபாட்டைப் பற்றி காண்போம்.

தெருமுனை :

தெருமுனையில் தினந்தோறும் எத்தனையோ கலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நடுத்தர மக்களை நம்பி தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்கிக்கொள்ள அனுமார் வேடமிட்டு ஒருவன் அனைவரையும் மகிழ்விக்கிறான்.

திறமைகள் :

குரங்குபோல ஓடி வந்தான். இரண்டு கால்களையும் மாறி மாறி தலையில் அடித்து வேகமாகக் கைகளை வீசி நடந்தான். கொஞ்ச தூரம் சென்று கடையில் இருந்த வாழைத்தாரிலிருந்து பழங்களைப் பறித்து அருகில் இருந்தவர்களுக்கெல்லாம் கொடுத்து தாமும் ஒரு பழம் சாப்பிட்டான்.

பக்க வாத்தியம் :

சதங்கை மேளம், தாளம், நாதசுரம் ஒலிக்க அதற்கு ஏற்றார்போல் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்தோடினான். நீண்ட வாலை மேலே சுழற்றி தரையில் அடித்துப் புழுதியைக் கிளப்பினான்.

விரிவாக விடையளி (44)

அனுமார் ஆட்டம் :

இசைக்கேற்ப ஆடியவன் தன்னையே மறந்து கைகளை மார்போடு அணைத்துக் கொண்டான். தான் உண்மை அனுமாராக மாறியதை எண்ணி கீச் கீச் என்று கத்திக்கொண்டே பந்தக்காலைப் பற்றிக் கொண்டு மேலே ஏறினான்.

திடீரென மேளமும் நாதசுரமும் ஒலிக்கத் தொடங்கிய போது கூட்டம் திகைத்தது. கண்மூடி கண் திறப்பதற்குள் அனுமார் கீழே குதித்தார். வாலில் பெரிய தீப்பந்தம் கண்டு கூட்டம் பின்வாங்கியது.

அனுமார் கால்களைத் தரையில் அடித்து உடம்பைக் குலுக்கினார். நெருப்பு அலை பாய்ந்தது. கைகளைத் தட்டிக் குட்டிக்கரணம் போட்டான். கூட்டம் பாய்ந்தோடியது. அனுமார் தன் கம்பீரமான தோற்றத்தோடு நின்று சிரித்தார். கூட்டமும் அமைதியானது.

அனுமார் அருகில் அழகு வால் :

அனுமாரால் வாலை வெகுநேரமாகச் சுமக்க முடியாததால் அழகு கையில் கொடுத்து விட்டு நடக்க ஆரம்பித்தான். வாலைத் தூக்கிக் கொண்டு அழகுவாலும் ஓட முடியவில்லை. வெட்கத்தோடு வாலைப் போட்டுவிட்டு வெளியேறினான்.

காரில் வந்தவர் ஹாரன் அடிக்க ஒருவன் காரை மறித்தான். அனுமார் எரிச்சலுற்று அவனை வாலால் பின்னுக்கு இழுத்தான். கார் முன்னே வந்து அனுமாருக்காகப் பணம் கொடுக்க, அனுமார் வாங்காமல் மேளக்காரனைப் பார்க்க, மேளக்காரன் வாங்கி மடியில் வைத்துக் கொண்டான்.

ஆற்றங்கரை ஓரம் :

ஆட்டமில்லாமல் அனுமார் நடக்க ஆரம்பித்தபோது கூட்டம் குறைய ஆரம்பித்தது. மேளக்காரன் தவுலைக் கீழே இறக்கி வைத்தான். ஆட்டம் முடிந்தது என்று தீர்மானம் செய்து கூட்டம் முற்றிலும் கலைந்தது. அனுமார் வாயால் மூச்சு விட்டு ஆலமரத்தில் சாய்ந்து கொண்டார்.

மேளக்காரன் பணத்தைப் பங்கு போட்டு பிரித்துக் கொடுத்தான். அனுமார் அதை வாங்கிக் கொண்டு ஆற்றங்கரை ஓரமுள்ள கோயில் தூணில் சாய்ந்து உட்கார்ந்தார்.

முடிவுரை :

இக்கதையில் கூட்டத்தினரை மகிழ்விக்க வந்த அனுமாரின் ஆட்டத்தைக் கண்டு மயங்கி அனுமாரைப் போல தானும் ஆடினான் அழகு. அனுமாரோடு ஒன்றிப் போனான். கலை கலைக்காகவே என்பது போல ஒரு கலைஞன் இன்னொரு கலைஞனை உருவாக்க முடியும் என்பதை பாய்ச்சல் கதையில் வரும் அனுமார் மூலம் அறிய முடிகிறது.

6. உலகம் பரந்து விரிந்த திடல்; அதில் ஆடுவாரும் உளர்; இவர்களும் வென்றோரே மிகுதி; இதனையே ஆளுமை என்கிறோம். அத்தகைய ஆளுமை மிக்க பெண்களைப் பற்றி கட்டுரை எழுதுக. (அல்லது) மங்கையராய் பிறப்பதற்கே ... என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

சாதனைப் பெண்மணிகளாம் ராஜம் கிருஷ்ணன், கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், சின்னப்பிள்ளை ஆகியோரின் சமூகப் பணிகளை விவரித்து எழுதுக.

எம்.எஸ்.சுப்புலெட்சுமி :

மதுரை சண்முகவடிவு சுப்புலெட்சுமி என்னும் இவர் இசைச் சூழலில் வளர்ந்தவர். வீணைக் கலைஞரான இவரது தாயே முதல் குருவாக விளங்கினார். தனது பதினேழு வயதில் சென்னை மியூசிக் அகாதெமியில் மேதைகள் பலர் முன்பு கச்சேரி செய்து பலரது பாராட்டையும் பெற்றவர். பின்னாளில் நேரு, சரோஜினி நாயுடு, காந்தியடிகள் ஆகியோரது பாராட்டையும் தமது இசையால் பெற்றார். 1954 இல் தாமரையணி விருது பெற்ற போது பார்வையற்ற ஹெலன் கெல்லர் தன்னைத் தொட்டுத் தழுவியதை பெருமையாக கருதியவர். இவர் பாடிய வெங்கடேச சுப்ரபாதம் இன்றும் திருப்பதியில் ஒலிக்கிறது. மகசேசே விருது, இந்திய மாமணி என பல விருதுகளை பெற்றவர்.

பாலசரஸ்வதி :

தனது ஏழாவது அகவையில் காஞ்சிபுரத்தில் தனது பரதநாட்டியத்தை அரங்கேற்றினார். சென்னையில் மட்டுமல்லாது வட இந்தியாவிலும் தனது பரத நாட்டியத்தை நிகழ்த்தி பரதக் கலைக்கு மெருகூட்டியவர். கல்கத்தாவிலும், காசியில் நடந்த அனைத்திந்திய இசை மாநாட்டிலும், சென்னையில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் கண்காட்சியிலும் நாட்டுப்பண்ணாகிய ஜனகணமன பாடலுக்கு மெய்ப்பாடுகளோடு நடனமாடியவர். பரத நாட்டியக் கலையை முறையாக அணுகினால் ஆன்மீகப் பட்டறிவை நடனத்தால் வழங்கமுடியும் என்று கூறியவர். இந்திய அரசின் தாமரைச் செவ்வணி விருது பெற்றவர்.

விரிவாக விடையளி (44)

ராஜம் கிருஷ்ணன் :

சமூக சிக்கல்களை புதினங்களாக எழுதியவர். கதைகளை கற்பனையாக எழுதாமல் களப்பணி ஆற்றி புதினங்களாக படைத்தவர். இவர் எழுதிய புதினங்களில் சில...வரலாற்றுப் புதினமாக பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி, உப்பளத் தொழிலாளர்களின் உவர்ப்பு வாழ்க்கையை எடுத்துக்கூறும் கரிப்பு மணிகள், படுகர் இன மக்களைப் பற்றி குறிஞ்சித்தேன், மீனவர் வாழ்க்கை குறித்து அலைவாய்க் கரையில், வேளாண் தொழிலாளர்களுக்காக சேற்றில் மனிதர்கள், வேருக்கு நீர், தீப்பெட்டித் தொழிலில் கருகும் குழந்தைகளைப் பற்றி கூட்டுக் குஞ்சுகள், பெண் சிசுக் கொலை பற்றி மண்ணகத்துப் பூந்துளிகள். இவையெல்லாம் இவரது சமூக அக்கறையை வெளிப்படுத்துபவை. வேருக்கு நீர் என்ற புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.

கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் :

விடுதலைக்கு முன்பு கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் போராடி கல்வி கற்றவர். காந்திய சிந்தனையில் கவரப்பட்டு சர்வோதயா, ஒத்துழையாமை, சட்ட மறுப்பு, வெள்ளையனே வெளியேறு போன்ற இயக்கங்களில் பங்கேற்றார். விடுதலைக்குப் பின் பூதான இயக்கத்தில் பணிபுரிந்தார். உழுபவருக்கே நில உரிமை இயக்கம் தொடங்கி விவசாயிகளுக்காக குரல் கொடுத்தவர். இந்திய அரசின் தாமரைத்திரு விருது, சுவீடன் அரசின் வாழ்வுரிமை விருது, சுவிட்சர்லாந்து அரசின் காந்தி அமைதி விருது என பல விருதுகளை பெற்றுள்ளார்.

சின்னப்பிள்ளை :

பள்ளிக்கூடம் சென்றறியா இவர் பெண்களுக்கான சுயஉதவிக் குழுக்களை நிறுவி இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாய் திகழ்ந்தவர். சுனாமி ஏற்பட்ட போது ஏழ்மை நிலையிலும் பிறருக்கு உதவியவர். மாண்புமிகு மேனாள் பிரதமர் இவருக்கு ஸ்திரி சக்தி புரஸ்கார் விருது வழங்கியதுடன் இவரது சேவையைக் கண்டு இவரது காலில் விழுந்து வணங்கினார். தமிழக அரசின் ஔவை விருதையும், தூர்தர்ஷனின் பொதிகை விருதையும், இந்திய அரசின் தாமரைத்திரு விருது விருதையும் பெற்றவர்.

7. இராமானுஜர் என்னும் நாடகத்தின் கதையைச் சுருக்கி வரைக. **(அல்லது)**

பிறர் நலம் பேணும் பொருள் கொண்டவர் இராமானுஜர் மெய்ப்பிக்க. **(அல்லது)**

என் மக்கள் அனைவருக்கும் நலம் கிட்டும். எல்லாரும் நலமுடன் வாழ்வார்கள் என்ற இராமானுசரின் கூற்றுக்கு ஏற்புடைய தன்னலமற்றப் பண்பு கொண்ட உன்னைக் கவர்ந்த ஆளுமை ஒருவரைக் குறித்து எழுதுக.

பொறுமை உடையவர் :

திருமந்திரத் திருவருளைக் கற்றுக் கொள்வதற்காக பதினெட்டு முறை பூரணரைச் சந்திக்கச் சென்றார். இன்றாவது நம் விருப்பம் நிறைவேறுமா! என்ற உடன் வந்தவர்களையும் பொறுமையுடன் வழி நடத்துகிறார். உங்களை மட்டும்தானே வரச்சொன்னேன் என்ற பூரணரிடமும் பொறுமையுடன் பதில் கூறுகிறார். இவ்வாறு இராமானுசர் பொறுமை என்னும் பண்பில் சிறந்திருத்தலை அறியலாம்.

நட்புக்கு மரியாதை :

எப்பொழுதும் தன்னுடன் இருக்கும் கூரேசரையும், முதலியாண்டானையும் உண்மையான நட்புடன் நேசிக்கிறார். திருமந்திர திருவருளைக் கற்கப்போகும் பொழுதுகூட, பூரணர் தண்டு கொடியுடன் மட்டும் வாருங்கள் என்கிறார். அப்போதும் இவர்கள் இருவரும் என்னுடன் இருக்கும் தண்டும் கொடியும் போன்றவர்கள்தான் என்று கூறி நட்பு உணர்வை வெளிப்படுத்துகிறார்.

தன்னலமற்ற பரந்த உள்ளம் :

பிறவிப்பிணி தீர்க்கும் அருமருந்தான திருமந்திரத்தை கற்றபின் தன்னலம் கருதி அதனை தனக்காக வைத்துக்கொள்ளாமல் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று விரும்பியவர். குருவின் கட்டளையை மீறினால் நரகம் வந்து சேரும் என்று தெரிந்த போதும் மக்களுக்கு திருமந்திரத்தை வெளிப்படுத்துகிறார். திருமந்திரத் திருவருளை வெளியில் சொன்னால் நான் மட்டுமே நரகம் செல்வேன். இத்தனை மக்கள் நரகத்தில் இருந்து விடுபடுவார்கள் அல்லவா! என்ற பரந்த எண்ணம் கொண்டிருந்தார்.

அதனால் மக்கள் கூட்டத்தை அழைத்துப் பிறவிப் பிணியறுக்கும் திருமந்திரத்தைக் கற்றுக்கொடுத்து மக்களை நரகத்தில் இருந்து காத்த மகிழ்ச்சியைப் பெற்றார். பரந்த மனப்பான்மை பெற்றிருந்தபடியால் பூரணரால் எம் பெருமான் என்று அழைக்கப் பெற்றார். அது மட்டுமின்றி பூரணர் தன் மகள் சௌம்ப நாராயணனையும் அடைக்கலமாக அளித்தார்.

விரிவாக விடையளி (44)

9. துணையின்றி வாழும் நிலை இரங்கத்தக்கது எப்படிப்பட்டவராக இருந்தாலும் பிறரது துணையைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதை கு.அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான் கதை வாயிலாக விளக்குக.

(அல்லது)

கு.அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து விவரித்து எழுதுக.

மனிதநேயம் கொண்ட கதை மாந்தர் - வீரப்பன்

வீரப்பன் காஞ்சிபுரத்தில் விறகுக்கடையில் வேலை செய்து வந்தான். அவன் ஏழையாக இருந்தாலும் அவன் நண்பன் குப்புசாமி மீது மிகுந்த பாசம் கொண்டவன்.

குப்புசாமிக்கு தாய் தகப்பன் கிடையாது. உறவுகள் இருந்தாலும் அவனைப் பார்த்துக் கொள்ள ஆளில்லை. அனாதையாகி விட்டான். தன் வறுமையையும் நினையாமல் தன் நண்பனுக்கு உதவும் மனித தர்மத்தை வீரப்பன் என்ற கதை மாந்தர் மூலம் அழகிரிசாமி அழகுபடுத்துகிறார்.

குப்புசாமி வேலை செய்து வந்து சைக்கிள் கடைக்கு எதிரே உள்ள விறகுக் கடையில் வீரப்பனும் வேலை செய்து வந்தான். இருவரும் நெருங்கிய நண்பர்கள்.

குப்புசாமி நோய்வாய்ப்பட்டு வேலையிழந்த பொழுது வீரப்பன் தன் வீட்டிற்கு அழைத்து வந்து சாப்பாடு போடுவான். தான் ஏழையாக இருந்தாலும், தன் நண்பனுக்கு கடன் வாங்கி உதவி செய்வான்.

இப்படியும் ஒரு நட்பா! இவன் உயிருக்கு இவ்வளவு மதிப்பு கொடுக்கிற ஓர் ஆத்மாவும் இவ்வுலகில் உண்டா!

ஒரு நாள் வீரப்பன் குப்புசாமிக்கு மூன்று ரூபாயும் ஒரு லெட்டரும் கொடுத்தனுப்பினான். அந்த லெட்டரில்,

என் உயிர் நண்பன் குப்புசாமிக்கு எழுதிக் கொண்டது,

நீ இங்கிருந்து போனதிலிருந்து என் உயிர் இங்கே இல்லை. சதா உன் ஞாபகம் தான். கடவுள் அருளால் நீ சவுக்கியமாகி வர வேண்டும். உனக்காக நான் தினமும் கோவிலுக்குப் போய் கும்பிடுகிறேன். எனக்கு இப்பொழுது வேலையில்லை; வருமானமும் இல்லை. உன்னைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை. ஆனால் என்னிடம் இருக்கின்ற மூன்று ரூபாய் பணத்தை வைத்துக் கொண்டு பஸ்ஸில் பயணம் தான் செய்ய முடியும். அதனால் நான் வரவில்லை. இந்தப் பணத்தையும் நான் ஆறுமுகத்திடம் கொடுத்து அனுப்பியுள்ளேன். அது உனக்கு உதவியாக இருக்கும். இன்னொரு இடத்தில் பணம் கேட்டிருக்கின்றேன். கிடைத்தால் நான் சீக்கிரம் உன்னைப் பார்ப்பேன். பார்த்தால் தான் நான் தின்னும் சோறு சோறாக இருக்கும்.

இப்படிக்கு,
உன் நண்பன்,
வீரப்பன்.

முடிவுரை :

உலகமே வெறுத்து ஒதுக்கிய குப்புசாமியிடம் உயிரையே வைத்து வறுமையிலும் உதவும் மனப்பான்மை, சம்பளமே இல்லாதபொழுது கடன் வாங்கி உதவும் கருணை, உறவினரால் ஒதுக்கப்பட்ட பொழுதும் உயிர் அணைய நண்பனாக விளங்கிய வீரப்பனை அழகிரிசாமி சிறந்த மனிதநேயம் கொண்ட கதை மாந்தராக படைத்துள்ளார்.

விரிவாக விடையளி (45)

1. சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

முன்னுரை :

காற்றினால் ஏற்படும் ஓசையை ஒளியாக்கி, அதற்கு வரிவடிவம் தந்து, மொழியாக நிலைபெறச் செய்த மனிதனின் செயலுக்கு இணையான படைப்போ கண்டுபிடிப்போ இதுகாறும் தோன்றவில்லை என்பதே உண்மை. அவ்வாறு தோன்றிய முதல் மொழியே தமிழ்மொழி தான் என்பது மிகவும் பெருமைக்குரிய ஒன்றாகும். இத்தமிழ்மொழி சான்றோர்கள் பலரின் தியாகத்தாலும், உழைப்பாலும் அது இன்று உயர்தனிச் செம்மொழியாக நிலைபெற்று நிற்கிறது. மொழி வளர்த்த சான்றோர்கள் சிலரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

தமிழின் தொன்மை :

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்தக்குடி' எனத் தமிழினத்தின் தொன்மையைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. தமிழின் தொன்மையைக் கருதி 'என்றுமுள தமிழ்' என்பார் கம்பர். 'உலகம் வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி' என்றார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

ஜி.யு.போப்பின் தமிழ்ப்பணி :

தமிழ் மொழியால் ஈர்க்கப்பட்டு தமிழாய் மலர்ந்து, மணம் பரப்பி என்றும் தமிழுலகில் அழியாப்புகழ் பெற்றவர். திருக்குறளை நாற்பதாண்டுகள் படித்துச் சுவைத்த போப் அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1886 ஆம் ஆண்டு வெளியட்டு திருக்குறளின் பெருமையை உலகறியச் செய்தார். ஆங்கில மொழியை அன்னை மொழியாகக் கொண்ட போப், 'இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கின்றான்' என தனது கல்லறையில் எழுதுமாறு இறுதிமுறியில் எழுதி தன்னைத் தமிழராகவே ஆக்கிக் கொண்டார்.

வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி :

இத்தாலி நாட்டில் பிறந்த வீரமாமுனிவர் தமிழகம் வந்து தமிழைக் கற்றார். தமிழ்மொழிப் பற்றினால் 'தைரிய நாதர்' என முதலில் சூட்டிக்கொண்ட தனது பெயரைத் தனித்தமிழாக்கி 'வீரமாமுனிவர்' எனச் சூட்டிக்கொண்டார். இவர் தமிழில் முதன்முதலாகச் சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டார்.

ஆறுமுக நாவலரின் தமிழ்ப்பணி :

யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்த ஆறுமுகனாரது மொழித்திறமையையும், வாக்கு வன்மையையும், பொருள் விளக்கும் தன்மையையும் கண்ட திருவாதுறை ஆதித்தனார் இவருக்கு நாவலர் என்னும் பட்டத்தை அளித்தனர். இவரை 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் பரிதிமாற்கலைஞர் பாராட்டியுள்ளார். ஆறுமுக நாவலர் சென்னையில் அச்சுக்கூடம் அமைத்து சிறந்த தமிழ் நூல்களைப் பதிப்பித்து அனைவரும் தமிழைச் சுவைக்கச் செய்தார்.

நான்காம் தமிழ்ச் சங்கம் :

முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்கள் அமைத்து தமிழை வளர்த்தனர் தமிழ்ப் புலவர்கள். அச்சங்கங்கள் கடற்கோளால் கொள்ளப்பட்ட பின்னர் பரிதிமாற் கலைஞர், உ.வே.சாமிநாதர், இராகவனார் ஆகிய பேராசிரியர்கள் துணையுடன் பாசுகர சேதுபதி தலைமையில் பாண்டித்துரை மேற்பார்வையில் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை அமைத்துத் தமிழை வளர்த்தனர்.

உலகத் தமிழ் மாநாடு :

உலகிலேயே மொழிக்காக, முதன்முதலில் மாநாடு நடத்திய நாடு மலேசியா. அதுவும் தமிழ் மொழிக்காக நடைபெற்றது. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் இன்றும் தமிழே ஆட்சி மொழியாகத் திகழ்கிறது. காரணம் அவ்விடங்களில் குடிபெயர்ந்த தமிழர்களின் தமிழ்ப்பற்றும் தமிழை வளர்க்கும் நோக்கமுமேயாகும்.

முடிவுரை :

குமரிக் கண்டத்தில் தோன்றிய தமிழினம் உலகமெலாம் பரவித் தன்புகழை நிலைநாட்டி வருவதற்குக் காரணம் தமிழ்ச் சான்றோர்களின் தியாகமே என்றால் மிகையாகாது.

விரிவாக விடையளி (45)

2. விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. **(அல்லது)** குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.

முன்னுரை - விண்வெளியில் தமிழரின் அறிவு - கல்பனா சாவ்லா - விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை - முடிவுரை.

முன்னுரை :

ஆணுக்குப் பெண் சரிசமம் என்ற கருத்தை மெய்ப்பிக்கும் வண்ணம் விண்வெளியில் கால் பதித்த இந்தியாவின் முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவர் கல்பனா சாவ்லா. அவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பிறப்பு :

01.07.1961 அன்று இந்தியாவில் உள்ள ஹரியானா மாநிலத்தில் பிறந்தார்.

பெற்றோர் : பனாரஸ் லால் சாவ்லா (தந்தை), சன்யோகிதா தேவி தாய்)

கல்வி :

கர்னலில் உள்ள அரசு பள்ளியில் ஆரம்பக் கல்வி.

1982 - சண்டிகரில் உள்ள பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் விமான ஊர்தியியல் துறையில் இளங்கலைப் பட்டம்.

1984 - அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம்.

1988 - விண்வெளி பொறியியல் துறையில் முனைவர் பட்டம்.

விண்வெளிப் பயணம் :

நாசா ஆராய்ச்சிக் கூடத்தில் ஓசெர்செட் மேதொட்ஸ் இன்க் இல் துணைத்தலைவராக பொறுப்பேற்றார்.

1995ல் நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் சேர்ந்தார்.

1997 ஆம் ஆண்டு கொலம்பிய விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ் - 87ல் முதல் விண்வெளி பயணத்தைத் தொடங்கினார்.

கொலம்பியா விண்கல நிகழ்வு :

16.01.2003ல் அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ் -107 விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த விண்கலத்தில் சாவ்லா உட்பட ஏழு பேர் பயணித்தனர். பதினாறு நாட்கள் ஆய்வை முடித்து விட்டு திரும்பிய போது, அமெரிக்காவின் டெக்ஸாஸ் வான்பரப்பில் அவ்விண்கலம் வெடித்துச் சிதறியது. சாவ்லா உட்பட ஏழு பேரும் பலியாகினர்.

விருதுகளும் அங்கீகாரங்களும்

இளம்பெண் விஞ்ஞானிகளை ஊக்குவிக்க தமிழக அரசாங்கம் கல்பனா சாவ்லா விருதினை 2004 ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது.

நாசா ஸ்பேஸ் பிளைட் மெடல்.

நாசா டிஸ்டிங்குவிஷ்ட் சர்வீஸ் மெடல்.

நியூயார்க்கில் உள்ள ஒரு தெருவிற்குக் கல்பனா வே எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

முடிவுரை :

பெண்ணினத்திற்கே பெருமை சேர்த்தவர் கல்பனா. கனவுகளைக் கண்டு அந்தக் கனவுகளை நனவாக்குவதற்கு விடா முயற்சியோடும், முழுமனதோடும் செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்திச் சென்ற வீரப்பெண்ணை நாமும் போற்றுவோம்.

3. மழைநீர் சேகரிப்பு குறித்து கட்டுரை ஒன்று தருக.

மழைநீர் சேகரிப்பு

முன்னுரை :

நீரின்றி அமையாது உலகு என்றார் வள்ளுவர். அத்தகைய நீரை மழை பெய்யும் காலங்களில், நிலத்துக்கு அடியில் சேமிப்பதையே மழைநீர் சேகரிப்பு என்கிறோம். அதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பற்றாக்குறை ஏன்? :

காடுகள் அழிக்கப்படுவதால் மழை பெய்ய வேண்டிய காலத்தில் பெய்வதில்லை. மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப நீர்நிலைகள் பெருகவில்லை. கிடைத்த நீரையும் சரியான முறையில் பாதுகாப்பதில்லை. இதனால் கோடையில் கடும் வறட்சி நிலவுகிறது.

மழைநீர் சேகரிப்பு :

நிலத்தடி நீர் வளம் குறைந்து விட்டது. போதிய அளவு மழையும் பெய்வதில்லை. எனவே மழை பெய்யும் காலத்தில் மழைநீரை சேமிப்பது அவசியம். தொட்டிகள் அமைத்தல், நீர் நிலைகளை ஆழப்படுத்துதல், புதிய அணைகளைக் கட்டுதல் மூலம் மழை நீரை சேமிக்கலாம்.

விரிவாக விடையளி (45)

மழைநீர் சேகரிக்கும் முறைகள் :

மழை நீரை நீரோடை மூலம் திருப்பி, ஆறுகள் மற்றும் ஏரிகளில் சேமிக்கலாம். ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டி அதன் மூலம் சேமித்தல். மொட்டை மாடியில் பெய்யும் மழைநீரைக் குழாய் மூலம் கொண்டு வந்து தொட்டியில் சேமிக்கலாம்.

பயன்கள் :

நிலத்தடி நீர்மட்டம் உயரும். கடல் நீர் நிலப்பகுதியில் உட்புகாமல் தடுக்கும். விவசாயம் சிறப்பாக நடைபெறும். உணவு உற்பத்தி பெருகும். எதிர்கால சந்ததியினரின் தண்ணீர் தேவை பூர்த்தியாகும்.

முடிவுரை :

நீர் வளத்தைப் பாதுகாப்பதால் நம் வாழ்வு வளம் பெறும். மரங்களை வளர்ப்பதால் மழை வளம் பெருகும். இதனால் தண்ணீர் பற்றாக்குறை நீங்கும்.

மழை நீரை சேகரிப்போம்! வருங்காலத் தலைமுறையைக் காப்போம்!!

4. குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.

அமைதி - வனம் - மனத்தைத் தொட்டது - கொஞ்சம் அச்சம் - ஆனால் பிடித்திருந்தது - இரவில் வீட்டின் அமைதியை விட - வனத்தின் அமைதி - புதுமை - கால்கள் தரையில் - இலைகளின் சலசலப்பு - பறவைகள் மரங்களின் மேல் - சிறகடிப்பு - அருகில் திரும்பியவுடன் - திடீரென ஆரவார ஓசை - தண்ணீரின் ஓட்டம் - அழகான ஆறு - உருண்டைச் சிறு கூழாங்கற்கள் - இயற்கையின் கண்காட்சி.

இயற்கையின் கண்காட்சி

அமைதியான வனம் :

அடர்ந்த மரங்களைக் கொண்ட பசுமை மிகுந்த அமைதி நிறைந்த வனத்திற்குச் சென்றேன். வனத்தாவரங்கள் மற்றும் மலர்களின் நறுமணம் என் மனதைத் தொட்டது. அச்சூழ்நிலை மிகவும் கொஞ்சம் அச்சமுடையதாக இருந்தது. இரவில் வீட்டில் இருக்கும் அமைதியை விட வனத்தின் அமைதி என்னை மிகவும் கவர்ந்தது.

காட்டுயிரிகள் :

புதுமையான ஓர் அனுபவத்தைப் பெற்றேன். என் கால்கள் தரையில் ஊன்றியிருப்பதாய்த் தெரியவில்லை. இலைகளின் சலசலப்பு கேட்டு ஓசை வந்த திசை நோக்கித் திரும்பினேன். மரங்களின் மேலிருந்த பறவைகள் தங்கள் சிறகுகளை அடித்து சோம்பலைப் போக்கிக் கொண்டிருந்தன.

ஆரவார ஓசை :

திடீரென ஏற்பட்ட ஆரவார ஓசையைக் கேட்டு திரும்பிப் பார்த்தேன். குரங்குகள் தண்ணீரின் ஓட்டத்தில் தங்கள் முகங்களின் அழகைக் கண்டு ஆரவாரம் செய்து கொண்டிருந்தன.

அழகான ஆறு :

தெளிவான நீரோடையின் உள்ளே, உருண்டை வடிவில் சிறு கூழாங்கற்கள் பார்ப்பதற்கு விலையுயர்ந்த கற்களைப் போலவும், கண்ணாடியால் செய்யப்பட்ட உருண்டைகள் போலவும் தோற்றமளித்தன. இத்தகைய இயற்கையின் கண்காட்சி என் மனதை விட்டு அகலவில்லை.

5. வீரமாமுனிவர் பற்றியும், அவர் ஆற்றிய தமிழ்ப்பணியைப் பற்றியும் கட்டுரை வரைக.

வீரமாமுனிவர் :

கான்சுடான்சு ஜோஸ் பெஸ்கி என்னும் இயற்பெயர் கொண்ட வீரமாமுனிவர் கி.பி. 1960 முதல் கி.பி.1747 வரையில் வாழ்ந்தவர். இவரது புனை பெயர் தைரிய நாத சுவாமி என்பதாகும். இலத்தீன், கிரீக்கு, எபிரேயம், ஆங்கிலம், தெலுங்கு முதலான மொழிகளுடன் தமிழ் மொழியிலும் புலமை பெற்றவர். எளிமையும், துறவையும் மேற்கொண்ட தூயதுறவி.

தமிழ்ப்பணி :

வீரமாமுனிவர் 1710 முதல் 1747 வரை தமிழகத்தில் இருந்து தமிழ்ப்பணி ஆற்றினார்.

சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ் கற்றார்.

இலக்கியச் சுவடிகளைத் தேடி எடுத்ததால் சுவடி தேடும் சாமியார் எனப் பட்டார்.

திருக்குறளின் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் இலத்தீனில் மொழி பெயர்த்தார்.

1728இல் புதுவையில் இவரின் பரமார்த்த குருவின் கதை நூல் முதன் முறையாக அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வேறு எந்தக் காப்பியப் புலவரும் சிற்றிலக்கியம், அகராதி இலக்கணம், உரைநடை என பிற இலக்கிய வகைகளில் நூல்கள் படைக்கவில்லை.

இந்தத் தமிழ்ப் பணிகளை இவர் தமிழ்நாட்டில் மதுரை, திருச்சி, கன்னியாகுமரி, ஆற்காட்டு வேலூர், சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய பல்வேறு இடங்களில் தங்கிப் பணியாற்றினார்.

<u>விரிவாக விடையளி (45)</u>

6. பள்ளி ஆண்டு விழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை, கட்டுரை, சிறுகதை, கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

<u>நூல் மதிப்புரை</u>

| | |
|---|---|
| நூல் தலைப்பு : | பரமார்த்த குரு கதைகள் |
| நூல் ஆசிரியர் : | வீரமாமுனிவர் |
| நூலின் மையப்பொருள் : | விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். |
| மொழி நடை : | அனைவருக்கும் புரியும் எளிய மொழிநடை |
| வெளிப்படுத்தும் கருத்து : | மூடநம்பிக்கையை அகற்றுதல் |
| நூலின் கட்டமைப்பு : | குழந்தைகள் விரும்பிப் படிக்க ஏற்ற சிறுகதை வடிவம் |
| நூல் சிறப்பு : | எளிமையான சொற்களால் குழந்தைகளுக்கு அறிவூட்டல். |

7. 17ஆம் நூற்றாண்டில் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு இன்று உலக விந்தையாகத் திகழும் தாஜ்மகால் - இன்றளவில் மஞ்சள், பழுப்பு என நிறம் மாறிக் காட்சியளிப்பதன் காரணங்களையும், அதற்கு உண்டான தீர்வுகளையும் எழுதுக.

<u>காரணம் :</u>

ஆக்ராவில் தாஜ்மகாலைச் சுற்றியுள்ள தோல் தொழிற்சாலை மற்றும் எண்ணெய் தொழிற்ச்சாலைககளிலிருந்து வெளிவரும் சல்பர் டை ஆக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு மற்றும் கார்பன் மோனாக்சைடு ஆகிய தீங்கு விளைவிக்கும் நச்சு வாயுக்கள் காற்றில் கலந்து பரவுவதால் அவை வெள்ளைப் பளிங்குக் கற்களின் மீது பட்டு அவற்றின் நிறத்தையும், தன்மையையும் மாற்றுகிறது.

<u>தீர்வு :</u>

எல்.பி.ஜி. வாயு உருளைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். நிலக்கரி மற்றும் கச்சா எண்ணெய் பொருட்களை எரிக்கக் கூடாது. என்று 1995ஆம் ஆண்டு அரசு ஒரு சட்டம் இயற்றியது. அதன்படி தாஜ்மகாலைச் சுற்றியுள்ள குறிப்பிட்ட பகுதிகள் இன்று வரை இச்சட்டத்தை மதித்து வருகின்றன. ஆகவே தான் அவை மேலும் சேதமடையாமல் காக்கப்பட்டு வருகிறது.

8. மேடைக் கலைஞர்களுக்கும், பகல் வேடக் கலைஞர்களுக்கும் பேட்டியாகத் திகழும் இக்கால சின்னத்திரை, திரைப்படம் வாயிலாக எதிர்கொள்ளும் இடர்பாடுகளைக் கண்டறிந்து வகுப்பறையில் விவாதிக்க.

<u>ஆசிரியர் :</u>

மாணவர்களே! மேடைக் கலைஞர்களும் பகல் வேடக் கலைஞர்களும் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் குறித்து உங்களது கருத்து என்ன?

<u>மாணவர் குழு - 1 :</u>

ஒப்பனைக்கு பயன்படுத்திக் கொள்ளும் அலங்காரப் பொருட்கள். ஒவ்வாமையை ஏற்படுத்தும் சலங்கைகள் காலில் குத்துவதற்கு வாய்ப்புள்ளது. வித்தைகளைக் காட்டும் போது சில விபத்துகள் நேர வாய்ப்புள்ளது.

<u>மாணவர் குழு - 2 :</u>

எத்தொழில் செய்யினும் வருமான நோக்குடன் செய்யப்படுகிறது. நிகழ்கலை கலைஞர்கள் வருமானம் ஈட்டுவதையே முதன்மையாகக் கொண்டவர்கள். உழைப்பதனால் வரும் வருமானம் மகிழ்ச்சியைக் கொடுக்கும் போது, ஏற்படும் பிரச்சனைகளை சமாளித்துக் கொள்ள வேண்டியதுதான்.

<u>ஆசிரியர் :</u>

எத்தொழில் ஆயினும் வெவ்வேறு விதமான பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டும். இவ்வுலகில் நாம் வாழும் வாழ்க்கை நாடகத்தில் நடிகர்களாக இருக்கும் கலைஞர்கள் சந்திக்கும் இடர்பாடுகள் வேறு மாதிரியானவை.

கோமாளிகளாக நடிக்கும் கலைஞர்கள் பிறரின் கேலிக் கூத்துக்கு ஆளாகின்றனர். தங்களுக்குரிய சோகங்கள் எதுவாக இருந்தாலும் அதனை வெளிப்படுத்தாது மக்களை மகிழ்விக்க நினைக்கும் கலைஞர்கள் உயர்ந்தவரே.

விரிவாக விடையளி (45)

9. நீங்கள் எதிர் கொண்ட இயற்கை இடர் குறித்து விவரித்து எழுதுக. (மழை, வெள்ளம், புயல், வறட்சி)

மழை :

தவறிப்பெய்த பருவமழையால் அறுவடைக்கு தயாராய் இருந்த பயிர்கள் நீரில் நனைந்து நாசம் அடைந்தன. போக்குவரத்து பாதிப்புகளால் மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாயினர். மழைப் பொழிவின் காரணமாக மக்கள் பலர் வெளியே செல்ல முடியாததாலும், மின்சாரம் தடை செய்யப்பட்டதாலும் பல தொழில்கள் முடங்கின.

வெள்ளம் :

கடந்த 2018ஆம் ஆண்டு கேரளாவில் ஏற்பட்ட வெள்ளமானது அம்மாநிலத்தையே புரட்டிப் போட்டது. தென்மேற்கு பருவக் காற்றினால் ஏற்பட்ட மழைப்பொழிவே இதற்குக் காரணம். வெள்ளத்தினால் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி பலர் உயிர் இழந்தனர். இதில் கேரளாவில் உள்ள இடுக்கி, வயநாடு, கோழிக்கோடு உட்பட 10 மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. மலைப்பாதையில் ஏற்பட்ட மண் சரிவினால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

புயல் :

சென்னைக்குத் தென்கிழக்கே 260 கி.மீ தொலைவிலும் நாகைக்கு வடகிழக்கு 180 கி.மீ தொலைவிலும் மையம் கொண்டிருந்த கஜா புயல், மேற்கு தென் மேற்குத் திசையில் நகர்ந்து கடலூர் பாம்பன் இடையே நாகைக்கு அருகே 111 கி.மீ வேகத்தில் கரையைக் கடந்தது. புயலானது கரையைக் கடந்த போதிலும் டெல்டா மற்றும் கரையோர பகுதி மக்களின் கவலைஇன்னும் கடந்து போகவில்லை. ஏனெனில் விவசாயிகள், மீனவர்கள் ஆகியோரின் வாழ்வாதாரமே அழிந்தது.

வறட்சி :

இந்திய வானிலைத் துறையின் கூற்றுப்படி 10 சதவிதத்திற்கும் குறைவான மழைப்பொழிவு இருக்குமானால் அந்நாட்டை வறட்சியால் பாதிக்கப்பட்ட நாடு எனலாம். பற்றாக்குறையான மழைப் பொழிவே வறட்சிக்குக் காரணம். பருவகாலம் பொய்த்துப் போவதால் உருவாகும்.

மழைப் பொழிவின்மை, பருவகால மாறுபாடுகள், காடுகள் அழிவு, சுற்றுச்சூழல் சீர்கேடு, அதிக அளவு ஆவியாதல், மோசமான நில மேலாண்மை, அதீத மேய்ச்சல், மண் அரிப்பு ஆகியன வறட்சியை ஏற்பட முக்கியக் காரணங்களாகும்.

10. நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும் என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்

மேடை உரை :

அன்பார்ந்த அவையோரே! கல்வி கற்கும் மாணவப் பருவத்திலே நாம் நாட்டுப்பற்று உடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

நாட்டின் எதிர்காலம் வகுப்பறைகளில் தான் வடிவமைக்கப் படுகிறது என்றார் நம் நவபாரத சிற்பி நேரு. எனவே கல்வியோடு நாட்டுப்பற்றையும் நம் கண் எனப் போற்றி வளர்க்க வேண்டும்.

சுதந்திர தினம், குடியரசு தினம் போன்ற நம் நாட்மு விழாக்களைக் கொண்டாடும் போது, அதற்காக நம் முன்னோர்கள் சிந்திய கண்ணீரையும், செந்நீரையும், விலைமதிப்பில்லா உயிரையும் மனப்பூர்வமாக உணர வேண்டும்.

அகிம்சைப் போராட்டம், அந்நிய துணிக்கடை மறியல், தீண்டாமை விலக்கு, கதர் விற்பனை, வெள்ளையனே வெளியேறு போன்ற விடுதலைப் போராட்ட முறைகளை நாம் மறத்தல் கூடாது.

செக்கடியிலும், சிறைச்சாலையிலும் நம் வீரர்கள் பட்ட துன்பத்தை எண்ணிப் பார்த்து, நாட்டு விழாக்களைக் கொண்டாடும் போது நாட்டைக் காக்கும் சூளுரை ஏற்பவர்களாகவும், அதனை செயல்படுத்துகிறவர்களாகவும் நாம் இருத்தல் வேண்டும்.

நாட்டு விழாக்களைக் கொண்டாடும் போது நம் தேசியக் கொடியை உளமாற மதிக்கின்றவர்களாய் இருத்தல் வேண்டும்.

மாணவப் பருவத்தில் சாரண, சாரணியர் இயக்கம், நாட்டு நலப்பணித்திட்டம், தேசிய மாணவர் படை ஆகியவற்றில் இணைந்து நாட்டுப்பற்றையும், சேவை மனப்பான்மையையும் நாம் வளர்த்துக் கொண்டால் தான் பெரியவர்களாகும் போதும் நாம் நாட்டைக் காக்கும் நல்லோராய், பற்றாளராய் மாற முடியும்.

விரிவாக விடையளி (45)

கல்வி, பொருளாதாரம், தொழில் பெருக்கம் இவற்றில் நாம் அக்கறை உடையவர்களாய் இருப்பதும் நாட்டுப்பற்றே. கல்வி, பொருளாதாரம், தொழில் ஆகியவற்றை வளர்க்க நாம் முனைய வேண்டும்.

நம் நாட்டின் உயர்வுக்கும், முற்போக்கு வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாக இருப்பவைகளை முறியடிக்க முயல வேண்டும்.

சுரண்டலும், ஊழலும், ஆதிக்க உணர்வும், ஏற்றத்தாழ்வும் ஒழிய பாடுபடும் எண்ணம் உடையவர்களாக நாம் ஒவ்வொருவரும் இருத்தல் வேண்டும்.

சொந்த நலன் ஒன்றினையே கொள்கையாக்கி
சொந்த நாட்டைச் சீரழிக்கும் கயவர்களை
முந்தி நின்று வீழ்த்துவோம் - நாட்டை
முத்தாக ஒளிரவைக்க உறுதி ஏற்போம்! ஏற்போம்!

11. அகநக நட்பதே நட்பு என்ற தலைப்பில் நண்பர்களுக்கு உதவிய சூழல்களைச் சுவைபட கட்டுரை ஒன்று எழுதுக.

அகநக நட்பதே நட்பு

எனக்கு ஒரு நண்பன் இருந்தான். அவன் எனக்கு நண்பன் என்று புறத்தே பார்ப்பவர்களுக்கு தெரியாது. நண்பர்கள் என்று யாரும் கண்டுபிடித்ததும் இல்லை. முகநக நட்பது நட்பன்று என்பதை நாங்கள் இருவரும் உணர்ந்தே இருந்தோம்.

ஒரு நாள் வகுப்பறைக்கு அறிவிப்பு ஒன்று வந்தது. ஒரு குறிப்பிட்ட புத்தகம் வாங்க பணம் கொடுப்பது தொடர்பான அறிவிப்பு அது. எங்கள் வகுப்பில் அனைவரும் கொடுத்து விட்டோம். என் நண்பனைத் தவிர...

அவன் என்னைப் பார்த்தான்... அன்று நான் மதிய உணவு எடுத்து வரவில்லை. கடையில் சாப்பிடுவதற்காக வைத்திருந்த பணத்தை அவனுக்காகக் கொடுத்து விட்டேன். அவன் கொண்டு வந்திருந்த உணவை பகிர்ந்து உண்டோம். எல்லோரும் வியந்தனர்.

எப்பிடிடா நீங்க இரண்டும் பேரும்.... என்று கேட்வர்களுக்கு இருவரும் ஒரே மாதிரி பதில் சொன்னோம்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பதே நட்பு.

12. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

முன்னுரை :

எங்கள் ஊரில் அரசுப் பொருட்காட்சி திலகர் திடலில் நடைபெற்றது. அரசுப் பொருட்காட்சிக்கு சென்று வந்தேன். அங்கே நான் கண்டு மகிழ்ந்த நிகழ்வுகளைக் குறித்து இக்கட்டுரை மூலம் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நுழைவுச்சீட்டு :

பொருட்காட்சி நடைபெறும் இடத்தின் உள்ளே செல்ல நுழைவுக்கட்டணம் வசூலிக்கப்பட்டது. பத்து வயதிற்குட்பட்டவர்களுக்கு ரூ.30ம், பத்து வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ரூ.50ம் நுழைவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. நாங்கள் நுழைவுச் சீட்டைப் பெற்றுக் கொண்டு உள்ளே சென்றோம்.

பல்துறை கண்காட்சி அரங்கங்கள் :

வனத்துறை அரங்கத்தின் உள்ளே சென்று பார்த்தபோது வனத்தையும், வனவிலங்குகளையும் பாதுகாப்பது எப்படி என்பதை அறிந்து கொண்டேன். கல்வித்துறை அரங்கத்தின் உள்ளே கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் கல்வியின் சிறப்பு குறித்து பல்வேறு செய்திகள் அச்சிடப்பட்டு ஒட்டி வைக்கப்பட்டிருந்தது. போக்குவரத்துத் துறையினர் சாலை விதிகளைக் கடைபிடிப்பதால் சாலை விபத்துகளைத் தவிர்க்கலாம் என்ற விழிப்புணர்ச்சி கருத்துகளைத் தெரிவித்தன. மேலும் சில போக்குவரத்துக் குறியீடுகளுக்கான விளக்கங்களும் அளிக்கப்பட்டன. காவல்துறை, பொதுப்பணித்துறை, மீன் வளத்துறை, வேளாண்துறை போன்று பல்வேறு துறை சார்ந்த அரங்கங்களின் உள்ளே சென்று அரிய பல தகவல்களை அறிந்து கொண்டேன்.

அங்காடிகள் :

வீட்டு உபயோகப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் என பல்வேறு பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்கிக் கொள்ளும் அளவுக்கு பல்வேறு அங்காடிகள் இருந்தன. தேவையான சில பொருள்களை மட்டும் நான் வாங்கிக் கொண்டேன். உணவு அங்காடிக்குச் சென்று டெல்லி அப்பளம், மிளகாய் பஜ்ஜி, பனிக்கூழ் முதலியவற்றை வாங்கி உண்டேன்.

விரிவாக விடையளி (45)

இராட்டினம் :

ஏறி விளையாடும் சுழற்சித் தேராகிய இராட்டினங்கள் சுழலும் முறையை வியப்புடன் சிறிது நேரம் பார்த்தேன். இராட்சச இராட்டினம், குவளை இராட்டினம், டிராகன் இராட்டினம் என பல்வேறு இராட்டினங்களில் ஏறி மகிழ்ந்தேன்.

பிற பொழுதுபோக்கு அம்சங்கள் :

பேய்வீடு, பாதாள கிணறு, முப்பரிமாண திரையரங்கம், மீன் காட்சிசாலை, பனி வீடு என பல்வேறு அரங்கங்கள் இருந்தன. இபபொழுதுபோக்கு அரங்கங்களுக்கு தனித்தனியே கட்டணம் வசூலிக்கப்பட்டது.

முடிவுரை :

பல மணி நேரமாக சுற்றிப் பார்த்த களைப்பு ஒருபுறம் இருந்தாலும் அங்கே சுற்றிப் பார்த்த மகிழ்ச்சி மிகுதியுடன் வீடு திரும்பினேன்.

13. உங்கள் ஊரில் கடின உழைப்பாளர் - சிறப்பு மிக்கவர் - போற்றத்தக்கவர் - என்ற நிலைகளில் நீங்கள் கருதுகின்ற பெண்கள் தொடர்பான செய்திகளை தொகுத்து வழங்குக.

கடின உழைப்பாளர் (மாலையில் பூ விற்பவர் வீட்டு வேலை செய்பவர்)

எங்கள் ஊரில் விமலா என்றொரு பெண்மணி இருந்தார். அவர் கல்வியாளரோ, எழுத்தாளரோ, போராட்டக்காரரோ அல்லர். கடின உழைப்பாளர்.

எவ்வாறெனில், திருமணமான நாள் முதல் கணவரால் பல இன்னல்களைத் துன்பங்களை அனுபவித்ததோடு, இளம் வயதிலே விதவையாகி சமூக அவலத்துக்கும் உள்ளானார்.

துன்பங்களைப் பெற்ற அவர் துன்பம் துடைத்தூன்றும் தூணாக மாறினார்.

உழைப்பை மட்டும் மூலதனமாகக் கொண்டார். உழைப்பையே உயிர் மூச்சாய் மாற்றினார். வீட்டுவேலை முதல் கிடைக்கும் வேலைகளை எல்லாம் செய்து, தன் பிள்ளைகளின் கல்விக் கண்களைத் திறந்தார்.

ஒரு குழந்தையை மருத்துவராகவும், மற்றொரு குழந்தையைப் பொறியாளராகவும் மாற்றிய விமலா உழைப்பின் இலக்கணமாகத் திகழ்ந்தார்.

போற்றத்தக்கவர்

எம் ஊரில் பெண் மருத்துவர் ஒருவர் இருக்கிறார். அவர் பெயர் மகரதம். வறுமை என்னும் இருள் சூழ்ந்த சூழலிலும் கல்வி வெளிச்சத்தால் வாழ்வின் கரை கண்டு போற்றத்தக்கவர்.

தன் மருத்துவப் பணியை மாதம் ஒரு முறை ஊதியம் இன்றி ஏழை, எளிய மக்களுக்காகச் செய்து வருகிறார்.

தான் வசிக்கும் நகரைச் சுற்றியுள்ள பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களைத் தத்தெடுத்து மக்களுக்கு இலவசமாக மருத்துவ உதவிகளை செய்து வருவதோடு, விழாக் காலங்களில் அக்கிராமங்களில் அன்னதானங்களையும், வஸ்திரத்தானங்களையும் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து செய்து வரும் மருத்துவர். மரகதம் அவர்கள் பெண்ணினத்தில் போற்றத்தக்க சிறப்புடையவர் எனில் மிகையாகாது.

அவரது சேவையைப் பாராட்டி, சமூக அமைப்புகள், பல விருதுகளையும் வழங்கி உள்ளன.

14. குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.

முன்னுரை - சுற்றுச்சூழல் பாதுகாப்பு - நிலம் மாசுபடுதல் - நீர் மாசுபடுதல் - காற்று மாசுபடுதல் - கட்டுப்படுத்தும் வழிகள் - இயற்கையைப் பாதுகாத்தல் - முடிவுரை.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

முன்னுரை :

நம்மைச் சுற்றியிருக்கும் இயற்கைச் சூழ்நிலையை மாசுபடாமல் பாதுகாப்பதே சுற்றுச்சூழல் பாதுகாப்பாகும். நம்மைக் காக்கும் பூமிமை நாமும் காக்க வேண்டும். அதன் அவசியம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

நிலத்தூய்மை :

மண்ணைக் காத்தால் மட்டுமே மனித இனம் மனமகிழ்வோடு வாழ இயலும். இரசாயன உரம், பூச்சிக்கொல்லி, நெகிழி பயன்பாட்டால் நிலம் மாசடைகிறது. இயற்கை உரம் பயன்படுத்தி, உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வது நமக்கும், நிலத்திற்கும் பயனளிக்கும்.

நீர்த்தூய்மை :

நீரின்றி அமையாது உலகு என்றார் வள்ளுவர். அத்தகைய நீரை தூய்மையாக வைப்பதன் மூலம் மனித இனம் ஆரோக்கியமாக வாழ முடியும். நோய்கள் பெருக மாசுபட்ட நீரே காரணம். கழிவு நீர், இரசாயனக் கழிவுநீர் நீர்நிலைகளில் கலப்பதால் நீர் மாசடைகிறது. கழிவு நீரை மறுசுழற்சி செய்ய வேண்டும். கண்ட இடங்களில் மலம் கழிப்பதை தவிர்க்க வேண்டும்.

விரிவாக விடையளி (45)

காற்றுத் தூய்மை :

உயிர்வளி என்று சொல்லப்படும் ஆக்சிஜனின் அளவு குறைந்து வருகிறது. மரங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதே இதற்கு காரணம். தொழிற்சாலை புகை, வாகனப்புகை போன்றவற்றால் வளி மண்டலம் மாசடைகிறது. இதனைத் தடுக்க அதிக அளவு மரங்களை வளர்க்க வேண்டும். புகையினை வெளிப்படுத்தும் தொழிற்சாலை மற்றும் வாகனங்களைக் கட்டுப்படுத்த வேண்டும்.

முடிவுரை :

குப்பைகளைக் கண்ட இடங்களில் கொட்டக் கூடாது. மறுசுழற்சி செய்ய முடியாத நெகிழிப் பொருட்களைப் பயன்படுத்தக் கூடாது. நாம் வாழும் இந்த பூமியை மாசுபடுத்தாமல் பாதுகாப்பது நமது கடமையாகும். இதனால் இந்த பூமி நம்மையும், நம் தலைமுறையையும் நீண்ட நாட்கள் இன்பமாய் வாழ வைக்கும்.

சுற்றுச் சூழல் காப்போம் நோயின்றி வாழ்வோம்

15. மனித மூளையைப் போன்று செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினி மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றி எழுதுக.

நன்மைகள் :

எதிர்காலத் தொழில்நுட்பம் :

உயிரினங்களில் மனிதரை உயர்த்திக் காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றலே! அந்தச் சிந்தனைக்குத் தொழில் நுட்பமும் துணை செய்கிறது. திறன்பேசிகளில் இயங்கும் உதவு மென்பொருள் கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப் போல நம்முடன் உரையாடி உதவி செய்கிறது.

செயல்பாடுகள் :

நாம் சொல்கிறவர்களுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுக்கும்.
நாம் திறக்க கட்டளையிடுகின்ற செயலியைத் திறக்கும்.
நாம் கேட்பதை உலாவியில் தேடும்.
நாம் விரும்பும் அழகான கவிதைகளை இணையத்தில் தேடித் தரும்.
எந்தக் கடையில் எது விற்கும் என்று சொல்லும்.
படிப்பதற்குரிய நூல்களைப் பட்டியலிடும்.
நாம் எடுத்த ஒளிப்படங்களைப் பற்றி பட்டியலிடும்.
எதிர்காலத்தில் நம் நெருங்கிய நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோரை விடவும் உதவு மென்பொருள் நம்மை நன்கு அறிந்திருக்கும்.

தீமைகள் :

உறவுகள் பாதிக்கப்படும்.
சோம்பேறித்தனம் வளரும்.
புலனுறுப்புகள் சேதமடையும்.

16. ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.

சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

உறவினர் மகள் : வணக்கம் ஐயா.
தமிழன் : வணக்கம்
உறவினர் மகள் : உரைத்தல் அல்லது சொல்லுதல் என்றால் என்ன?
தமிழன் : நீயும் நானும் பேசினால் உரையாடல். அதையே எழுதினால் உரைநடை.
உறவினர் மகள் : உரைநடை வளர்ச்சி பற்றி உங்கள் கருத்து யாது?
தமிழன் : தமிழ் இன்று அற இலக்கியங்களாக, காப்பியங்களாக, சிற்றிலக்கியங்களாக, சந்தக்கவிதைகளாக, புதுக்கவிதைகளாக உரைநடையில் வருகிறது. உரைநடையின் வளர்ச்சியோ அளவற்றது. சிறுகதை, கட்டுரை, புதினம் போன்றவை உரைநடை வடிவங்களே.
உறவினர் மகள் : தமிழ் உரைநடையின் வேறு சிறப்புகளைக் கூறுங்கள் ஐயா.
தமிழன் : உணர்ச்சிகளைக் காட்ட உவம கொண்ட மொழிநடைக்கு ஏற்ற கருவி. உரைநடையில் உவமையை விட உருவகமே உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றி பெறுகின்றன.

விரிவாக விடையளி (45)

உறவினர் மகள் : எடுத்துக்காட்டு உவமையணியை உரைநடையில் பயன்படுத்த முடியுமா?

தமிழன் : முடியும். எவ்வாறெனில் எடுத்துக்காட்டு உவமையணியை உரைநடையில் பயன்படுத்துகையில் இணை ஒப்பு என்கிறோம். எடுத்துக்காட்டாக புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை என்று எழுத்தாளர் வ.ராமசாமி மழையும் புயலும் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இது மட்டுமல்ல. அஃறிணைப்பொருளை உயர்திணையாகக் கருதி, கற்பனை செய்து உரைநடையில் எழுதுவர்.

உறவினர் மகள் : உரைநடையில் ஓசை இன்பம் ஏற்படுமா?

தமிழன் : எதுகை மோனைச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தி உரையாசிரியர்கள் பலர் உரையெழுதி உள்ளனர். எடுத்துக்காட்டாய் இரா.பி.சேதுப்பிள்ளையின் தமிழின்பம் என்னும் நூலைக் கூறலாம்.

உறவினர் மகள் : நீங்கள் உரைநடையில் வேறு என்ன உத்திகளைப் பயன்படுத்துகிறீர்கள்?

தமிழன் : சொல்லையோ, கருத்தையோ திரும்பத் திரும்பச் சொல்லுதல். சில இடங்களில் அளவாகப் பயன்படுத்தி உரைநடையை அழகு செய்வர்.

உறவினர் மகள் : முரண் குறித்த வேறு செய்திகளைக் கூறுங்கள் ஐயா.

தமிழன் : கலப்பில்லாத பொய் .... இதைச் சொல்முரண் என்கிறோம். எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளுக்கு அழுத்தம் கொடுப்பதை எதிரிணை இசைவு என்கிறோம்.

உறவினர் மகள் : உணர்ச்சியின் உச்சநிலை என்ன?

தமிழன் : சொல்லையோ, கருத்தையோ அடுத்தடுத்து வைக்கும் முறை உச்சநிலை தானே!

உறவினர் மகள் : மிக்க நன்றி ஐயா. தங்களிடமிருந்து உரைநடையின் சிறப்பினை நன்கு அறிந்து கொண்டேன்.

தமிழன் : வணக்கம்.

17. குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.

மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல - உப்பைப் போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும் கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி.

காட்சி - 1

இடம் : திருமலைப்புதூர் குகன் இல்லம்  பாத்திரங்கள் : குகன், செழியன்(மாணவர்கள்)

குகன் : செழியா! வந்துவிட்டாயா.

செழியன் : வந்து விட்டேன் குகன். இன்று நம் ஆசிரியர் தமிழவாணன் அவர்கள் மாணவன் எப்படி இருக்க வேண்டும் என்று சில குறிப்புகளை வழங்குகிறேன் என்றாரே! அவர் இல்லம் செல்வோமா?

குகன் : செல்வோம் குகன்! இதுவரை நான்கைந்து முறை சென்று பார்த்தோம். ஆசிரியரை சந்திக்க முடியவில்லை....

செழியன் : இன்று கட்டாயம் நம்மை சந்திப்பார்.

காட்சி - 2

இடம் : ஆசிரியர் தமிழ்வாணன் இல்லம்  பாத்திரங்கள் : ஆசிரியர், குகன், செழியன்

மாணவர்கள் இருவரும் : வணக்கம் ஐயா!

ஆசிரியர் : வணக்கம்!

குகன் : ஐயா! உள்ளே வரலாமா?

ஆசிரியர் : வாருங்கள்! வந்ததன் காரணம் கூறுங்கள்.

செழியன் : ஐயா, வாழ்க்கையில் முன்னேற சில குறிப்புகளைச் சொல்லி அறிவுரை கூறுகிறேன் என்றீர்களே.....

ஆசிரியர் : கொக்கைப் போல வாய்ப்பு கிட்டும் வரை கொக்கைப்போல காத்திருக்க வேண்டும். வாய்ப்பு கிட்டியவுடன் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அதைத்தான் வள்ளுவர், கொக்கொக்க எனப் பாடியுள்ளார்.

குகன் : சரிங்க ஐயா! இனிமேல் நாங்கள் அவசரப்பட்டு எதையும் சிந்திக்காது செயல்பட மாட்டோம்.

ஆசிரியர் : அடுத்தது கோழியைப் போல தான்!

செழியன் : என்ன ஐயா!

ஆசிரியர் : குப்பையைக் கிளறினாலும் குப்பைக்குள் தனக்குத் தேவையான உணவை மட்டுமே கொத்தித் தின்னும். அதுபோல இந்த சமுதாயத்தில் உங்களைக் கெடுக்கும் குப்பைகளைப் போல பல இருந்தாலும் உமக்குத் தேவையான நன்மணிகளை மட்டும் தேர்ந்தெடுத்து வாழ வேண்டும்.

இருவரும் : நன்றாகப் புரிந்தது ஐயா!

ஆசிரியர் : இன்னும் ஏதேனும் குறிப்பு உள்ளதா?

குகன் : ஆம். இருக்கிறதே! மூன்றாவதாக உப்பைப்போல என்பதன் விளக்கம் என்ன ஐயா!

ஆசிரியர் : கூறுகிறேன்! உப்பைக் கண்ணால் பார்ப்போம். சுவையை நாவில் இட்டு உணர்ந்து தான் அறிவோம். அதுபோல ஒவ்வொருவரின் வெளித்தோற்றம் எப்படியிருப்பினும், உங்களைச் சார்ந்தவரின் குணநலன்களை ஆராய்ந்து உணர்ந்து அறிந்து நடந்து கொள்ளுங்கள். உப்பு குறைவானாலும் உண்ண முடியாது. அதிகமானாலும் உண்ண முடியாது. அளவோடு இருந்தால் தான் ருசிக்க முடியும். அது போலத்தான் உலக நட்பு, பொழுதுபோக்கு செயல்பாடு, ஆடம்பரம் எல்லாம்.

இருவரும் : மிக்க மகிழ்ச்சி ஐயா! எம் அறிவுக் கண்களைத் திறந்து நாங்கள் எப்படி வாழ வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தி விட்டீர்கள். நன்றி ஐயா.

## தேர்வுக்கு முன் தயாரிப்பு

- ஒவ்வொரு பாடத்திற்கும் கால அட்டவணை தயாரித்து திட்டமிட்டு படியுங்கள்.
- உடல் நலனில் கவனம் செலுத்துங்கள். எளிதில் சீரணம் அடையும் உணவினை உட்கொள்ளுங்கள்.
- நம்மை திசைமாற்றும் தொலைக்காட்சி, கைபேசி முதலானவற்றை அளவோடு பயன்படுத்துங்கள்.
- பள்ளியில் நடத்தப்படும் பாடங்களை அவ்வப்போது படியுங்கள்.
- பின்னர் படித்துக் கொள்ளலாம் என்று தள்ளிப்போடாதீர்கள். சிரமப்பட வேண்டியிருக்கும்.
- தேவையற்ற பழக்கவழக்கங்களை ஊக்குவிக்கும் தீய நட்பை தவிர்க்க வேண்டும்.
- பருவத்தே பயிர் செய் என்பதைப் போல படிக்கும் வயதில் தீய வழியில் ஈடுபட்டால் பின்னர் நாம் நினைத்தாலும் படிக்க இயலாது என்பதை உணர்ந்து செயலாற்றுங்கள்.

வெற்றி நமதே..... நாளை நமதே......

## மாணவர்களுக்கான தேர்வுக்குறிப்புகள் ...

- விடைகளை வினாத்தாள் வரிசையிலேயே எழுதுவதே சிறந்த முறை.
- ஒரு விடைக்கும், மற்றொரு விடைக்கும் இடையில் போதுமான இடைவெளி விட்டு எழுதவும்.
- விடைகள் எழுதும் போது வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள பகுதி, பிரிவு, வினா எண் ஆகியவற்றை குறிப்பிட மறக்க வேண்டாம்.
- விடைகளை எழுதும் போது தெளிவு, அழகுடன் எழுதுவதோடு அடித்தல், திருத்தலை தவிர்க்க வேண்டும்.
- ஒற்றெழுத்துகளை வரியின் முதலில் எழுதுவதை தவிர்க்கவும்.
- இரண்டு மதிப்பெண் வினாக்கள் முதல் நெடுவினாக்கள் வரை எழுதும் போது உப தலைப்புகள் வழங்கி எழுதவும்.
- விடைத்தாள் திருத்துத்தும் போது விடைத்தாள் திருத்துபவரின் மனதில் நம் விடைத்தாளைப் பற்றிய உயர்வான எண்ணம் தோன்றுமாறு எழுதுங்கள்,
- மனப்பாடப் பாடல்களை எழுதும்போது பாடநூலில் உள்ளவாறு அடிபிறழாமல் உரிய நிறுத்தற்குறிகளுடன் எழுதுங்கள்.
- குறிப்பிட்ட எண்ணிகையிலான வினாக்களுக்கு விடையளிக்கக்கோரும் போது அந்த எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்கவும். மிகுதியான எண்ணிக்கையில் விடையளித்து நேரத்தை வீணடிக்க வேண்டாம்.
- வினாக்களை தெரிவு செய்யும் போது எளிமை, அதிக மதிப்பெண் பெற வாய்ப்புள்ள நன்கு அறிந்த வினாக்களை தேர்வு செய்து எழுதவும்.
- செவி மாற்றுத் திறனாளிகளுக்கான வினாக்களை எழுதுவதை தவிர்க்கவும்.
- நம்பிக்கை, முயற்சி, பயிற்சி, உழைப்பு இவையே வெற்றியின் திறவுகோள் என்பதை நினைவில் நிறுத்து.
- நேரத்தைச் சரியாக திட்டமிடுங்கள். பதட்டமின்றி நிதானமாக தேர்வெழுதுங்கள்.

## நேர மேலாண்மை

| வினா எண்கள் & எண்ணிக்கை | | எழுத வேண்டிய வினாக்கள் | மதிப்பெண்கள் | விடை எழுத தேவையான கால அளவு |
|---|---|---|---|---|
| (1 - 15) | 15 | 15 | 15 | 15 நிமிடங்கள் |
| (16 - 21) | 6 | 4 | 08 | 12 நிமிடங்கள் |
| (22 - 28) | 7 | 5 | 10 | 15 நிமிடங்கள் |
| (29 - 31) | 3 | 2 | 06 | 10 நிமிடங்கள் |
| (32 - 34) | 3 | 2 | 06 | 10 நிமிடங்கள் |
| (35 - 37) | 3 | 2 | 06 | 10 நிமிடங்கள் |
| (38 - 42) | 5 | 5 | 25 | 50 நிமிடங்கள் |
| (43 - 45) | 3 | 3 | 24 | 45 நிமிடங்கள் |
| | | கூடுதல் | 100 | 167 நிமிடங்கள் |
| | | திருப்புதல் (விடைத்தாளை சரிபார்த்தல் | | 13 நிமிடங்கள் |